என்றும் உங்களுடன் புத்தகம்-1

மங்கையர் மலர்

டிசம்பர் 2009 MANGAYAR MALAR 258 பக்கங்கள் ரூ.20/-

3 புத்தகங்கள்



இணைப்பு

மார்கழி திங்கள் 64!

- குருபெயர்ச்சிப் பலன்கள்
- திருவாதிரைக் களி + ஏழுகாய் கூட்டு
- மாதங்களில் அவன் மார்கழி
- காமேஸ்வரி கல்யாணம்



மார்கழி ஸ்பெஷல்


Pt
PLATINUM
பிளாட்டினம். மணமகளின் பெருமிதம்.
VBJ – வழங்குகிறது 'கல்யாண பிளாட்டினம் நகை கலெக்ஷன்' அரியது, நித்தியமானது, வைரங்களுடன் ஜொலிஜொலிப்பது. மணமகளின் பெருமிதத்திற்கு ஓர் அடையாளமாய் திகழ்வது. மனதை பறிகொடுங்கள். பெருமிதத்தில் ஆனந்தமடையுங்கள்.
VBJ
SINCE 1900
Rani Seethai Hall, Parallel to Gemini Flyover, 603, 1st Floor, Anna Salai, Chennai - 6. Ph: 2829 1573
radical

மார்கழி ஸ்பெஷல்

இது சூப்பர் ஸ்பெஷல்...
பக்கம் 4
ஆல்வேஸ் ஸ்பெஷல்...



20 ரோஜா மலரே, ராஜகுமாரி!



வாங்க, 28 தொழிலதிபர் ஆகலாம்!



அட்டையில் : அம்மு

வண்ணப்படம் : சங்கர் சத்யமூர்த்தி

3D... 54 எம்பிராய்டரி!

கல்கி நிறுவன வெளியீடு தரம் நிரந்தரம்

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!

மலர் : 29 இதழ் : 11 டிசம்பர் 2009

ஒரு வார்த்தை!



வனப்பகுதிகளில் அட்டகாசம் செய்யும் குரங்குகளைப் பிடிக்க, ஓர் உத்தி பயன்படுத்தப்படுகிறது. பழம், வேர்க்கடலை போன்றவற்றை ஒரு கண்ணாடிப் பாட்டிலில் போட்டு, மரப் பொந்துகளில் வைத்து, பொந்தின் வாயை, கொஞ்சமாக இடம் விட்டு, மண்ணினால் அடைத்து விடுவார்கள். இரை இருப்பதை அறிந்துகொள்ளும் குரங்குகள், மரப் பொந்துக்குள் கைவிட்டு, பாட்டிலை எடுக்க முயற்சி செய்யும். மரப் பொந்து சிறிதாக இருப்பதால், பாட்டில் வெளியே வராது. பழத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டே, குரங்குகள் சத்தம் போடும். அதற்காகவே காத்திருப்பவர்கள் குரங்குகளை எளிதாகப் பிடித்து விடுவார்கள். அந்தக் குரங்குகள் மட்டும், பழ பாட்டில் போனால் போகிறது என்று விட்டு ஓடியிருந்தால், தப்பியிருக்கும்!

✸ ''என்னுடைய மருமகள் ராஜஸ்தானிப் பெண். திருமணத்தின் போது அணிவிக்கப்பட்ட தாலியை அவள் அணிவதில்லை. அதை என் மகனும் கண்டுகொள்வதில்லை. குங்குமம் இல்லாத நெற்றியும், தாலி இல்லாத வெறுங் கழுத்தும் ஆரம்பத்தில் எனக்கு எரிச்சல்மூட்டியது. ஆனால் அவள் குணத்தில் தங்கமாயிருக்கிறாள். அதனால் தாலியை அணியச் சொல்லி வற்புறுத்துவதை நான் விட்டுவிட்டேன். அவள் எல்லோரிடமும் அன்பாகவும், அனுசரணையாகவும் இருக்கிறாள். அதுபோதும்!'' என்கிறார் ராஜேஸ்வரி வைத்தி... கரூரிலிருந்து!

✸ ''எனக்கு மூன்று பிள்ளைகள். மூத்த பிள்ளை லண்டனில் இருக்க, மற்றவர்கள் பெங்களூரிலும், கல்கத்தாவிலும் இருக்கிறார்கள். எண்பதைத் தாண்டிய நானும், எழுபத்தாறைத் தாண்டி விட்ட என் மனைவியும் அங்குமிங்குமாக இருந்து பார்த்தோம்.

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

பொறுப்பாசிரியர் : அனுராதா சேகர்

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8877
mangayarmalar@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.mangayarmalaronline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.250/-
வெளிநாடு : ரூ.2,200/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

அவர்களுக்கு சிரமம் தர விரும்பவில்லை. அதனால் நாங்களாகவே நல்லதொரு முடிவு எடுத்து 'சீனியர் சிட்டிஸன் ஹோம்' போய்விட்டோம். ஏஸி வசதியுள்ள டபுள்ரூம், வேளா வேளைக்குச் சாப்பாடு, டீ.வி., லைப்ரரி, மருத்துவ உதவி, கோயில், பஜனை, பேச்சுக் கொடுக்க ஆட்கள்.. என நிம்மதியாக இருக்கிறோம். மாதம் பத்தாயிரம் ரூபாயை அவர்கள்தான் கட்டுகிறார்கள். தினமும் ஃபோனில் நலம் விசாரிக்கிறார்கள். நாங்கள் பாதுகாப்பாக, சௌகரியமாக இருப்பதில் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சி.

''நாங்களே விரும்பி வந்திருக்கிறோம். உங்களுக்கு குற்ற உணர்வே கூடாது!'' என்று என் மனைவி திரும்பத் திரும்ப தன் பிள்ளைகளிடம் சொல்லிக் கொண்டிருக்கிறாள்...'' என்கிறார் ஓய்வுபெற்ற அரசாங்க அதிகாரி வேணுகோபாலன்... பெங்களூருவிலிருந்து.

❋ ''என்னுடைய ஒரே மகன், திருமணமான மறு வருடமே சாலை விபத்தில் இறந்து விட்டான். அவனுடைய வேலை, என் மருமகளுக்குக் கிடைத்தது. அவள் மறுமணம் செய்து கொள்ள ஆர்வம் காட்டினாள். அதுவும் வேறொரு ஜாதிக்காரரை... நாங்களே முன்னின்று திருமணத்தை நடத்தியதோடு, அவர்களுக்குப் பிறந்துள்ள குழந்தையை, எங்கள் சொந்தப் பேரனாகவே நினைத்து 'பேபி சிட்டிங்' செய்கிறோம். எங்கள் மகனை இழந்த தவிப்பை, ஓரளவு மறந்து வாழ்கிறோம்!'' என்கின்றனர் சரஸ்வதி - நாராயண் தம்பதி... சென்னையிலிருந்து.

இந்தக் காலத்துக்கு ஒத்துவராத பழைய முறைகளை, தேவையற்ற வீண் நம்பிக்கைகளைக் கைவிட நாம் தயங்கும்போதெல்லாம் உறவுகள் ஊசலாடுகின்றன. மனக்குழப்பங்கள் ஏற்படுகின்றன. காலப்போக்கில் ஏற்படும் மாற்றங்களை ஏற்றுக் கொண்டு நடைமுறை யதார்த்தங்களை அனுசரித்தால் பிரச்னைகளுக்குத் தீர்வு கிடைக்கிறது. நம்மால் எப்போதும் உயிர்ப்புடன் வாழ முடிகிறது.

ஆமாமாம்! கையை மரப்பொந்திலிருந்து எடுத்து விடத் தெரிந்த சாமர்த்தியக் குரங்குகள்தானே தப்பித்துக் கொள்ளும்?

அனுஷா நடராஜன்


திநுசு திநுசா கான்செப்ட் கொண்டு வந்த பாலம் சில்க்ஸ், தங்களோட அடுத்த அறிமுகப் படலத்தை தடபுடலா நடத்தத் திட்டமிட்டிருக்காங்க. அதில் முக்கிய வி.ஐ.பியே 'ட்ரெண்டி முகூர்த்தம் கலெக்ஷன்ஸ்' தான். ஒவ்வொரு பட்டுப் புடைவையிலும் ஒவ்வொரு டிஸைன். தள்ளியிருந்து பார்க்கும்போது டிஸைன்கள் எம்பிராய்டரி செய்த மாதிரி, கலம்காரி வொர்க் மாதிரி ரிச் - லுக்கோட அசத்தினாலும் அந்த டிஸைனை நுணுக்கமா (தறியால) கொண்டு வந்தது நெசவாளர்கள்தான்! (ஹேட்ஸ் ஆஃப்)

"பட்டுப் புடைவை பாரம்பரியமானதுதான். அதுக்காக, பழமை மாறாம இருக்கணுமா என்ன? ஃபேஷனா... ட்ரெண்டியா.. இருந்தாத்தானே ட்வென்டிக்கு பிடிக்கும்' " என்ற ஜெயஸ்ரீ ரவியிடம் "ட்ரெண்டி முகூர்த்தத்தின் முக்கிய வி.வி.ஐ.பி. யார்னு கேட்டா?" "வெயிட் அண்ட் ஸீ" என்கிறார்.



ட்வென்டிக்கேற்ற ட்ரெண்டி!







இந்த பூமியில் பிளாட்டினம்
மிகச் சிறிதளவே இருக்கிறது
எது அரிதானது என உண்மையிலேயே மதிப்பிடுவோரால்
இது பொக்கிஷம் போல் கருதப்பட்டு
நினைவுகளில் நீங்காதிருக்கிறது.

PLATINUM

PURE·RARE·ETERNAL

www.preciousplatinum.in



THE NEW JEWELLERY COLLECTION IS AVAILABLE NOW, PRICES START FROM Rs. 10,000.

• **Erode:** Guptha Gem Jewellers 223130 • Jos Alukkas Jewellery 2221148 • Malabar Gold 2224916 • **Hosur:** Susheel Jewellery Mart 246500 • **Karaikudi:** Maganlal Mehta & Co. 234581 • **Karur:** Kalyan Jewellers 262933 • T. N. Nantagopal & Sons Jewellers 260126 • **Madurai:** • Bhima Jewellers 4231600 • Jos Alukkas Jewellery 2346701 • Manganlal Mehta & Co 234581 • Sri Jeyaprabha Jewellers 2629181 • Thangamayil Jewellery Pvt. Ltd. 2344340 • **Mayiladuthurai:** Narayan Diamonds 22282 • **Nagercoil:** Bhima Jewellery 224466 • D. Harris Nadar Jewellery 279770 • Nallaperumal Jewellers 233617 • **Puducherry:** Pondicherry Sri Lakshmi Jewellery 2334678 • Ram Thangonagai Maligai 2260300 • **Salem:** ANS Jewellery 2440703 • AVR Swarnamahal 2333307 • Jayalukkas 2444545 • Kalyan Jewellers 2330633 • Selva Maligai 2267799 • **Tirunelveli:** Jos Alukkas Jewellery 2336096 • Sivagami Gold Station 2501155 • **Trichy:** Jos Alukkas Jewellery 3206552 • Mangal & Mangal (Thangamaligai) 2702324 • New Lakshmi Jewellery 2701931 • **Tuticorin:** Alagar Jewellers 2326918 • **Vellore:** Rugjee Jewellers 2223494



ஏட்டிக்குப் போட்டி


தொலைக்காட்சித்

நூற்றுக்கணக்கான அஞ்சலட்டைகள் ஒவ்வொன்றிலும் ஒரு மனக்குமுறல். ஒரு பெருமூச்சு. ஓர் ஆதங்கம். சில அஞ்சலட்டைகளைத் தொட்டாலே சுடுகின்றன. வாசகர்களுக்கு அவ்வளவு கோபம் தொலைக்காட்சி மீது.

தொலைக்காட்சித் தொடர்களைச் சீரிய சிந்தனைகளாகக் கண்டு எழுதிய வாசகர்களின் எண்ணிக்கை, மிகக் குறைவுதான். அந்தக் குறைவான எண்ணிக்கை வாசகர்களும் கூட, பட்டிமன்றத்தில் எதிர்க்கட்சி ஆடவேண்டும் என்ற கண்ணோட்டத்தில் வலிந்து எழுதியிருப்பதுபோல் தோன்றுகிறதே ஒழிய அவற்றில் அதிக வேகத்தைக் காணோம்.

சீரிய சிந்தனைகளே இல்லை என்று சொல்ல முடியுமா என்ன? அவையும் தான்

வந்து குவிந்த கடிதங்களைப் படித்து, நடுவராக இருந்து.



சீரியலில் வரும் கேரக்டர், லீவு எடுக்க வேண்டுமென்றால் அந்த கேரக்டரைக் கொன்று முகத்தைச் சிதைத்து விடுவது சினிமாவை மிஞ்சும் அபத்தம்!

ஓர் ஆணுக்காவது ஒரு மனைவி ஒரு குடும்பம் என்றில்லை. ஆனால் ராமன், சீதை என்று பெயர்கள்!

என்று தணியும் இந்த சீரியல் தாகம்?

- உமா சுதர்சன், மடிப்பாக்கம்.

நம்முடைய பொன்னான நேரத்தை, கற்பனைத்

பல டி.வி. தொடர்களில், தங்களுக்கு நேர்ந்த அனுபவம், நெருங்கிய நண்பர்களின் வாழ்க்கையில் நடந்த உண்மையான நிகழ்ச்சிகள் இவற்றை அடிப்படையாகக் கொண்டுதான் எழுதுகிறார்கள். இதைப் பார்த்து நாம், முன்ஜாக்கிரதையாக நடந்து கொள்ள உதவுவதால் சீரியல்கள் நமக்கு சீரிய சிந்தனைகள்தான்.

- யசோதா கிருஷ்ணமூர்த்தி, கடலூர் மாவட்டம்.

சீரியல்களை விடாது பார்க்கும் பெண்களில்

தொடர்கள்

சீரியல் கில்லர்களா? சீரிய சிந்தனைகளா?



இருக்கின்றன. ஆக பெரும்பாலானவை சீரியல் கில்லர்கள் தான் என்பதை அவர்களும் மறைமுகமாக ஒப்புக் கொண்டதாகத்தான் ஆகிறது.

இந்தக் கட்சி வாசகர்கள் பலர் சொல்லியிருப்பது, 'பாலையும் நீரையும் தனித்தனியே பிரித்துப் பாலை மட்டும் அருந்தும் அன்னத்தைப் போல் நீங்களும் நல்லதைப் பாருங்களேன், தொலைக்காட்சித் தொடர்களில் சீரிய சிந்தனைகளைத் தேடிப் பிடித்து ரசியுங்களேன்' என்பதுதான்.

அருமையானத் தீர்ப்பு சொன்ன திருப்பூர் கிருஷ்ணனுக்கு ஜே!

திறனை, குடும்ப உறவுகளின் நெருக்கத்தை, நட்புப் பிணைப்பை, நல்ல நூல்கள் படிக்கும் பழக்கத்தை, உணவின் சுவை உணர்ந்து ருசிப்பதை, மதிமயங்கச் செய்யும் தொலைக் காட்சித் தொடர்கள் 'சீரியல் கில்லர்களே!'

- பூங்கோதை சந்திரசேகரன், புதுச்சேரி.

இப்போது வரும் எந்தத் தொடரில் கதையம்சமும், ஜீவனும் இருக்கின்றன? நெகட்டிவ் கேரக்டர்களும், முறைகேடான உறவுகளும், பழியுணர்ச்சியும்தானே முன்னிலைப்படுத்தப்படுகிறது? மொத்தத்தில்



எழுபது விழுக்காடு பெண்கள், வீட்டிலுள்ள மற்றவர்களின் குற்றங்குறைகளைத் தூக்கிப் பார்க்க நேரமில்லாமல், சீரியலில் மூழ்கி விடுவதால் இல்லத்தில் தேவையற்ற சர்ச்சைகள் எழுவதற்கான வாய்ப்பு குறைவதை மறுக்கவா முடியும்?

- சரோஜா சகாதேவன், கோட்டூர்.

பொதுவாகவே எந்த ஒரு கண்டுபிடிப்புகளிலும் நல்லதும் இருக்கும், கெட்டதும்



முறையற்ற பாலுறவுகள், உடன் பிறந்தவர்களே ஒருவரையொருவர் பழிவாங்கி அழிக்க நினைப்பது, அளவுக்கதிகமான வன்முறை என்று தொலைக் காட்சித் தொடர்கள் முன்வைக்கும் விஷயங்கள், ஆக்கபூர்வமான சமூக முன்னேற்றத்துக்கு உதவக்கூடியவை அல்ல. மதங்கடந்த உயரிய ஆன்மிகத்தை முன்வைக்காமல், மூடநம்பிக்கைகளின் தொகுப்பாக மதத்தைக் காட்டி, மக்களை மேலும் மேலும் பின்னுக்கு இழுக்கின்றன பல தொடர்கள்.

தொடர்கள் சிலவற்றில் சீரிய சிந்தனைகள் கொஞ்சம் கொஞ்சம் ஆங்காங்கே தெளிக்கப்பட்டிருந்தாலும் அவை எடுபடாமல் போகின்றன!

பல தொடர்கள், கச்சிதமாக முடியாமல், முடியும்போல் தோன்றி மீண்டும் தொடங்கி 'வளவள'க்கின்றன. விளம்பர வருவாய் முக்கியம்தான். ஆனால் தொடரின் கட்டுக்கோப்பை இழந்து, விளம்பர வருவாயைத் தேட முனைவது பரிதாபகரமானது. இந்தக் கட்டுக்கோப்பின்மை காரணமாக மக்கள் அலுப்படைந்து, உச்சக்கட்டமாய்த் தொலைக்காட்சிப் பெட்டியை மூடி வைத்துவிட்டால் விளம்பர உத்தி அனைத்துமே அம்பேல் என்பதை சுயநலக் கண்ணோட்டத்திலேனும் தயாரிப்பாளர்கள் உணர வேண்டும்.



மெகா சீரியல்கள் மகா அவஸ்தையே!

-எஸ்.கௌரிலக்ஷ்மி, ஸ்ரீரங்கம்.

பெண்களே, பெண்களைக் கடத்தி மிரட்டுவது, கைக்கூலிகளை ஏவுவது, பாரம்பரியம், பண்பாடு இவற்றைச் சீர்குலைத்துக் காட்டுவது, கணவன்-மனைவியரிடையே நான்கு சுவர்களுக்கிடையே மட்டும் நடப்பதை வெட்டவெளிச்சமாக்கி, பெரிய திரைகளில் கூட காட்டாததை அவசியமாக்கிக் காட்டுவது, பட்டியல் நீளும்; படிக்க மாளாது!

- என்.சாந்தா, பம்மல்.

இருக்கும். அதுபோலத்தான் தொலைக்காட்சியும். நமது சிந்தனைக்கும், வாழ்க்கைக்கும் வழிகாட்டும் தொடர்களைத் தேர்ந்தெடுத்துப் பார்த்தால் பயனுள்ள பொழுதுபோக்காக அமையுமே!

- கனகம் பொன்னுசாமி, கோயமுத்தூர்.

தொலைக்காட்சியில் எவ்வளவோ நல்ல விஷயங்கள் உள்ளன. கிருஷ்ணா, ராமாயணம் போன்ற மனதுக்கு இனிய நல்ல சிந்தனைகளைத் தூண்டக்கூடிய சீரியல்களும் உள்ளன. மனதை ரிலாக்ஸ் செய்வதில் டீவி சீரியல்கள் பெரும்பங்கு வகிக்கின்றன என்பதை மறுக்க முடியுமா?



- எம்.மோகனா, புலிவலம்.


என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
அடுத்த இதழ்...
பொங்கல் சிறப்பிதழ்
செங்கரும்பு இல்லாத
பொங்கலா?
உங்கக் கைவண்ணம் இல்லாத
மங்கையர் மலரா?
பொங்கப் பொங்க
எழுதிக் குவிங்க...
தைப் பொங்கல் மேலும் தித்திக்கட்டும்!
உங்கள் அபிமான குட்டிபுக்கில்
அழகு டிப்ஸ் 64!
மேனி+கூந்தல் பராமரிப்பு பற்றிய
வாசகர்களின் கேள்விகளுக்கு
பிரபல அழகுக்கலை நிபுணர்
'நேச்சுரல்ஸ்' கே.வீணா
பதிலளிக்கிறார்.
கமான்... க்விக்...
சீக்கிரமா
கேள்விக் கணைகளைத்
தொடுத்து
அனுப்புங்க!
மிகச் சிறந்த பத்துக் கேள்விகளுக்கு
ரூ.1000/- மதிப்புள்ள Vivel வழங்கும்
கிஃப்ட் ஹேம்பர்ஸ் பரிசு!
மற்ற கேள்விகளுக்கும் வழக்கமான.
சன்மானம் உண்டு.
Vivel
Soaps | Shampoos



UNWANTED & EXCESS HAIR REMOVAL THRU ND-YAG LASER

(Ex. UpperLip, Chin, Cheeks, Abdomen, Chest, Ears)

Angels®

(Since 1991) Advanced Clinic Pvt. Ltd.

HAIR, SKIN & BODY CARE

ஏஞ்சல்ஸ் தருகிற ND-YAG Long Pulsed லேசர் சிகிச்சை Advanced Technology மூலம் பெண்களுக்கு மேல் தாடை - கீழ் தாடை - அக்குள் - வயிறு - மார்பகம் போன்ற பகுதிகளிலும் தேவையற்ற ரோமங்களை குறைந்த சிட்டிங்கில் நிரந்தரமாக நீக்கி விடலாம்.

பாதி வழுக்கை, பாரம்பரிய வழுக்கை, வியாதிகளால் உதிர்ந்த உங்கள் தலைமுடியை சிலிகான் சிஸ்டம் என்ற நவீன தொழில் நுட்பத்தின் மூலம் தலைமுடியை ஒழுங்கு படுத்திவிடலாம். இந்த சிகிச்சை ஆண்கள் மற்றும் பெண்களுக்கும் பொருந்தும்.

GOOD BYE TO BALD HEAD WITHIN ONE HOUR THRU SILICON SYSTEM*






WEIGHT REDUCTION THRU CELLULITE THERAPY, BODY FORMER & PROTEIN THERAPY

ஏஞ்சல்ஸில் அக்வா தெர்ம், செல்லுலாட் தெரபி, பாடி பார்மர், புரோட்டீன் தெரபி மூலம் ஆண்கள் மற்றும் பெண்கள் உடல் எடையை குறைத்து விடலாம். சிலருக்கு வயிறு பகுதி சரியாக இருக்கும். ஆனால் காலின் தொடை பகுதி மிக பருமனாக இருக்கும். இவர்களுக்கு **Figure Correction** மூலம் அக்குறையை நிவர்த்தி செது விடலாம்.

இச்சிகிச்சையின் மூலம் உங்கள் சருமத்தில் ஓவர் ஆக்டிவேட் ஆன மெலனின் பிக்மென்டுகளை லைட்டாக்கலாம். இதன் மூலம் நிறத்தை மேம்படுத்தலாம்.

COLOUR IMPROVEMENT & PIGMENTATION THRU IMPORTED INHIBITORS



OUR NEW BRANCHES OPENING ON OCT. 28 AT MADURAI & TRICHY

MADURAI: 1st Floor, Veeyar Nilayam, No.171, KK Nagar, Opp. A.R. Hospital **Ph: 0452-4395859, 2583738. TRICHY:** Neptune Towers, No.B-11/1, 2nd Cross Road (West), Thillai Nagar, Trichy - 620018. **Ph: 0431-4311569, 2765859**

CHENNAI: AA1, 1st Cross St., 3rd Main Road, RVR Towers, 2nd Floor, Annanagar, Chennai - 40. Ph: 044-26212547 / 26213468, 42176679. Cell: 98400 46599. **COIMBATORE:** RR Complex, V.O.C. Road, 117/B, West Sambandham Rd, R.S.Puram, Coimbatore. Ph: 0422 - 6547577, 2547889. Cell: 92444 15899

மேலும் விவரங்கள் அறிய பிரீத் சனிக்கிழமை **VIJAY TV** - யில் காலை **10.30** முதல் **11.00** மணி வரை காணத்தவறாதீர்கள்.

- Hyderabad - (040)23222111, 66368999
- Bangalore - (080)41153995, 4115396, 09845566799

குக்கரி க்வீன்!

மிக்ஸ் அண்ட் மேட்ச் சமையல் போட்டி



குக்கரி தர்பாரில் கலந்துக் கொள்ள சமையல் ராணிகளை அழைக்கிறோம். ஒரிஜினல் சமையல் குறிப்புகளைத் தெளிவாக எழுதி, கீழே உள்ள கூப்பனையும் நிரப்பி அனுப்புங்க: தேர்ந்தெடுக்கப்படும் ஐந்து ரெஸிபிகளுக்குத் தலா ரூ.**250/-** பரிசு!

குக்கரி க்வீன் சமையல் போட்டி (டிசம்பர்)

கண்டிப்பாகப் பயன்படுத்த வேண்டிய பொருள்கள்

உளுந்து + வெங்காயம்

பெயர் : ....

முகவரி : ....

....

....

கடைசித் தேதி : 25.12.2009

இந்த இதழில் 'ஆஹா 50'! என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள டிப்ஸ்களைப் படியுங்கள். மிகச்சிறந்த ஒரே ஒரு குறிப்பைத் தேர்ந்தெடுத்து எழுதி அனுப்புங்கள். உங்கள் தேர்வும், ஆசிரியர் குழுவின் தேர்வும் பொருந்தினால் குலுக்கல் முறையில் **ரூ.150/- பரிசு!** தேர்ந்தெடுப்பவருக்கு மட்டுமல்ல, அந்தக் குறிப்பை எழுதியவருக்கும் **ரூ.150/- பரிசு!** 'டிசம்பர் - ஆஹா பரிசு' என்று மறக்காமல் குறிப்பிட்டு பக்க எண், வாசகி பெயருடன் அஞ்சல் அட்டையில் மட்டுமே எழுதி அனுப்புங்கள்.

கடைசித் தேதி 15.12.2009.



ஆஹா பரிசு!

அடிச்சாங்க பரிசு!

ஆஹா பரிசு நவம்பர் (2009) போட்டியில், "வலைதளத்தில் ரயில் பயணச் சீட்டுகளைப் பதிவுசெய்து கொள்வதால், நடுத்தர மக்களுக்கு ரயில் பயணச் சீட்டுகள் கிடைப்பதில்லை. வலை தளத்தில் பதிவுசெய்பவர்களுக்கு இருபத்தைந்து சத விகிதம் மட்டும் ஒதுக்கினால் மற்றவர்களுக்கும் பயணச் சீட்டு கிடைக்குமே!" என்ற குறிப்பை எழுதி **ரூ.150/-** பரிசு பெறுகிறார் **வி.முத்துலக்ஷ்மி, சென்னை.** அதே டிப்ஸை சிறந்ததாகத் தேர்வு செய்த பல வாசகியரில் குலுக்கல் முறையில் **ரூ.150/-** பரிசு பெறுகிறார் **ஜி.சைலா ராணி, கும்பகோணம்-612 001.**

நான் மீண்டும் வழக்கமான வாழ்க்கையை வாழ நினைத்தேன். நீங்கள் நிற்கக்கூடாதா?



For more information, SMS KNEE to 57333 or Call 1800 22 2882*

வாழ்க்கையில் சிறு விஷயங்கள் கூட எனக்கு மகிழ்ச்சியளிக்கும். பேரக்குழந்தைகளுடன் விளையாடுவது, காலையில் ஆரோக்கியத்திற்காக நடக்கச் செல்வது, குடும்பத்திற்காக சமைப்பது. சில ஆண்டுகள் முன்பு இதை எல்லாம் செய்து கொண்டிருந்தேன்.

வயது ஆக ஆக, ஆர்த்ரைடிஸினால், மூட்டுவலியால் சிறு அசைவுகூட வேதனையாக இருந்தது. ஆரம்பத்தில் வழக்கமான சிகிச்சைகள் மூலம் சமாளித்துக் கொண்டேன். அது அதிகமானது. எல்லாவற்றையும் விட்டுக்கொடுத்து வாழ வேண்டியிருந்தது. அப்போதுதான் மூட்டு மாற்று நிபுணரின் (Joint Replacement Surgeon) ஆலோசனை எனக்குக் கிடைத்தது. அவரது ஆலோசனையின் பேரில் நான் மூட்டு மாற்று (Joint Replacement) செய்து கொண்டேன். இன்று எனது பேத்தியுடன் தினமும் பூங்காவில் விளையாடுகிறேன். வழக்கமான வாழ்க்கையை வாழுகிறேன். மீண்டும் எனக்கு சுதந்திரம் கிடைத்துவிட்டது.

உங்களுக்கு ஆர்த்ரைடிஸ் விளைவாக இடுப்பு அல்லது முழங்கால் வலி இருந்தால், மேலும் அவதிப்பட வேண்டியதில்லை.

ஆர்த்ரைடிஸிற்கான பல மருத்துவங்களில் மூட்டு மாற்றும் ஒன்று. இது அனைவருக்கும் ஏற்றதில்லாமல் இருக்கலாம். எனவே மூட்டு மாற்று நிபுணரிடம் பேசி உங்களுக்கு எந்த சிகிச்சை ஏற்றது என்று அறியவும்.

*Call toll free (10 am-6 pm), Monday to Saturday.

தாமதிக்காதீர்கள்

Arthritis Foundation India Trust

www.arthfound.org

DRAFTFCB • ULKA 981266TAM

திருப்பதி சென்று
பெருமாளைத் தரிசிக்க
முடியாதவர்கள், வயதானவர்கள்,
திருமலா திருப்பதி
தேவஸ்தானம் வழங்கும் பக்தி
சேனலை பார்த்தாலே போதும்.
தினமும், நேரில் திருப்பதி
சென்று வந்த மனநிறைவு
கிடைக்கும்.

- எஸ். சாந்தி,
ராணிப்பேட்டை.



தொலைக்காட்சி, வானொலியில் தினமும் அரைமணி நேரமாவது பொது அறிவு வினா-விடை நிகழ்ச்சியை ஒளி பரப்ப வேண்டும். சிறியவர் முதல் பெரிய வர்கள் வரை எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்ள உதவியாக இருக்கும்.

- பூர்ணிமா ராம், சென்னை -44.

இஞ்சி, பச்சை மிளகாய், தேங்காய்ச் சேர்த்து அரைத்து அதோடு பரங்கிக்காயை வேகவைத்து மசித்துக் கலந்து கொள்ளவும். இக்கலவையைத் தயிரில் கலந்து உப்பு சேர்த்து, கடுகு, உ.பருப்புப் போட்டுத் தாளிக்கவும். அருமையான பரங்கிப்பச்சடி தயார்.

- கே.நாகலக்ஷ்மி சங்கரன், தர்மபுரி.

குழந்தைகளிடம், 'அப்பா வேண்டுமா? அம்மா வேண்டுமா?' என்று கேட்காதீர்கள். உங்களுடைய கேள்வியால் அவர்கள் மனத்தில் யாராவது ஒருவர் போதும் என்ற நினைப்பை நீங்களே பதியவைத்து விட்டீர் களேயானால் ஒதுக்கப்படுவது நீங்க ளாகவே கூட இருக்கலாம்.

- எச்.எஸ்.லக்ஷ்மி, கொல்லம்.

தேங்காய்த் தண்ணீர் அரைத் தம்ளர் எடுத்து ஒருநாள் புளிக்க வைத்து, ஆப்ப மாவில் கலந்தால் ஆப்பம் மிருதுவாக இருக்கும்.

- ராஜேஸ்வரி, பெங்களூரு.

மழைக்காலத்தில் தண்ணீரில் சீரகம் அல்லது சித்தரத்தை நசுக்கிப் போட்டு, கொதிக்க வைத்துக் குடியுங்கள். இருமல், சளித் தொந்தரவு வராது. சீரகம் போட்டால் அஜீரணத்தையும் போக்கும்.

- என்.விஜயலக்ஷ்மி, தபோவனம்.

மோர்க் குழம்பு வைக்கும்போது ஊற வைத்த துவரம் பருப்பு, சீரகம், பத்து சிறிய வெங்காயம், ப.மிளகாய், தேங்காய் அரைத்துச் சேர்த்தால் வாசனை கமகமக் கும்.

- கு.லதா, கும்பகோணம்.

இவை எல்லாமே ஆஹா 50 தான்!

ரோஜா மலரே,



'வர்றது டிசம்பர் மாசமில்லையா? இங்கதான் எல்லா இடத்துலயும் பாட்டும், டான்ஸுமா களைகட்டுமே! இந்த மாசம், சங்கீதம் சம்பந்தப்பட்ட என்னோட நினைவலைகளைப் பகிர்ந்துக்கறேனே!' ஆர்வம் காட்டினார் சச்சு!

இனி ஓவர் டு சச்சு!

"எங்கம்மா பக்கத்துல எல்லாருமே கலைப் பிரியர்கள். அம்மாவோட அப்பா, ரங்கூனில் 'தமிழிசை சங்கம்' எல்லாம் வெச்சு கலையைக் கொண்டாடியவர். ரங்கூனுக்கு, தென்னிந்தியாவைச் சேர்ந்த இசைக் கலைஞர்கள் யார் வந்தாலும், எங்க வீட்டுக்கு வந்து 'கை நனைக்காமல்' போக முடியாது.

பாட்டிக்கும் மியூஸிக்னா ஆர்வம் ஜாஸ்தி. வீட்டுல சாப்பாட்டுக்கூடத்துல, எல்லாரும் ஒண்ணா உட்கார்ந்து சாப்பிடும்போது, யாராவது ஒரு வரியை 'ஹம்' பண்ணுவாங்க. உடனே இன்னொருத்தர் அடுத்த வரியைப் பாட... அடுத்தவர் மேஜை மீது தாளம் போட... குடும்பம் மொத்தமே சேர்ந்து கொள்ள... அமர்க்களமான கச்சேரியே நடந்துவிடும்.

எங்கம்மா, மயிலாப்பூர் லேடி சிவசாமி ஸ்கூல்ல படிச்சவங்களாச்சே! பாட்டு, டான்ஸ் எல்லாம் பள்ளியிலேயே கத்துக்கிட்டாங்க. என்னோட அக்கா மாடி லக்ஷ்மியும் பாடுவா; நல்லா ஆடுவா. இந்த விஷயமெல்லாம் குழந்தை நட்சத்திரமான சச்சுவுக்குத் தெரியலைன்னா எப்படி? பாட்டி சுந்தராம்பாள், ஏற்பாடு பண்ணிட்டாங்க.

அதிகாலையில அஞ்சு மணிக்கு, 'ஜில்'வுன்னு ஒரு தூக்கம் நம்மளை அப்படியே மயக்கி வெச்சிருக்கும் பாருங்க... அப்பத்தான் பாட்டி வந்து கரெக்டா எழுப்புவாங்க. எனக்கா

ராஜகுமாரி!

சச்சுவின் அச்சுவெல்லத் தொடர் - 3



எரிச்சலா வரும்.

''சச்சு... எழுந்திரு... பாட்டு வாத்தியார் வந்தாச்சு!''ன்னு உலுக்கி எடுத்துடுவாங்க.

நான் கீழே இறங்கிப் போறது மாதிரி ஆக்ட் பண்ணிட்டு, ஜன்னல் கதவுக்குப் பின்னால ஒளிஞ்சுப்பேன். பாட்டி, கீழே இறங்கிப் போனதும், மறுபடி ஓடிப் போய் தூக்கத்தை கன்டின்யூ செய்வேன்.

பாட்டி மறுபடி மாடி ஏறி வந்து, என்னைத் 'தரதர'ன்னு இழுத்துக்கிட்டுப் போவாங்க.

''சுத்த போர் இந்த பாகவதர்... அவருக்கு ஜுரம் வரக் கூடாதா? வயித்து வலி வரக் கூடாதா?'' என்றெல்லாம் மனசுக்குள்ள ஆயிரம் சாபம் கொடுத்துக்கிட்டே போய் உட்காருவேன்.

சொட்டைத் தலையும், வெற்றிலைக் குதப்பிய வாயுமாக இருக்கும் அவரைப் பார்த்தாலே எனக்குப் பிடிக்காது.

'இவரோட சைக்கிள் டயரை பஞ்சராக்கிடணும். அப்பத்தான் நாளைக்கு வர

சந்திப்பு : அனுராதா சேகர்

மாட்டார்'னு' உள்ளே எண்ணம் ஒருவிதமாக ஓடும். ஆனால், வாய் மட்டும் ''ஸா... பா... ஸா''ன்னு பாடித் தொலைக்கும்.

அப்புறம் கொஞ்ச நாளாச்சு! என் மண்டைக்குள்ளும் கொஞ்சம் சங்கீதம் ஏற ஆரம்பிச்சுது. தாளம், ராகம், எல்



பொக்கிஷம்

லாம் பிடிபட்டு, சுமாரா பாட வந்தது.

அந்தச் சமயத்தில்தான் அடிச்சது அந்த மேடைக் கச்சேரி சான்ஸ்!

"எங்க வீட்டுக்குப் பக்கத்துல, இருந்த சின்னப் பிள்ளையார் கோயில்ல ஏதோ திரு விழா. அதுல நான் ஒரு மணி நேரம் பாட ணும்... நான் நடிச்சப் படங்கள்லாம் 'ஹிட்'டாகி, நானும் பிரபலமாயிட்டிருந்த நேரம் அது.

''பேபி சச்சு பாட றாளாம்!''னு கும்பல் வந்து காத்திருந்தது.

ஏதோ ஒரு வர்ணம், இரண்டு கீர்த்தனை, இரண்டு தமிழ்ப் பாடல்னு கச்சேரி மெனு தயார் செய் திருந்தார் என்னோட பாட்டி. மேடையில் ஏறி, மைக் முன்னால் உட் கார்ந்து பாட ஆரம்பிக் கிறேன். இரண்டு வரி பாடி



யிருப்பேனோ என்னவோ.. கூட் டத்துல ஒரே சலசலப்பு. என்னடான்னு பார்த்தா... தியாகராஜ பாகவதர் ஸ்டைலா வந்துக் கிட்டு இருக்காரு. இந்தக் காலத்து ரஜினி போல, அந்தக் காலத்து சூப்பர் ஸ்டார் அவர்!

எனக்குக் கையும் ஓடலை; வாயும் பாடலை! 'மைக்' கம் என்று இருப்பதைப் பார்த்தவர், ''தைரியமா பாடு!''ன்னார்.

''................''

''தன்யாசிதானே? நாலரைக் கட் டையா?'' என்று பாட்டு மாஸ்டரிடம் விசாரித்தவர், தானே 'ஜம்' என்று குர லெடுத்துப் பாட ஆரம்பிச்சுட்டார். வந் திருந்த கூட்டம் அப்படியே மெய்மறந்து போச்சு. இடையிடையே...

''உம்... பாடு'' என்று என்னையும் ஊக்குவித்தார்.

அந்த க்ரீம் கலர் சில்க் ஜிப்பா, வைர பட்டன், நெளிநெளியான கிராப், கணீர் குரல்... அதற்குக் கிடைத்த கரகோஷம்! அடேயப்பா! என்னால் இன்றளவும் மறக்க முடியாத இசைக் கச்சேரின்னா இதுதான்!

பெரும்பேறு

"எங்க வீடு மயிலாப்பூர்ல, ஸ்ரீராம கிருஷ்ண மடத்துக்கு பக்கத்துல இருந்தது. அப்ப எங்க எதிர் வீட்டுல, ஒரு மாமி இருந் தாங்க. அவங்க வீட் டுக்கு அடிக்கடி ஒரு பெரிய கார் வரும். அதுல எம்.எஸ். அம்மாவும், சதா சிவம் அய்யாவும் வந்து இறங்குவாங்க. கூடவே ஆனந்தி, ராதா வருவாங்க.

எதிர் வீட்டுல என் வயசு சிநேகிதி இருக்கவே, நான் 'குடுகுடு'ன்னு ஓடிப்

போவேன். 'ஒரு அழகான மாமி, பெரிய கார்ல வந்திருக்காங்க!'ன்னுதான் அந்த வயசுக்கு தெரிஞ்சுது!

''அவ்வையார்ல ஆக்ட் பண்ணின குழந்தைதானே நீ?''ன்னு கன்னத்தை வழிப்பாங்க எம்.எஸ்.அம்மா. ஆனந்தி, ராதா எல்லாருமா விளையாட ஓடிப் போயிடுவோம்.

''தியாகபிரம்மகான சபா சார்புல 1992ல் எனக்கு ஒரு விருது கொடுத்தாங்க. அந்த விஷயத்தைச் சொன்ன சபா செய லாளர், ''உனக்கு அந்த விருதைத் தரப் போற வி.வி.ஐ.பி. யாரு தெரி யுமோ?''ன்னு கேட்டார்.

நான் அசுவாரசியமா, ''யார் சார்?''ன்னேன்.

''எம்.எஸ்.அம்மா!'' என்றாரே பார்க்கலாம்!

எனக்கு சந்தோஷத்தில் உடம் பெல்லாம் பூரிச்சுப் போச்சு. உண்மை யில, விருது கொடுக்கும் விழா அன்னிக்கு, எனக்கு திருவள்ளூர்ல ஷூட்டிங்!

டைரக்டர்கிட்டே கெஞ்சிக் கேட்டு, வாணிமகால் வந்து சேர்றதுக்குள்ள டென் ஷனாயிடுச்சு! எப்படியோ சரியான நேரத் துல மேடை ஏறிட்டேன்.

''இவங்க பேர் சச்சு''ன்னு விழா அமைப்பாளர் எம்.எஸ். சதாசிவம் தம்பதி கிட்டே அறிமுகப்படுத்தினாரு.

''இவளை எனக்கு நல்லாத் தெரியுமே! சின்ன வயசுல இருந்தே பழக்கம்!''னு மென்மையா சிரிச்சுக்கிட்டே என் கைகளைப் பிடிச்சுக்கிட்டாங்க!

அப்ப எடுத்த ஃபோட்டோவை, நான் பொக்கிஷமா வெச்சுருக்கேன்.

எம்.எஸ்.சுப்புலக்ஷ்மி பாடல்கள்னா தேன்பாகு மாதிரி. அதிலேயும் 'காற்றி னிலே வரும் கீதம்' பாட்டை, எத்தனை முறை கேட்டாலும் எனக்கு சலிக்காது. ''காலமெல்லாம்.. காலமெல்லாம் அவன் காதலை எண்ணி உருகுமோ என் உள்ளம்?''னு பாடுவாங்க பாருங்க... அந்தக் குரல் நம்ப உள்ளத்தை உருக்கிடும்.

அவங்களோட பாடல்கள் மட்டு மல்ல... அவங்களோட டிரஸ்ஸிங் சென் ஸும் எனக்கு ரொம்பப் பிடிச்சது.

'ஆனந்த பவன்'னு ஒரு டீ.வி. சீரியல். எனக்கு அதுல கும்பகோணம் மாமி கேரக் டர்! எனக்குக் கணவரா டெல்லி குமார் நடிச்சார்.

ஆசீர்வாதம்

அய்யர் மாமி கேரக்டர்னு தெரிஞ்சதுமே, நான் எம்.எஸ்.



அம்மா காஸ்ட்யூம்தான்னு முடிவு பண் ணிட்டேன். நேர்வகிடு, முன்பக்கம் இரு புறமும் பட்டையா, நெளிநெளியா நரைச்ச தலைமுடி இருக்கணும்னு எம்.எஸ்.அம்மா ஃபோட்டோவைக் காண்பிச்சே, 'விக்' தயார் செஞ்சுக்கிட்டேன். தழையத் தழைய ஒன்பது கஜம் மடிசார் கட்டி, விபூதி, குங்குமம், வைர பேஸரி, இரட்டை வட தாழம்பூ செயின், கொண்டையைச்சுற்றி மல்லிச்சரம் அணிந்ததும், 'பளிச்'னு எம்.எஸ்.அம்மா கெட் அப் வந்துடுச்சு!

'ஆனந்த பவன்' சீரியலைப் பார்த்த ஒரு ரசிகர் ஃபோன் பண்ணினார்.

''அம்மா... நான் எம்.எஸ்.க்கு பக்க வாத்தியம் வாசிக்கிறவன். அப்படியே அவங்களைப் பார்க்கற மாதிரியே இருக்

கும்மா!'' என்று சந்தோஷப்பட்டார்.

இதைவிட பெரிய கௌரவம் இருக்குமா என்ன?

எம்.எல்.வி., டி.கே. பட்டம்மாள், கே.பி.சுந்தராம்பாள் ('அவ்வையாரி'ன் அற்புத நாயகி!) போன்ற இசை மேதைகளிடமும் எனக்குப் பரிச்சயமிருந்தது, நான் செய்த பாக்கியம்.

எம்.எல். வசந்தகுமாரியை ''வசந்தி அக்கா!''னு கூப்பிடுவேன். எப்பவும் சிரிச்ச முகமா இருப்பாங்க.

ஸ்ரீவித்யா, என்னுடைய க்ளோஸ் ஃப்ரெண்ட். செட்டுல ஃப்ரீயா இருக்கும் போது, ''பாடு வித்யா!''ம்பேன்.

எனக்குப் பிடிச்ச, ''ஆறுமோ ஆவல்.. ஆறுமுகனை நேரில் காணாமல்!''னு ரொம்ப அருமையா பாடுவா.



டி.கே.பட்டம்மாள் எங்க ஊர்க்காரங்க. வட ஆற்காட்டைச் சேர்ந்த தாமல்தான் அவங்களுக்கும் சொந்த ஊரு. அசப்புல எங்க பாட்டி ஜாடையில இருப்பாங்க. கணீர்க் குரலும், பாவமும் அத்தனை ஆழமா நம்மளைத் துளைச்சுத் தூங்காமப் பண்ணிடும்.

சமீபத்துல என்னோட 55 வருட திரைப்பட சாதனைக்காக ஒரு பாராட்டு விழா நடத்தினாங்க. அப்போ டி.கே.பி. அம்மா, ஈஸ்வரன் ஐயாவைப் போய்ப் பார்த்து, நமஸ்காரம் பண்ணி, அவங்களோட ஆசியை வாங்கிட்டு வந்தது நிறைவா இருந்தது. விழாவுக்கு அவங்களால வர முடியலை. ஆனாலும் ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தாங்க. நான் அப்படியே நெகிழ்ந்து போயிட்டேன்.

சின்ன வயசுல, பாட்டு, டான்ஸ், ஹிந்தி, இங்கிலீஷ்னு நிறைய சொல்லிக் கொடுத்தாங்க. ஆனா, நான் நடிப்புக்குப் போயிட்டேன். டான்ஸ், ட்யூஷன் எல்லாம் தொடர்ந்தது. ஆனால் பாட்டை மட்டும் ஏனோ விட்டுட்டேன். உண்மையில், எனக்கு நல்ல குரல் வளம் இருந்தது. அதைப் பயன்படுத்திக்காமல் விட்டுட்டதை நினைச்சா இப்பவும் வருத்தமா இருக்கு.

டிசம்பர் சீஸனில், ஓய்வா இருக்கும் போது சபாக்களுக்குப் போய் பாட்டு கேட்கறேன். அதுவே பெரிய சுகானுபாவமா இருக்கு. ராகங்களைக் கண்டுபிடிக்கறப்போ சின்னக் குழந்தையாட்டம் சந்தோஷமா இருக்கு. ஆனாலும் சங்கீதத்தை 'மிஸ்' பண்ணிட்டேனோன்னு சின்ன வருத்தமும் இருக்கத்தான் செய்யுது!

(அச்சுவெல்லம் இனிக்கும்)

படம்: **வ.ரா.**



www.sowbaghya.com
எங்கள்
பெருமையின்
அடையாளம்
ரைஸ் குக்கர்
Rs.1299/- முதல்
EASYCOOK
Annam
No whistling
No waiting
110 USA & CANADA
Sakthi
SOWBAGHYA®
அனைவருக்கும் பெருமை... அனுபவம் புதுமை...
32 A, North Usman Rd, T. Nagar, Chennai - 600 017. Ph: 044 28341760 / 28342908.
13/1, Sri Devi Apartments, Lakshmikanthan Street, Pondy Bazaar, T. Nagar, Chennai - 600 017. Ph: 24350142.
5, Hasthinapuram Main Rd, Chrompet, Chennai - 600 044. Ph: 22234420.
314, Perundurai Rd, Erode - 638 011. Ph: 0424 2269965 / 2260245
1254, Mettur Rd, (E.V.N. Rd), Erode - 638 011. Ph: 0424 2224499
DUBAI: M/s Hadi Enterprises, PO Box No.: 5833, Dubai. Ph: 04 3470310
SINGAPORE: M/s Anacone Private Limited, 128 Dunlop Street, Singapore - 209447. Ph: 063341566
COLOMBO: M/s Good Value Distributors, 267 Sea St.,Colombo - 1. Ph: 011 2435842
MALAYSIA: M/s Ajantha Textiles, 20,22, 24, 26 Jalan Tengku Kelana 41000 Klang, Selangor. Tel.: 03 3371 7571

ஃபிராடு பார்ட்டி; ஜாக்கிரதை!

என் மகள் சிவகாசி அருகிலுள்ள கல்லூரியில், இன்ஜினியரிங் படிக்கிறாள். விடுமுறை நாட்களில் திருவனந்தபுரம் வருவதற்கு மதுரையிலிருந்து இரவு ரயிலில் வருவாள். சென்ற முறை மதுரை ரயில் நிலையத்தில் காத்திருந்தபோது ஒரு படித்த, பணக்காரத் தோற்றமுடைய நடுத்தர வயதுப் பெண்மணி என் பெண் அருகில் வந்து பேச்சுக் கொடுத்தாளாம்.

தான் தன் மகனுடன் வந்திருப்பதாகவும், மும்பையில் புகழ்பெற்ற கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியை என்றும் தன்னை அறிமுகம் செய்து கொண்டாளாம். தொடர்ந்து தன் பிள்ளை பிட்ஸ்பிலானியில் படிப்பதாகவும், பெண் எம்.என்.சி. கம்பெனியில் கன்சல்டன்ட்டாக இருப்பதாகவும் கூறியிருக்கிறாள். மிகச் சரளமாகப் பேசியதால் என் மகள் படித்த குடும்பம் என்று நம்பியிருக்கிறாள்.



அதன்பின் உன் பேரென்ன? என்ன படிக்கிறாய்? ஏன் இந்த சப்ஜெக்ட் எடுத்தாய்? இந்த சப்ஜெக்டிற்கு என்ன ஸ்கோப்? இப்படிப் பல விஷயங்களைப் பற்றிக் கேட்டு சில விளக்கங்களும் கொடுத்திருக்கிறாள். என் மகள், 'ஆஹா... இந்த ஆன்ட்டிக்கு எத்தனை விஷயங்கள் தெரிந்திருக்கு?' என்று நினைத்தபடி வாயைப் பிளந்துகொண்டு கேட்டாளாம்.

குடும்ப விசாரணை முடிந்ததும் மெதுவாக, தான் இராமேஸ்வரம் வந்ததாகவும் வந்த இடத்தில் தங்களுடைய அத்தனைப் பொருள்களும் தொலைந்துவிட்டதாவும் சொல்லியிருக்கிறாள். ''யாராவது ஒரு ஐந்நூறு ரூபாய் கொடுத்தால் நாங்க ஊர்ப் போய்ச் சேர்ந்ததும் திருப்பி அனுப்பிடுவோம். ஜஸ்ட் அக்கௌன்ட் நம்பர் தந்தால் போதும். உடனே ஆன்லைன்ல டிரான்ஸ்ஃபர் பண்ணிடுவேன். அதான்... நீ காலேஜ் கேர்ள் இல்லையா? உன் கிட்டே அதிக பணம் இருக்காது'' என்று மெதுவாகக் கேட்டிருக்கிறாள்.

என் பெண் உஷாராகிவிட்டாளாம். ''ஆன்ட்டி... உங்க கிரெடிட் கார்டு நம்பர் தெரிஞ்சா நீங்க இங்கேயே நெட்டில் இ-டிக்கெட் புக் பண்ணி ஊருக்குப் போகலாமே? போலீஸ்க்கு புகார் பண்ணினால் அவங்க ஏதாவது உதவி பண்ணுவாங்க...'' - இப்படி என் பெண் சொல்லிக் கொண்டிருந்த போதே, ''எக்ஸ்கியூஸ்மீ'' என் பையன் அங்கே தனியா இருக்கான். வரட்டுமா?'' என்று சென்று விட்டாளாம்.

நுனி நாக்கு ஆங்கிலத்தில் வெளுத்துக் கட்டும் இப்படிப்பட்ட 'ஹைடெக்' ஆன்ட்டிகளிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

- சியாமளா சுவாமிநாதன், திருவனந்தபுரம்.


She COMFORT
Sanitary Pad
Knows me
ப்ரீயட்களுக்கு என்
சாஃப்ட்டெக் மந்திரா # 33
"புரிந்து கொள்ளுங்கள்"
அந்த நாட்களில் உங்களின் வேலைகளை எளிமையாக்கிக் கொள்ளுங்கள் புரிகிறதா. மேலும் உங்களுக்கு அளித்திடுங்கள் அனைத்திலும் மென்மையான பாதுகாப்பு. புதிய ஷீ கம்ஃபர்ட் உடன்.
ஷீ கம்ஃபர்டின் சாஃப்ட்டெக் எனக்கு தருகிறது:
• சாஃப்ட் ட்ரை- வீவ் டாப்ஷீட்: இனி கேலிப்பேச்சு, எரிச்சல் அல்லது சொறி இல்லை.
• சாஃப்ட் ஜெல் டெக்னாலஜி: சக்தி வாய்ந்த உறியும் தன்மை
• சாஃப்ட் விங்ஸ்: பக்க கறைகளிலிருந்து மென்மையான பாதுகாப்பு
• தனித்தனியாக உறைமிடப்பட்டது: சுத்தமானது மற்றும் அகற்ற எளிதானது
இப்போது புரிந்து கொள்ளுங்கள்! ஷீ கம்ஃபர்ட்டை உங்களுடையதாக்குங்கள். உங்கள் வாழ்க்கையை மென்மையாக்குங்கள்.
She
She
SofTECH கொண்ட இந்தியாவின் முதல் நாப்கின்
ஷீ கம்ஃபர்ட் சானிட்டரி பேடுகள் கிடைக்குமிடங்கள்: பிக் பஜார்/ ஃபுட் பஜார், டிமார்ட், ஹைபர்சிட்டி, மோர்- ஆதித்யா பிர்லா ரீடெய்ல் லிமிடெட் (சூப்பர் மார்க்கெட் அண்ட் ஹைபர்), மேக்னட், மெட்ரோ (மும்பை/ பெங்களூரு/ ஹைதராபாத்/ கொல்கத்தா), நீல்கிரிஸ் (பெங்களூரு மற்றும் சென்னை), ரிலையன்ஸ் ஃப்ரஷ், ஸ்பென்சர்ஸ், விஷால் மெகா மார்ட், மெகா ஸேல் (ஷாப்பரட்) மற்றும் பிற முன்னணி ரீடெய்ல் ஸ்டோர்கள். வியாபார விசாரணைகளுக்கு காண வேண்டிய எங்கள் இணைய தளம்: www.shecomfort.com அல்லது தொடர்பு கொள்ள வேண்டிய இமெயில்: info@shecomfort.com.
The Parish/She Comfort/MM/11-09/01

வாங்க, தொழிலதிபர் ஆகலாம்!

2

பலூன் தியரி என்றால் என்ன?

பலூனில் நிரப்பப்படும் காற்றுக்கேற்ப அதன் அளவு அடுத்தடுத்த நிலைகளை எட்டிக் கொண்டே இருக்கும். அதுபோல் நாம் உழைப்பையும், பணத்தையும் முதலீடு செய்து கொண்டே இருந்தால் அடுத்தடுத்த நிலைக்குச் சென்று கொண்டே இருக்கலாம்.

பலூன் பறக்க வேண்டுமானால் அதற்கு உள்புறம் மட்டுமல்லாது வெளிப்புறமும் நல்ல காற்றோட்டம் அவசியம் தேவை. அதுபோல் பொதுமக்களிடம் அதற்கான தேவை இல்லாவிட்டால், நாம் தொழிலை முன்னோக்கி எடுத்துச் செல்ல முடியாது.


நாம் சுதாரிப்பாக இல்லாவிட்டால் காற்றின் வேகத்தில் பலூன் நம் கையை விட்டுப் பறந்து சென்று விடக்

தேங்கிவிட்ட சரக்கைப் பணமாக மாற்றுவது எப்படி?

கேள்வி: நான் பெங்களூரு மற்றும் மும்பையில் சுடிதார்கள் தயாரிக்கப்படும் நிறுவனங்களிலிருந்து அவற்றை குறைந்த விலைக்கு நேரடியாக கொள்முதல் செய்து எங்கள் வீட்டின் ஒரு பகுதியில் கடை வைத்து விற்பனை செய்கிறேன். தவணை முறையிலும்



இராம்குமார் சிங்காரம்



கூடும். தொழிலில் நம்முடைய கவனம் சிதறினால் தொழில், நம் கையை விட்டுப் போய்விடக்கூடும்.

ஏதேனும் ஒரு சின்னக் குண்டூசி குத்தினாலும் கூட பலூன் வெடித்துவிடும் அபாயம் உள்ளது. அதுபோலத்தான் நம்முடைய தொழிலும்; நம் நிறுவனத்தின் நற்பெயர் களங்கப்பட்டுப் போனால், மீண்டும் நிறுவனத்தைத் தூக்கி நிறுத்துவது மிகவும் கஷ்டம்.

பலூனில் காற்றை ஊதிக்கொண்டே இருந்தால் ஒரு கட்டத்தில் பலூன் வெடித்துவிடும். நாமும் நம்முடைய தொழிலில் பணத்தை தேவையின்றி அதிகம் முதலீடு செய்துகொண்டே இருந்தால் லாபம் கிடைக்காமல் போய்விடும்.



ஓர் அளவுக்குக் காற்றை நிரப்பி விட்டு, வெளியே வீசுகிற காற்றுக்கேற்ப நாம் கொஞ்சம் கொஞ்சமாக, நூலை விட்டால் பலூன் உயரப் உயரப் பறந்து கொண்டே இருக்கும். அது போல் தேவைப்படும் அளவு பணத்தை முதலீடு செய்து, தொழிலுக்கான வரவேற்பு மக்களிடத்தில் இருக்கின்றபட்சத்தில் தொடர்ந்து கடுமையாக உழைத்துக் கொண்டே இருந்தால் தொழில் வெற்றிபெறும்.

இதுதான் பலூன் தியரி! இப்போது சொல்லுங்கள்... இந்தத் தியரி உபயோகமானதுதானே!

தொழில் முன்னேற்றம்

விற்பதால் எனக்குத் தொழில் நன்றாக இருக்கிறது.

இதில் ஒரு பிரச்னை என்னவென்றால், நான் வாங்கி வரக்கூடிய சுடிதார்களில் ஒவ்வொரு முறையும் இருபது சதவிகிதத் துணிகள் அப்படியே தேங்கி விடுகின்றன. அந்தத் துணிகளில்தான் எனது லாபம் அடங்கியிருக்கிறது. இதனால், நான் என்னுடைய லாபப் பணத்தையெல்லாம் துணிகளாகவே வைத்திருக்கிறேனே தவிர, அவற்றைப் பணமாகப் பார்க்க முடியவில்லை. இதனைப் பணமாக மாற்றுவது எப்படி?

-விமலா சுப்ரமணியன், மணப்பாறை.

பதில்: இந்தப் பிரச்னைக்குப் பல வகையான தீர்வுகள் உள்ளன. முதலில், கடந்த பலமுறை நீங்கள், கொள்முதல் செய்து வந்தபோது எந்த அளவிலான (சிறுமிகளுக்கானதா, கல்லூரி மாணவிகளுக்கானதா அல்லது இல்லத்தரசிகளுக்கானதா) சுடிதார்

கள் எஞ்சியிருக்கின்றன என்பதைக் கவனிக்க வேண்டும். அதிலும் குறிப்பாக எந்த மாதிரியான டிஸைன்கள், கலர்கள், துணி ரகங்கள் எஞ்சியிருக்கின்றன என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். அதற்கான காரணத்தை ஓரளவு கண்டறிந்து, அடுத்தமுறை அவற்றை வாங்குவதைத் தவிர்க்கலாம்.

மாறாக, நீங்கள் சுடிதார்களைக் கொள்முதல் செய்கிற நிறுவனத்திலேயே மூன்று மாதங்களுக்குள் விற்காத சுடிதார்



களை, கொள்முதல் செய்த விலைக்கோ அல்லது சற்றுக் குறைவான விலைக்கோ கூட எடுத்துக் கொள்ளச் சொல்லி உத்திரவாதம் பெறலாம். சுடிதார் உற்பத்தித் தொழிலில் உள்ள கடும் போட்டியின் காரணமாக உங்களுக்கு சப்ளை செய்யக் கூடிய நிறுவனங்கள் இதனை ஏற்றுக் கொள்ள வாய்ப்புகள் உள்ளன.

கொள்முதல் விலையை விட சற்றுக் குறைவாக உற்பத்தியாளரிடமே விற்கிற போது அந்தச் சுடிதார்களை உங்களிடமிருந்து வாங்கிக் கொள்வதில் உற்பத்தியாளரும் மகிழ்ச்சி கொள்வார். ஏனெனில், அவர் அதனை அடுத்த வாடிக்கையாளருக்கு விற்கிறபோது அவருக்கு இரட்டிப்பு லாபம் கிடைக்கும்.

மேலும், உற்பத்தியாளர் இப்படி ஒரு உடன்பாட்டுக்கு உங்களிடம் வருகிற போது நீங்கள், தைரியமாக இன்னும் அதிகமான சுடிதார்களை வாங்கி உங்கள் வீட்டில் விற்பனை செய்யலாம்.

அடுத்ததாக, பாரம்பரியமாக அனைவரும் செய்யக்கூடிய வழிமுறை என்ன வென்றால், எஞ்சியிருக்கிற துணிகளை 'சேல்' என்று போர்டு போட்டு தள்ளுபடியில் விற்பது. ஆனால் இந்தத் தள்ளுபடி விற்பனையை அடிக்கடி செய்தீர்களேயானால் உங்களது நிறுவனத்தின் நற்பெயர் குறைந்துவிடும். வருடத்துக்கு ஒருமுறையோ அல்லது இருமுறையோ ஸ்டாக் கிளியரன்ஸ் சேல் (Stock Clearance Sale) என்ற பெயரில் இந்த உத்தியைக் கையாளலாம். நினைவில் கொள்ளுங்கள்... இந்தத் தள்ளுபடியானது உண்மையான தள்ளுபடியாக இருக்க வேண்டும். விலையை உயர்த்தி தள்ளுபடி வழங்கும் ஏமாற்று வேலையைச் செய்யக்கூடாது.

இந்தத் துறையில் ஈடுபட்டிருக்கக் கூடிய சிலர் செய்கிற ஒரு தவறு என்ன வென்றால், யாரோ ஒருவருக்கு பூ போட்ட சுடிதார் பிடிக்கும் என்பதற்காக அதுபோன்ற சுடிதார்களையே வாங்கி அடுக்கி வைத்துவிட்டு, பிறகு அந்தச் சுடிதார்கள் எதுவுமே விற்கவில்லை என்று புலம்புவது உண்டு. வாடிக்கையாளர் மனோபாவத்தைத் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டியது இந்தத் தொழிலின் அடிப்படை அவசியமாகும்.

(தொடரும்)

('தொழில்' சம்பந்தப்பட்ட கேள்விகள் - அனுபவங்கள் வரவேற்கப்படுகின்றன)



அமிர்த்தா கிரைண்டர் மற்றும் மிக்ஸி **Style - Quality - Smoothness**

உலகத்தரமிக்க கிரைண்டர்களை வழங்கி வரும் அமிர்த்தாவிடமிருந்து அதே உன்னதத் தரத்துடன் அதிநவீன மிக்ஸிகள். உங்கள் தேவை மற்றும் பட்ஜெட்டுக்கு ஏற்ற பல்வேறு மாடல்கள். இனி மேல் உங்கள் வேலை ஈசி... வாழ்வே ஜாலி...

அமிர்த்தாவிற்கு நிகர் அமிர்த்தா மட்டுமே



5 YEAR WARRANTY
*on motor, 2 year on grinder
For Grinder

2 YEAR WARRANTY
For Mixe

Available with 110V motor for America and Canada

அமிர்த்தா®
கிரைண்டர் & மிக்ஸி

இல்லத்தில் அமிர்த்தா... உள்ளத்தில் நிம்மதி.

● **Available at all leading out lets** *Only for ALS 1 year warranty on grinder & 3 year warranty on motor. www.amirthaa.com

Authorised Distributers : Chennai 26481013, **North Arcot** 98943 15321, **South Arcot** 94434 40069, **Pondy** 2234342, **Thanjavur** 239561, **Madurai City** 97867 00927, **Madurai Up Country** 99441 22077, **Tirunelveli & Tuticorin** 99949 20275, **Nagarcoil** 93605 83375, **Trichy** 2700728, **Salem** 98427 66377 **Coimbatore** 3249990, **Calicut** 2768433, **Bangalore** 41513919, **Mumbai** 098191 33810

Mktd. by: **Minit Engineers (I) P. Ltd.**, Erode - 4, Ph : 0424 - 2227050, 2214259, E-mail : amirthaa_grinder@yahoo.com





ரூ. 5,000 பரிசு ஆன்மிகப் போட்டி-10 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்!

1. ஆர்.பானுமதி, கடலூர்-2
2. கௌரி நாகராஜன், பெங்களூரு.
3. உமாமஹேஸ்வரி, வில்லிவாக்கம்
4. சு.லக்ஷ்மி, இராமேஸ்வரம்.
5. எஸ். சுஜாதா மூர்த்தி, திருச்சி-5
6. வி.ராமலக்ஷ்மி, நெல்லை-7
7. இந்திராணி, திண்டுக்கல்
8. ஜி.கீதா, சேலம்.
9. பி.ராதிகா, திருவையாறு
10. சுதா ராஜபாண்டியன், திருவள்ளூர்
11. ஏ.கோமதி, சங்கரன்கோவில்
12. சாந்தி லட்சுமணன், கோயமுத்தூர்
13. சிவகாமி கணேசன், காரைக்குடி-1
14. ந.சினேகப்பிரியா, பூந்தமல்லி
15. வே.முத்தம்மாள், ஆரல்வாய்மொழி
16. எம்.ஆர். சாந்தா, மைசூர்
17. கே.சரஸ்வதி, கும்பகோணம்
18. கா.சுபலேகா, புதுக்கோட்டை
19. வி.ஈ.பாலசுப்ரமணியன், வேலூர்
20. ராஜலக்ஷ்மி, அய்யம்பெருமாள்பட்டி

நவம்பர் 2009ல் வெளியான ஆன்மிகப் போட்டி-10 விடைகள்

1. ராவணன், 2. திருப்பரங்குன்றம், 3. காளிங்கன், 4. முருகன், 5. பன்னிரண்டு, 6. நாலாயிர திவ்யபிரபந்தத்தைத் தொகுத்தார், 7. வெங்கடாஜலபதியைப் பற்றி தினமும் ஒரு புதுப்பாடலை இயற்றினார், 8. முத்துசுவாமி தீட்சிதர், 9. ஆஞ்சநேயர், 10. நாரதர்

நெகிழ வைத்த பண்பு!



இரண்டு ஆண்டுகளுக்கு முன் நானும் என் கணவரும் ஆந்திராவில் ஒரு விழாவுக்குச் சென்றுவிட்டு, அப்படியே பத்ராசலம், மாடப்பள்ளி சென்று வர தீர்மானித்தோம்.

விஜயவாடா வழியாக கோத்டா போய்ச் சேர்ந்தோம். அப்போது இரவு நேரமானதால், மாடப்பள்ளி செல்லும் கடைசிப் பேருந்தும் சென்று விட்டது. திக்குத்தெரியாமல் அங்கிருந்த ஒருவரிடம் விசாரிக்க, அவர் "இங்கு தங்கிச் செல்ல எந்த வசதியும் இல்லை. உங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால், என் வீட்டில் தங்கிக்கலாமே" என்று அழைத்தார்.

முன்பின் தெரியாத எங்களைத் தங்க வைத்து பாலும் கொடுத்து, குடும்பத்திலிருப்பவர்களை எங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். மறுநாள், அவரது மகனை பேருந்து நிலையம் வரை துணையாக அனுப்பினார். அவரது பெயர் முஷ்டாக் அகமது. எங்களைப் பொறுத்தவரை அவர் வழிகாட்ட வந்த தெய்வமாகவே தெரிந்தார்!

- சரோஜா பத்மநாபன்,
கும்பகோணம்.

வாசகர் அனுபவம்


Himalaya
உங்களின் பச்சிளம் சருமத்தை
பாதுகாத்திடுங்கள். இயற்கையாக.
வேம்பு
மஞ்சள்
Himalaya
soap

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர் - பாலம் சில்க்ஸ்

Palam

இணைந்து வழங்கும்

சேலை சேலஞ்ச்!



க்விஸ் போட்டி - 4

கீழ்க்கண்ட கேள்விகளுக்கான விடைகளில் சரியானவற்றை ☑ செய்து அனுப்புங்க! குலுக்கல் முறையில் 10 பேருக்கு ரூ.1,500/- பெறுமானமுள்ள பரிசுக் கூப்பன்களை வழங்குகிறது பாலம் சில்க்ஸ். பெண்கள் சம்பந்தப்பட்ட போட்டி! அப்புறமென்ன? கட்டிக் கலக்குங்க!

1. கண்டாங்கிச் சேலையைப் பொதுவாக யார் அணிவார்கள்?

அ. உடலுழைப்பு தேவைப்படும் பணியில் ஈடுபடும் பெண்கள்

ஆ. கணினிப் பொறியியல் பணியில் ஈடுபடும் பெண்கள்

இ. ஆசிரியப் பணியில் ஈடுபடும் பெண்கள்

2. தறிகளுக்குப் புகழ்பெற்ற போச்சம்பள்ளி எங்கு உள்ளது?

அ. தமிழ்நாடு ஆ. ஆந்திரப் பிரதேசம் இ. கேரளா

3. காட்டன் சில்க் என்பதில் கலந்திராத இழை எது?

அ. பருத்தி ஆ. பட்டு இ. நைலான்

4. 'சந்தேரி' 'மகேஷ்வரி' என்ற வகைப் புடைவைகள் எந்த மாநிலத்தில் உருவாக்கப்படுகின்றன?

அ. மத்தியப் பிரதேசம் ஆ. பீகார் இ. காஷ்மீர்

5. பட்டுப் புடைவையை ட்ரை-க்ளீனிங் செய்ய சிலர் MTO என்பதைப் பயன்படுத்துகின்றனர். இதில் M என்பது 'மினரல்' என்பதையும், O என்பது 'ஆயில்' என்பதையும் குறிக்கின்றன. T என்பது எதைக் குறிக்கிறது?

அ. டர்பென்டைன் ஆ. டர்மெரிக் இ. டிங்ச்சர்

- ஜி.எஸ்.எஸ்.

போட்டி விதிகள் :

'சேலை சேலஞ்ச்-4' விடைகளை நிரப்பி, இந்தப் பக்கத்தைக் கத்தரித்து, மங்கையர் மலருக்கு அனுப்புங்க. ஒருவரே எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஜெராக்ஸ் கூடாது.

கடைசித் தேதி : 5.01.2010

பெயர் : .... விலாசம் : ....

....

....

தொலைபேசி எண் : .... ஈ-மெயில் : ....

ஒரு உளக்கு





டி. அம்புஜவல்லி

''சாரு, தவநாம காலை ஐந்து மணிக்கே கிளம்பிடு. ப்ரதீப் கிளம்ப ராத்திரி பதினொண்ணாயிடும். நீ அசதியில் தூங்கிடப் போறே. பந்தலுக்கு வேண்டியதெல்லாம் நீல தோள்பையில் வெச்சிருக்கேன். மறக்காம கடைக்குப் போய்ப் புடைவையை மாத்தி எடுத்து வெச்சுடு. என்னமோ போ, நீயும் சேர்ந்து வந்திருக்கலாம்'' ஓர்ப்படி மீனாட்சி வரிசையாக உத்தரவுகளை அடுக்கியவாறும், ஆதங்கப்பட்டபடியும் ஆட்டோவில் ஏறினார்.

சாதாரணமாகவே ஒவ்வொன்றையும் பத்து தடவை சொல்லியாக வேண்டும் அவருக்கு. சாருவும் இருபத்து இரண்டு வருஷங்களாகக் குடித்தனம் செய்து இதோ, பிள்ளை ப்ரதீப், கரக்பூரில் கல்லூரியில் படிக்கிறான். ஆனாலும் நேற்று மணமாகி வந்த புது மாட்டுப் பெண் போல்தான் மன்னி அவளை நடத்துகிறார். இது மாமியார் வழி வந்த வழக்கம்; அவருக்குப் பின்னாலும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டார் மன்னி. சாருவும், ப்ரதீப் சொல்வது போல் எல்லாவற்றுக்கும் தஞ்சாவூர் பொம்மை போலத் தலையை ஆட்டிக் கொண்டிருக்கப் பழகி விட்டாள்.

இருக்குமா?




இப்போதைய ஆர்ப்பாட்ட, அமர்க்களங்களுக்குக் காரணம், மன்னியின் ஒன்றுவிட்ட சித்தப்பாவுக்கு, இரண்டு நாளில் சதாபிஷேகக் கல்யாணம், எங்கோ விழுப்புரத்துக்கருகில் ஓர் கிராமத்தில் நடக்கவிருக்கிறது. சமயம் பார்த்து மைத்துனர் ரங்காவும் சாருவின் கணவர் ரகுவும் பிஸினஸ் விஷயமாக வெளியூர் சென்று விட்டதால், வீட்டில் 'மீனாட்சி ராஜ்யம்'தான். இதனால் ப்ரதீப்பைக் கவனித்து ரயிலேற்றும் வரை எல்லா வேலைகளும் சாருவின் தலையில் விழுந்திருக்கிறது.

விசேஷத்துக்கு இரண்டு நாள் முன்பே மன்னி போயாக வேண்டும். தேங்காய்ப் பாலுக்கு மூணாம் பால் என்பது போல தூரத்து உறவுக்குப் போயே ஆக வேண்டுமா? என சாரு சற்றுத் தயங்கவே, ''நாளைக்கு நமக்கு ஒண்ணென்றால் யாரும் வர மாட்டார்கள்; குனிந்து நமஸ்காரம் செய்து, நிமிர்ந்து நாமே வாழ்த்திக்கொள்ள வேண்டியதுதான்'' என்று கூறிக் கண்டிப்பாகப் வரும்படி நிர்ப்பந்தித்து விட்டார்.

பெரியவர்களுக்காக வாங்கி வைத்த பரிசுகளில், புடைவை பிடிக்காமல் போய் விட்டது. ''நிறைசுமங்கலிக்கு வாங்கும் விசேஷப் புடைவையில் கறுப்பு கலந்திருப்பதைப் பார்க்க

ஜெயஸ்ரீ ராஜ்
நினைவுச் சிறுகதைப் போட்டி
ரூ.2000/-
பரிசுக்கதை-2



பீன்ஸ் பொரியலுக்கு வேக வைத்து உதிர்த்த உசிலியோ, அல்லது தேங்காய்த் துருவலோ போட்டுச் செய்வோம். மாறுதலாக சிறிது தேங்காய்த் துருவல், சிவப்பு மிளகாய் (தேவைக்கேற்ப) இஞ்சி சிறு துண்டு, சிறிது சோம்பு சேர்த்து மிக்ஸியில் அரைக்கவும். விழுதை நன்றாக வதக்கிய பிறகு வேகவைத்த பீன்ஸ் சேர்த்துக் கிளறி இறக்கவும். "இன்னும் கொஞ்சம்" என்று எல்லோரையும் கேட்க வைக்கும் இந்தப் பொரியல்!

— பானு சுரேஷ், ஆதம்பாக்கம்.

வேண்டாமா? உடனே மாற்றிக்கொண்டு நீ வரும்போது எடுத்து வந்துவிடு'' என்று உத்தரவிட்டதுடன் கிளம்பும்போது கூட நினைவுறுத்திவிட்டுப் புறப்பட்டார் மன்னி.

ஊருக்குக் கிளம்பும் ப்ரதீப்புக்குத் தேவையானவற்றை எடுத்துக் கொடுத்து, இடையே அவசர அவசரமாக ஜவுளிக் கடைக்குப் போய்ப் புடைவையை மாற்றிக் கொண்டு வந்து ஒருவழியாகப் பையனை ரயிலேற்றிவிட்டு வீடு வந்தால், கையும் காலும் கெஞ்சியது. இதனிடையிலும் மன்னி தொலைபேசியில் புடைவை என்ன நிறம், என்ன பார்டர் என்று கேட்டுத் தெரிந்துகொண்டு விட்டார். ''மயில் கழுத்து நிறமும், ஆரஞ்சு பார்டரும் சித்திக்கு பாந்தமாக இருக்கும்'' என்று சான் றிதழும் கிடைத்துவிட்டது.

விடிந்து நாலு மணிக்கே எழுந்து கோயம்பேடு சென்றடைந்து, பேருந்தைப் பிடிக்க ஐந்தரை ஆகிவிட்டது. பரவா யில்லை; எப்படியும் எட்டு மணிக்குள் போய்விடலாம். ஒன்பதரைக்குத்தானே முகூர்த்தம் என்று ஆறுதல்பட்டபடி, முதல் நாளைய அலைச்சல், இரவில் இழந்த தூக்கம் எல்லாவற்றையும் சேர்த்துக் கண்ண யர்ந்து விட்டாள்.

ஒரு மணி நேரம் கூடச் சென்றிருக் காது, வண்டி எதற்கோ நின்று விட்டதை அறிந்து திடுக்கிட்டு விழித்த சாருவுக்குக் கிடைத்த செய்தி, ஏதோ டிராஃபிக்ஜாம். வண்டி இப்போதைக்குக் கிளம்பாது என்பதுதான்.

''தொழுப்பேடு ஸ்டேஷன், ஐந்து நிமிட நடை தூரம்தான். இப்ப ஒரு பாஸஞ் சர் வரும். ஒரு மணி நேரத்தில் விழுப்புரம் போய்டலாம்'' என்று இவளது தவிப்பைப் பார்த்து சகபயணி ஒருவர் கூற, சாருமதி, அவசரமாக ஸ்டேஷனை நோக்கி நடந் தாள். பத்து எட்டுக் கூடப் போயிருக்க மாட் டாள். பின்னாலிருந்து ஒரு குரல், ''ஒரு ஊக்கு இருக்குமா?'' என்று தீனமாகக் கேட்டது. திரும்பியவள் அந்தக் குரலுக் குரிய நபரை உற்றுநோக்கினாள். அந்தப் பெண்மணியே தொடர்ந்து, ''நான் விக்கிர வாண்டி போயாகணும். ஒரு விசேஷத்துக் குக் கைக்காரியத்துக்குக் கூப்பிட்டிருக்கா. இப்படி வண்டியைப் போட்டுட்டாளே. கூடவே என் பிழைப்பிலும் மண்ணைப் போட்டாச்சு'' என அலுத்துக் கொண்டாள்.

பாவம், மாற்றுப் புடைவை கூட இல் லாமல், இருக்கும் புடைவையிலும் நெய்த நூலை விடவும் தைத்த நூலே அதிகம் என்பதுபோல இருந்தது. ஏதோ இன்று

கிடைக்கும் சிறு தொகை செலவுக்கு உதவுவதுடன், இரண்டு வேளை வயிற்றுப் பாட்டையும் கழித்து விடலாமே என்ற எதிர்பார்ப்பு வீணாகிவிட்ட ஏமாற்றம் கலந்த சோகம் அவளது முகத்தில் அப்பிக் கிடந்தது. போதாக்குறைக்குச் சதிசெய்வது போல், சற்றுக் கிழிந்திருந்த புடைவையின் கரை நீளமாகக் கிழிந்து, காலை இடறி விடுமோ என்னும்படித் தொங்கிக்கொண் டிருந்தது. அதை ஒருவிதமாக இணைக்கவே 'ஊக்கு' கேட்டாள் போலும்.

சாருவுக்கு ஒரு யோசனை தோன்றியது; இந்தப் பெண்மணிக்கும் சற்று உதவினால் என்ன? ''மாமி, என்னுடன் வாருங்கள்; விழுப்புரம் வரை ரயிலில் போய், அங்கிருந்து ஷேர் ஆட்டோவில் கூட விக்கிரவாண்டி போய்விடலாம்.'' என அழைத்தாள். அதிர்ஷ்டம் அவர்கள் பக்கம் இருந்தது. சரியான நேரத்துக்கு வண்டி வந்து இருவரும் அனேகமாகக் காலியாகவே இருந்த பெண்கள் பெட்டியில் ஏறி அமர்ந்தனர்.

அந்தப் பெண்மணியின் முகத்தில் பல லட்சத்தைப் பரிசாகப் பெற்றவளைப் போன்ற ஒரு நிம்மதி கலந்த சந்தோஷம். இத்தனை நேரப் பதற்றமும் நீங்கி, ஆசுவாசப்படுத்திக் கொண்டபின் அந்தப் பெண்மணி - சாரு ஏதும் கேட்கும் முன்பாகவே, தன் விருத்தாந்தத்தை விளம்பலானாள். அப்படி ஒன்றும் அவள் கதை புதிதாகவோ, கேள்விப்படாததாகவோ இல்லை.

கணவர் நல்ல வேலையிலிருந்ததும், ஒரே பெண் பிள்ளைகள் வசதியாக இருந்தும் இவள் மட்டும் அனாதையாக நிற்கும், பல தலைமுறைகளாகக் கேள்விப் பட்ட கதைதான். கதைச் சுருக்கத்தைக் கேட்டு, கனத்த மனத்துடன் பெருமூச்சு விட முடிந்த சாருமதிக்குக் கையில் இருந்த பையின் கனமும் கவனத்துக்கு வந்தது.

சற்று நேர யோசனைக்குப்பின் அந்தப் பெண்மணியை நோக்கி, ''மாமி, நீங்கள் தப்பாக நினைக்கலைன்னா, ஒரு புடைவை என்னிடம் இருக்கு; அதை வாங்கிப் பேளா?'' எனத் தயக்கத்துடன் வினவினாள். அவள் உடனே, ''எனக்கு என்னம்மா கௌரவமும் ரோஷமும், ஏதோ பெரிய மனசு பண்ணிக் கொடுக்கிறபோது வாங்கிக்க என்ன தடை?'' எனத் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள். உடனே தோள் பையிலிருந்த புடைவையை அவளுக்குக் கொடுத்துவிட்டாள்.

விழுப்புரம் வந்து, கல்யாண வீட்டை அடைந்த சாருமதியைக் கண்டதும் கண்டதும் ஓடோடி வந்த மன்னி, ''சாரு, எங்கே வராமப் போய்டுவியோன்னு கவலையாயிருந்தது. சரி புடைவை, வேட்டியை எடு; நாமும் கொடுத்து நமஸ்காரம் செய்து கொள்ளலாம்'' என்று அவசரப்படுத்தினார்.



தேயிலையைக் குளிர்ந்த நீரில் பத்து நிமிடங்கள் ஊறவைத்து, பிறகு தேநீர் தயார் செய்யுங்கள். மணமும், சுவையும் கூடும். தவிர, தேநீர் வழக்கத்தை விட அடர்த்தியாகவும் இருக்கும்.

- லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன், ராமாபுரம்.



''மன்னி, பஸ்ஸிலிருந்து ரயிலடிக்கு வரும் அவசரத்தில், புடைவை பார்சலை பஸ்ஸி லேயே விட்டுட்டேன் போலிருக்கு. அப் புறம்தான் பார்த்தேன். பேசாமல் இப்போது வேட்டியுடன் சித்திக்கு, ஐந்நூறு ரூபாய் சம்பாவனை பண்ணிடலாம். வேறு வழி யில்லை'' என்று தணிந்த குரலில் கூறி னாள்.

நிறைந்த சபையில் தன் கோபத்தைக் காட்ட வழியின்றி சாரு கூறியபடியே பெரியவர்களுக்குச் செய்துவிட்டு, விருந் தையும் முடித்துக்கொண்டு இருவரும் திரும்பினர். வழியெல்லாம் சாருவுக்கு, அனேக ஆசீர்வாதங்கள். ''இத்தனை வய சாச்சு; சமர்த்துப் போறாது'' என்று திட்டித் தீர்த்தாள். எல்லாவற்றையும் மௌனமாக வாங்கிக் கட்டிக்கொண்டாள் சாரு.

உலகம் உருண்டை என்று பூகோளத் தில் படித்ததை மறந்து பல ஆண்டுகளுக் குப் பின் உலகம் உருண்டை மட்டுமல்ல, மிகச் சிறியது கூட என்று மண்டையி லடித்து நினைவூட்டும் நிகழ்ச்சி ஒன்று நடந்துவிட்டது. தோழி ஒருத்தி வீட்டுச் சீமந்தத்துக்கு மன்னியுடன் சென்ற சாரு, சென்ற மாதம் சந்தித்த விக்கிரவாண்டி மாமியை அங்கும் பார்க்க நேர்ந்தது. அவள் உடுத்தியிருந்த, மயில் கழுத்து நிறத்தில், கோத்து வாங்கிய ஆரஞ்சு பார்டர் புடைவை... பகீரென்றது சாருவுக்கு.

அந்த மாமியும் இவளை அடையாளம் கண்டுகொண்டு விரைந்து வந்து, ''புண் ணியவதி உன் தயவாலே பளிச்சுனு வளையவர முடியறது; இவா யாரு?'' என்று குசலம் விசாரிக்கவும் ஆரம்பித்து விட்டாள். சங்கடத்துடன் நெளிந்தபடி, மன்னியிடம் தான் புடைவை தானம் கொடுத்த விவரத்தைக் கூறி முடித்தாள்.

கண்களை மூடிச் சிந்தனையில் ஆழ்ந் திருந்தார் மன்னி. தன்னைத் திட்டுவதற்கு மிகச் சரியான வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருக்கிறார் போலும்! திடீரென்று மன்னி, ''ஆயிரம் இருக்கப்பட்ட சித்திக்குக் கொடுத்திருந்தாலும் அவள் பத்தோடு பதி னொண்ணா கட்டியிருப்பாளோ, இல்லை யாருக்காவது கொடுத்திருப்பாளோ. இவ ளுக்குக் கொடுத்து மானத்தைக் காத்திருக் கியே. இதை முன்னமே சொல்லியிருக்கக் கூடாதா?'' என்று பாராட்டியதும், சாருமதி அடைந்த நிம்மதி கலந்த சந்தோஷம் இருக் கிறதே; அன்று வசிஷ்டர் வாயால் பிரம்ம ரிஷிப் பட்டம் பெற்ற விசுவாமித்திரருக்குக் கூடக் கிடைத்திருக்காது! ●




பொரி உருண்டை 'டல்' அடிக்கா மல் இருக்க, பாகு தயாரிக்கும்போதே ஒரு டேபிள் ஸ்பூன் வெண்ணெயைச் சேர்த்து விடுங்கள். பொரி உருண்டை நல்ல மணமாகவும், ருசியாக வும் இருக்கும். பொரி உருண்டையுடன், தோல் நீக்கிய வறுத்த வேர்க்கடலை, முந்திரி, பொட்டுக்கடலை, பாதாம் சேர்த்து, மாறுதலான, சத்தான உருண்டைகளாகத் தயாரிக்கலாமே!

– ஜெயா, சென்னை-83

நகைகளில் நேற்றும்... இன்றும்...
நாளையுமான பல்சானி...!
ஒருமுறை வாருங்கள்....
புதுமையாக திரும்புங்கள்!

சிறப்புச் சலுகை
01.12.09
முதல்
31.12.09



உங்கள் கண்களை கவரும் Temple Jewels, பல வண்ணங்களில், பலவித டிசைன்களில் உங்கள் பல்சானி ஜுவல்லர்ஸ்-ல் மிகமிக குறைந்த விலையில் அறிமுகமாகி உள்ளது.




இளைய தலைமுறைகளை சுண்டியிழுக்கும் வெள்ளியில் பதித்த அமெரிக்கன் டயமண்ட் நகைகள், அழகான டிசைன்களில்.... குறைந்த விலையில்! பாலீஷ் போய்விடுமோ என்ற கவலை வேண்டாம். மீண்டும் பாலீஷ் செய்து கொள்ளலாம். இதன் விலை ரூ. 1000/- முதல் ஆரம்பம்.



உங்கள் வாழ்க்கையில் வளம் பெற, வியாபாரத்தில் செழிக்க, கண்களை கவரும் விலை உயர்ந்த ஒரிஜினல் ராசிக்கற்களை வெள்ளியில் பதித்து 350 ரூபாய்க்கு குறைந்த விலைக்கு விற்பது நாங்கள் மட்டும்தான் இது தவிர 22 கேரட் ராசிக்கல் மோதிரம் உண்டு. அதுவும் 100 சதவிகிதம் உத்திரவாதத்துடன்.

ஒருவித ஸ்பெஷல் உலோகத்தின் மேல் ½ கிராம் அல்லது 1 கிராம் தங்கம் 'கோட்' செய்யப்பட்டு உருவாக்கும் தங்க நகைகள்தான், இன்றைய பேஷன் உலகின் நவநாகரீக மங்கைகளின் உள்ளத்தில் நம்பர் ஒன் இடத்தை பிடித்திருப்பது!





நீங்கள் வாங்கிச் செல்லும் மூக்குத்தி ஜோடியை தோடுகள் மேல் தோடாகவும் அல்லது குழந்தைகளுக்கு தோடாக அணிவித்தும் அழகுபடுத்தலாம். பரவசப்படுத்தும் எண்ணற்ற வண்ணங்களில் 22 கேரட் தங்கத்தினால் தயாரிக்கப்பட்ட மூன்று மூக்குத்தி வாங்குபவர்களுக்கு ஒரு Silver Coin இலவசம்

நீங்கள் வாங்கிச் செல்லும் ½ கிராம் தங்க நகையை உபயோகப்படுத்திய பின் ஆறு மாதத்துக்குள்ளும், ஒரு கிராம் தங்க நகையை உபயோகப்படுத்திய பின் ஒரு வருடத்திற்குள்ளும் எங்களிடம் திருப்பித் தந்தால், 50 சதவிகிதம் தள்ளுபடி செய்து வேறு புதிய நகையை எங்களிடம் பெற்று மீண்டும் நீங்கள் ஜொலிக்கலாம்.

பல்சானி ஜீவல்ஸ் நகைகளை ஆன்லைன் மூலமாகவே வாங்கலாம்! எங்களுடைய புதிதாக ஆரம்பிக்கப் பட்டுள்ள இணையதளம் www.sripalsanijewels.com மூலம் நகை வாங்குபவர்களுக்கு டெலிவரி சார்ஜில் 50% சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படும்.

சிறப்புச் சலுகைகள்:

1 gm மற்றும் American Diamond நகை வாங்குபவர்களுக்கு மட்டும்

இந்த விளம்பரத்தை கத்தரித்து வரவும்!

- உங்கள் நகைகளுக்கு 100% உத்திரவாதம் உண்டு.
- ரூ. 100 முதல் ரூ. 1000 வரை மாத சீட்டு உண்டு.
- ரூ. 500 முதல் ரூ. 1000 வரை வாங்குபவர்களுக்கு ஒரு ஜோடி American Diamond கம்மல் இலவசம்
- ரூ. 1,500/- முதல் ரூ. 2,500/- வரை வாங்குபவர்களுக்கு 5 Per கம்மல் இலவசம்
- ரூ. 2,500/-க்கு மேல் வாங்குபவர்களுக்கு ஒரு American Diamond Necklace set இலவசம்

Sri Palsani Jewels
110, Dr. Radha Krishnan Road
(Near Sri Krishna Sweets) Chennai - 4
Phone: 2811 1737, 2811 7036

www.sripalsanijewels.net



மனித நேயம்

உதவும் உள்ளங்கள்!

சென்னை, ரயில்வே ரிசர்வேஷன் பிரிவில் பணியாற்றும் ஈ.சாருமதியும், ஆர்.தமிழரசியும் ரொம்பவே வித்தியாசமானவர்கள். தங்களுடைய சகப்பணியாளர்களுடன் இணைந்து, மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதற்காகவே 'உமன்' (Woman - Well Wishers of Mentally Abnormal Nomads) என்ற அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

''ஒருமுறை 'ராஜேந்திரன்' என்ற வடநாட்டுக்காரர் ஒருவரை, மிகவும் மோசமான நிலையில் காண நேர்ந்தது.

சாருமதிதான் அவரைப் பார்த்து, பதறியபடி என்னிடம் வந்து சொன்னார். நான் 'அன்பகம்' என்னும் காப்பகத்துடன் தொடர்பு கொண்டேன். எவ்வித அருவையும் இல்லாமல், ஒரு பூமாலையைத் தூக்குவது போல, மெள்ளத் தூக்கி வண்டியில் ஏற்றி அவர்கள் கொண்டு சென்ற காட்சி, எங்களை மிகவும் நெகிழ வைத்தது. அதற்குப் பிறகு, 'பான்யன்' 'ரீஹேபா போத்' 'லிட்டில் டிராப்', 'கீழ்ப்பாக்கம் மருத்துவமனை' என நிறைய இடங்களுக்கு நாங்கள் ஆட்களை அனுப்பி வைப்பது வாடிக்கையாகி விட்டது'' என்கிறார் 'உமன்' அமைப்பின் தலைவரான ஈ.ஏ.வில்ஸன்.

''மனநிலை பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு மாவட்டந்தோறும் அரசு மறுவாழ்வு இல்லங்கள் அமைக்கப்பட வேண்டும். மருந்து, சைக்கோதெரபி, புனர்வாழ்வு பயிற்சிகள் தரப்பட்டால் அவர்களும் சாதாரண மனிதர்களாகி விடுவார்கள். இதை வலியுறுத்தும் வகையில், விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொண்டிருக்கிறோம். பொதுமக்களிடம் ஒரு லட்சம் கையெழுத்துக்களைப் பெற்று, எங்கள் கோரிக்கைகளை அரசின் கவனத்துக்குக் கொண்டு போவது எங்களது அடுத்த நடவடிக்கை!'' என்றார் மனோஜ்.

உலக மனநல விழிப்பு தினமான அக்டோபர் பத்தாம் தேதி அன்று, 'உமன்' சார்பில் சென்னையில் நடந்த விழிப்புணர்வு பேரணிக்கு, சென்னை மேயர் மா.சுப்ரமணியம் தலைமை தாங்க, ஏராளமானோர் பங்கு கொண்டு சிறப்பித்துள்ளனர்.



- மங்களேஸ்வரி

கலக்க வருதுப்பா

கல்கி

ரீடர்ஸ் கெட் ரெடி

எதையுமே... பெஸ்ட்டா பார்த்து செலக்ட் பண்ணும் ரசனை உடைய திருச்சி மாவட்ட வாசகர்களே!

இப்ப உங்க ஊருக்கே வருது கல்கி டீம்...

எதெல்லாம் எழுதுவீங்க..?

• உங்க ஊர் பெருமைகள் • வெற்றிக் கதைகள் • உங்க ஊர் பெஸ்ட்டைப் பாழ்படுத்தற வொர்ஸ்ட் • பின்னோக்கி இழுக்கும் பிரச்னைகள் • புகழ்பெற்ற கல்வி நிறுவனங்கள் • வி.ஐ.பி. இன்டர்வியூ • மிஸ்டர்/மிஸ் மாவட்டம் யாரு? • தொழிற்சாலைகள்

அப்ப ஆன்மிகம்?

மோஸ்ட் இம்பார்ட்டண்ட் ஆச்சே! • மலைக்கோட்டை • ஸ்ரீரங்கம் • சமயபுரம்... எல்லாமே உங்க மாவட்டம்தானே...

டூரிஸ்ட் ஸ்பாட்டையும் எழுதுங்க ஸார்...

கண்டிப்பா... கல்லணை, முக்கொம்பு... இன்னும் என்னவெல்லாம் இருக்குன்னு சொல்லுங்க

எழுத்தாளர்களுக்கு...?

• நச்சுன்னு கதை கொடுங்க • ஜில்லுன்னு ஜோக்ஸ் தாங்க • துணுக்கு தட்டிவிடுங்க • ஸ்பெஷலா கவிதை அனுப்புங்க

வாசகர்கள் என்ன பண்ணணும்...?

நீங்கதான் ரொம்ப முக்கியம். உங்க மாவட்டத்தைப் பத்தி நீங்க அனுப்புற தகவல்கள்தான் திருச்சி ஸ்பெஷல் இதழ்களுக்கு அஸ்திவாரம்!

விவரங்கள் எதிர்ப்பக்கத்துல இருக்கே!



ஆமாம்! உங்கள் திருச்சி மாவட்டத்துக்கு 'கல்கி' டீம், நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்!

சில சிம்பிள் கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்பு மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனி கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்குச் சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்புகளுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின்.... பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ்
  ஆன்மிக, வியாபார, சுற்றுலா தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன்
  சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல்
  நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ் என்றவாறு கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசி தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

...வர்றோம்...

கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி : 13.12.2009

ம.ம

கலக்க வருதுப்பா கல்கி
திருச்சிராப்பள்ளி

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்
☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 32

நீங்க ச்சும்மா கோடு போடுங்க...
நாங்க உடனே ரோடு போடறோம்!



காமேஸ்வரியின்

மார்கழியில் கல்யாணம் போன்ற சுபக் காரியங்களைச் செய்வது வழக்கமில்லைதான். ஆனால் இந்தக் காமேஸ்வரன்-காமேஸ்வரி கல்யாணம் மட்டும் விதிவிலக்கு. மார்கழியில்தான் ஜாம் ஜாம் அரங்கேற்றம்!

அது ஒரு பிரளயக் காலம். உலகமே அழிவின் விளிம்பில் இருக்கிறது. மகாவிஷ்ணுவோ யோக நித்திரையில் இருக்கிறார். அவரது தொப்புள் கொடியிலிருந்து பிரம்மனும், காதுகளிலிருந்து மது-கைடபர் அரக்கர்களும் தோன்றுகின்றனர். இந்த அசுரர்களால் துன்பம் வரும் என்பதை யூகித்த பிரம்மா, மகாவிஷ்ணுவை எழுப்புகிறார். ஆனால் அவர் பரிபூரண யோக நித்திரையில் இருப்பதால், முடியவில்லை. பிரம்மா, நித்ராதேவியிடம் பிரார்த்தனை செய்கிறார். உடனே, நித்ராதேவி, மகாவிஷ்ணுவை விட்டு அகல, அவர் யோகம் கலைந்து எழுகிறார்.

''அச்சுதா, வதம் பண்ணு!'' என்று பிரம்மா வேண்டுகிறார். மகாவிஷ்ணு, மது-கைடபருடன் போர் புரிகிறார். ஐந்தாயிரம் ஆண்டுகள் யுத்தம் நடந்தும், மது-கைடபரை ஜெயிக்க முடியவில்லை. அவர்



கல்யாணம்!



களுக்கு மமதை உண்டாகிறது. வெற்றிப் பெருமிதத்தில், ''உனக்கு என்ன வரம் வேண்டுமானாலும் கேள்!'' என்கிறார்கள் அரக்கர்கள்.

''எனக்கு உங்களோட உயிர் தான் வேணும்!'' என்று சடக்கென்று கேட்டு விடுகிறார் மகாவிஷ்ணு.

உலகமே வெள்ளத்தில் மூழ்கியிருக்கும் சூழ்நிலையில், ''தண்ணீரே இல்லாத இடத்தில் வதம் செய்து கொள்!'' என்று கேலியாகச் சிரிக்கின்றனர்.

உடனே மகாவிஷ்ணு, வானத்துக்கும் பூமிக்குமாக விஸ்வரூபம் எடுத்து, தமது தொடைகளுக்கு இடையில் இடுக்கி, மது-கைடபரை வதம் செய்கிறார்.

இன்னொரு அழகான காட்சி! ஸ்ரீ லலிதாம்பிகை, எழில் பொருந்திய இளம் நங்கையாக, ஹோம குண்டலத்திலிருந்து வெளியே வருகிறாள். இவ்வளவு தேஜஸும், சௌந்தர்யமும் பொருந்திய இந்தத் தெய்விகக் கன்னிகைக்கு பொருத்தமான மாப்பிள்ளை யாரோ என்று மகாவிஷ்ணு வியக்க, ''ஜெகதீசனாகிய சிவபெருமானே ஏற்ற நாயகன்!'' என்கிறார், பிரம்ம தேவர்.

உடனே, பொன்மேனியெங்கும் சாம்பல் பூசியபடி, ஜடாமுடியும் புலித் தோல் ஆடையுமாக சிவன் காட்சியளிக்கிறார். அவரிடமிருந்து சர்வாலங்காரியாக, அதி அற்புத அழகான காமேஸ் வரன் தோன்றுகிறார். காமேஸ்வரன் - காமேஸ்வரி திருக்கல்யாண வைபவம் நடந்தேறுகிறது. மாலை மாற்றுதல், ஊஞ்சல் ஆடுதல், 'ஷோபானம்' பாடல்,



மணமக்கள் வீதி உலா என்று திருக்கல்யாணம் மங்களகரமாக நடக்கிறது.

இதுபோன்ற பிரம்மாண்டமான காட்சிகளும், இனிய கீர்த்தனைகளுமாய் 'ஜனனி ஜகத்காரணி' நாட்டிய நாடகம் பயணிக்கிறது. அதன்பின் மோகினி அமிர்தம், மகிஷாசுரமர்த்தினி அவதாரம், சும்ப-நிசும்ப வதம், எனத் தொடர்ந்து அம்பாளின் சோடஷி தர்பார் காட்சியுடன் சுபமாக முடிகிறது.

'முழுக்க முழுக்க 'தேவிமகாத்மியம்' புராணத்தை அடிப்படையாகக் கொண்டு சம்பவங்களை விவரித்திருக்கிறோம். இதற்காக, தேவிபாகவதத்தைப் பல முறை வாசித்ததில், எங்கள் குழுவுக்கு மனப்பாடமே ஆகி விட்டது. காயத்ரியின் கதையமைப்புக்கு சங்கீத மேதை பாபநாசம் சிவனின் மகளான ருக்மணி ரமணி, பாடல்கள் புனைந்துள்ளார். சக்தியின் கதை சொல்லும் பாடல்களல்லவா? கொட்டு, ஜண்டை, சுத்த மத்தளம், பிரம்ம தாளம், உடுக்கை, மோளம், கொன்னக்கோல் போன்ற வாத்தியங்களைக் கொண்டு வித்தியாசமாக இசை அமைத்திருக்கிறார் இசையமைப்பாளர் குல்தீப் பாய்'' என்கிறார் நாட்டியத்தை வடிவமைத்த ஷீலா உன்னிக்கிருஷ்ணன்.

நாட்டிய நாடகம் முழுக்க தேவியரின் திருவிளையாடல்களாகவே வருவதால், மேடை மீதும் டீனேஜ் அழகுகளின் கோலோச்சுதானாம்! சண்டிகையாக உமா, லலிதாம்பிகையாக ஹரிணிஜீவிதா, ஷோடசியாக சுவாசினி, மோகினியாக ஷ்ரவந்தி, நித்ராதேவியாக பவித்ரா, சிவனாக தீப்தா, மகாவிஷ்ணுவாக சுபிக்ஷா என்று அசத்தியுள்ளனர். கூடவே... 'ஸ்ரீதேவி நிருத்யாலயா' மாணவிகளின் அற்புதமானப் பங்கேற்பு!

''இந்த நாட்டிய நாடகம் ஆரம்பித்ததிலிருந்து எங்கள் மாணவிகள் அனைவரும் நான் எதுவும் சொல்லாமலேயே, முட்டை கூட சாப்பிடாமல் விரதமிருக்கிறார்கள்!'' என்கிறார் ஷீலா உன்னிக்கிருஷ்ணன் பெருமையுடன்!



- வாணிஸ்ரீ

அழகிய, ஆரோக்கியமான கூந்தல், நல்ல கவனிப்புடன் !



நமது கூந்தலை ஷாம்பூவினால் சுத்தம் செய்வது எவ்வளவு முக்கியம் என்பது நம் எல்லோருக்கும் தெரிந்திருந்தாலும், கூந்தலை கண்டிஷன் செய்வதன் முக்கியத்துவம் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை. நம் கூந்தல் வகை என்ன மற்றும் எந்த வித தயாரிப்புகளை உபயோகிக்க வேண்டும் என்பது கூட நம்மில் சிலருக்குத் தெரியாது. ஷாம்பூ உபயோகிப்பது பற்றி அதிகமாகப் பேசப்படுகிறது என்றாலும், கண்டிஷனர்கள் எவ்வாறு வேலை செய்கின்றன மற்றும் ஒருவர் கூந்தலை எப்படி கண்டிஷன் செய்வது என்பது பற்றி அதிகம் வலியுறுத்தப்படுவதில்லை. நுனைக்கண்டத்தின் சீதோஷ்ண நிலை மற்றும் நம் சருமம் மற்றும் கூந்தலின் தன்மை ஆகியவற்றைக் கருதும் போதும், நம் கூந்தலை கண்டிஷன் செய்வது மிக முக்கியமாகிறது.

நம் கூந்தலை கண்டிஷனர்கள் எப்படி ஆரோக்கியமாகவும், அழகாகவும் பராமரிக்கின்றன என்று நாம் புரிந்து கொள்ள, நாம் முதலில் நம் கூந்தலைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.

வெவ்வேறு கூந்தல் வகைகள் எவை?

நாம் கூந்தலைப் பற்றி பேசும் போது, நம் தலை மீதான சருமத்தையும் சேர்த்துத் தான் பேசுகிறோம். கூந்தலானது ஸ்ட்ரெயிட், சுருட்டை, வேவி, ப்ரிஸ்ஸி அல்லது ஆஃப்ரோ என்று எந்த வகையாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் நம் கூந்தல் சாதாரணமானதா, எண்ணெய்ப் பசையிக்கதா அல்லது வறண்டதா என்பதை நம் தலைச் சருமம் தான் முடிவு செய்கிறது. கூந்தல் கலர்/ரீராசல் செய்யப்பட்டுள்ளதா அல்லது சேதமடைந்துள்ளதா என்பதையும் ஒருவர் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஒருவரின் கூந்தல் வகை என்ன என்பதை அவர் எவ்வாறு மதிப்பாய்வு செய்வது?

மதிப்பாய்வு செய்வது மிகச் சுலபம். சாதாரண கூந்தல் என்பது எண்ணெய்ப் பசை / பிசு பிசுப்பு இல்லாதது, வறட்சியற்றது அல்லது சேதமடையாதது. இது பர்ம் அல்லது கலர் செய்யப்படாதது மற்றும் பெரும்பாலான சமயங்களில் நன்றாகத் தோற்றமளிக்கக்கூடியது. கூந்தலின் மீது படிந்துவிடும் அதிகப்படி சேபம் காரணமாக கூந்தல் எண்ணெய்ப் பசையிக்கதாக/பிசு பிசுப்பானதாகி, அடர்த்தியின்றி, தொய்ந்து காணப்படுகிறது; ஈரப்பதம் மற்றும் எண்ணெய் குறைவினால் கூந்தல் வறண்டு, களையிழந்து, உயிரற்று இருக்கிறது.

கூந்தலில் ஷாம்பூ மற்றும் கண்டிஷனரை உபயோகிப்பதால் என்ன பலன்?

ஷாம்பூ உபயோகிப்பதன் முக்கிய நோக்கம், கூந்தல் மீது படிந்திருக்கும் அழுக்கு மற்றும் எண்ணெய்ப் பிசுக்கினை நீக்குவது. கண்டிஷனர், கூந்தலை உடையாமல் பாதுகாத்து, கூந்தலை ஒரளவுக்கு அதன் இயற்கை நிலைக்கு திரும்பச் செய்வதுடன், கூந்தலுக்கு பளபளப்பும் அளிக்கிறது. கூந்தலை முறையாக கண்டிஷன் செய்வது அதனை சுலபமாகப் பராமரிக்கவும் உதவுகிறது.



ஆகையால், நீங்கள் உங்கள் கூந்தலை சுத்தம் செய்யும் போதெல்லாம், கண்டிஷனர்களை உபயோகிப்பது மிகச் சிறந்தது. ஆனால் இதில் ஒரு விதிவிலக்கு உள்ளது. எண்ணெய்ப் பசையிக்க கூந்தல் உள்ளவர்கள் அடிக்கடி கண்டிஷனர்கள் உபயோகிக்கத் தேவையில்லை, ஏனென்றால், அவர்களின் கூந்தலில் இருக்கும் எண்ணெய்ப் பசை, கண்டிஷனர்களின் பணியைச் செய்யும். அதே சமயம், வறண்ட கூந்தலுடையவர்கள் அடிக்கடி கண்டிஷனர் உபயோகிப்பது அவசியம்.

சாதாரண கூந்தல் பராமரிப்பிற்கு ஒருவர் பின்பற்ற வேண்டிய கூந்தல் பராமரிப்பு செயல்முறை என்ன?

சாதாரண கூந்தலைப் பராமரிப்பது அவ்வளவு கஷ்டமானதல்ல. அதிக நேரம் அல்லது அதிக தயாரிப்புகள் தேவையில்லாத ஒரு சுலபமான கூந்தல் பராமரிப்பு செயல்முறையைப் பின்பற்றினால் போதும். சாதாரண கூந்தலுக்கு தினசரி ஷாம்பூ உபயோகம் தேவைப்படாது. வாரத்தில் மூன்று நாட்கள் போதுமானது. ஒரு நல்ல ஷாம்பூவை உபயோகிப்பதுடன், இந்த வகையான கூந்தலுக்கேற்ற ஒரு நல்ல கண்டிஷனரையும் உபயோகிப்பது முக்கியம்.

எண்ணெய்ப்பசையிக்க/பிசு பிசுப்பான கூந்தலுக்கு ஒருவர் எந்த வகையான ஷாம்பூக்கள் மற்றும் கண்டிஷனர்களை உபயோகிக்க வேண்டும்?

எண்ணெய்ப்பசையிக்க கூந்தலை தினம் மிதமான வால்யூமைஸிங் ஷாம்பூ மற்றும் கண்டிஷனரால் சுத்தம் செய்வது சிறந்தது. ஆனால் கூந்தலில் தங்கும் கண்டிஷனராக இல்லாமல் பார்த்து உபயோகிக்க வேண்டும். ஏனென்றால், தங்கும் கண்டிஷனர்கள், கூந்தலை வேகமாக எண்ணெய்ப் பசையிக்கதாக, அடர்த்தியின்றி, தொய்வாகத் தோற்றமளிக்க செய்யும்.

வறண்ட/சேதமடைந்த கூந்தலுக்கு ஒருவர் எவ்வகையான ஷாம்பூக்கள் மற்றும் கண்டிஷனர்களை உபயோகிக்க வேண்டும்?

வறண்ட/சேதமடைந்த கூந்தல், களையற்று, உயிரற்று, எளிதில் உடைந்துவிடக்கூடியதாக காணப்படும். அதற்குத் தேவை, தலைச் சருமம் ஈடுகட்ட இயலாத கூடுதல் ஈரப்பதம். வறண்ட கூந்தலுக்கு கூடுதல் ஈரப்பதம் அளிக்கும் ஷாம்பூக்கள் மற்றும் கண்டிஷனர்களை உபயோகிப்பது உத்தமம். அதே போல், கூந்தலில் தங்கும் கண்டிஷனர்களை தேர்ந்தெடுக்கவேண்டும் ஏனென்றால், கூந்தலுக்குத் தேவையான ஈரப்பதத்தை தொடர்ந்து அளிப்பவை அவையே.



கலர்/பர்ம் செய்யப்பட்ட கூந்தலுக்கு என்ன செய்வது?

இவ்வகையான கூந்தலுக்கு விசேஷ கவனிப்புத் தேவை. கலர்/பர்ம் செய்யப்பட்ட கூந்தலைப் பராமரித்து, பாதுகாப்பதற்கென்றே குறிப்பிட்ட தயாரிப்புகள் கிடைக்கின்றன. கலருக்கு எதிராக செயல்படாத கண்டிஷனர்கள் அல்லது ஷாம்பூக்களை உபயோகிப்பது முக்கியம். தவறான தயாரிப்புகள் கூந்தலுக்கு சேதமுண்டாக்கும் மற்றும் கலரிங் அல்லது பர்மிங்கை பாழாக்கிவிடவும் கூடும்.

கண்டிஷனிங்கில் செய்யக்கூடியவை, செய்யக்கூடாதவை

இந்திய மக்கள் கண்டிஷனர்கள் உபயோகிக்க இன்னும் தயங்குகிறார்கள். இது, கண்டிஷனர்கள் பற்றி சரியாகத் தெரியாததால் அல்லது அவை கூந்தலைப் பாழாக்கிவிடலாம் என்ற பயத்தினால் இருக்கலாம். ஷாம்பூக்கள் போலவே, கண்டிஷனர்களையும் கவனமாகத் தேர்ந்தெடுப்பது அவசியம்.

செய்யக்கூடியவை

- இயற்கைப் பொருட்களால் செழுமையாக்கப்பட்ட கண்டிஷனரைத் தேர்ந்தெடுக்கவும், ஏனென்றால் அவை தான் கூந்தலுக்கும் தலைச் சருமத்திற்கும் தீங்கு விளைவிக்காதவை மற்றும் பக்க விளைவுகள் இல்லாதவை.
- உங்கள் கூந்தலுக்கு ஏற்ற கண்டிஷனர்களைத் தேர்ந்தெடுக்கவும் – சாதாரண, எண்ணெய்ப் பசையான/பிசு பிசுப்பான, வறண்ட/சேதமடைந்த, எளிதில் உடைந்துவிடக்கூடிய, கலர் செய்யப்பட்ட, பர்ம் செய்யப்பட்ட கூந்தல் போன்றவை.
- கூந்தல் இழைகள் மற்றும் நுனிகளில் மட்டுமே கண்டிஷனரை உபயோகிக்கவும்.

செய்யக்கூடாதவை

- கூந்தல் மற்றும் தலைச் சருமத்தை பாதிக்கக்கூடிய, கேடு விளைவிக்கும் பொருட்கள் அடங்கிய பொருட்கள் கொண்ட தயாரிப்புகளை உபயோகிக்காமல் கவனமாக இருக்கவும்
- தலைச் சருமத்தின் மீது கண்டிஷனர்கள் உபயோகித்தால் சருமம் வறண்டுவிடக்கூடும்

இயற்கைப் பொருட்கள் கொண்ட கண்டிஷனர்களை உபயோகிக்கவும்

சந்தையில் பல்வேறு தயாரிப்புகள் கிடைக்கின்றன. ஆனால் 100% இயற்கையான பொருட்களைக் கொண்டவையே சிறந்தவை, கூந்தல் மற்றும் தலைச்சருமத்திற்கு கேடு விளைவிக்காதவை. நீங்கள் பார்த்து வாங்கவேண்டிய சில பொருட்கள்:

- அலோ வெரா, ஒரு பலன்மிக்க இயற்கையான மாய்ஸ்சரைசர்
- பேரேர், கூந்தலுக்கான இயற்கையான கண்டிஷனர்
- சிக்பீ மற்றும் ஓட்ஸ், இயற்கைப் புரோட்டீனின் செழுமையான மூலாதாரம்
- மைனா ரோஸ் மற்றும் லோட்டஸ் (தாமரை), தலைச் சருமம் மற்றும் கூந்தலுக்கான பலன்மிக்க, இயற்கையான கண்டிஷனர்கள்.

சரியான கண்டிஷனர்களை உபயோகித்து உங்கள் கூந்தலை அழகாகப் பளபளக்கச் செய்யுங்கள்.




Himalaya
HERBAL HEALTHCARE

MERIDIAN 377

ஆன்மிகம்

அரைச்ச சந்தனம்!



ஒரு சமயம் வெங்கண்ணபட்டர் எனும் ஏழை அந்தணர், ஒரு சிற்றூரில் சமாராதனை நடந்த கோயிலில் உணவு கிடைக்கும் எனும் ஆசையினால் காத்திருந்தார். அவரது வறுமைக் கோலம் கண்டு சிலர் எள்ளி நகையாடி, ''சும்மா உட்கார்ந்து சாப்பிடாதே; கொஞ்சம் சந்தனமாவது அரைச்சுக் கொடு'' எனக் கடுமையான குரலில் சொன்னார்கள். வெங்கண்ணபட்டரும் அக்னிசூக்தத்தை மெல்லிய குரலில், சொன்னவாறே சந்தனம் அரைத்தார்.

பின்னர், அந்தச் சந்தனத்தை உடலில் பூசிக் கொண்ட அனைவருடைய உடலும், தீப்பற்றியது போல எரியத் தொடங்கியது. சமாராதனை நடத்திய கிராமதிகாரிக்கு இந்தச் செய்தி அறிவிக்கப்பட்டது.

வெங்கண்ண பட்டரின் திருமுகத்தில் தெய்விகக் களையைக் கண்டுகொண்ட அதிகாரி, பாமரர்களின் பிழையைப் பொறுக்குமாறு மகான் வெங்கண்ண பட்டரிடம் அடிபணிந்தார். உடனடியாக வெங்கண்ண பட்டரின் திருநாவில், 'வருணசூக்தம்' மணிப் பிரவாளமாக வந்ததுதான் தாமதம்! என்னே மகானின் மகிமை! எரிச்சலுடன் கதறியவர்கள் உடல் குளிர்ந்தது. அவர்கள் உளமகிழ்ந்து மகானைப் பணிந்தனர்.

இந்தத் திருவிளையாடலை நடத்திய மகான் யார் தெரியுமா? மந்த்ராலய மகான் ஸ்ரீராகவேந்திரர்!

- மனோரமா கோபிநாத்,
பெங்களூரு - 28.





ஆசிரியர் வேலைக்கு ஆள் எடுக்கும் போது உச் சரிப்புச் சரியாக உள்ளவரை மட்டுமே தேர்வு செய்ய வேண்டும். இல்லாவிட்டால், வருங்கால சந்ததியினருக்குச் சரியான உச்சரிப்பு எது என்றே தெரியாமல் போய்விடும்.

- உலகம்மை, காரைக்குடி



ராஜாஜி முதியோர் இல்லம்

முதியோர் பாதுகாப்பு மற்றும் ஓய்வுக்கு ஏற்ற இனியதோர் இல்லம்
(ராஜாஜி முதியோர் பாதுகாப்பு அறக்கட்டளையின் கீழ் உருவாக்கப்பட்டது)

வாழ்வின் எஞ்சிய நாட்களை மன நிம்மதியுடனும் பரஸ்பர அன்புடனும் வாழ நினைக்கும் முதியோர்களுக்கு முன் மாதிரியாக விளங்கிய ராஜாஜி யின் பெயரால் பூந்தமல்லியை அடுத்த திருமழிசை - திருவள்ளுர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள **அரண்வாயில்** என்ற இயற்கை சூழல் மிக்க கிராமத்தில் தொடங்கப்பட்டுள்ளது.




- தொலைக்காட்சி /வானொலி போன்ற பொழுதுபோக்கு சாதனங்கள்
- சிறிய நூலகம்
- மருத்துவ வசதி
- உடற்பயிற்சிக்காக தோட்டப்பணி செய்ய வசதி
- நவீன வசதி கொண்ட சமையல் அறை
- 24 மணி நேரமும் சோலார் சுடுநீர் குளியல் வசதி
- மரங்களுடன் கூடிய இயற்கை மிகு சூழலில் நடைபயிற்சிக்கு ஏற்ற நடைபாதைகள்
- லாப நோக்கமின்றி சேவை மனப்பான்மையுடன் நடத்தப்படும் இல்லம்

அறையின் வகைகள்	முன்பணம் (டெபாசிட்)	மாதாந்திர தொகை உணவு உட்பட
இருவர் அறை (150 ச.அடி)	ரூ.25,000 (இருவருக்கு)	ரூ.6,000 (இருவருக்கு)
ஒருவர் அறை (105 ச.அடி)	ரூ.15,000	ரூ.3,200
பொது அறை (450 ச.அடி)	ரூ.8,000	ரூ.2,500

குறிப்பு : இந்த இல்லத்திற்கு நன்கொடை அளிக்க விரும்புவோர்க்கு 80-G பிரிவின் கீழ் வருமான வரி விலக்கு உண்டு.

மேலும் விவரங்களுக்கு : திரு. L.C. வெங்கட்ரங்கன், அறங்காவலர்,
ராஜாஜி முதியோர் பாதுகாப்பு அறக்கட்டளை (Reg)
எண்.127, சிட்கோ எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098, போன் : 26242255 /26243355

ஆன்மீக உலகில் ஓர் அற்புதம்!



ஆன்ம சக்தியை அழித்து, அறிவின் திறனை குறைத்து, மனவலிமையை தகர்த்து, நிம்மதியைக் குலைத்து, வலிவை பாழாக்கி, ஆரோக்யத்தைக் குறைத்து, குடும்பத்தில் குழப்பம், தொழிலில் நஷ்டம், உத்தியோகத்தில் பிரச்சனை, கல்வியில் தோல்வி, காதலில் வீழ்ச்சி போன்ற காரியங்களை பில்லி, சூன்யம், ஏவல் இவற்றால் **தீமை** உண்டாகின்றன.

விண் மட்டும் விஞ்ஞானம் வளர்ந்த போதும், இவைகளுக்குத் தீர்வு அருள் மறையில் மாத்திர முண்டு. இந்தக் குறைகளை நீக்கி எல்லாத் துறையிலும் வெற்றி பெறச் செய்கிறார் மாபெரும் தவச்சீலர் **மறையகம் பாபா.** உடனே அணுகவேண்டிய முகவரி:

அருள் 51

மறையகம்

1 B, மகாலட்சுமி அப்பார்ட்மெண்ட், நெ.3, அப்துல் ராசாக் தெரு, நூர்ஜஹான் தியேட்டர் எதிரில் (தற்போது ராஜ் தியேட்டர் என்று மாற்றப்பட்டுள்ளது), சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
☎ : 2435 1190, 2433 2047. செல்போன் : 98404 11551

குறிப்பு : வெளியூர், வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்கள் பிரச்சனை தீர்க்க தங்கள் பெயர், தங்கள் தாயார் பெயருடன் தங்கள் பிரச்சனைகளை எழுதி, ரூ. 10 (அ) அதற்கான அஞ்சல் தலையுடன் அனுப்பி வைத்து ஆலோசனை பெறவும்.



அந்த ஊரு மகாலக்ஷ்மி!

சேலத்தில் நாங்கள் ஸ்டீல் ப்ளான்ட் குவார்ட்டர்ஸில் தங்கியிருந்த சமயம். என் தோழி இரவு 11.30 மணிக்கு வீட்டில் கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள். திடீரென்று பால்கனியில் ஒரு சிரிப்புச் சப்தம் கேட்டது. முதலில் அசட்டையாக இருந்தவள், திரும்பவும் அதே சத்தம் கேட்டதும் பயந்து போய் அறைக்குள் சென்று படுத்து விட்டாள்.

காலையில் எழுந்ததும் முதல் வேலையாக என் வீட்டுக்கு வந்து நடந்ததைச் சொன்னாள். அவளைப் பயப்பட வேண்டாம் என்று சொல்லிவிட்டு என்னிடமிருந்த ஒரு தெய்விக அன்னையின் படத்தைக் கொடுத்து வாசலில் மாட்டச் சொன்னேன்.

இது நடந்தது 2000 ஆண்டில். அன்றிலிருந்து இன்று வரை, எந்த ஒரு அசம்பாவிதமும் நடக்கவில்லை என்றாள். நான் கொடுத்த படம் என்ன தெரியுமா? கருணையே உருவான 'குவான்-யின்' ரெய்கி அன்னையின் படம்.

கடலிலிருந்து கிளம்பி தாமரை மலரைக் கையில் ஏந்தியவாறு இருக்கும் இந்தத் தெய்வம் நமது மகாலக்ஷ்மிக்கு நிகர். ஐந்திதழ் தாமரை இவளது அடையாளம். நான் ரெய்கி ஹீலிங் செய்யும்போது குவான் யின் அன்னையை நினைவு கூர்ந்து, அவர்களே வந்து சிகிச்சை கொடுப்பதாக எண்ணிக் கொள்வேன். இதனால் நிறைய பேருக்கு பலன் கிடைத்தது.


சீனா, ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் குவான் யின் கோயில்கள் உள்ளன. ஆயிரம் கைகளை உடைய குவான் யின் உருவச் சிலை ஜப்பானில் உள்ள ஒரு கோயிலில் உள்ளது. சிங்கப்பூரில் வாட்டர் லூ வீதியில் ஸ்ரீ கிருஷ்ணர் கோயிலும், குவான் யின் அன்னையின் கோயிலும் அருகருகே இருக்கின்றன. பௌத்தர்களும் இந்துக்களும் இரண்டு கோயில்களுக்கும் செல்கின்றனர். ஊதுவத்தி ஏற்றி வைத்துப் பிரார்த்தனை செய்கிறார்கள்.

பெண்களும், குழந்தைகளும் இவளுக்கு மிகவும் பிரியமானவர்கள். பிரசவக் காலத்தில் இவளது உதவியை நாடுபவர்களுக்கு, சுகப் பிரசவம் ஏற்படும் என்பது நம்பிக்கை. குழந்தைப்பேறு வேண்டுபவர்கள் துணியில் சிறிய தூளி செய்து, கோயில் மரத்தில் கட்டி, பிரார்த்தித்துக் கொள்கிறார்கள்.

குவான் யின் அன்னையின் அருளை வேண்டுகிறவர்கள், 'ஓம் மணி பத்மே ஹும்' என்ற மந்திரத்தை உச்சரித்து, மனதாரப் பிரார்த்தனை செய்தால் வேண்டிய வரம் கிடைக்கும்.


பிரார்த்தனை

– ரமாதேவி, சென்னை-86.









துளசி கண்ணன்



தேவையான பொருள்கள்:

துணி, எம்பிராய்டரி ரிங், யெல்லோ கார்பன், டிஸைன் ஷீட், ஃப்ராலிகா 3D, கோன் லைனர் கலர்ஸ், ஃபேப்ரிக் க்ளு, பென்சில், மிரர், ஸ்டோன்ஸ்



டிசைன் போடுவதற்கு முன்பு துணியை அயர்ன் செய்து கொள்ளுங்கள். டிசைன் தேவைப்படும் இடங்களைப் பென்சிலால் குறித்துக் கொண்டு அதன் மேல் யெல்லோ கார்பனையும், அதற்கு மேல் டிசைனையும் ட்ரேஸ் செய்யுங்கள். துணியில் டிசைன் பதிந்திருக்கும்.

எம்பிராய்டரி ரிங்கில் டிசைன் பகுதி வருமாறு இணைத்து, ஃப்ராலிகா 3D கோன் லைனர் ஒன்றை எடுத்து டிசைனின் மையத்தில் ஒரு துளி அழுத்துங்கள். அதன் மேல் மிரரை



ஃப்ராலிகா 3D... எளிமையான எம்பிராய்டரி!













வைத்து மீண்டும் அழுத்துங்கள். (டிசைனுக்குத் தகுந்தபடியும், உங்கள் கற்பனைக்கேற்றவாறும் மிரரை தேவையான இடங்களில் வைத்து அலங்கரித்துக் கொள்ளலாம்). இப்போது துணியில் மிரர் அழகாக பொருந்தி யிருப்பதோடு பார்க்க எம்பிராய்டரி செய்தது போலவும் இருக்கும்.

மிரரைச் சுற்றியுள்ள டிசைன் பகுதிக்கு ஃப்ராலிகா 3D, லைனர் மூலம் உங்களது கற்பனைக்கேற்ப நிறமிடுங்கள். இதே போல் ட்ரேஸ் செய்த அனைத்து டிசைன் பகுதியிலும் மிரர் வைத்து நிறமிடுங்கள். எஞ்சியிருக்கும் பகுதியில் ஃபேப்ரிக் க்ளூ பயன்படுத்தி, ஸ்டோனை ஒட்டுங்கள்.

ஸ்டோனைச் சுற்றிலும் ஃப்ராலிகா 3D லைனர் மூலம் அலங்கரியுங்கள். இப்போது ஃப்ராலிகா 3D-யில் நேரிடையாகவே டிசைன் போடுமளவு உங்களது கைபழகி யிருக்கும்.

இறுதியாக கழுத்துப் பகுதியில் டிசைன் ஷீட் இல்லாமல் நேரிடையாகவே வேண்டிய டிசைன் போட்டு (டிசைன் ஷீட் வைத்தும்) இருபத்து நான்கு மணி நேரம் காயவிட்டு, ரிவர்ஸில் அயர்ன் செய்துவிடுங்கள்.

பார்க்க எம்பிராய்டரி போல இருக்கும் இந்த டிசைனை வரைவதும் எளிதுதான். எம்பிராய்டரியில் இந்த டிசைனைப் போட ஒரு வாரம் வரை ஆகலாம். ஆனால் ஃப்ராலிகா 3D கோன் லைனர் மூலம் ஒரு மணி நேரத்தில் இந்த டிசைனைப் போட்டு விடலாம். எளிமையான வேலை என்பதோடு, கண்ணைப் பறிக்கும் கொள்ளையான அழகும் ஃப்ராலிகா 3D வொர்க்கில் மட்டுமே சாத்தியம்!

குறிப்பு:

* ஃப்ராலிகா 3D தற்போது ஃபேப்ரிகா என்ற பெயரில் கிடைக்கிறது.
* சில்க், சிந்தெடிக், காட்டன், ஜீன்ஸ் போன்ற எல்லாத் துணிகளிலும் ஃப்ராலிகா 3D-யில் டிசைன் செய்யலாம்.

தொகுப்பு : **லக்ஷ்மி**

(தூரிகை தொடரும்)

உடல் பருமனில் இருந்து எளிதாக விடுதலை

Shape your Destiny by Shaping your Body

NO Medicines/NO Gym Exercises/Not even walking/NO Pain/ ONLY Comfort

Reasonable price / Only for ladies



அழகாகவும் கவர்ச்சியாகவும் விளங்க...

மனம் விரும்பும் ஆடைகளை அணிந்து மகிழ...

மற்றவர்களின் மதிப்பையும் பாராட்டையும் பெற...

உற்சாகத்துடன் வலம் வர...

ரிஷிதா ஸ்லிம் அண்ட் கேர்

உடல் பருமனால் ஏற்படும்

தாழ்வு மனப்பான்மை நீங்க...

திருமணத் தடைகள் அகல..

குடும்பப் பிரச்சினைகள் தீர...

நோய்களில் இருந்து நிவாரணம் பெற...

சிறந்த இடம்

ரிஷிதா ஸ்லிம் அண்ட் கேர்

- தொப்பை, இடுப்பு, தொடை , கைகள் போன்ற குறிப்பிட்ட பகுதிகளில் பருமன் குறைப்பு
- உடலுக்கு அழகான கவர்ச்சிகரமான வடிவமைப்பு
- இளமைத் தோற்றத்திற்கான **Face Lifting** எனப்படும் முக அழகிற்கான சிகிச்சை
- இம்போர்டெட் கருவிகள் மூலம் **Tapping, Toning** போன்ற நவீன சிகிச்சைகள்
- கண்களின் கீழுள்ள கருவளையங்கள் நீக்கம், உடல் பொலிவிற்கான மண் சிகிச்சை
- நெகடிவ் எண்ணங்களை நீக்கி பாஸிடிவ் எண்ணங்களை நிறுவும் கவுன்சலிங்
- **Stress** குறைய தியானம்
- உடல் மற்றும் மன நலத்திற்கான யோகாசன, பிராணயாமப் பயிற்சிகள்
- கை தேர்ந்த மருத்துவ நிபுணர்களின் நேரடி கவனிப்பு
- இழந்த உடல்பருமன் மீண்டும் வராமல் இருக்க **Follow UP Advice**



பலன் பெற்றோர் பலர்... நீங்களும் பலன் பெற அணுகுங்கள்....

Rishithaa Slim & Caare

இன்றே.... இப்போதே....

CHENNAI :
14/56, 1st Floor, Hill crest apartments
venkatanarayana road, T.Nagar
Chennai - 17.
ph : (044)24332838, 9444413224

ALSO IN COIMBATORE :
#32/1,Bharathi park
2nd cross street, Saibaba colony
Coimbatore
ph:0422-2452114,9884903059

கவிதை



கௌரவம்!

நான் உன்னை அழைக்கவில்லை
நீதானே என்னை எடுத்துச் சென்றாய்
நான் இல்லாவிட்டால்
உன் வீட்டுக் கௌரவம் பாழாகிவிடுமென்று!
இன்று என் நிலைமையைப் பார்த்தாயா!
தீபாவளிக்கு வாங்கிய
அந்த இரண்டு பாக்கெட் எக்ஸ்ட்ரா பால்
ஃப்ரீசரில் ஐஸ் கற்களாக மாறிவிட்டனவே!
சின்னச் சின்னப் பாத்திரங்களில்
கறுப்புச் சிவப்புத் திரவங்கள் -
ஓ! மீந்து போன காபி, டீ, ரசம்!
மூடவே மறந்த அந்தப் புளித்த இட்லி மாவு
கதவைத் திறந்தவுடன் தெருக்கோடி வரை
நாற்றமெடுக்கிறதே!
உன் மூக்குக்குத் தெரியவில்லையா?
அழுகிக் கிடக்கும் காய்கறிகளும் பழங்களும்!
அடைத்து அடைத்து வைத்திருக்கும் பலசரக்கு சாமான்களும்!
பார்க்கவே சகிக்கலையே...
இப்படிக் கேவலமாய் என்னைப் பராமரித்துவிட்டு
நான் வேலையே செய்யவில்லையென்று
என்னைப் படைத்தவனிடம்
நாக்கூசாமல் புகார் கூறுகிறாயே!
இது நியாயமா?
எனக்கு மட்டும் கால்களிருந்தால்
உன் வீட்டுப் படிதாண்டி
என் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொண்டிருப்பேன்!

இப்படிக்கு,
ஃப்ரிஜ்

- உமா ஹைமவதி ராமன், சென்னை.

சிவமும், சக்தியும் ஒன்றுதான். சிவம் என்பது நிலைபேறுடைய ஞான ஆற்றல். சக்தி என்பது இயங்கு ஆற்றல். சிவத்திடமிருந்து சக்தியையோ, சக்தியிடமிருந்து சிவத்தையோ தனியாகப் பிரிக்க முடியாது. சக்தியில்லையெனில் சிவமில்லை. சிவமில்லையெனில் சக்தியில்லை. இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் அமைந்ததுதான் உமையொரு பாகமாக அமைந்த அர்த்தநாரீஸ்வரர் திருக்கோலம். சிவபெருமான் தமது உடலில் இடப்பாகத்தை சக்திக்கு அளித்ததாக எழுந்த புராணக் கதைகளும் இதன் அடிப்படையில் எழுந்தவையே.

சித்தர் பாடல்களில் சக்தியே, தாயே, அன்னையே, அம்மா ஆகிய சொற்களைக் காணலாம். சித்தர்களில் பெரும்பான்மையினர் சக்திவழிபாட்டை மேற்கொண்டவர்கள். அந்த வரிசையில் தோன்றியவர்களுள் கொங்கணச் சித்தரும் ஒருவர். இப்போது உள்ள கேரள மாநிலத்தின் வடக்குப் பகுதியும், கர்நாடக மாநிலத்தின் சில பகுதிகளும் மஹாராஷ்டிரா மாநிலத்தின் மேற்குக் கரையோரப் பகுதிகளும் (கோவா) இணைந்த இடம் கொங்கண நாடு என்று முற்காலத்தில் வழங்கப்பட்டது.



கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா!

சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு 11

கொங்கண நாட்டில் வாழ்ந்த மக்கள், கொங்கணியர்கள் எனப்பட்டனர். அந்தப் பகுதியிலிருந்து வந்தமையால் சித்தருக்கு, கொங்கணச் சித்தர் என்ற பெயரே நிலைத்து விட்டது. தமிழ்நாட்டில், கோயம்புத்தூரை ஒட்டிய பகுதி கொங்கு நாடு ஆகும். இந்தப் பகுதியிலிருந்து வந்ததால் கொங்கணச் சித்தர் என்று பெயர் பெற்றார் என்பதும் சிலருடைய கருத்து. காங்கேயம் என்ற ஊருக்கு ஆறு கிலோ மீட்டர் தொலைவில், கொங்கணகிரி என்னும் மலை உள்ளது. இந்த மலையில் கொங்கணச் சித்தர் சில காலம் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

சிறு வயதிலிருந்தே சித்தருக்கு, அம்பிகை வழிபாட்டின் பேரில் விருப்பமும், ஆர்வமும் மிகுதியாக இருந்தன. உலக வாழ்க்கையின் மீது பற்றில்லாமல், தாமரை இலையின் மேல் நீர்த்துளி போல, பட்டும் படாமலும் வாழ்ந்து வந்தார். அகத்தியரிடமும், போகரிடமும் சென்று தீட்சை பெறவேண்டும் என்ற எண்ணம் கொங்கணச் சித்தரின் மனத்தில் வெகு காலமாக இருந்தது.



சித்தர்களில் பெரும்பாலோர், தங்களுடைய குருநாதரிடம் தீட்சை பெற்ற பின்னர், அகத்தியரிடம் சில காலம் குருகுலவாசம் செய்து ஞான உபதேசம் பெற்று, தங்களுடைய ஞானக் கல்வி முழுமையடைய வேண்டுமென்று வேண்டி நிற்பார்கள். அந்த வகையில் கொங்கண சித்தரும், அம்பிகையைப் பிரார்த்தித்தார். அன்னையின் திருவருளால் இவருக்கு மகா சித்தரான போகரைச் சந்திக்கும் நற்பேறு கிடைத்தது.

போகரை வணங்கி, "ஐயனே! அடியேன் அம்பிகையை வழிபாடு செய்ய விரும்புகிறேன். அந்த வழிமுறைகளை எனக்கு உபதேசம் செய்யுங்கள்" என வேண்டினார். போகரும் இவருக்கு ஞான உபதேசம் செய்தார். ஞானக் கல்வி பெற்ற பின்னர், உள்ளம் உருகி, போகரை, "என்னை ஈன்ற தந்தையே" என்று கொங்கணச் சித்தர் அழைக்கிறார்.



சித்தர்களுக்கு வாழ்க்கை என்பது, தமது குருவிடம் ஞான

பேராசிரியர்.இல.கோமதி

தீட்சை பெற்ற பின்னர் தொடங்கும் காலம் ஆகும். அதுவரை இந்த உலகத்தில் இருந்ததை ஒரு வாழ்க்கையாகவே அவர்கள் நினைப்பதில்லை. ஞான உபதேசத்திற்குப் பின்னர், தவம் செய்யத் தொடங்கும் போதுதான், இந்த உலகத்தில் தாம் பிறந்ததன் நோக்கம் நிறைவேறுகிறது என்பது அவர்களுடைய கருத்து.

போகரிடம் குருகுலவாசம் முடிந்த பின்னர், அம்பிகையின் திருவருளைப் பெற வேண்டி கொங்கணவர் தவம் மேற்தார்.

அப்போது அவருக்கு முழவு, மத்தளங்கள், சங்கு, பேரிகை, யாழ் ஆகிய இசைக் கருவிகளின் ஓசைகள் தொடர்ந்து கேட்டன. அந்த இடம் முழுவதும் தெய்விக மணம் கமழ்ந்தது. கொங்கணச் சித்தரின் மனக் கண்களில் ஒரு சமாதி தெரிந்தது. உடனே சமாதியின் உள்ளேயிருந்து ஒளிமயமாக ஜோதி ஸ்வரூபமாக கௌதம மகரிஷி காட்சி அருளினார்.

அம்பிகையின் அருளால்தான் கௌதம

முனிவர்கள், தவசிகள் நிஷ்டையில் இருக்கும் போது நாம் அவர்களுடைய தவம் கலையும்படி எந்தச் செயலும் செய்யக்கூடாது. எந்தச் சத்தமும் எழுப்பக்கூடாது. தவம் என்பது எளிதான செயல் அல்ல. அப்படி நம்முடைய அஜாக்கிரதையால் அவர்களுடைய தவம் கலைந்தால், நாம் அவர்களுடைய கோபத்துக்கும், சாபத்துக்கும் ஆளாக நேரிடும்.

கொங்கணச் சித்தர் ஒருநாள், ஆழ்ந்த நிஷ்டையில் அவர் இருந்தபோது வானத்தில் பறந்து சென்று கொண்டிருந்த கொக்கு ஒன்று எச்சமிட்டது. அது கொங்கணர் மீது விழுந்து விட, நிஷ்டை கலைந்து அவர் கண் விழித்துப் பார்த்தார்.

பல காலம் தவத்தில் இருப்பவர்களுடைய சக்தி, பல மடங்காகப் பெருகியிருக்கும். அவர்கள் கண் விழிக்கும் போது அவர்களுடைய பார்வைக்கும் சக்தியுண்டு. அப்படிக் கண் விழித்த கொங்கணச் சித்தரின் முதல் பார்வையில் பட்ட கொக்கு எரிந்து சாம்பலானது.

நெடுங்காலம் எந்தவித சலனமுமின்றி தவம் செய்து, இடையில் கலைந்ததால் பஞ்சபூதங்களின் இயக்கத்தால், ஐம்புலன்களும் செயல்பட ஆரம்பித்தன. கொங்கணருக்குப் பசி .

கொண்டார். தமது தவத்தை முடித்துக் கொண்டு பயணம் செய்தபோது திருமழிசை ஆழ்வாரைச் சந்தித்தார். அவருடன் சில காலம் தங்கியிருந்த பின், மீண்டும் தவம் செய்யத் தலைப்பட்டார்.

ஒரு மலைப்பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்தபோது விசாலமான பாறை ஒன்று தென்பட்டது. அந்த இடம் கொங்கணச் சித்தரின் மனத்தில், அமைதியை உண்டாக்கியது. அந்த இடத்திலேயே அமர்ந்து அம்பிகையைத் தியானம் செய்

மகரிஷியைத் தரிசிக்கும் பாக்கியம் தனக்குக் கிடைத்தது என்றுணர்ந்த சித்தர், அவரை வணங்கி தனக்கு அருளாசி வழங்குமாறு வேண்டினார். மகரிஷி, கொங்கணச் சித்தருக்கு உபதேசம் செய்துவிட்டு, சமாதி கொள்ளுவதற்குத் தகுதியான இடம் ஒன்றையும் காட்டி விட்டு மறைந்து விட்டார்.

கௌதமர் காட்டிய இடத்தில், அஷ்டாங்க யோகத்தின் கடைசி நிலையாகிய சமாதி நிலையை எய்துவதற்கு, தவம் செய்

யத் தொடங்கினார் கொங்கணச் சித்தர். மழை பெய்து அந்த இடம் பள்ளமாகி, மேலே பாறைகள் தாமாக மூடிக் கொண்டன. ஆண்டுகள் பல கழிந்தன. இவை எதையும் உணரும் நிலையில் கொங்கணச் சித்தர் இல்லை. பல காலம் சமாதி நிலையில் இருந்து விட்டு, பின்னர் வெளியே வந்தார். மீண்டும் மலைப் பகுதிகளிலும், காடுகளிலும் தவம் மேற்கொண்டார்.

கொங்கணச் சித்தர் மனத்தில் ஏதோ ஒரு குறை இருப்பது போலவும், யோக சமாதி சித்திக்கவில்லையே என்ற ஏக்கமும் இருந்தது. தமது குருவாகிய போகரை மனத்தில் நினைத்து தியானம் செய்தார். போகர், கொங்கணச் சித்தரின் எதிரில் தோன்றினார். தம்முடைய மனக்குறையைத் தமது குருநாதரிடம் சொல்லித் தம்மை வழிநடத்தும்படி வேண்டினார்.

போகர், கொங்கணரை, திருமாளிகைத் தேவரைச் சந்தித்து தீட்சை பெறும்படி கூறினார். குருவின் ஆணைப்படி திருமாளிகைத் தேவரை சந்தித்து, தனக்கு தீட்சை அருளுமாறு வேண்டினார். அவரும் பல இரகசிய சாதனை முறைகள், கல்ப முறைகள், யோக தீட்சை ஆகியவற்றை சித்தருக்குக் கற்பித்தார்.

கொங்கணச் சித்தர், இரசவாதம், காய கல்ப முறைகள், மருத்துவம் ஆகிய துறைகளில் பல அரிய செய்திகளைத் தமது நூல்களில் எழுதியுள்ளார். நூற்றுக்கணக்கான சீடர்களுக்கு சித்திகளை அடைய வழி காட்டினார். இறுதியாக திருவேங்கட மலையை அடைந்து, தவம் மேற்கொண்டார்.

நாள்தோறும் இலட்சக்கணக்கான பக்தர்கள் ஒருசில வினாடிகள் மட்டுமே காணக்கூடிய திருவேங்கடநாதனின் திருவுருவச் சிலைக்குக் கீழே, கொங்கணர் இன்றும் யோக சமாதியில் நிலைபெற்று மக்களுக்கு அருள் ஆற்றலை வழங்கிக் கொண்டிருக்கிறார். திருப்பதி சென்று திரும்பி வந்தால் வாழ்வில் ஏற்படும் திருப்பத்திற்கு, திருவேங்கடமுடையானின் திருவருளும் காரணம்; கொங்கணச் சித்தரின் அருளாசியும் காரணம் என்பதை மறுப்பதற்கில்லை.

(சித்தர் நெறி தொடரும்)



ஏற்பட்டது. ஒரு வீட்டைத் தேடிச் சென்று உணவு வேண்டும் என்று கேட்டார். அந்த இல்லத்தரசி, தன்னுடைய கணவருக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்தாள். பதிசேவையை முடித்து விட்டு உணவு எடுத்துக் கொண்டு வர சிறிது காலதாமதம் ஆகிவிட்டது.

கொங்கணர், அந்தப் பெண்ணை விழித்துப் பார்த்தார். அதைப் பார்த்த அந்தப் பெண், "கொக்கென்று நினைத்தாயோ! கொங்கணவா!" என்றாள்.

சித்தர் திடுக்கிட்டார். கொக்குக்கு நேர்ந்தது இந்தப் பெண்ணுக்கு எப்படித் தெரியும் என்று நினைத்தார். அந்தப் பெண் பதிவிரதை என்பதைத் தனது ஞானதிருஷ்டியில் உணர்ந்து கொண்டார். இந்தப் பெண்தான் வாசுகி அம்மையார் என்பதும், அவருடைய கணவர்தான் திருவள்ளுவர் என்பதும் சிலருடைய கருத்து.

ஒரு பக்கக் கதை!

''ஏம்மா... இந்த டம்பம்?''

ஏழு மணி மின்வெட்டு ஆரம்பமானதிலிருந்து, சுந்தரி வீட்டில் இந்தக் கூத்துதான். ஆறரை மணியாகும்போதே சுந்தரி வீட்டுக்குள் நிறைய மெழுகுவத்திகள் ஏற்றிவைத்து விடுவாள். ஏழு மணியானதும் வீட்டுக்கு வெளியே உள்ள இரண்டு காம்பவுண்ட் விளக்குகளையும் எரியவிடுவாள்.

மின்சார வெட்டின் போது வியர்வை மழையில் நனைந்து அவஸ்தைப்படுவதைத் தவிர்க்கவே பணத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இன்வெர்ட்டர் வாங்கி வைத்தான் சுந்தரியின் கணவன் பிரபு. ஆனால், அதை வீட்டுக்குப் பயன்படுத்தாமல் சுந்தரி இப்படிச் செய்வது அவனுக்குப் பிடிக்கவில்லை.

வழக்கப்படி அன்றும் ஏழு மணிக்கு முன்னால், மெழுகுவத்தி ஏற்றி வந்த சுந்தரியிடம் கோபத்தில் வெடித்தார்கள் பிரபுவும் மகன் குமாரும்.

''ஏம்மா... உனக்கு இந்த டம்பம்? நம்ம வீட்டுல இன்வெர்ட்டர் இருக்கிறதை ஊருக்கே தெரியப்படுத்தணும்னு எங்களை ஏன் இப்படிக் கஷ்டப்படுத்தறே?'' என்று சத்தம் போட்டார்கள்.

''நம்ம எதிர்வீடு ஒரு முதியோர் இல்லம் தெரியுமில்லியா? அங்கே இருக்குற வயசானவங்க கோயிலுக்கு, வாக்கிங்னு வெளியே போயிட்டு திரும்பி வர்ற நேரம் இது. அவங்க வரும்போது வழி



இருட்டாயிருந்தால் எவ்வளவு கஷ்டப்படுவாங்க? சில பேர் கண் தெரியாமல் கீழே கூட விழுந்துடறாங்க. அவங்க இருட்டில் கஷ்டப்படக்கூடாதுன்னு இப்படிப் பண்றேன்'' என்றாள் சுந்தரி

- கோமதி கோதண்டராமன்,
திருவனந்தபுரம்.


ஆட்டோமேட்டிக் ரைஸ் குக்கர் ஸ்பெஷல்
Prestige™
Issue 8 • 2009
திறமையாக சமைத்திடுங்கள்
விரைவாக சமைத்திடுங்கள்
சமைத்துக் கொண்டே போகலாம்
உறுதியான வெளிப்புறம்,
அதன் ஆயுளை அதிகரிக்கும்
மாஸ்டர் ஷெஃப்
ஒப்பற்ற ஸ்பீடு குக்கிங் நேர்வுடன்
இட்லி, கறி வகைகள் இன்னும்
பலதும் சமைக்கும்.
கண்ணைக் கவரும்
சமையல்
SRI 1.8
PRWCS 2.2
தேர்ந்தெடுக்க பல்வேறு வகைகள்
PRWC 1.0
PRWCS 1.2
PRWCS 1.8
PRWO 1.8-2
PRWO 2.8-2
PRWO 4.2
நீங்க இன்னும் ஸ்மார்ட்டான கிச்சனுக்கு தயாரா?
Prestige
சமையலறையில், எந்தவொரு சாதனத்தின் அழகிய டிசைனும், மிகச் சிறந்த செயல்திறனும்தான் ஒவ்வொரு குடும்பத்தலைவியின் கனவு. புதுமையான, எழில் மிகுந்த ரைஸ் குக்கர்களின் மூலம் இந்த கனவை நிஜமாக்கியுள்ளது பிரெஸ்டீஜ். உங்கள் சமையலறையின் தோற்றத்தை மேம்படுத்துவதுடன் அதன் ஒப்பற்ற சிறப்பம்சங்கள், வசதியான சமையல் அனுபவத்தையும் உங்களுக்கு அள்ளித் தரும். பிரெஸ்டீஜ் ரைஸ் குக்கருடன் வெகு விரைவாக சமைத்திடுங்கள்.
Prestige
SMART KITCHEN
Chennai: Velachery, Ph: 044-42158755; Mylapore, Ph: 044-42031819; Anna Nagar, Ph: 044-26209133 / 34; Chinthamani Annanagar, Ph: 044-42170551; Saligramam (vadapalani), Ph: 044-23650424; Triplicane, Ph: 044-28442034; Nanganallor, Ph: 044-22243997; Ayanavaram, Ph: 044-26742008 / 45090864; West Mambalam, Ph: 044-24898492 / 23700442; Puducherry, Ph: 0413-4210133; Kancheepuram, Ph: 04112-27230759; Singaperumal Koil, Kancheepuram, Ph: 044-37403580; Thiruvannamalai, Ph: 04175-253858; Vellore, Ph: 0416-2220385 / 2222142; Villupuram, Ph: 04146-329658 / 223420 / 226420 / 228420; Vaniyambadi, Ph: 04174-229522; Chidambaram, Ph: 04144-227482; Adyar, Ph: 044-24464979; Arcot, Ph: 04172-236353; Avadi, Ph: 044-42848125; Porur, Ph: 044-43513438; Pallavaram, Ph: 044-22642898; Vellore, Ph: 04174-246031; R S Puram, Coimbatore, Ph: 0422-2544554; Erode: Brough Road, Ph: 0424-4021615; Perundurai Road, Ph: 0424-2261156; Madurai: Vakil New Street, Ph: 0452-4381873; Thallakulam, Ph: 0452-4360011; Tuticorin, Ph: 0461-2301009; Salem: Four Road Junction, Ph: 0427-4030308; Kumaraswamy Patti, Ph: 0427-4031830; Palani, Ph: 04545-240555; Tirunelveli, Ph: 0462-2333721; Nagercoil, Ph: 04652-420009; Ramnad, Ph: 04567-220680; Karur, Ph: 04324-248070; Hosur, Ph: 04344-222224; Krishnagiri, Ph: 04343-236897; Tirupur, Ph: 0421-2230231; Rajapalayam, Ph: 04563-232317 / 9443012313 / 9486990492; Karaikal, Ph: 04368-228322; Dharmapuri, Ph: 04342-260094; Mettur, Ph: 04298-222248. Also available at all Prestige dealer outlets.

பொரி உருண்டை செய்யும்போது சீக்கிரமே நமுத்துவிடும். முதலில் பொரியை நன்கு சூடாக்கி, வெறும் வாணலியில் ஒருமுறை புரட்டி எடுக்கவும். பிறகு, உருண்டைகள் தயாரித்தால் பொரி உருண்டை 'மொறு மொறு' என ருசியாக இருக்கும்.

- ஜெயா,
சென்னை-83.



புது வீடு கட்டுபவர்கள், அஸ்திவாரம் போடும்போதே வீட்டைச் சுற்றிலும் மாமரம், தென்னை மரம், வாழை, வேப்ப மரம், பூச் செடிகள் வைத்து விட்டு வீடு கட்டத் தொடங்கலாம். நாம் கட்டி முடிப்பதற்குள் பூஞ்சோலையாகப் பூக்கள், பழங்களோடு பூத்துக் குலுங்கி கிரஹப்பிரவேசத்துக்கு நம்மை வரவேற்கும்.

-ஆர். அனுராதா ரவீந்திரன்,
திருச்சி-2.

கொலஸ்ட்ரால் அதிகம் உள்ள பொருள்களைச் சேர்த்துக் கொள்ளும்போது அவற்றுடன் மிளகு அல்லது பூண்டு சேர்த்துச் சாப்பிட்டால் நல்லது.

-செம்பொன் செந்தமிழ்,
மயிலாடுதுறை

எலெக்ட்ரானிக் பொருள்களை வாங்கும்போது, முதலில் அதன் செயல் முறை விளக்கத்தை படித்துப் பார்த்த பிறகே உபயோகிக்க வேண்டும்.

- சரஸ்வதி, செகந்திராபாத்

குழந்தைகளுக்கு அடிக்கடி தொண்டைப் புண் வருகிறதா? உங்கள் வீட்டில் செல்லப் பிராணிகளை வளர்ப்பதானால், மிருக வைத்தியரிடம் அப்பிராணிகளைப் பரிசோதித்துப் பார்க்கச் சொல்லவும். பல நேரங்களில் வீட்டு வளர்ப்பு மிருகங்களிடமிருந்து, குழந்தைகளுக்குத் தொண்டைப் புண் வருவதாக மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

- கீதா அரிகரன், கொல்லம்-2.

இரவில் தூங்கும்போது, பாலில் ஒரு டீஸ்பூன் தேன் கலந்து குடிக்கவும். தூக்கம் நன்றாக வருவதோடு, காலையில் புத்துணர்ச்சியோடும் இருப்பீர்கள்.

- யோகாம்பாள், பெங்களூரு-84

நாம் விருந்தினராகச் செல்லும்போது, எத்தனை நபர் வருகிறோம் என்று முன்கூட்டியே சொல்ல வேண்டும். தாமதமானாலும் அவர்களுக்கு உடனே தெரிவிப்பது அவசியம்.

- ரமணி, செகந்திராபாத்

இவை எல்லாமே ஆஹா 50 தான்!

பாட்டி சொன்ன கதை!

''ரேணு... அங்க என்ன பாட்டியிடம் கதையளந்துக்கிட்டு இருக்கே? வா, வந்து படி'' என பாலா, ஆறு வயது மகளை அழைத்தாள்.

''நான் கதையளக்கலேம்மா, பாட்டி தான் கதை சொல்றாங்க. கதை ரொம்ப நல்லாயிருக்கும்மா,'' என ரேணு பதிலளித்தாள்.

''கழுத, எப்பப் பாரு கதை. இங்க வாடின்னா,''

''போம்மா, நீ ஒரு கதை கூட சொல்ல மாட்டேங்கிறே, எப்பவும் படி, படின்னு சொல்றே. பாட்டி பாரு, தெனாலிராமன் கதை சொல்றாங்க, ஒரே சிரிப்பாயிருக்கும்மா'' என்றாள்.

''எதிர்த்தாடி பேசறே?'' என்று வேகமாக வந்த பாலா, ரேணுவின் முதுகில் 'பட் பட்' என நாலு அடி வைத்தாள். மாமியார் மங்களத்தின் மேலிருந்த எரிச்சல், குழந்தையின் முதுகில் இறங்கியது.

துளிர்த்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மங்களம் உறங்கப் போனாள்.

மறுநாள் மாலை தாயுடன் வெளியே சென்ற ரேணு பாட்டியிடம், ''பாட்டி! அம்மா எனக்கு காட்பரீஸ் சாக்லெட், அப்புறம் இந்த சி.டி. வாங்கிக் கொடுத்தாங்க பாருங்க'' என சி.டி.யைக் காட்டினாள்.

''என்ன சி.டி.ம்மா கண்ணு?''

''கிராண்ட்மாஸ் ஸ்டோரீஸ். அப்படின்னா, பாட்டி சொன்ன கதைகள்னு அர்த்தம்'' என்றாள் ரேணு.

- எஸ்.ஜம்பகலக்ஷ்மி, கிழக்கு தாம்பரம்.



ஒரு பக்கக் கதை

ஒன்றிலிருந்து ஒன்று!




[illegible]

– [illegible]

இளமையின் ரகசியம் இதோ உங்கள் கையில்

இளைஞர்களே
?

வழுக்கையால் ஏற்பட்ட
வயதான தோற்றம்
உங்கள் அழகை பாதிக்கிறதா?
கவலை வேண்டாம்!



எங்களிடம் வாருங்கள்
மூன்றே மணி நேரத்தில்
மீண்டும் இளமை தோற்றத்தை
பெற்றுக் கொள்ளுங்கள்!


Hair Weaving, Hair Bonding & Silicon System Treatment are done here



சிகிச்சைக்கு முன்

சிறப்பம்சங்கள்

* வித்தியாசமான முறை
* அறுவை சிகிச்சை கிடையாது
* பக்க விளைவுகள் அற்றது
* இது விக்கும் அல்ல
* வாகனங்கள் ஓட்டலாம்
* ஷாம்பு போட்டு குளிக்கலாம்
* நீச்சலும் அடிக்கலாம்
* நீங்கள் விரும்பும் ஹேர்ஸ்டைலில் தலை வாரலாம்.



சிகிச்சைக்கு பின்

கிளைகள்

* திருச்சி * மதுரை * திருநெல்வேலி * கோவை

website: www.fairandhair.com / E-mail: fairandhair2005@yahoo.co.in

FAIR & HAIR®
HEALTH & BEAAUTY CURE - C

HO: பழைய எண்.17/1, புதிய எண்.45, L.B.ரோடு, அடையாறு, சென்னை - 20.
போன் : 044-2446 9596 / 044-2446 1099, செல் : 94449 18848

நெ.8-9, சுந்தர்ராஜன் நகர், 2-வது கிராஸ் தெரு, நூறு அடி ரோடு,
பாண்டிச்சேரி. (இந்திரா காந்தி சிலை அருகில்) போன் : 0413 2204198
செல் : 98431 71788 / 94450 87198 / 94450 97750

H-2, அப்பலோ பிளாட்ஸ், 7வது அவென்யூ
திருமங்கலம், அண்ணாநகர், சென்னை - 40.
போன் : 044-26265455, செல்: 9500119922

ஒருமுறை விஜயம் செய்வீர்! அதிசயத்தை உணர்வீர்!

ஸ்ரீ டிராவல்ஸ்,

194, இரண்டாவது மாடி, அண்ணா சாலை (ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி எதிரில்),
ஆயிரம் விளக்கு, சென்னை - 600 006. போன் : 65345081/82
டெலிஃபேக்ஸ் : 044-28516799 ஈமெயில் : sritrave@gmail.com

முழு ராஜஸ்தான் சுற்றுலா : புறப்படும் தேதி : 15.01.2010; 11.02.2010
பயணத் தொகை : ரூ.9,900/- நாட்கள் : 9 நாட்கள்

பஞ்ச துவாரகை மற்றும் ராஜஸ்தான் சுற்றுலா : புறப்படும் தேதி : 06.02.2010; 06.03.2010
பயணத்தொகை : ரூ.13,500/- நாட்கள் : 15 நாட்கள்

முக்திநாத் தரிசனம் : சென்னை, அலகாபாத், சித்ரகூடம், நைமிசாரண்யம், அயோத்தியா, லும்பினி, போக்ரா, முக்திநாத், காத்மண்டு, வாரனாசி, சென்னை. பயணத் தொகை : ரூ.18,500/- + டிக்கெட். புறப்படும் தேதி : 18.03.2010; 19.04.2010 நாட்கள் : 15 நாட்கள்

பஞ்சதுவாரகை சுற்றுலா : பயணத் தொகை : ரூ.6,500/- + டிக்கெட்; நாட்கள் : 9 நாட்கள்

முக்திநாத் தரிசனம் (ரயில் மூலம்) : பயணத் தொகை : ரூ.13,000/- + ரயில் டிக்கெட்.
நாட்கள் : 11 நாட்கள்

முக்திநாத் தரிசனம் (விமானம் மூலம்) : பயணத் தொகை : ரூ.13,000/- + விமான டிக்கெட்.
நாட்கள் : 6 நாட்கள்

இலங்கை சுற்றுலா : கதிர்காமம் கொழும்பு, திரிகோணமலை, நுவரேலியா, கண்டி கொழும்பு.
புறப்படும் தேதி : 15.01.2010; 11.02.2010

அந்தமான் சுற்றுலா : புறப்படும் தேதி : 15.01.2010.
பயணத் தொகை : ரூ.7,500 + விமான டிக்கெட். நாட்கள் : 5 நாட்கள்

7

சாரதா பேசுகிறேன்!

உண்மையைச் சொல்லணும்னா, என்னுடைய வாழ்க்கையை எழுத்து வடிவில் கொண்டு வரவே பயம். பத்திரிகையைப் படிப்பவர்கள் அனுதாபப்படுவதும், ஏதோ தொற்று வியாதி வந்தது போல் என்னைத் தவிர்ப்பதும், அட்வைஸ் கொடுப்பதுமாக ஆகிவிட்டால், அதைச் சமாளிக்க எனக்குத் தெம்பு வேண்டுமே என்ற அச்சம். அதையும் தாண்டி நோய் பற்றியும், தீராத வியாதியில் சிக்கியிருக்கும் நோயாளிகளின் வாழ்க்கை முறை பற்றியும் ஒரு விழிப்புணர்ச்சி வர வேண்டும் என்பதற்காகத்தான் இந்த முயற்சியை மங்கையர் மலர் மூலம் மேற்கொண்டேன். ஆனால், இன்று எனக்காக தினம் தினம் பிரார்த்தனைகள் செய்து வரும் ஆயிரக்கணக்கான மங்கையர் மலர் வாசகிகளின் நட்பும் பரிவும் எனக்கு எத்தனை தெம்பைத் தந்திருக்கிறது என்பதை உணர்கிறேன்.

ஒவ்வொரு முறை எழுந்து உட்காரும் நிலை வரும் போதும், நிலைமையை சீர் செய்து கொள்ள முயற்சிப்பேன். நுரையீரல் சரியாக இயங்காததால் மூச்சுப் பயிற்சி, தியானம் போன்றவற்றை செய்தால் என்ன என்று தோன்றியது. பெரும்பாலானோர் சீராக மூச்சு விடுவதில்லை என்றும், நுரையீரலின் பெரும் பகுதி உபயோகப்படுத்தப் படாமலேயே இருக்கிறது என்றும் படித்தேன். எனக்கோ, மொத்தமே முப்பது சதவிகிதம்தான் நுரையீரல் வேலை செய்கிறது. அப்படியிருக்க, மூச்சுப் பயிற்சி மூலம் அதில் ஏதாவது முன்னேற்றம் ஏற்பட வழி இருக்கிறதா பார்ப்போம் என்று வல்லுநர்களிடம் விசாரித்து, வகுப்பில் சேர்ந்தேன்.

இந்தப் பயிற்சிகளில் நுரையீரலின் திறன் மெல்ல அதிகரித்து, எழுபது சதவிகிதம் வரை முன்னேற்றம் கண்டது. மருந்துகளால் வராத மாயம் யோகப் பயிற்சியில் கிடைத்தது மருத்துவர்களுக்கே அதிசயமாக இருந்தது.

அப்போது ஒரு சம்பவம். பங்கு வியாபாரச் சந்தையில் கூட இந்த அளவு எதிர்பாராத ஏற்ற இறக்கங்கள் வராது; ஆனால் என் உடல் நிலைக்கு வரும். யோகாவில் கிடைத்த இந்தச் சின்ன சந்தோஷம் கூட நீடிக்காமல் போனது.

என்னை பிஸியாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும், சிந்தனையும் செயலும் முடிந்தவரை ஆக்கப்பூர்வமாக

உஷா ராமகிருஷ்ணன்



தீராத நோயோடு போராடும் ஒரு பெண்ணின் தன்னம்பிக்கை ததும்பும் உண்மைக் கதை!

இருக்க வேண்டும் என்பதற்காகவும், தெரிந்த கலைகளிலெல்லாம் வகுப்புகள் எடுக்கிறேன். ஒரு நாள் மாலை ஐந்து மணிக்கு, ஒரு சிறுவனுக்கு வகுப்பு எடுக்கும் போது, திடீரென்று ஒரு மருந்து வாசனை எனக்குத் திணறலை ஏற்படுத்தியது. உடனே மூச்சடைப்பும் தலை வலியும் என்னை ஆக்கிரமித்துக் கொண்டது. வீட்டுக்கு வெளியில் சென்று பார்த்தேன். ஒரு நொடியில் நுரையீரல் மூச்சு விடுவதை நிறுத்தி விட்டது. திணறல் கூட இல்லாமல் அப்படியே ஸ்தம்பித்தாற் போல் ஆக, வீட்டுக்குள் நுழைந்து பொத்தென்று கட்டிலில் விழுந்தேன்.

என் குழந்தைகளுக்குத்தான் இதெல்லாம் பழகி விட்டதே. என் மகள் உடனே புரிந்துகொண்டு, வீட்டின் கதவு ஜன்னல்களை எல்லாம் வேகமாக அடைத்து, ஆக்ஸிஜன் சிலிண்டரை வைத்து மூக்கில் மாஸ்கைப் போட்டாள். சில நிமிடங்களுக்குப் பிறகு நுரையீரல் மெள்ளத் தன் வேலையைத் தொடர்ந்தது. ''பக்கத்து வீட்டில், பூச்சிக் கொல்லி மருந்து அடிக்கறாங்கம்மா'' என்று என் மகன், ஓடி வந்தான். என் நுரையீரலுக்கு அது பெரிய எதிரி ஆயிற்றே; அதனால் தான் கோபித்துக் கொண்டு தன் எதிர்ப்பைக் காட்டி விட்டது.

அந்தக் காலக் கட்டத்தில், அவ்வப்போது நான் ஆக்ஸிஜன் ஏற்றிக் கொண்டிருந்தேன். அதனால் வீட்டில் அதிகம் ஸ்டாக் இல்லை. அடுத்த அரைமணி நேரத்தில் இருந்த ஆக்ஸிஜன் தீர்ந்து விட,

டாக்டர். கே. சிவகுமார், சீஃப் கார்டியாலஜிஸ்ட், மியாட் மருத்துவமனை, சென்னை

சாரதாவுக்கு வந்திருக்கும் ஸ்லீரோடெர்மாவில், சருமம் தடிமனாவதோடு மெல்ல இறுக்கமுமடைகிறது. ஒருகட்டத்தில் உதடுகள் ரொம்பச் சுருங்கி விட்டால், வாயைத் திறந்து சாப்பிடுவதே கடினமாகிவிடும். சருமத்தைத் தவிர, இந்த நோய் உள்ளுறுப்புகளையும் பாதிக்கிறது. நுரையீரல் நமக்கெல்லாம் சுருங்கி விரிவது போல் அல்லாமல், இறுக்கமடைந்து (scarred fibrosis) காணப்படுவதால் ஓரளவுக்கு மேல், நுரையீரலால் தாக்குப் பிடிக்க முடியாது.

நம்மைப் போன்றவர்கள் ஒரு நிமிடத்துக்கு நான்கு முதல் ஐந்து லிட்டர் வரை காற்று சுவாசிக்கிறோம். ஓடி மூச்சு வாங்கினால், இன்னும் அதிகக் காற்றை சுவாசிக்கிறோம், அப்படிச் செய்யும் போது, நுரையீரல் இயல்பு நிலைக்குத் திரும்புகிறது. ஆனால் சாரதாவால் அது முடியாது. அதிக மூச்சு வாங்க முடியாமல், மூச்சுத் திணறல் ஏற்பட்டுவிடும். அது போன்ற நிலையில், ஆக்ஸிஜன் ஏற்றித்தான் உடலை இயல்பு நிலைக்குக் கொண்டு வர முடியும்.

மலைப் பிரதேசத்துக்கு விடுமுறையில் சென்று விட்டு, ஆக்ஸிஜன், மருத்துவமனை என்று அவதிப்பட்டு திரும்பி வந்த அனுபவமும் சாரதாவுக்கு உண்டு. ரெஸ்பிரேடரி ஃபிசியோதெரபிஸ்டால் சில நிலையில், ஓரளவுக்கு இதைச் சீர்படுத்த முடியும். ஸ்லீ நோயினால், உடல்நிலை யோ-யோ விளையாட்டு போன்று

வேறு சிலிண்டர் கிடைக்காமல் போனது. கணவரோ வெளியூரில் இருக்கிறார். என் மகனும், அக்கா மகனும் சேர்ந்து இரவு முழுதும் சிலிண்டருக்கு அலைந்தார்கள். நானோ கிழிந்து போன நாராய் இருக்கிறேன். மறு நாள் காலை, பத்து மணிக்கு தான் புது சிலிண்டர் கிடைத்தது. அதுவரை அரைகுறை மயக்க நிலை, தலைவலி, அவஸ்தையோடு கிடந்தேன்.

விருந்தாளிகள் சிலர், எனது நோயையும் நான் படும் அவஸ்தையையும் பற்றித் தெரியாமல், ஆலோசனை சொன்னார்கள்.

''உனக்கு உடம்பு சரியில்லைன்னு கேள்விப்பட்டேன். ஆயுர்வேதம் முயற்சி செய்யறதுதானே?, அக்குபங்சர் ட்ரை பண்ணியா? உடம்பு பெருத்துப் போயிருக்கே. ஜிம்முக்குப் போவதுதானே?'' என்று வஞ்சனையில்லாமல் ஆலோசனை சொல்வார்கள்.

இதுபோன்ற தருணங்களில், ''சாரதா, இதுவும் கடந்து போகும், மனதைத் தளரவிடாதே. இதிலிருந்து மீண்டு வருவாய்'' என்று என்னோடு நான் பேசிக் கொள்வது வழக்கம். என் உடல்நிலை மோசமாகும் போது, ''சாரதா, உனக்கு வாழ ஆசையா, சாக ஆசையா?'' என்று கேள்வி கேட்பேன். அதில் எனக்கு சரியான விடை கிடைத்து விடும்.

என்னுடைய வாழ்க்கையை எழுத்து வடிவில் கொண்டு வரவே எனக்கு பயம். பத்திரிகையைப் படிப்பவர்கள் அனுதாபப்படுவதும், ஏதோ தொத்து வியாதி வந்தது போல் என்னைத் தவிர்ப்பதும், அட்வைஸ் கொடுப்பதுமாக ஆகிவிட்டால், அதைச் சமாளிக்க எனக்குத் தெம்பு வேண்டுமே என்ற அச்சம். அதையும் தாண்டி நோய் பற்றியும், தீராத வியாதியில் சிக்கியிருக்கும் நோயாளிகளின் வாழ்க்கை முறை பற்றியும் ஒரு விழிப்புணர்ச்சி வர வேண்டும் என்பதற்காகத்தான் இந்த முயற்சியை மங்கையர் மலர் மூலம் மேற்கொண்டேன்.

(பேசுவேன்)

மேலே-கீழே போய்க் கொண்டேதான் இருக்கும்.

நுரையீரலின் ரத்த அழுத்தம், பொதுவாக 20-25 வரை இருக்கும். அதுவே 50ஐத் தாண்டும் போது, பல்மனரி ஹைபர்டென்ஷன் என்ற மிகவும் ஆபத்தான நிலைக்கு இதயம் சரிகிறது. இந்த நிலையை ஓரளவு கட்டுப்படுத்த மருந்துகள் கொடுக்கலாமே தவிர இன்றைய தேதியில் குணப்படுத்த முடியாது. பல்மனரி ஹைபர்டென்ஷன் என்பது ஸ்லீ நோயாளிகள் இறப்பதற்கு ஒரு முக்கியக் காரணமாக இருக்கிறது. இந்த நிலைக்கு சாரதா வரவில்லை என்பது தான் நல்ல செய்தி.

பிரச்னையை சீக்கிரமே அணுகினால் பாதிப்புகளைத் தவிர்க்க முடியாவிட்டாலும் நிச்சயம் தாமதிக்க முடியும். நுரையீரலோ, இதயமோ, இன்ஃபெக்ஷன் அல்லது வெளிப்புற மாசினால் தூண்டி விடப்படாமல் அல்லது பாதிக்கப் படாமல் பார்த்துக் கொள்வது மிக அவசியம்.





மெடிக்கல்

என் மாமனாருக்கு எண்பது வயதுக்கு மேல் ஆகிறது. கடந்த இருபது வருடமாக நீரிழிவு நோயால் மிகுந்த அவதிப்படுகிறார். ஒரு மணி நேரத்துக்கு ஒருமுறை சிறுநீர் கழிக்க வேண்டி உள்ளது. தொடர்ந்து இன்சுலின் போட்டும் பலனில்லை. யாருடைய உதவியுமின்றி தனியாக எழுந்து நடக்க முடியவில்லை. என்னதான் முதுமை என்றாலும் நீரிழிவு இப்படியா படுத்தும்?

- கே.சுதா, ஈரோடு.

பதில்: டாக்டர் எல்.நல்லபெருமாள், (நீரிழிவு நிபுணர்)

உங்களது மாமனாருக்கு இருபது வருடங்களாக சர்க்கரை வியாதி இருக்கிறது என்று கூறியிருக்கிறீர்கள். சர்க்கரையின் அளவு கட்டுப்பாட்டில் இருந்தாலும்கூட ப்ரோஸ்டேட் என்லார்ஜ்மெண்ட் (Prostate Enlargement) எனப்படும் வீக்கம் காரணமாக இப்படி இருக்கலாம். சிறுநீர்ப் பையின்அருகே க்ளாண்ட் (gland) இருக்கிறது.



எனக்கு வயது எண்பத்து நான்கு. இரண்டு வருடங்களுக்கு முன்பு சிக்கன்குன்யா வந்தது. கடந்த எட்டு மாதங்களாக இரண்டு கால்கள், பாதம் அவ்வப்போது சில நிமிடங்கள் உணர்ச்சி யில்லாமல் இருக்கிறது. நடக்கும் போது பாலன்ஸ் செய்ய முடியாமல் விழுந்து விடு கிறேன். தற்போது கொம்பின் உதவியால் நடக்கிறேன். எனக்கு இரத்த அழுத்தமும் உள்ளது. நாளடைவில் ஸ்ட்ரோக் வருமோ?

- பார்வதி வைத்தியநாதன், மேற்கு மாம்பலம்.

பதில்: டாக்டர் வி. ஸ்ரீநிவாஸ் (ஜெரியாட்ரிக் நிபுணர்)

உங்களது கால்கள் பலவீனத்துக்கு சிக்கன் குன்யா காரணமாக இருக்காது. மூளைக்குச் செல்லும் ரத்த ஓட்டம், வயதாகும் போது சற்றுக் குறைந்து போகும். இதற்கு 'Peripheral neuritis' என்று பெயர். இது பாஸிடிவ் அல்லது நெகடிவ்

வாசகர்களின் சந்தேகங்களுக்கு பிரபல மருத்துவர்கள் பதிலளிக்கிறார்கள்... வாசகர்கள் தொடர்ந்து கேள்விகளை அனுப்பலாம்!

இதில்தான் சிறுநீர் தேங்கிக் கொண்டேயிருக்கும்.


ஒவ்வொரு முறை சிறுநீர் கழிக்கும் போதும் சிறுநீர் முழுவதும் வெளியேறாமல் வீக்கம் காரணமாக சற்றுத் தேங்கிவிடும். அடிக்கடி சிறுநீர் செல்வதன் காரணம் இதுவாக இருக்கலாம். இதற்கு யூராலஜிஸ்ட் ஒருவரைப் பார்த்து 'ப்ரோஸ்டேட் வீக்கம் உள்ளதா?' என்று பரிசோதனை செய்யுங்கள். மேலும், அவருக்கு இரத்த அழுத்தம் இருக்கிறதா என்று தெரியப்படுத்தவில்லை.



பொதுவாகவே, வயதானவர்கள் படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போது உடனே நடக்கக் கூடாது. சிறிது நேரம் உட்கார்ந்து, பிறகு மெதுவாக எழுந்து நடக்க வேண்டும். ஏனெனில் திடீரென்று மூளைக்குள் ரத்தம் பாய்ந்தால் தள்ளாட்டம் ஏற்படும். இதற்கு (Postural Hypo tension) பாஸ்சுரல் ஹைபோ டென்ஷன் என்று பெயர்.

என்று இருக்கும். மரத்துப் போகிற உணர்வு ஏற்பட, ரத்த ஓட்டம் குறைவு மற்றும் பி12 விட்டமின் சத்துக் குறைவு போன்றவை பிரச்னையாக இருக்கலாம். உங்களுக்கு சர்க்கரை நோய் உள்ளதா? என்று நீங்கள் குறிப்பிடவில்லையே! ரத்தத்தில் ப்ளட் கவுண்ட் சோதனை செய்ய வேண்டும். பிரச்னை அதிகமாக இருந்தால் மருத்துவரின் ஆலோசனையோடு மூளையை ஸ்கேன் செய்து பாருங்கள். ஆனால், நிச்சயமாக இது ஸ்ட்ரோக் இல்லை. தகுந்த மருந்துகள் மற்றும் பிஸியோதெரபி செய்தால் நிச்சயமாக குணமாவீர்கள்.





என் நண்பனுக்கு வீசிங் பிரச்னை இருக்கிறது. அவன் இன்ஹேலரை உபயோகித்து வருகிறான். இதனால் ஏதாவது பாதிப்பு வருமா? வீசிங், ஆஸ்துமா இரண்டும் ஒரே நோயா? வீசிங் எதனால் வருகிறது?

- மு.மதிவாணன், அரூர், தருமபுரி.

பதில்: டாக்டர் வெங்கட் சுப்ரமணியம் (நுரையீரல் சிகிச்சை நிபுணர்)

ஆஸ்துமா என்பது நோய். வீசிங் என்பது அதனால் ஏற்படும் மூச்சுக் குழாய்ப் பாதிப்பு. அலர்ஜியினால் மூச்சுக்



குழாயில் சுருக்கம் ஏற்பட்டு, மூச்சு இழைப்பு, மூச்சுத் திணறல் ஏற்படும். (மூச்சு வாங்குதல் வேறு) மூச்சுக் குழாய் சுருக்கம் ஏற்படும்போது, சுவாசிக்கும் காற்று சுலபமாக அதனுள் சென்று திரும்பாமல், ஒருவித சத்தத்துடன் மூச்சு இழைப்பாகிறது. இதை வீசிங் என்கிறோம். தூசு, மாசு படிந்த காற்று, புகை, சில வாசனைகள், குளிர்காற்று போன்றவற்றால் சிலருக்கு அலர்ஜி ஏற்படும். இதற்கு நோய் வரும் போது மட்டும் மருந்துகள் எடுத்துக் கொள்ளலாம். இவற்றுக்கு ரிலீவர்ஸ் (Relievers) என்று பெயர்.

அடுத்தது, ஆஸ்துமா குணமடைந்த பிறகு மீண்டும் வராமல் இருக்க ப்ரிவென்டர்ஸ் (Preventers) தருவது. ஆஸ்துமாவின் தீவிரத்தைப் பொறுத்து ஊசி, மாத்திரை, நெபுலைசர், இன்ஹேலர் மூலம் மருந்துகள் தருவோம்.

இன்ஹேலரில் இப்போது நேராக தொண்டைக்குள் ஸ்ப்ரே செய்வது போன்ற நவீன உபகரணங்கள் வந்துள்ளன. இன்ஹேலர் முறை பாதுகாப்பானது. இதில் பயன்படுத்தப்படும் மருந்தின் அளவும் மிகக் குறைவே. மாத்திரையில் மில்லி கிராம் என்றால் இதில் மைக்ரோ கிராம் அளவுதான்.


என் தோழியின் மகளுக்கு கருத்தரித்து எழுபது நாட்களில் கரு வளர்ச்சியின்றி அபார்ஷன் ஆகிவிட்டது. பிறகு, ஒரு பெண் குழந்தை நல்லபடியாக பிறந்தது. மீண்டும் கர்ப்பமான போது முன்போலவே கரு வளர்ச்சியின்றி கருச்சிதைவு செய்ய வேண்டியதாயிற்று. ஏன்?

- டி.சாமி சுப்புலக்ஷ்மி, ஆதம்பாக்கம்.

பதில்: ஷீலா சுகுமாரன் (மகப்பேறு நிபுணர்)

கருவளர்ச்சியின்றி, கருச்சிதைவு ஏற்பட இரண்டு காரணங்கள் இருக்கலாம். ரத்தத்தில் பிளாஸ்மாவில் ஏதாவது இன்ஃபெக்ஷன் நீண்ட நாளாய் இருக்கலாம். கருத்தரித்தவுடன் அந்த வைரஸ், கருவைப் பாதித்திருக்கக்கூடும். அடுத்து பெண் குழந்தை பிறந்த போது, வைரஸ் தாக்கியிருக்காது. மீண்டும் கர்ப்பம் தரித்தபோது அதே வைரஸ் பாதிப்பு ஏற்பட்டிருக்கும். இரண்டாவது காரணம் அந்தப் பெண்ணின் ஹார்மோன் பேலன்ஸ் சரியில்லாமல் இருக்கலாம். இப்போதெல்லாம் 'Torch Panel' என்ற புதிய வகை பரிசோதனையின் மூலம் பிளாஸ்மாவில் இன்ஃபெக்ஷன் ஏற்பட்டுள்ளதா என்று கண்டறிந்து உடனே சிகிச்சை செய்கிறார்கள். பெண்கள் வயதுக்கு வந்தவுடனேயே இந்த வேக்ஸினேஷன் போட்டுவிட்டால் பிளாஸ்மா பாதிப்பு வராது. ஹார்மோன் குறைபாடுகளை மகப்பேறு மருத்துவரிடம் காட்டி சரிசெய்து கொள்ளலாம்.





தொகுப்பு :
பத்மினி பட்டாபிராமன்



மலைக்க வைக்குது மரம்!



கிறிஸ்துமஸ் ட்ரீ தெரியும். அதென்ன டாலர் ட்ரீ என்கிறீர்களா? அமெரிக்க பொருளாதார சீர்குலைவினால், மந்தமாகிப் போன பிசினஸை தூக்கி நிறுத்த முடியாமல் காணாமல் போன பிரபல நிறுவனங்கள் உண்டு. எப்படியாவது தாக்குப் பிடித்துப் பார்க்கலாம் என்று அரை மனதுடன் பிஸினஸை நடத்திக் கொண்டிருக்கும் விற்பனையாளர்களும் உண்டு. ஆனால், என்ன நடந்தாலும், 'மவுஸு' குறையாமல் இருப்பது ரீடெயில் ஸ்டோர்கள் (டாலர் ட்ரீக்கள்)தான் எனலாம்.

இந்தக் கடையில் விற்கப்படும் பொருள்கள் எதுவாயினும் அதன் விலை ஒரு டாலர்தான்! (அதாவது இந்திய ரூபாய் ஐம்பதுக்குச் சமம்) ஆனால் அமெரிக்காவில் உள்ளவர்களுக்கோ ஒரு டாலர் என்பது ஒரு ரூபாய்க்குச் சமம்!

மரத்தின் கிளைகளைப் போல், இவை அடுக்கடுக்காய் நாடெங்கும் பரவி விரிவடைந்துள்ளதால் 'டாலர் ட்ரீ' என்கிற பெயர்.

வர்ஜீனியாவில் 1986ல் துவங்கப்பட்டது டாலர் ட்ரீ கடைகள். அடுக்கடுக்காய் விரிந்து இன்று அமெரிக்காவில் இருக்கும் எட்டு மாநிலங்களில், சுமார் 3,591 கிளைகளைக் கொண்டிருக்கிறது.

இந்தக் கடைகளுக்கென்றே பொருள்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள் உள்ளன. நுகர்வோர் பொருள்களின் பாதுகாப்பு ஆணையம், அவ்வப்போது இதில் விற்கப்படும் பொருள்களின் தரத்தைப் பரிசீலிக்கிறது. எதை எடுத்தாலும் ஒரு டாலர்தான் என்று கூவி அழைக்கும் இந்தக் கடைகளில் அப்படி என்னதான் கிடைக்கிறது?

பொம்மைகள் முதல் சீப்புகள், சாக்லெட் வரை தினுசு தினுசான விஷயங்கள் கிடைக்கின்றன. இவை அடுக்கிவைக்கப்பட்டிருக்கும்விதமே நம்மை மலைக்க வைக்கின்றது.

– லக்ஷ்மி ரமணன், சென்னை-4.

ஷாப்பிங் அனுபவம்

OFFER FROM SREEVATSA

ண்ட்டுகளுக்கு மட்டும்



Pay just



Interest

Sreevatsa Global Village
COIMBATORE

கோவை IT CORRIDOR-ல், அத்திபாளையம் ரோடு,
(குமரகுரு காலேஜ் ஆப் டெக்னாலஜி மற்றும்
சத்திரோடு அருகில்)

43 Independent Villas
3 பெட் ரூம் 3000 Sq.ft.

448 Luxury Flats
3 பெட் ரூம் 2043 - 2140 Sq.ft.
Rs. 54 - 57 lakhs

- உங்கள் அப்பார்ட்மெண்ட் கட்டி முடிக்கப்படும் வரை உங்கள் வீட்டுக்கடனுக்கு 5% வட்டி மட்டுமே செலுத்துங்கள்.
- பிராசஸிங் கட்டணம் மற்றும் Pre EMI கட்டணம் இல்லை
- உங்கள்அப்பார்ட்மெண்ட் கட்டி முடிக்கப்படும் நாளிலிருந்து EMI செலுத்தத் தொடங்குங்கள்.
- இச்சலுகை குறிப்பிட்ட வங்கிகள் மற்றும் நிறுவனங்களிலிருந்து பெறும் வீட்டுக்கடனுக்கு மட்டும் பொருந்தும்.

*Conditions apply

சிறப்பம்சங்கள்

■ நீச்சல் குளம் ■ டென்னிஸ் கோர்ட்டுகள் ■ கிளப் ஹவுஸ் ■ கம்யூனிட்டி ஹால் & ஜிம் ■ ஒருங்கிணைக்கப்பட்ட இன்டர்நெட், சேட்டிலைட் ரேடியோ, சேட்டிலைட் டி.வி. மற்றும் கண்காணிப்புக் கேமரா வசதி ■ குடிநீர் மற்றும் போர்வெல் தண்ணீர் வசதி ■ நகருக்குள் செல்ல அசோசியேசன் நடத்தவுள்ள Bus shuttle சர்வீஸ் ஒவ்வொரு மணி நேரத்திற்கும்.

Member of

CREDAI
Confederation of Real Estate Developers' Associations of India
Tamil Nadu

CPDA
Coimbatore Property Developers Association

TÜV CERT
ISO 9001 : 2000
Certificate
TÜV NORD

Architects
M/s. Sankar & Associates

Electrical Consultant
Mr. P.P. Subramaniam

Legal Consultant
Mr. P.R. Ramakrishnan





தேவயானி... ராதிகா...

சாந்தி சுந்தர், நெய்வேலி.

'உங்களுக்குப் பிடித்த கடவுள் யார்?' என்ற கேள்விக்கு நீங்க அளித்த பதிலிலிருந்த தமிழ்ப் படங்களைப் பட்டியலிட்டேன். பதின்மூன்று என்று வந்தது. சரியா அனுஷா?

பதினெட்டு இருக்கணுமே! சரியா எண்ணிப் பாருங்க!

எம்.சாந்தகுமாரி, காஞ்சிபுரம்.

வீட்டு வேலை, வெளி வேலை, அலுவலக வேலை எல்லாவற்றையும் நான் செய்கிறேன். ஆனால் அலுவலகம் மட்டும் சென்று வரும் என் கணவர், எப்போதும் களைப்பாக இருக்கிறார். அது ஏன் அனுஷா?

பெண்ணின் மூளை 'மல்ட்டிடாஸ்க்கிங்'குக்கு ஏற்றது. ஆனால் ஆணினுடையது அப்படி அல்ல. இதைப் பற்றிய ஒரு 'ப்ரெயின் தியரியே' உண்டு.

பி.நாகலக்ஷ்மி, சென்னை-40.

மாமியாரைப் படுத்தும் மருமகள் கோஷ்டியை யாரிடம் புகார் செய்வது?

பிள்ளையிடம் சொல்லலாம்! அல்லது 'கல்லு'ப் பிள்ளையாரிடம் சொல்லலாம்... எனக்கென்னமோ இரண்டாமவர் கொஞ்சம் கரைவார்னு தோணுது!

என்.கோமதி, நெல்லை.

உங்களால் மறக்க முடியாத உங்களுடைய எழுத்து எது?

மரச்சட்டம் போட்ட புதிய கல்



என்ன

அனுஷா நடராஜன்

சிலேட்டில், பால் அச்சி கொட்டும் மாவு பல்பம் கொண்டு, ஒண்ணாங்கிளாஸில் நான் எழுதிய உயிரெழுத்துக்கள் தான்!

எச்சில் தொட்டு அழித்து, "அப்பா சட்டை காஞ்சுக்க; அம்மா சேலை காஞ்சுக்க!" என்று சொல்லி, 'டப் டப்' என்று கைகளால் தட்டி, இலேசாக ஈரம் இருக்கும்போதே, அழகாக எழுதி, 'நன்று!' வாங்கி, அது அழிந்துவிடாமல் தூக்கிப் பிடித்துக் கொண்டு வீட்டுக்கு ஓடிய நாட்கள்... ஆஹா!



ரம்யா கிருஷ்ணன்...



கே.பட்டு,
குரோம்பேட்டை.

எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி, சிவாஜி-சரோஜாதேவி, ஜெமினி - சரோஜாதேவி... எது டாப்?

நீங்களே சரியா வரிசைப்படுத்திட்டீங்களே, வெரிகுட்!

எஸ்.விஜயராணி, ஓசூர்-2.

எல்லாப் பிரார்த்தனைகளின் இறுதியிலும், "ஓம்... சாந்தி, சாந்தி... சாந்தி" என்று மும்முறை கூறுகிறாங்களே... அது ஏன்?

நாம் ஏதாவது ஒரு காரியத்தில் ஈடுபடும்போது, மூன்றுவிதமான தடைகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

தடை நம்பர் ஒன்:

வித்தியாசம்?



சரும நோய்களுக்கு உசிலமரப்பூ நல்ல தீர்வைக் கொடுக்கும். உசிலம்பூ இலைகளைக் காயவைத்து, அரைத்துத் தூள் செய்து, உடம்பில் தேய்த்துக் குளித்தால் சரும நோய்கள் தீரும்.

- உ.சுல்தானா, இராமநாதபுரம்.



இயற்கை சமாசாரம்! நிஷா புயல், உஷா மின்னல், பூமா பூகம்பம், மோகினி மழை எக்ஸட்ரா!

தடை நம்பர் டூ: நம்மைச் சுற்றியுள்ளவர்களால் வருவது! ஒண்ணுவிட்ட சித்தப்பாவின் மரணம், ஜி.எம்.மின் திடீர் உத்தரவு, பவர்கட், கட்சி ஊர்வலம், ட்ராஃபிக்ஜாம், ஆட்டோ ஸ்ட்ரைக்... பஸ் பிரேக் டவுன் போன்றவை.

தடை நம்பர் த்ரீ: நமக்குள்ளேயே இருப்பது! நம்ப உடல், மனசு, பண்ணும் சண்டித்தனம்!

வெற்றிக்குத் தடையாக இருக்கக்கூடிய இவற்றிலிருந்து காப்பாற்றிக் கொள்ளத்தான் 'சாந்தி'யை மும்முறை உச்சரிக்கிறோம்...

உமா மோகன்தாஸ், திண்டுக்கல்.

டியர்மோஸ்ட் அனுஷா, நோபல் பரிசு பெற்ற சகோதரர் 'வெங்கி', வாழ்த்து ஈமெயில் அதிகம் வந்ததற்காக வருந்துகிறாரே... இது சரியா?

''ஒரே இரவில், சர்வதேசப் புகழ் கிடைக்கும்போது பொதுவாக ஏற்படும் பாப்புலாரிட்டி பரபரப்பை, நைச்சியமாகச் சமாளிக்க எனக்குத் தெரியவில்லை. ஸாரி'' என்று அவர் வருத்தம் தெரிவித்து விட்டதால்... விடுங்க விவகாரத்தை!

கொசுறுத் தகவல்: ஆல்ஃபிரட் நோபல் 'டைனமைட்' எனப்படும் வெடிமருந்தைக் கண்டுபிடித்தபோது, ஏகப்பட்ட கண்டனங்கள். 'அழிவு வர்த்தகர்' எனத் திட்டித் தீர்த்தார்கள். அதனால் வருத்தப்பட்ட ஆல்ஃபிரட், டைனமைட் கண்டுபிடிப்பால் கிடைத்த பணத்தை, எதிர்கால விஞ்ஞானிகளுக்குப் பரிசாக வழங்க வேண்டும் என்று உயில் எழுதினார்.

நோபல் பரிசின் இன்றைய மதிப்பு கிட்டத்தட்ட ஆறு கோடியே அறுபத்து நாலு லட்ச ரூபாயாம்!

எஸ்.பத்மாவதி, சென்னை-40.

நீங்கள் வியக்கும் 20/20 சாதனை எது அனுஷா?

ஒரு தாய், தன் மகனை 'ஜென்டில்' ஆக்க இருபது வருடங்கள் ஆகின்றன. ஆனால் ஓர் இளம்பெண், அவனை இருபதே நிமிடங்களில் 'மென்டல்' ஆக்கி விடுகிறாள். எல்லோருக்கும் வருமா இந்த 20/20 சாதனை?

ஆர்.ஜி.காயத்ரி, திசையன்விளை.

இன்னைக்கு நீங்க மத்தவங்கக்கிட்ட தலைநிமிர்ந்து பேசறீங்கன்னா... அதுக்கு யாரெல்லாம் காரணம்?

என்னை விட உயரமா இருக்குற எல்லோருமேதான்!

சாத்தூர், எம்.செல்லையா.

கோலங்கள் - தேவயானி, செல்லமே - ராதிகா, தங்கம் - ரம்யா கிருஷ்ணன்... நடிப்பில் என்ன வித்தியாசம்?

இந்தக் கேள்வியை 'சாய்ஸில்' விட்டு விடுகிறேனே... ப்ளீஸ்!


MADE IN INDIA FOR INDIA
Panasonic
ideas for life
மல்டி குக்கர்
மல்டி டாஸ்கிங் பெண்களுக்கு
SMART COOK
வழங்குகிறோம் முதன்முறையாக ஆட்டோமேடிக் ஜார் குக்கர் இந்தியாவில் தயாரானது இந்தியாவிற்காகவே தயாரிக்கப்பட்டது
புதிய பேனசோனிக் ஜார் குக்கருடன்
ஆனந்தமாய் அனுபவித்து சமையுங்கள்.
இதில் உள்ள ஸ்மார்ட் குக் தொழில்நுட்பத்தால், இந்த ஜார் குக்கரில் ஒவ்வொரு முறையும் சுவையான நன்கு சமைக்கப்பட்ட சூப்பரான உணவு தயார். வசதியான வடிவமும் கண்ணைக் கவரும் டிசைனும் பிறவற்றிலிருந்து இதை தனித்துக் காட்டுகின்றதே!
Superior to other Automatic Cookers
ZERO
Cook 'n' Carry
5 Hrs. Keep Warm
Dew Collector
Steaming Basket
2 Year Warranty
2.2 லி, 1.8 லி, 1.5 லி என்று 3 வகையான அளவுகளில் கிடைக்கும்.
www.panasonic.co.in
Leading the way with eco-friendly Technology
Panasonic is committed to using eco-friendly materials and processes for all products.
Available at all Panasonic Brandshops & leading stores. To locate a Panasonic Brandshop near you please visit our website : www.panasonic.co.in
PANASONIC HOME APPLIANCES INDIA CO. LTD., CORPORATE OFFICE: CHENNAI PH: 044 22304225-28. BRANCH OFFICE: CHENNAI: Ph: 044 43530107. CHENNAI: 044 - 42805629. Brandshop: T.NAGAR: 044-42070455. KILPAUK: 044-43531155. TRICHY: 0431 - 6453839. Brandshop: 0431-4013637. PONDY: 0413-2221718. Brandshop: 0413-4207453. MADURAI: 0452-4361813. Brandshop: 0452-4368610. TIRUNELVELI: Brandshop: 0462-2501191. TUTICORIN: 0461-2331704. COIMBATORE: 0422-4382834. Brandshop: 0422-4387774. Erode: 0424-2221206. TIRUPUR: Brandshop: 0421-4542121. SALEM: 0427-4262670. Brandshop: 0427-4262200. VELLORE: 0416-4202022.

சர்க்கரை வள்ளிக்கிழங்கை மெல்லிய வட்டங்களாக நறுக்கி, அத்துடன் பயத்த மாவு, உப்பு, காரப்பொடி சேர்த்து பிசிறி எண்ணெயில் பொரித்தெடுக்க சுவையான இனிப்பு, காரம், உப்பு கலந்த சிப்ஸ் ரெடி. சாம்பார் சாதம், கலந்த சாதத்துக்குத் தொட்டுக் கொள்ளலாம்.

- கே.எஸ்.கிருஷ்ணவேணி, குடந்தை-1.



புது நிறுவனங்களைத் துவக்கி வைக்கும்போது ரிப்பனைக் கத்தரியால் கத்தரிப்பார்கள். அதைவிட, கட்டியிருக்கும் ரிப்பனைச் சுலபமாய் அவிழ்க்கும்படிக் கட்டி வைக்கலாமே? நிறுவனம் செழித்து வளரத் துவங்கும் சுபவேளையில் புதியது ஒன்றை வெட்டி நாசமாக்குவது சரியா?

- எஸ்.பர்வதம், மதுரை.

ஆங்கில மருந்துகளை, குளிர்ந்த நீரில் சாப்பிடுவதை விட, இளம் வெந்நீரே ஏற்றது. ஆங்கில மருந்து, உணவு சாப்பிட்ட பின் உட்கொள்ள வேண்டும். ஆனால், நாட்டு மருந்துகளை வெறும் வயிற்றில் சாப்பிட வேண்டும்.

-வீ. உதயக்குமாரன், வீரன்வயல்.

சிறுகுழந்தைகளை, காலில் செருப்பு அணியாமல் வெளியில் செல்லவிடக் கூடாது. கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் தொற்றும் அபாயம் உண்டு.

- சி.விஜயாம்பாள், கிருஷ்ணகிரி.

நான்கு இறக்கைகளைக் கொண்ட மின்விசிறி வாங்கினால், காற்று அதிகம் வரும் என்று நினைக்கிறார்கள். அது முற்றிலும் தவறு. அழகுக்கு வேண்டுமென்றால் வாங்கிக் கொள்ளலாம். மூன்று இறக்கைகள் கொண்ட மின்விசிறிகளில்தான் காற்றின் அளவு மிக அதிகமாக இருக்கிறது.

- டி.இந்திரா, சென்னை-64.

மழைக்காலத்தில் கரண்ட் கட் ஆகி விட்டால், இரவு நேரங்களில், குடையுடன் வரும்போது சிரமம்தான். குடை தயாரிப்பாளர்கள் பேட்டரியால் எரியும் விளக்குடன் கூடிய குடைகளைத் தயாரித்தால் மிகுந்த பயனடையலாம்.

- தஸ்மிலா அஸ்கர், கீழக்கரை.

நண்பர்கள், உறவினர்கள் நகைப் பெட்டியுடன் நகைகளைக் காட்டினால், திறந்தவாக்கிலேயே அவரிடம் திருப்பித் தருதல் நல்லது. பெட்டியை மூடித் தரக் கூடாது.


-எஸ்.மீனா, திருச்சி-6.

இவை எல்லாமே ஆஹா 50 தான்!

குரு பெயர்ச்சிப் பலன்கள்

16.12.2009 முதல் 4.5.2010 வரை

கணித்து வழங்குபவர் : ஹரிகேசநல்லூர் வெங்கடராமன்



விரோதி வருடம், மார்கழி மாதம், 1ம் தேதி புதன் கிழமை 16.12.2009 அன்று அதிகாலை 12.02க்கு குருப்பெயர்ச்சி நிகழ உள்ளது. தற்போது மகர ராசியில் உள்ள வியாழன் அடுத்த ராசியான கும்பத்துக்கு நகர்கின்றது. பொதுவாக ஒரு ராசியைக் கடக்க குரு எடுத்துக் கொள்ளும் காலம் 361 நாட்கள். ஆனால் இம்முறை சற்று வினோதமாக 141 நாட்கள் மட்டுமே குரு கும்பத்தில் இருக்கும். 04.05.2010 அன்று - அதாவது விக்ருதி வருடம் சித்திரை மாதம் 21ம் தேதி செவ்வாய்க் கிழமை காலை 10.22க்கு அடுத்த குருப்பெயர்ச்சி நிகழவுள்ளது. அந்த 141 நாட்கள் நமக்கு எப்படி இருக்கும்?





(அசுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)

குரு 11ம் இடத்துக்கு வருவதால் இது ஒரு பொற்காலம். திருமண வயதில் உள்ளவர்களுக்கு கெட்டி மேளம் கொட்டும். ஆண் வாரிசு உருவாகும். குடும்பத்தில் சுப விசேஷங்கள் நடைபெறும். உற்றார் உறவினரிடையே நல்லிணக்கம் ஏற்படும். பிரிந்து வாழு(டு)ம் தம்பதியர் மீண்டும் இணைவர். உத்தியோகத்தில் உள்ள பிரச்னைகள் தீரும். உயர் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். பதவி உயர்வு பெறுவீர்கள். அரசுப் பணியாளர்களுக்குப் புதிய சலுகைகள் கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும்.

உங்கள் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் விலகி விடுவார்கள். சுய தொழில் செய்பவர்களுக்குத் தொழில் முன்னேற்றம் மிகச்சிறப்பாக இருக்கும். பொருளாதார நிலையில் கணிசமான முன்னேற்றம் ஏற்படும். செல்வச் செழிப்பு ஏற்படும். அற்புதமான காலம் இது. சேமிப்பு அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தில் உள்ள சிறுசிறு குறைபாடுகள் நீங்கி, சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள்.

பரிகாரம்: ஸ்ரீ குருவாயூரப்பனை மனதார துதிக்கவும்.

(கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் - 1, 2 ஆம் பாதங்கள்)

குரு 10ம் இடத்துக்கு வருவதால் நன்மைகள் சற்று அதிகமாக நடக்கும். தொழிலில் சிறு மாற்றங்கள் நிகழ வாய்ப்புண்டு. நிச்சயமாக பாதிப்புகள் இருக்காது. குரு 10ம் இடத்தில் இருக்கப்போகும் காலத்தில் நன்மைகள் நடக்கும். நிதி நிலவரம் திருப்திகரமாக இருக்கும். பணம் கொடுக்கல் வாங்கலில் நிலவும் தடைகளும் சிக்கல்களும் நீங்கும். நீண்ட காலமாக வராமல் தாமதமாகிக் கொண்டிருந்த பணம் கைக்கு வந்து சேரும். பழைய பாக்கிகள் வசூலாவது மட்டுமின்றி புதிய வருமானத்துக்கும் வழி பிறக்கும். வீட்டை புதுப்பிக்கவும். அசையாச் சொத்து வாங்கவும் வாய்ப்புள்ளது. சிலருக்கு இட மாற்றம் நிகழலாம். வாகன யோகம் சிறப்பாக விளங்கும். பயணங்கள் சற்று அதிகமாக இருக்கும். வழக்குகளில் வெற்றி கிட்டும். ஆரோக்கியம் சிறந்து விளங்கும்.

பரிகாரம்:

திருச்செந்தூர் முருகனைத் துதிக்கவும். 'தண்டையணி' எனத்துவங்கும் திருப்புகழையும், 'சேலபட்டழிந்தது' என்னும் கந்தரலங்காரப் பாடலையும் தினமும் படிக்கவும்.





(மிருகசீரிஷம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ஆம் பாதங்கள்)

குரு 9ம் இடத்துக்கு வருவதால் மிகப் பெரிய நன்மைகள் நடைபெறும். பெயர், புகழ், செல்வாக்கு அனைத்தும் கொடிகட்டிப் பறக்கும். செயற்கரிய சாதனைகளை மிகச் சுலபமாக செய்து வெற்றி வாகை சூடுவீர்கள். மனத்தில் உள்ள நீண்ட நாளைய திட்டங்கள் அனைத்தும் செயல் வடிவம் பெறும். உத்தியோகத்தில் பதவி உயர்வு உண்டு. செய்தொழில் எதுவாகினும் அதில் மேன்மை ஏற்படும். உழைப்புக்கும் திறமைக்கும் ஏற்ற அங்கீகாரம் கிடைக்கும். திருமணத் தடை விலகும். நிதி நிலவரம் சிறந்து விளங்கும். புதிய முதலீடுகள் செய்வதில் ஆர்வம் அதிகரிக்கும். பங்குச்சந்தை பலன் அளிக்கும். வழக்குகள் ஏதேனும் இருப்பின் அதில் வெற்றி உங்கள் பக்கம்தான். ஆரோக்கியம் சிறந்து விளங்கும். மாணவ - மாணவியர் தேர்வில் முதன்மை ஸ்தானத்தைப் பெறுவர்.

பரிகாரம்: வியாழக்கிழமைகளில் தக்ஷிணாமூர்த்தியை வழிபடவும். முடிந்தால் ஒரு முறை சிதம்பரத்திலிருந்து 28 கி.மீ. தொலைவில் உள்ள ஓமாம்புலியூர் சென்று வழிபடவும்.

(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம்)

குரு 8ம் இடத்துக்கு வருவதால் இது ஒரு சுமாரான காலம். மிகப் பெரிய நன்மைகளும் நடக்க வாய்ப்பில்லை. அதே நேரத்தில் தீமைகளும் நிச்சயம் நடக்காது. சனி, ராகு, கேது உட்பட பிற கிரகங்கள் நல்ல நிலையில் உள்ளதால் பெரிய பாதிப்புகள் எதுவும் ஏற்படாது. தடைகள் இல்லாவிட்டாலும் தாமதம் சிறிது இருக்கும். குருவின் பார்வை 2, 4, 12 ஆகிய வீடுகளில் பதிவதால் பல நன்மைகள் நடைபெறும். பொருளாதார நிலையில் மிகச் சிறப்பான முன்னேற்றம் ஏற்படும். பெரிய பெரிய செலவுகள் ஏற்படும். அவை அனைத்தையும் எதிர்கொள்ளும் அளவுக்கு வரவும் நன்றாக இருக்கும். வீடு கட்டுவது அல்லது வாங்குவது இப்போது சாத்தியமாகும். திருமண வயதில் பிள்ளைகள் இருந்தால் அவர்களது திருமணத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். சுபவிரயங்கள் ஏற்படும். வாழ்க்கையில் செய்ய வேண்டிய முக்கியமான கடமைகள் அனைத்தையும் செவ்வனே செய்து பெருமிதம் கொள்வீர்கள்.



பரிகாரம்:

வியாழக்கிழமைதோறும் நவக்கிரக வழிபாடு செய்யவும்.



(மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்)

குரு 7ம் இடத்துக்கு வருவதால் அதிக நன்மைகள் நடக்கும். நல்ல நேரம் ஆரம்பமாகிறது. ஜென்ம சனியால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து பெருமளவு விடுதலை கிடைக்கும். நலிவுற்ற தொழில் மீண்டும் புத்துயிர் பெறும். ஆரோக்கியத்திலும் நல்ல முன்னேற்றம் ஏற்படும். சுயதொழில் செய்பவர்களுக்கு மகத்தான லாபம் கிடைக்கும். கடன் தொல்லைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுவீர்கள். புதிய தொழில் வாய்ப்புகளும் ஏற்படும். கடல் கடந்து வாணிபம் செய்ய வாய்ப்புகள் வரும். பூர்விகச் சொத்து தொடர்பான வழக்குகளில் வெற்றி கிடைக்கும். பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பான சர்ச்சைகள் தீரும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளது. திருமண வயதினருக்கு மணநாள் முடிவாகும். இல்லறம் நல்லறமாக நடக்கும். தம்பதியினரிடையே நெருக்கம் அதிகரிக்கும். பிரிந்து வாழும் தம்பதியர் மீண்டும் இணைவர். புத்திரபாக்கியம் ஏற்படும். குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கும்.

பரிகாரம்: ஆலங்குடி சென்று தக்ஷிணாமூர்த்தியை வழிபடவும்.

(உத்திரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)

குரு 6ம் இடத்துக்கு வருகிறது. இது மிக சுமாரான காலம். 'ஆறில் குரு ஊரில் பகை' என்று ஜோதிடப்பழமொழி கூட உண்டு. பயந்துவிட வேண்டாம். மறைவு ஸ்தானத்தில் குரு இருந்தாலும் அதன் பார்வை, ராசிக்கு 10, 12, 2 ஆகிய வீடுகளில் பதிவதால் நிச்சயம் சில நன்மைகளும் நடக்கும்.

தொழில் முன்னேற்றம் மிகச் சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். சுயதொழில் செய்பவர்களுக்கு மகத்தான முன்னேற்றம் கிடைக்கும். நிதி நிலவரம் மிகவும் திருப்திகரமாக இருக்கும். தனகாரகன், பொன்னவன் என்று போற்றப்படும் வியாழனின் பார்வை 2ம் வீடான தனஸ்தானத்துக்குக் கிடைப்பதால் செல்வச் செழிப்பு உண்டாகும். குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கும். விரயஸ்தானமான 12ம் இடத்துக்கும் குரு பார்வை உள்ளதால் சுப விரயங்கள் ஏற்படும். திருமண வயதில் உள்ளவர்களுக்கு வெகு விரைவில் கெட்டி மேளம் கொட்டும்.

பரிகாரம்: தஞ்சை அருகில் உள்ள திட்டை என்னும் ஊருக்குச் சென்று குருபகவானை வழிபடவும்.





(சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்)

குரு 5ம் இடத்துக்கு வருவதால் பல நன்மைகள் நடைபெறும். இல்லத்தில் சுப விசேஷங்கள் நடைபெறும். உடல் ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். மனோபலமும் உடல் வன்மையும் பெற்று வீரநடை போடுவீர்கள்.

பக்தி மார்க்கத்தில் நாட்டம் அதிகரிக்கும். ஆலயத் திருப்பணிகளில் பங்கேற்று புண்ணியம் சம்பாதிப்பீர்கள். கவலைகள் தீரும். மனம் சாந்தி அடையும். தொழில் முன்னேற்றம் சிறப்பாக விளங்கும். பதவி உயர்வு கிடைக்கும். சுய தொழில் புரிவோர் அதிக லாபம் பெறுவர். திருமண வயதில் உள்ளவர்களுக்கு மனதுக்குப் பிடித்த வாழ்க்கைத் துணை அமையும். மணமானவர்களுக்கு இல்லறம் நல்லறமாக நடைபெறும். நிதி நிலவரம் மிகச் சிறப்பாக இருக்கும். பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்புள்ள வழக்குகள் அல்லது சர்ச்சைகள் ஏதேனும் இருந்தால் அவை சுமுகமான முறையில் தீர்ந்துவிடும்.

பரிகாரம்: குரு பகவான் வழிபட்ட தலங்களுள் ஒன்றான திருவலிதாயம் (சென்னையில் பாடி) சென்று குருவை வழிபடவும்.

(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

குரு இதுவரை 3ம் இடமான மகரத்தில் நீச்சமாக இருந்தது. இப்போது 4ம் இடமாகிய கும்பத்துக்கு வருவதால் அதிக வலுப்பெறுகின்றது. முந்தைய ஒரு வருடத்தைக் காட்டிலும் பலமடங்கு அதிக நன்மைகள் நடைபெறும் நல்ல நேரம் இது. 8, 12 ஆகிய இடங்களை குரு பார்ப்பதால் திருமணத்தடை விலகும். தொழில் முன்னேற்றம் ஆச்சரியப்படும் அளவுக்கு வெகு சிறப்பாக இருக்கும். புதிய தொழில் துவங்கவும், செய்து வரும் தொழிலை விரிவுபடுத்தவும் உகந்த நேரமிது.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வு, பணியிட மாற்றம், ஊதிய உயர்வு கிடைக்கும். ஒரு சிலர் தற்போது உள்ள வேலையை ராஜினாமா செய்து விட்டு இதைவிட உயர்வான வேறு நல்ல வேலைக்கு மாறிவிட வாய்ப்பு உள்ளது. உத்தியோக மாற்றம் செய்து கொள்ள இதுவே நல்ல தருணம். நிதி நிலவரம் கணிசமாக உயரும். செல்வச் செழிப்பு அதிகரிக்கும்.



பரிகாரம்:

குரு பகவான் வழிபட்ட திருச்செந்தூர் முருகனை நீங்களும் வழிபட்டால் நன்மைகள் அதிகமாக நடைபெறும்.



(மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்)

குரு 3ம் இடத்துக்கு வருகின்றது. ஒரு வருட காலம் 2ம் இடமாகிய மகரத்தில் நீச்சம் அடைந்திருந்த ராசி அதிபதி குரு இப்பொழுது 3ம் இடத்துக்கு வருவதால் இக்காலம் சற்று சுமாராக இருக்கும். பொதுவாக 3ம் இடம் குருவிற்கு நல்ல இடம் இல்லை என்றாலும், நீச்ச வீட்டிலிருந்து நகர்வதால், உங்கள் ராசிக்கு 7, 9, 11 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். இதனால் ஓரளவு நன்மைகள் நடக்கும். வியாழ நோக்கு வந்துவிட்டதால் திருமணத்தடை விலகும். குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கும். ஆரோக்கியம் சிறந்து விளங்கும். லாபஸ்தானம் என்னும் 11ம் வீட்டை குரு பார்ப்பதால், பொருளாதார நிலை மனநிறைவு தரும். தொழில் முன்னேற்றம் சுமாராக இருக்கும். வேலை மாற்றம் செய்வதற்கு இது உகந்த காலம் அல்ல. தற்போது உள்ள உத்தியோகத்தில் சிறிது முன்னேற்றம் ஏற்படும். சுயதொழில் செய்பவர்களுக்குப் பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். நஷ்டம் ஏற்படாது. புதிய முதலீடுகள் செய்வதுபற்றி 2010 மே மாதத்துக்குப் பிறகு யோசிக்கலாம்.

பரிகாரம்: வியாழக்கிழமைகளில் மகான்களை மனதாரத் துதிக்கவும். ஜீவ சமாதிகளுக்குச் சென்று வழிபடவும்.

(உத்திராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2-ஆம் பாதங்கள்)

குரு 2ம் இடத்துக்கு வருகின்றது. இது அதிக நன்மை செய்யும் மிகச் சிறந்த காலம். தொழில் ஸ்தானமான 10ம் இடத்தை குரு பார்ப்பதால் தொழிலில் மகத்தான முன்னேற்றம் உண்டாகும். சாதாரண வேலையில் இருப்பவர்கள் நல்ல வேலை கிடைத்து வாழ்க்கையில் செட்டில் ஆகிவிடுவார்கள். சுய தொழில் செய்பவர்கள் தங்களுடைய தொழிலை நன்கு விரிவுபடுத்துவர். கலைத்துறை சார்ந்தவர்களுக்குப் புதிய வாய்ப்புகள் தேடி வரும். மருத்துவம், ஜவுளி, நகை, அழகுப் பொருள்கள், உணவுத்துறை போன்ற தொழிலில் உள்ளவர்கள் இமாலய முன்னேற்றம் அடைவர். நிதி நிலவரம் வெகு ஜோராக இருக்கும். நோய் நொடிகள் நீங்கி நல்ல ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தில் சுப விசேஷங்கள் நடைபெறும். இல்லறம் மகிழ்ச்சிகரமாக விளங்கும். 8ம் இடமாகிய மாங்கல்ய ஸ்தானத்தை, குரு பார்ப்பதால் திருமணம் விரைவில் நடந்துவிடும். மக்கட் செல்வம் உருவாகும்.

பரிகாரம்:

'குரு காயத்ரி'யை தினமும் 9 முறை சொல்லி வியாழ பகவானை வழிபடவும்.





கும்பம்

(அவிட்டம் 3, 4ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்)

குரு உங்கள் ராசிக்குள் வருகின்றது. கும்பம் குருவிற்கு நட்பு வீடு என்பதால் பெருமளவு நன்மைகள் நடைபெறும். அஷ்டமத்து சனியால் விளையும் இன்னல்களுக்கு 141 நாட்கள் இடைக்காலத்தடை விதிக்கப்பட்டுள்ளது. அலைச்சல் அதிகரிக்கும் என்பதால் உடல் ஆரோக்கியத்தில் சற்றுக் கூடுதல் அக்கறை செலுத்தவும். பதவி உயர்வு கிடைக்கும். அலுவலகத்தில் கூடுதல் பொறுப்புக்கள் உங்களுக்கு வழங்கப்படும். திறமைகளை நன்கு வெளிப்படுத்தி நற்பெயர் ஈட்டுவீர்கள்.

தொழில் முன்னேற்றம் சிறந்து விளங்கும். மிகக் கடுமையாக உழைத்து வெற்றி இலக்கை எட்டிப் பிடிப்பீர்கள். திருமணத் தடை விலகும். புத்திரபாக்கியம் உண்டாகும். திருமண வயதில் மகன் அல்லது மகள் இருந்தால் அவர்களது திருமணத்தைச் சிறப்பாக நடத்தி மகிழ்வீர்கள். அவர்களின் வாழ்க்கை வளம் பெறும். நிதி நிலவரத்தில் கணிசமான முன்னேற்றம் ஏற்படும். ஆனால், புதிய முதலீடுகள் செய்வதற்கு இது உகந்த காலம் அல்ல.

பரிகாரம்: சுவாமி மலைக்கு சென்று முருகனை வழிபடவும்.

(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

குரு 12ம் இடத்துக்கு வருகின்றது. உங்கள் ராசி அதிபதியான குரு 11ம் இடமான மகரத்தில் நீச்சம் பெற்று, வலுவிழந்த நிலையில் ஒரு வருட காலம் இருந்தது. இப்பொழுது விரயஸ்தானமான மறைவிடத்துக்கு வருகின்றது. நீச்ச குருவைவிட கும்ப குரு பன்மடங்கு மேல். கவலையை விடுங்கள், நன்றாகத்தான் இருக்கும். வாடகை வீட்டில் வசிப்பவர்கள் சொந்த வீடு வாங்கி புதுமனை புகுவிழா நடத்தி மகிழ்வார்கள். சுபவிரயங்கள் ஏற்பட்டு சேமிப்பு கரையும். வாகன சுகம் அதிகரிக்கும். தாயாரின் உடல் ஆரோக்கியம் சிறக்கும். பணம் கொடுக்கல் வாங்கலில் அதிக எச்சரிக்கை வேண்டும். 'ரிஸ்க்' உள்ள முதலீடுகள் எதையும் செய்ய வேண்டாம்.

சுயதொழில் செய்பவர்கள் அகலக் கால் வைக்காமல் இருக்க வேண்டும். தொழிலை விரிவு படுத்த இது உகந்த காலம் அல்ல. பயணங்கள் சற்று அதிகமாக இருக்கும். சிலருக்கு அயல் நாட்டு வாசம் ஏற்படும். ஆரோக்கியம் சிறந்து விளங்கும்.



மீனம்

பரிகாரம்: செந்தில் ஆண்டவனைத் தொழுது வாருங்கள். 'நாளென் செயும் வினைதான் என் செயும்' என்னும் கந்தரலங்காரப் பாடலை தினமும் படித்து வரவும்.

மனம் திறந்து பேசுகிறேன்!



நான் மங்கையர் மலரின் நீண்ட நாள் வாசகி. எனக்கு அறுபது வயதாகிறது. கடந்த பல வருடங்களாக அதிக தூரம் நடந்தாலும், உட்கார்ந்து எழுந்தாலும், தும்மினாலும் சிரித்தாலும், அதிக அளவு சிறுநீர் வெளியேறி வேதனைப்பட்டிருந்தேன். வெளியில் செல்லும்போது பேட் வைத்துக் கட்டிக் கொள்வதுடன், டாய்லெட் எங்கே உள்ளது என்றுதான் முதலில் பார்ப்பேன். இதனால் எதிலும் பிடிப்பில்லாமல், மனம் சோர்ந்து இருந்தபோது, மங்கையர் மலர் இதழில் டாக்டர் கார்த்திக் குணசேகரன் சிறுநீர் குறைபாடுகளை முற்றிலும் சரி செய்வதாகவும் பல பெண்மணிகள் குணமடைந்து சந்தோஷமாக வாழ்ந்து வருவதாகவும் படித்தேன்.

குடும்ப சூழ்நிலை காரணமாக உடனடியாக டாக்டரைப் பார்க்க முடியாமல் கடந்த மே (2009) மாதத்தில் அவரிடம் சென்று பரிசோதனை செய்து பின்னர் **'ஸ்லிங் ட்ரீட்மெண்ட்'** என்ற முறையில் மருத்துவ சிகிச்சை செய்து கொண்டேன். தற்போது, சிறுநீர் சம்மந்தப்பட்ட பிரச்னையின்றி உற்சாகமாக வெளியே சென்று வருகிறேன்.

டாக்டரின் திறமையான மருத்துவ சிகிச்சை, அன்பான அணுகுமுறையே நான் முழுமையாகக் குணமடையக் காரணம். என்னை குணமாக்கிய டாக்டரின் குடும்பம் எல்லா நலன்களும் பெற்று வாழ மனதார பிரார்த்தனை செய்கின்றேன். என்னைப் போன்று பாதிக்கப்பட்ட பெண்மணிகள் தயவு செய்து டாக்டர் கார்த்திக் குணசேகரன் அவர்களிடம் சென்று தக்க மருத்துவ சிகிச்சை பெற்று, சந்தோஷமாக தங்களது வாழ் நாட்களை கழிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

- எம்.விஜயலக்ஷ்மி,
திருச்சி

இப்போது கோவையில்

பாலா மெடிக்கல் சென்டர் அண்டு ஆஸ்பிட்டல்,

901, திருச்சி ரோடு, இராமநாதபுரம், கோயம்புத்தூர் 641045.
0422-2323456, 2323333

தங்கள் பிரச்னையை மேற்படி மையத்திலுள்ள முறையான பயிற்சி பெற்ற நபரிடம் தொலைபேசியில் தெரிவித்து கவுன்சிலிங் அல்லது ஆலோசனை பெறலாம்.

ஆலோசனைக்குக் கட்டணம் எதுவும் கிடையாது!

GUNA ASSOCIATES IN UROGYNECOLOGY & RESEARCH FOR INCONTINENCE (GAURI)

1, Crescent Park Street, T.Nagar, Chennai - 600 017. Ph : 24341055, 24322591
E-mail : gunasek@gmail.com Web : www.urogynecology.in

Advt.

சுமைக்கும் தலையா?

வாழ்க்கை

இரயில் நிலையத்தில் வண்டி வந்து நின்றவுடன், "என்ன ஸார் கூலியா?" என ஒரு பெண் உங்களைப் பார்த்துக் கேட்டால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்காதா?



கடந்த நூறு ஆண்டுகளுக்கும் மேலாக, அகமதாபாத்திலிருந்து சுமார் இருநூற்றைம்பது கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பாவ்நகர் இரயில் நிலையத்தில் ஆண் சுமைத்தூக்கிகளே கிடையாது. இந்தியாவிலேயே பெண்கள் மட்டுமே சுமைத் தூக்கிகளாக உள்ள இரயில் நிலையம், பாவ் நகர் என்று கூறப்படுகிறது.

இங்கு சுமார் இருபது பெண் சுமைத் தூக்கிகள் உள்ளனர். இங் குள்ள பெண் சுமைத் தூக்கிகள், வயதானவு டன், தமது அடையாள பேட்ஜ் மற்றும் கை 'பேண்டை' தன் வீட்டிலுள்ள, பெண்களுக்குத் தருவதால் அவர்களும் இந்த வேலையை செய்து வருகின்றனர்.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பு பாவ்நகர் மஹாராஜாவாகவிருந்த கிருஷ்ணா பிரதாப் சிங், இந்த இரயில் நிலையத்தில் முதன் முதலாக சில பெண்களை, சுமைத் தூக்கிகளாக நியமித்தார். அது பரம்பரைப் பரம்பரையாக இன்றும் தொடர்ந்து வருகிறது.

சமீபத்தில் இரயில்வே அதிகாரிகள், பெண்கள், சுமைத்தூக்கிகளாக இருப்பது ரயில்வே விதிக்குப் புறம்பானது எனக் கூற ஆரம்பித்துள்ளனர். இந்த இரயில் நிலையம் அதிக பிளாட்ஃபாரங்களுடன் விரிவுபடுத்தப்பட உள்ளது.

எனவே, வயதான பெண்மணிகளும், லைசென்ஸை புதுப்பிக்க விண்ணப்பிக்கும் பெண்களும் தங்களது அடையாள பேட்ஜ்களை இரயில்வே அதிகாரிகளிடம் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். சிறிது சிறிதாக ஆண்களைச் சுமைத் தூக்கிகளாக அமர்த்துவதற்கான பேச்சும் அடிபட்டுக் கொண்டிருக் கிறது.

காலங்காலமாக பெண்கள் மட்டுமே ஈடுபட்டிருந்த இந்தப் பரம்பரைத் தொழிலில், இரயில் நிலைய அதிகாரிகள், அதிரடியாக சில நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் தமது குடும்பத்தாருக்கு எங்கே வேலை இல்லாமல் போய் விடுமோ என இங்குள்ள பெண் சுமைத் தூக்கிகள் கவலை அடைந்துள்ளனர்.

நன்றி: 'டைம்ஸ் ஆஃப் இந்தியா'

- ஆர்.பாண்டுரங்கன்,
அகமதாபாத்


என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

வழங்கும்

ஆன்மிகப் போட்டி - 11

ரூ. 5,000 பரிசு



பெருமைக்குரிய நமது இதிகாசங்கள், காவியங்கள், புராணம், திருக்கோயில்கள் போன்றவற்றிலிருந்து வினாக்களைத் தந்திருக்கிறோம். ஒவ்வொரு கேள்விக்குக் கீழேயும் மூன்று பதில்கள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைத் தேர்ந்து ✓ செய்து அனுப்புங்கள். குலுக்கல் முறையில் 20 பேருக்கு தலா ரூ. 250/- பரிசளிக்கப்படும்... எங்கே உங்க ஆன்மிக அறிவை சோதிச்சுப் பாருங்க!

1. திருச்சீரலைவாய் என்றும் அழைக்கப் படும் அறுபடை வீடு எது?

அ) திருத்தணி ☐ ஆ) திருச்செந்தூர் ☐
இ) சுவாமிமலை ☐

2. பொற்றாமரைக்குளம் எந்தப் பிரபல ஆலயத்தின் உள்ளே இருக்கிறது?

அ) மதுரை ☐ ஆ) பழனி ☐
இ) சிதம்பரம் ☐

3. ஐயப்பனின் திருவுருவத்தை சபரி மலையில் யார் நிறுவியதாக நம்பப்படு கிறது?

அ) மன்மதன் ☐ ஆ) பரசுராமர் ☐
இ) வசிஷ்டர் ☐

4. கன்யாகுமரி அம்மனின் எந்த நகை மிகப் பிரகாசமானது?

அ) மூக்குத்தி ☐ ஆ) தோடு ☐
இ) ஒட்டியாணம் ☐

5. நக்கீரர் எழுதிய நூல் எது?

அ) கந்தர் சஷ்டி கவசம் ☐ ஆ) திருப்புகழ் ☐ இ) திருமுருகாற்றுப்படை ☐

6. குருவாயூர் சன்னிதியில் திருமால் எப்படிக் காட்சி தருகிறார்?


அ) குழந்தைக் கண்ணனாகத் தவழும் கோலத்தில் ☐

ஆ) அர்ஜுனனுக்குக் காட்டிய விஸ்வரூப தரிசனக் கோலத்தில் ☐

இ) நான்கு கரங்களோடு நின்ற கோலத்தில் ☐

7. பஞ்சபூதத் தலங்களில் காளஹஸ்தியில் உள்ளது எந்த லிங்கம்?

அ) அக்னி ☐ ஆ) வாயு ☐ இ) ஆகாயம் ☐



8. கைகேயியின் மனத்தைக் கலைத்த கொடியவள் யார்?

அ) மந்தரை ☐ ஆ) மந்தாகபாணி ☐ இ) மந்தாகினி ☐

9. கண்ணனின் பிறப்பு வளர்ப்பை விவரிக்கும் நூல் எது?

அ) மகாபாரதம் ☐ ஆ) பாகவதம் ☐

இ) திவ்யபிரபந்தம் ☐

10. வேறெங்கும் தனி ஆலயம் இல்லாத யாருக்கு புஷ்கர் என்ற இடத்தில் தனி ஆலயம் இருக்கிறது?

அ) பைரவர் ☐ ஆ) தத்தாத்ரேயர் ☐ இ) பிரம்மா ☐

தொகுப்பு : ஜி.எஸ்.எஸ்.

போட்டி விதிகள் :

ஆன்மிக விடைகளை நிரப்பி இந்தப் பக்கத்தைக் கிழித்து அனுப்புங்க. ஒருவரே எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். ஜெராக்ஸ் கூடாது.

அனுப்ப வேண்டிய முகவரி : ஆன்மிகப் போட்டி - 11 மங்கையர் மலர், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.

கடைசித் தேதி : 15.12.2009

பெயர் : .... விலாசம் : ....

....

....

தொலைபேசி எண் : .... ஈ-மெயில் : ....

பச்சை மிளகாய் அதிகமாக இருந்தால், காம்பு நீக்கி உப்பு சேர்த்து மிக்ஸியில் விழுதாக அரைக்கவும். அதில் அரை மூடி எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து, காற்றுப் புகாத டப்பாவில் போட்டு ஃப்ரிஜ்ஜில் வைத்துவிட்டால், தேவையான போது உபயோகிக்கலாம். கொஞ்சம் நல்லெண்ணெயில் கடுகு, உளுத்தம் பருப்பு, பெருங்காயம், கறிவேப்பிலை தாளித்து பச்சை மிளகாய் விழுதில் கலந்து மிளகாய்ச் சட்னியாகவும் உபயோகிக்கலாம்.

- ஆர்.பத்மினி, பெங்களூரு.



கோதுமை, கேழ்வரகு, கம்பு இவற்றை அரைக்கும்போது சிறிது கல் உப்பு கலந்து அரைத்தால் நீண்ட நாட்கள் மாவில் புழு, வண்டு விழாமல் சுத்தமாக இருக்கும்.

- கே.செந்தில் வடிவு, ஆண்டியப்பனூர்

சிறு எழுத்தாளர்கள் பத்திரிகைகளில் பிரசுரமான தங்கள் கடிதங்கள், ஜோக்ஸ், சமையல் குறிப்புகள், டிப்ஸ், கட்டுரைகள் போன்றவற்றை வகைப்படுத்தி, எந்தப் பத்திரிகை, பிரசுரமான தேதி போன்ற விவரங்களுடன் சி.டி.யில் பதிவுசெய்து வைத்துக் கொள்ளலாம்.

- வெ.சியாமளா ரமணி,
செகந்திராபாத்-9.

டீத் தூளை வாங்கிப் பாட்டிலில் கொட்டி வைக்கும்போதே அரை டீஸ்பூன் ஏலக்காய்ப் பொடியைச் சேர்த்துக் கலந்து விட்டால் டீ எப்போதும் வாசனையாக இருக்கும்.

- டி. இந்திரா, சென்னை-64

மீசை மற்றும் தாடி அரும்பும் பெண்கள் மஞ்சள் தூளுடன், உப்பு அரைத் தேக்கரண்டி எடுத்து கலந்து உதட்டின் மேல் மற்றும் கீழ் உள்ள முடிகளின் மேல் வட்ட வட்டமாக மெதுவாக தேய்க்க வேண்டும். நாளடைவில் முடி உதிர்ந்து பின் முளைக்கவே முளைக்காது.

- ஆர். பாரதிமகேஷ், சென்னை.

தினமும் காலையில் கண் விழிக்கும் போதே 'இன்றைய பொழுது எனக்காக விடிகிறது. இன்று நான் எது நடந்தாலும் ஏற்றுக் கொள்வேன்' என்று நினைத்துக் கொண்டு எழுந்தால், அன்றைய பொழுது நமக்கு நன்றாகவே இருக்கும். மனஉளைச் சல் இருக்காது.

- உஷா சுப்ரமணியன்,
கும்பகோணம்.

வாழைக்காயை வாங்கியவுடன் குளிர்ந்த நீரில் போட்டு வைத்தால் விரைவில் பழுக்காது.

- பி.கவிதா, கோவிலாம்பூண்டி.

இவை எல்லாமே ஆஹா 50 தான்!

நட்பியல்

பனை,



நல்ல நண்பர்கள் வைரங்களைப் போல... அவர்களை எப்படித் தேர்ந்தெடுப்பது? நல்ல நட்பு எப்படி இருக்கணும்? அந்த உறவை எப்படிப் பாதுகாப்பது... இதோ சில டிப்ஸ்...

நண்பர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.



☺ ஒருமுறை விதை விதைத்து, தண்ணீர் விட்டு வளர்த்தால் போதும் அது மரமாகி, தான் சாயும் வரை பலன் கொடுத்துக் கொண்டேயிருப்பது பனைமரம்.

☺ ஒரு கன்றை நட்டுத் தண்ணீர் விட்டு வளர்த்தாலும் அவ்வப்போது நீர் ஊற்ற வேண்டும். அப்போதுதான் தென்னை மரம் சாயும் வரை பலன் கொடுக்கும் .

☺ ஆரம்பம் முதல் முடியும் வரை நீர் ஊற்றிப் பராமரித்தால் ஆண்டு முழுவதும் பயன் தரும் வாழை மரம்.

தென்னை, வாழை!

உங்கள் சுபாவத்துக்கு ஏற்ப நண்பர்களைத் தேர்ந்தெடுப்பது ஒரு கலை!

☺ கொஞ்சம் பிரியம் காட்டிப் பழகினாலே நட்புடன் இருப்பவர்கள் பனைமரம்.

☺ அடிக்கடிப் பழகி, அன்பும், ஆதரவும் தந்தால் நட்புப் பாராட்டுபவர்கள் தென்னை மரம்.

☺ எப்போதும் பிரியாமல், எந்நேரமும் உதவி செய்தால் மட்டுமே நட்புக் கொள்பவர்கள் வாழை மரம் போன்றவர்கள்.



நட்பைப் பற்றிய ஒரு கதை உண்டு. அரசன், அப்பாவி ஒருவனுக்கு மரண தண்டனை வழங்கி விட்டார். அதற்கு முன், ''உன் கடைசி ஆசையாக நீ விரும்பினால் உன் மனைவி, பிள்ளைகளைப் பார்த்து விட்டு வா. ஆனால் இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் வரவேண்டும். ஆனால் உனக்குப் பதில் யாரை யாவது விட்டுச் செல்ல வேண்டும். அப்படி நீ வரத் தவறினால் அவனுடைய தலையை நான் வாங்கிவிடுவேன்'' என்றார்.

அருகிலிருந்த அவன் உயிர் நண்பன் அந்த இடத்தில்தான் இருப்பதாகச் சம்மதித்து தன் நண்பனை அவன் வீட்டுக்கு அனுப்பினான். குறித்த நேரமும் நெருங்கியது. ''என் உயிரை வாங்குங்கள்'' என்று அரசனை நோக்கிக் கூறினான்.

அதற்குள் குற்றம்சாட்டப்பட்டவன் ஓடோடி வந்து, ''நான் வந்து விட்டேன். என்னைக் கொல்லுங்கள். என் நண்பனை விட்டு விடுங்கள்'' என்றான். ஆனால் அரசன், ''உங்களுடைய ஆசைப்படி உங்கள் தலையை வாங்காமல் விட்டு விடுகிறேன். என்னையும் உங்கள் இருவரின் நட்பில் மூன்றாவது நண்பனாகச் சேர்த்துக் கொண்டால்...'' என்றார்.

உயிரையும் தரக்கூடிய நண்பர்கள் கிடைப்பது அவ்வளவு எளிதல்ல என்று அரசரே தெரிந்து கொண்டாராம்!

- கே.ஏ.ஜெயம்,
சென்னை-88.

செல்லமே

நாம் பொதுவாக வீட்டில் வளர்க்கும் செல்லப் பிராணிகளைப் பற்றிச் சில விஷயங்களைத் தெரிந்து வைத்திருப்பது உதவியாக இருக்கும். மிருகங்கள் இருபத்து நான்கு மணி நேரமும் நம்மிடம் ஏதேனும் ஒன்றைக் கற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.



◆ நாயை சோஃபாவில் குதிக்க விடாதீர்கள். முதலில் சும்மா இருந்துவிட்டு, திடீரென்று தடைசெய்தால் அதற்குப் புரியாது. ஒரே மாதிரியாக இருங்கள். முரணான நடத்தையை நாய் கண்டுகொள்ளாமல் போய்விடலாம்.

◆ நாயை 'உட்கார்!' என்கிறீர்கள். அது உட்காரவில்லையா? இலேசாகக் காலரை இழுங்கள் அல்லது சுண்டுங்கள். நீங்கள் சீரியஸாகச் சொல்கிறீர்கள் என உணர்த்துங்கள். அறையின் இன்னோர் மூலையிலிருந்து சொல்லாதீர்கள். கத்தாதீர்கள். நீங்கள் சீரியஸ் இல்லை என்று அதற்குத் தெரிந்துவிடும்.

◆ அன்பைக் காட்ட உணவை நீட்டாதீர்கள். அது நாய் கொழுக்கத்தான் வகை செய்யும். உணவு மேஜையில் உள்ள மிச்சம், மீதியையும் நாய்க்குப் போட வேண்டாம். நாம் சாப்பிடுவது அதற்கு ஒத்துக்கொள்ளாது.

◆ வீட்டில் எல்லோருமே வெளியில் போகிறவர்களா? நீங்கள் இல்லாத போது நாய் என்ன செய்கிறது? தூங்கி, உள்ளேயே சுற்றி நேரத்தைக் கழிக்கிறதா? நாய்க்கும் பயிற்சி தேவைதானே? காலையில், முப்பது நிமிடங்களுக்கு நாயை வாக் கூட்டிச் செல்லுங்கள். பிளாஸ்டிக் பொம்மைகளை விளையாடக் கொடுங்கள். மாலையில் பந்து, ஃப்ரிஸ்பீ என்று நாயுடன் விளையாடுங்கள்.



◆ முக்கியமாக ரிட்ரீவர் முதலிய வேட்டை நாய்கள் பயிற்சி இல்லாவிட்டால் உடல் மற்றும் மனநலம் கெட்டு, ஃபர்னிச்சரைக் கடிப்பது, எதையாவது கவிழ்ப்பது

என்று குறும்பு செய்யும்.

◆ நாயின் எடையைத் தொடர்ந்து கண்காணியுங்கள். அதன் விலா எலும்பைக் கையால் உணர முடிகிறதா? இல்லையேல் உடற்பயிற்சியை (நாயின்!)க் கூட்டுங்கள். நடை, ஓட்டம், விளையாட்டு என்று அதிகரியுங்கள்.

◆ டாக்டரிடம் கூட்டிச் சென்று அவ்வப்போது செக்கப் செய்து கொள்வது மிகவும் அவசியம்.

◆ போரடித்தாலும், தனிமையாக இருந்தாலும், கவனிப்பின்றி, நோய்வாய்ப்பட்டு விடும். அவற்றுடன் தேவையான அளவு நேரம் செலவழிக்க வேண்டும். நாயும் குழந்தை மாதிரிதான்!

பூனைக்கும் இதேதான். ஆனால், சில விஷயங்களில் பூனை வித்தியாசமானது. பூனைகள் குண்டாவது அதிகம். நாயை வாக் கூட்டிப் போகலாம், பூனையை? அதற்கு எப்படிப் பயிற்சி கொடுப்பது?

◆ பூனைக்கும் சாப்பாட்டில் கட்டுப்பாடு தேவை. மிச்சம், மீதி நோ!

◆ லேசர் பாயிண்டரைக் காட்டி, பூனை

செல்லம்!

யைச் சீண்டி ஓடவிடுங்கள். அல்லது பொம்மையை வைத்தும் தூக்கிப் போட்டு, பயிற்சி அளிக்கலாம்.

◆ ரூல்ஸா, அப்படீன்னா? பூனைகள் டீனேஜர் போல. நாம் சொன்னதைக் கேட்காது. 'ஏய், நிறுத்து!' என்று நீங்கள் கத்தினால், பூனை ஓடுவதைப் பார்த்துச் சந்தோஷப்படுகிறீர்களா? அது உங்க டிரெயினிங்கினால் இல்லை. 'நான் இருக்கும்போது இப்படிப் பண்ணக் கூடாது' என்றுதான் பூனைக்குத் தெரிவிக்கிறீர்கள் என்று அர்த்தம். நாம் நாயை டிரெயின் பண்ணுகிறோம், பூனை நம்மை டிரெயின் பண்ணும்.

◆ சோஃபா பின்னால், கட்டில் அடியில் அசிங்கம் பண்ணுகிறதா? பூனைக்கு சுத்தம் முக்கியம். பூனையின் லிட்டர் பாக்ஸை ஒருநாளைக்கு இருமுறை சுத்தம் செய்ய வேண்டும். பூனைகள், ஒரு நாளைக்கு ஒருமுறைதான் மலம் கழிக்கும்.

◆ வீட்டில் வாடை வருகிறதா? ஸ்ப்ரே உபயோகிக்காதீர்கள். பூனை, ஸ்ப்ரேயை நக்கினால் கெடுதல். எனவே பேக்கிங் சோடாவில், நீர் கலந்து தெளியுங்கள்.

◆ பூனையின் முடியை பிரஷ் பண்ணவும் ஆங்காங்கே முடி கிடக்காமல் பார்த்துக் கொள்வதும் மிக முக்கியம்.

◆ டாக்டரிடம் பூனையைக் கொண்டு போய், செக்கப் செய்வது அவசியம்.

– முத்துலக்ஷ்மி, சென்னை.

செல்லங்களை வளர்ப்பதும் குழந்தைகளை வளர்ப்பது போல்தாங்க! அன்போடும் கவனத்தோடும் வளர்த்தால் அவை ஆயுசுக்கும் உங்களுக்கு ஆனந்தத்தைத் தரும்!





ஒண்ணே ஒண்ணு;

எனக்கு செடி, கொடிகள் என்றால் உயிர். அமெரிக்காவில் உள்ள அனைவருமே 'ஹவுஸ் பிளான்ட்' எனப்படும் தொட்டித் தாவரங்களை வளர்ப்பார்கள். அமெரிக்காவில் உள்ள எங்கள் வீட்டு வரவேற்பு அறை முழுவதும் அழகழகான செடிகள் உண்டு. அதிலும் மணிபிளான்ட் கொடிகளை சீலிங் வரைக்கும் கொண்டு போய் பந்தல் போட்டு விடுவேன். எங்கள் வீட்டுக்கு யார் வந்தாலும் என் செடிகளைப் பார்த்து அசந்து விடுவார்கள்.

மல்லிகைச் செடிகளிலே பதின்மூன்று வகை வைத்திருந்தேன். கறிவேப்பிலை விதையை இந்தியாவிலிருந்து கொண்டு போய் விதைத்து, அந்தத் தாய் செடியிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட செடிகளை உருவாக்கி என் தோழிகளுக்கும், உறவினர்களுக்கும் பரிசாகக் கொடுத்தேன்.

ஒரு சமயம், நான் ஒரு மாதம் இந்தியாவில் தங்கும்படி ஆகிவிட்டது. அப்பொழுது என் குழந்தைகளிடம் செடிகளை கவனித்துக் கொள்ளும்படி கூறிவிட்டு வந்தேன். அவர்கள் கல்லூரிக்குப் போவதால் செடிகளுக்குத் தண்ணீர் விடுவதற்குத்தான் நேரமிருந்தது. என்னைப் போல் செடிகளைப் பரிவுடன் கவனிக்க நேரமில்லை. நான் ஒரு மாதம் கழித்து அமெரிக்காவுக்குப் போனதும் முதலில் செடிகளைத் தான் கவனித்தேன். அப்பொழுது அந்தப் பெரிய கறிவேப்பிலைச் செடி வாடிப் போய் இருந்தது. அதைப் பார்த்தவுடன் எனக்கு மிகுந்த கவலையாகி விட்டது. என்னுடைய ஜெட்லாக் எல்லாம் பறந்து போய்விட்டது.

காலையில் எழுந்தவுடன் எங்கள் வீட்டுக்கு அருகில் உள்ள நர்சரி கார்டனுக்கு போய், என் செடியின் நிலைமைப் பற்றி விளக்கினேன். அங்கிருந்த தோட்டக்கலை நிபுணர் சில மருந்தும் ஸ்பிரேயும் கொடுத்து, ''இதை ஒரு வாரம் உபயோகித்துப்பாருங்க; சரியாகாவிட்டால் ஒரு வாரம் கழித்து இங்கு கொண்டுவாங்க'' என்று சொன்னார். அப்பொழுதும் செடி

சரியாகவில்லை.

நான் அவரிடம் போய் கூறி, வீட்டுக்கு வந்து பார்க்கும்படி கூறினேன். அதற்கு அவர், ''நான் வீட்டிற்கு வந்தால் தனி கட்டணம் உண்டு. நீங்க எப்படியாவது கொண்டு வாங்க'' என்று சொல்லிவிட்டார். உடனே செடியைத் தூக்கி கார் டிக்கியில் வைத்துக் கொண்டு போய் விட்டேன். அங்கு எவ்வளவு பெரியத் தொட்டி யாக இருந்தாலும் எளிதாகத் தூக்கிவிடலாம். ஏனென் றால் அதில் போடப்படும் மண் மிகவும் இலேசான மூத்தூள் போல் இருக்கும்.





நர்சரியில் வேலை செய்யும் ஒருவர், தாவரவியலில் திறமையான வர். அவரிடம் என்னை அழைத்துக் கொண்டு போனார்கள். அவர் பெயர் ஜாக். ''செடி, உங்கக் காரிலேயே இருக் கட்டும். நர்சரிக்குள் கொண்டு வந்தால் மற்ற செடிகளுக்கும் வியாதி பரவி விடும்'' என்று சொல்லி கையில்

கருவேப்பிலை கன்று!

உறையை மாட்டிக் கொண்டு ஒரு பூதக் கண்ணாடி யையும் எடுத்துக் கொண்டு வந்து என் செடியை ஆராய்ந்தார்.

''செடி மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. ஓர் இலை கூட இல்லை. பூச்சிகளும் நிறைய இருப்ப தனால் இது பிழைப்பது மிகவும் கஷ்டம்'' என்று கூறிவிட்டு, ''இந்தச் செடி உங்களுக்கு மிகவும் தேவைப்பட்டால் ஒரே வழிதான் இருக்கிறது. இருபது நாள் எங்களுடைய நர்சரியில் 'அட்மிட்' பண்ண வேண் டும். அதற்குத் தனியாக பில் போடுவார்கள். ஐம்பதி லிருந்து நூறு டாலர்கள் ஆகும். நன்றாக யோசனை செய்து எனக்கு முடிவு சொல்லுங்க'' என்று சொல்லி விட்டு கை உறைகளைக் கழற்றிக் குப்பையில் போட்டு விட்டு, நர்சரிக்குள் போய் விட்டார்.

நானும் உட்கார்ந்து சற்று நேரம் யோசித்தேன். இவ் வளவு பெரிய செடி, எத்தனை டாலர் போட்டாலும் கிடைக் காது. ஆனது ஆகட்டும் என்று நினைத்துக் கொண்டு ஜாக்கி டம் போய், ''செடியை உங் களிடம் விட்டு விட்டுப் போகி றேன்'' என்று கூறினேன். அவ ரும் ஒரு சீட்டை என்னிடம் கொடுத்து பெயர், வீட்டு விலா சம், ஃபோன் நம்பர் எழுதி, அந்தச் செடியில் கட்டி, அருகே இருக்கும் அறையில் கொண்டு போய் வைக்கச் சொல்லிவிட் டார். அந்த அறையில் அதே கண்டிஷனில் பல செடிகள் இருந்தன!

அயல் நாட்டில்...

அடுத்த நாள் திரும்பவும் நர்சரிக்குப் போனேன். போய் ஜன்னல் வழியாக அந்தச் செடியைப் பார்த்தேன். உடனே ஜாக் வந்து, ''நீங்க அடிக்கடி வந்து செடிகளைப் பார்க்கக் கூடாது. நாங்கள் கூப்பிடும் போதுதான் வரவேண்டும்'' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். அவர்களிட மிருந்து ஃபோன் வரும் வரை நான் அந்தச் செடிக்காகப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன்.

இரண்டு வாரம் கழித்து, என் செடியை எடுத்துக்கொண்டு போகும்படி அவர்களிடமிருந்து தகவல் வந்தது. எனக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. உடனே காரை எடுத்துக் கொண்டு ஓடினேன். அங்கு போய்ப் பார்த்தால் புதுத் தொட்டியில் என்னுடைய செடி முழுவதும் இளம் துளிர் இலையோடு செழிப்புடன் இருக்க, அடடா... என்ன அழகு... ரிப்பன் எல்லாம் கட்டி ஒரு பரிசுப் பொருள் போல் செய்து வைத்திருந்தார்கள். நான் அடைந்த சந்தோஷத்தைச் சொல்லவே முடியாது. அதற்கு 75 டாலர் பில் போட்டார்கள். அதோடு செடிக்கு ஊற்றும் மாத்திரை, டானிக்கும் கொடுத்து அதைப் பாதுகாக்கும் முறையைப் பற்றிய கையேடும் கொடுத்தார்கள். அந்தச் செடியை மற்ற செடிகளோடு வைக்காமல், வேறு ஒரு அறையில் பத்து நாட்கள் வைக்கும்படி ஆலோசனை கொடுத்தார்கள். அதன் பின்னர் அந்தச் செடி 15 வருடம் மரம் போல் வளர்ந்தது.

மங்கையர் மலர் 2007 நவம்பர் இதழின் கட்டுரை ஒன்றில், துருக்கி நாட்டுப் பழமொழி ஒன்றைப் படித்த ஞாபகம்தான் வந்தது. ஆண்டு முழுவதும் பிரார்த்தனையில் ஈடுபடுவதை விட ஒரு செடியை நட்டு வளர்த்து வருவது அதிக பலன்களைத் தரும் என்றது அந்தப் பழமொழி.

- கே. பாக்கியலக்ஷ்மி, மதுரை.

ரோடாங் பாஸ்... சூப்பர் பாஸ்...

சுகந்தா சுப்பிரமணியம் சிம்லா பற்றி எழுதியிருந்ததைப் படித்தேன். இதே மணாலியில் நாங்கள் வியந்து மகிழ்ந்த ஒரு நிகழ்ச்சி.

ரோடாங் பாஸ் செல்லும் போது காரை வழிமறித்த மலைவாசிகள் சிலர், பத்து ரூபாய் வாங்கிக் கொண்டு பெரிய சாக்குப் பை ஒன்றைத் தந்தனர். நாம் எடுத்துச் செல்லும் தண்ணீர் பாட்டில், சிப்ஸ் பாக்கெட்டுகள் போன்ற மக்காத காலியான பொருள்களை அதில் போட்டு எடுத்து வந்து தந்தோம். திருப்பித் தரும்போது பத்து ரூபாயைத் தந்துவிட்டனர். நிறையச் சுற்றுலாப் பயணிகள் வந்து போகும் இடமானாலும் சுத்தமாக இருந்ததன் ரகசியம் தெரிந்தது.

- ஏ.பிருந்தா சுதாகர், பாண்டி.



குட்டீஸ் லூட்டி



சமீபத்தில் குடும்பத்தோடு இராமேஸ்வரம் சென்றிருந்தோம். இராமர் பாலம் கட்ட உபயோகப்படுத்தப்பட்ட பாறாங்கல்லின் மாதிரி ஒன்றை என் பேரனிடம் காண்பித்து, ''ராம், ராம் என்று எழுதிக் கடலில் போட்டதால் அந்தக் கற்கள் கடலில் மூழ்கவில்லை'' என்று கூறினேன். அதை மிகக் கவனத்துடனும், ஆச்சரியத்துடனும் கேட்டுக் கொண்டான்.

திரும்பும் வழியில் என் மகன், காரை பார்க் செய்ய இடம் தேடி அலைந்தபோது, என் பேரன், ''அப்பா, நம் காரை கடலில் பார்க் பண்ணலாம்பா'' என்றான். என் மகன், ''அதெப்படி முடியும்? கார் தண்ணீரில் மூழ்கி விடுமே'' என்றான்.

''அதெல்லாம் மூழ்காதுப்பா! நான் நம்ப கார்லே 'ராம், ராம்' என்று எழுதிடறேன். அப்ப மூழ்காதே!'' என்றான். பேரனின் அறிவுக் கூர்மை தந்த சந்தோஷத்தில் நாங்கள் எல்லோருமே கப்சிப்!

- பி.தேவி, மைலாப்பூர்.

"அதெல்லாம் மூழ்காதுப்பா!"

வயதாகி விட்டதால் எனக்கு யார் துணையும் இன்றி நடப்பது கஷ்டம். என் ஐந்து வயது பேரன் எப்போதாவது, ''பாட்டி நான் கைபிடிச்சு அழைச்சுக்கிட்டுப் போறேன்'' என்பான். ஒருநாள், யார் துணையுமில்லாமல் நடந்து கீழே விழுந்து விட்டேன். உடனே ஓடிவந்த என் பேரன், ''உன்னை என்னால் தூக்க முடியாது. ஓர் இடத்தில் சும்மா உட்காருவதுதானே? சொன்னால் கேட்க மாட்டாய்?'' என்று பெரியவர்கள் சொல்வது போல் கண்டிப்பும் கோபமுமாக முகத்தை வைத்துக் கொண்டு சொன்னதும், வலியை மறந்து சிரித்து விட்டேன்.

- எஸ்.கமலா, ஹைதராபாத்-45.

எனது பேரன் ப்ரணவ்வுக்கு மூன்றரை வயது. அவனது பெரியப்பா (எனது பெரிய மகன்) குடும்பத்தினர் அமெரிக்காவில் வசித்து வருகின்றனர். கம்ப்யூட்டரில் அவர்களது புகைப்படங்களைக் காட்டி, பெரியப்பா, பெரியம்மா, அண்ணன் வைபவ், தங்கை விபா என்று அறிமுகப்படுத்தியுள்ளோம். அவனிடம், ''வைபவ் எங்கு இருக்கிறான்?'' என்றால், ''யு.எஸ்.ஏ.'' என்று பதில் கூறினான். பின்பு, ''விபா எங்கு இருக்கிறாள்?'' என்று கேட்டதற்கு, சட்டென்று ''யு.எஸ்.பி.'' என்றான். எங்களுக்குச் சிரித்து மாளவில்லை.

- உஷா சம்பத், சென்னை-10.



மாதங்களில்



✱ மதுரா கிருஷ்ண ஜென்ம பூமி

'மாதங்களில் நான் மார்கழி' என்றுரைத்த மாதவனாம் கண்ணன். பற்பல ஆலயங்களில் நித்ய வாசம் செய்கின்றான். ஸ்ரீ கிருஷ்ண ஜென்ம பூமியாகிய மதுரா. அவன் ஆடிக்களித்த பிருந்தாவனம்.கோகுலம். கோவர்த்தனம். அரசாட்சி செய்த துவாரகை இவற்றை இந்த மார்கழி மாதத்தில் தரிசித்து. அவன் அருள்பெறுவோமே!



மதுரா, கோகுலம்!

மதுராவில் பகவான் கிருஷ்ணன் பிறந்த சிறைச்சாலை இருந்த இடத்தில் கிருஷ்ண ஜென்ம பூமி என்ற பெயரில் ஆலயம் உள்ளது. இதனைப் பற்றி எழுதாத வடநூல்களே இல்லை எனலாம். வசுதேவர், நட்டநடு நிசியில், குழந்தை கண்ணனைக் கூடையில் வைத்து, ஆதி சேஷன் குடை பிடிக்க, யமுனையைத் தாண்டியது, நந்தகோபரின் இல்லத்தில் விட்டு, அங்கிருந்த குழந்தையை எடுத்து வந்தது, வாலிபனான கண்ணன் கம்சனை வதம் செய்தது என இதன் வரலாறு சொல்லப்படுகின்றது. கோகுலத்தில், சின்னச் சின்ன வீடுகள். கண்ணனின் கால் படாத இடமே இல்லையோ என எண்ணத் தோன்றுகின்றது. இராமரின் தம்பி சத்ருக்னன், இராமரின் ஆணைக்கிணங்க, லவணாசுரனை வதம் செய்தார். பின்னர், யமுனை நதிக்கரையில், மதுநகரத்தை விரிவாக்கி, மதுரா என்று பெயரிட்டு அரசாண்டதாக வரலாறு.

கோபாலர்களை, கொடிய மழையிலிருந்து காப்பாற்ற கோவர்த்தன கிரியையே தூக்கிக் குடையாகப் பிடித்த



அவன் மார்கழி!

கண்ணனின் புகழ் பேசுகிறது கோவர்த்தனம்.

கண்ணனின் பால லீலைகள் நடந்த கோகுலத்தில் நந்தகோபர், யசோதை, பலராமர், தொட்டில் கிருஷ்ணர் ஆகியோர் தரிசனம் தருகின்றனர். எங்கும் இல்லாத படி, பலராமர், தன் மனைவி ரேவதியுடன் தரிசனம் தருவது சிறப்பாகும்.



* ஸ்ரீ துவாரகை

இந்தத் தொட்டில் கிருஷ்ணனை ஆட்டி மகிழ்ந்தால், நமது இல்லத்திலும் கண்ணன் தவழ்வானாம். அதற்குக் கட்டணம் உண்டு. பத்து ரூபாய் கட்டி, கொடிகளும் கட்டச் சொல்கிறார்கள். ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி கோகுலத்தில், நந்தோற்பலம் என்ற பெயரில் விமரிசையாகக் கொண்டாடப்படு கிறது. சென்னையில் உள்ள கௌடில்யா மடத்திலும் ஸ்ரீகிருஷ்ண ஜென்மாஷ்டமி கொண்டாடப்படுகிறது.



* ஸ்ரீ ராதாகிருஷ்ணர்

பிருந்தாவனம்

பிருந்தாவனம் ஆலயம் சென்றால், தென்னகம் போலவே, அழகிய ஸ்ரீரங்க நாதர் ஆலயம் உள்ளது. ஸ்ரீரங்கநாதர், ஆண்டாள், ஸ்ரீஸ்ரீநிவாசப் பெருமாள், ஸ்ரீஇராமானுஜர் என பற்பல சன்னதிகளில், திவ்யமான தெய்வங்களைத் தரிசித்து மகிழலாம். இங்குள்ள வாகன மண்டபத்தில், ஸ்வர்ணமயமான 'பளபள' என்று வாகனங்களைத் தரிசிக்கலாம். இங்குள்ள பெரிய கண்ணாடி அறை, (ஆயினாமஹல் - ஹிந்தியில் ஆயினா என்றால் கண்ணாடி என்று பொருள்) கண்களைக் கவருவதாக உள்ளது.

திருத்துவாரகை

குஜராத் மாநிலத்தில், கபிலா என்ற நதிக்கரையில் அமைந்துள்ளது, ஸ்ரீதுவாரகை. தற்போதுள்ள ஆலயம் சுமார் 1500 ஆண்டுகட்கு முன் கட்டப்பட்டது. 5000 ஆண்டுகளாக, அவ்வப்போது கடலில் மூழ்கி பாதிக்கப்பட்டு, மறுபடியும் பல முறை புதுப்பிக்கப்பட்டது. இங்கு அரசாண்ட கண்ணனை, ஸ்ரீதுவாரகாநாத்ஜி என்றே மக்கள் அழைக்கின்றனர். அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டாலும் கண்ணனையே தங்கள் மன்னனாகக் கொண்டாடுகிற மக்களை இங்கு பார்க்கலாம். கண்ணனின் ஆலயம், மிகப் பெரிய அரண்மனை போல் உள்ளது. கண்ணன், பலராமர், கண்ணனின் அஷ்டராஜ மகிஷிகள், துர்வாசர் என அனைவருக்கும் அற்புதமான சன்னதிகள் உள்ளன.

விருந்தும் மருந்தும்

ஸ்ரீதுவாரகா ஆலயத்தில், ஒரு தினத்தில் கண்ணனுக்கு பதினேழு முறை உணவு

* பிருந்தாவனம்



கொடுத்து, மணிக்கு ஒருமுறை, ஆடையை மாற்றும் அதிசய வழக்கம், கடைப்பிடிக் கப்படுகிறது.

அதிகாலையில், திருப்பள்ளியெழுச் சியை உடாபன் என அழைக்கின்றனர். அப்போது, கண்ணனுக்கு, தங்கப் பல் குச்சியால் பல் விளக்கி, லட்டும் ஜிலேபி யும் கொடுக்கின்றார்கள். ஏழரை மணிக் குள், தீர்த்தம், பிரசாதம் படைக்கப்படும். மீண்டும் எட்டு மணிக்கு, சர்க்கரை, பால், தயிர், பின்பு, அப்பம், பாயசம், அதன் பிறகு பழ வகைகள் எனக் கண்ணனுக்கு உணவு படைத்தபடி உள்ளனர்.

உண்ட உணவு செரிப்பதற்காக, குழந்தை கண்ணனுக்கு, ஜீரண லேகியம் கொடுக்கிறார்கள். பிறகு கண்ணன் ஸயனம் கொள்கின்றான். இதற்கு 'போக்' என்று சொல்கின்றனர். பக்தமீரா, கண்ணனுடன் கலந்து ஐக்கியமானது, இங்கேதான். ருக்மணி தேவிக்கு ஊருக்கு வெளியே தனி

✱ கோவர்த்தனம்



கோயில் உண்டு. முக்தி தரும் ஏழு தலங் களுள் துவாரகையும் ஒன்று. இது மோட் சத்துக்கு வாயில் என பொருள்படும்.

கண்ணனின் காலில் கொப்புளம்

ஒருநாள், துவாரகை வந்த கண்ணனின் காதலி ராதைக்கு, ருக்மணிதேவி, சுடச்சுட பால் தருகின்றாள். ராதையும் உடனே, சூடாகப் பருகி விடுகின்றாள். இதனால், ராதையின் ஹ்ருதய கமல வாசனான கண்ணனின் திருவடிகளில், கொப்புளங்கள் தோன்ற, ருக்மணி தேவி பதறி விடுகின் றாள். ராதாவின் பக்திதான் என்னே! தேவேந்திர மரமான பாரிஜாத மரத்தை இந்தத் துவாரகையில்தான் கண்ணன் தோன்றச் செய்தான். பல ஆழ்வார்களால் மங்களா ஸாசனம் செய்யப்பட்ட இந்தப் பஞ்ச துவாரகையும், கண்ணனும் என்றும் தரிசிக்கத்தக்க பெருமை உடையவர்கள்.

கிருஷ்ண பக்தி

'ஸ்தாயி பாவம்' எனப்படும் கிருஷ்ண பக்தியில் ஐந்து நிலைகள் உள்ளன. 1. சாந்தம் - உலகப் பற்றைத் துறந்து, கிருஷ் ணனிடம் பக்தி கொள்வது, கனகர், சனந்தனர்கள் இப்படி பக்தி செய்தனர். 2. தாஸ்யம் - அடிமை போல் பணிவிடை செய்வது சித்ரகர், பசிரகரி இப்படி தாஸ்ய பக்தி கொண்டிருந்தனர். 3. சாக்யம் - நண்பனாக நினைத்து பக்தி செய்வது அர்ஜுனன், குசேலர், பீமன், சகாதேவன் போன்றவர்கள், 4. வாத்ஸல்யம் - கிருஷ்ணனைக் குழந் தையாக எண்ணி பக்தி செய்வது. யசோதையின் தாய்ப்பாசம்தான் என்னே! 5. மாதுர்யம் - காதலி போல் பிரேமை கொள்வது. ஆண்டாள், ராதா, மீரா, கோபிகைள் இப்படி பக்தி செய்தனர்.

பகவான் கண்ணனைப் பக்தி, தூய அன்பு என்ற காற்றினால் கட்டி விடலாம். மார்கழி மட்டும் இன்றி என்றும் கண்ணனை வழிபடுவோம்.

- வஸந்தா வேணுகோபால், சென்னை-24

வாய்மையே வெல்லும்!

தத்துவம்



'ஸத்யமேவ ஜயதே' என்ற வாக்கியத்தைக் கேட்கும் போதெல்லாம், இந்திய சுதந்திரத்திற்காக ரவீந்திரநாத் தாகூரோ, மகாத்மா காந்தியோ எழுதிய ஒரு பாடல் என்றுதான் நம்மில் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் 'ஸத்யமேவஜயதே' என்ற சொல் முண்டகோபநிஷத் 3-1-6 என்ற உபநிஷத்தில் முதல் வரியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் 'வாய்மையே வெல்லும்' என்பதாகும்.

ஸத்யமேவ ஜயதே நான்ருதம்
ஸத்யேன பந்தா விததோ தேவயான:
யேனாக்ரமந்தி ருஷயோ ஹ்யாப்த கலமா:
யத்ரதத் ஸத்யஸ்ய பரமம் நிதானம்

வாய்மையே வெல்லும். பொய்மையல்ல. சத்தியத்தில்தான் தேவையான மார்க்கம் பரவியிருக்கிறது. ஆப்தகாமராகிய ரிஷிகள் இந்த மார்க்கத்திலேயே போகிறார்கள். இந்த மார்க்கத்திலேயே பரம புருஷார்த்தம் அடங்கியிருக்கிறது.

உபநிஷத்தில், சத்திய வசனத்தின் மகிமையை மிகவும் கொண்டாடியிருக்கிறது. சத்தியமே உண்மையான தபஸ், சத்தியமே ரிஷி முனிவர்களுடைய சம்பத், சந்நியாசிகளுக்கும் சத்தியமே சம்பத். அத்யாத்ம சாதகருக்கு சத்தியத்தை விட பெரிய சாதனையில்லை.

முண்டகோபநிஷத் பரப்பிரம்மத்தையும் சத்தியம் என்றே சொல்கிறது. சத்திய தத்துவத்தை அறிவதற்கு சத்தியமே சாதனமும் ஆகி இருக்கிறது. சத்தியத்திற்குத்தான் ஜெயம். சத்தியம்தான் தெய்வம். சத்தியத்திலிருந்துதான் ப்ரேயஸ், ச்ரேயஸ், மற்றும் முக்தி. ஆப்தகாமரும் ஞானிகளும் ஆகிய ரிஷிகளுடைய சம்பத்தும் சத்தியமே. அவர்களுக்கே ஆத்மஞானமும் முக்தியும்கிடைக்கும்.

வாய்மையே வெல்லட்டும்!

- மாயா கிருஷ்ணமூர்த்தி, கோயம்புத்தூர்.





ஆப்பம் செய்யும்போது தேங்காய்ப் பால் எடுத்து வைக்கிறோம். தேங்காய்ப் பால் கொழுப்புமிக்கது. காய்ச்சி ஆறவைத்த பாலை, தேங்காய்ப் பாலில் சம அளவு கலந்தால் ருசியும் மாறாது. உடம்புக்கும் கெடுதல் இல்லை.

- சுபஸ்ரீ வாசுதேவன், தஞ்சை.

பசுவுக்கு (கோமாதா) இணையாக எந்த தெய்வமும் உலகத்தில் இல்லை



காஞ்சி மஹா பெரியவாள் துணை

பசு மடம்

வயதான பசுக்களை பராமரிக்கும் இல்லம்
ஆதரவற்ற பசுக்களை பாதுகாக்கும் இல்லம்
ஊனமுற்ற, நோயுற்ற பசுக்களை பேணும் இல்லம்

பெருமாளகரம், திருவேற்காடு (P.O.), சென்னை-77
TEL: 044 - 3299 9888 Fax: 044 - 4206 6525



வயதான பசுக்கள் வாழ நீங்கள் உதவுங்கள்...

ஆதரவற்ற நாங்களும் மாட்டு பொங்கலை கொண்டாட உதவி செய்யுங்கள்




பசு மடத்தில் உள்ள வயதான பசுக்கள்

பொங்கல் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்! அனைத்து தெய்வங்களையும் தன்னுள் அடக்கிய கோமாதாவான பசுவை மகாலட்சுமியாகவே கருதி வழிபடுவது இந்து மதத்தின் சிறப்பு. நடமாடும் திருமகளான பசுவிற்கு வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு பூஜை செய்து வழிபடுவது வழக்கம். கோயில்கள் மற்றும் வீடுகளில் நடக்கும் விழாக்களில் பசுவிற்கு முதலில் பூஜை செய்த பின்னரே மற்ற நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன. பசுவின் பாலும் மற்றும் அதன் பொருட்களும் நோயற்ற வாழ்க்கை வாழ உதவுகிறது. தினமும் காலையில் வீட்டு வாசலில் பசுவின் சாணத்தை தெளித்து அழகாக கோலமிடுவதால் கிருமிகள் உள்ளே வராமல் தடுக்கப்படுகிறது. பசுவின் சாணத்தில் இருந்து கிடைக்கும் சாம்பலைத் தான் புனிதமான விபூதியாக அணிகிறோம். விபூதி பூசுவதால் தீய சக்திகள் நம்மைவிட்டு நீங்குகின்றன. பசுவின் கோமியம் ஜலதோஷம், தலைவலி போன்ற வியாதிகளையும் போக்கவல்லது. இப்படி தனக்கென வாழாத பசுக்களை வயதான காலத்தில் பராமரிக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும். வயதான பசுக்களால் இனி பலனில்லை என்றவுடன் சிறிதும் இரக்கமின்றி படுகொலை செய்ய கசாப்பு கடைகளுக்கு அனுப்புவது பெரிதும் கொடுமை. பசுக்கள் இவ்வாறு கொல்லப்படுவதை தடுக்கவும் வயதான பசுக்களை பாதுகாக்கவும், வீட்டுக்கு ஒரு பசு வளர்க்க வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சட்ட விரோதமாக இறைச்சிக்காக தமிழகத்தில் இருந்து வெளி மாநிலங்களுக்கு பசுவை அனுப்புவதை தடுக்கவும் பசுமடம் என்ற காப்பகத்தை ஏற்படுத்தி, மகா பெரியவாள ஆசியோடு 12 ஆண்டுகளாக 100 பசுக்களுக்கு மேல் பராமரித்து வருகிறோம். இவைகள் இயற்கையாக மரணம் அடையும் வரை இங்கு பராமரிக்கப்படுகிறது. கிராமங்கள் தோறும் சிறப்பு கால்நடை பாதுகாப்பு முகாம் அமைத்து பசுக்களுக்கு சிகிச்சை அளிக்கிறோம். இந்த காப்பகத்தின் மூலம் கசாப்புக் கடைகளுக்கு அனுப்பும் முன் வயதான பசுக்களை வாங்கியும், கோயில்களில் ஏலம் விடப்படும் பசுக்களை பெற்றும் இறுதி காலம் வரை அவை நிம்மதியாக, சுகமாக வாழ வைப்பதே பசுமடத்தின் முக்கிய நோக்கமாகும். பசுவதை தடுப்பு திட்டத்தை வலியுறுத்தி, மாவட்டம் தோறும் பசு பாதுகாப்பகம் அமைத்து உதவுகிறோம். அன்னைக்கு ஈடாக அமுது பொழியும் பசுக்களை பாதுகாக்க மாட்டு பொங்கல், புது வருடம் அல்லது விசேஷ தினங்களில் தங்களால் முடிந்த நன்கொடைகளை பராமரிப்பு செலவிற்கு அனுப்பி இப்புனிதப் பணியில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுகிறோம். இந்த பசுமடத்தை பார்வையிட்ட பின்னும் நீங்கள் உதவி செய்யலாம்.

பசுமடத்தில் உள்ள வயது முதிர்ந்த, பால் வற்றிய, ஊனமுற்ற, நோயுற்ற பசுக்களின் ஆகாரத்திற்கு உங்கள் அன்புக் காணிக்கையை கனிவுடன் மனமுவந்து தாரீர்!

பசு மடத்தில் உள்ள வயதான நோயுற்ற பசுக்களில் ஒரு பசுவை பராமரிக்க



ஒரு வாரத்திற்கு	ரூ.105	அனுப்புவோருக்கு கோமாதா வண்ணப்படம் அனுப்பிவைக்கப்படும்
ஒரு மாதத்திற்கு	ரூ.465	அனுப்புவோருக்கு வெள்ளியிலான பெருமாள் டாலர் அனுப்பிவைக்கப்படும்
மூன்று மாதத்திற்கு	ரூ.1350	அனுப்புவோருக்கு வெள்ளியிலான ஸ்ரீராமர் பாதம் 2 அனுப்பி வைக்கப்படும்
ஆறு மாதத்திற்கு	ரூ.2700	அனுப்புவோருக்கு வெள்ளியிலான தவழும் கண்ணன் அனுப்பி வைக்கப்படும்
ஒரு வருடத்திற்கு	ரூ.5400	அனுப்புவோருக்கு பெரிய வலம்புரி சங்கு ஒன்று அனுப்பி வைக்கப்படும்
100 பசுக்களுக்கு ஒரு நாள்	ரூ.1500	அனுப்புவோருக்கு வெள்ளியிலான கோமாதா விக்ரகம் அனுப்பிவைக்கப்படும்

கோதானத்திற்கு மிஞ்சி ஒரு புண்ணியமும் இல்லை. பரிகாரத்துக்கு அதுவே பெரிய மருந்து

பொங்கல், புத்தாண்டு, முக்கிய நாட்களில் கோதானம் செய்தால் பித்ரு தோஷம், நாகதோஷம், செவ்வாய் தோஷம் நீங்கும். புத்ர பாக்கியம், தடைபட்ட திருமணம் கைகூடும். குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். கோதானம் செய்ய ரூ.9,000/- அனுப்புபவர்களுக்கு பித்தளையிலான பெரிய கோமாதா விக்ரஹமும் வெள்ளியிலான ஐஸ்வர்ய பெருமாள் விளக்கும் அனுப்பி வைக்கப்படும்.

108 பசு மற்றும் கன்றுகளுக்கு கோபூஜை செய்தால் பூமியை வலம் வந்து வணங்கிய பலன் கிட்டும்

பசுவை பாதுகாக்க மேற்கண்ட நன்கொடையை அனுப்பும் அன்பர்களுக்கு தாங்கள் விரும்பும் தேதியில் 108 பசுக்களுக்கு கோபூஜை செய்து, அகத்தி கீரை, அருகம் புல், கருப்பு எள் உருண்டை, வெல்லம், வெண் பொங்கல் போன்ற உணவை அளித்து, பிரசாதத்துடன் மேற்கண்ட பூஜிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் கோமாதா வண்ணப்படம் அனுப்பி வைக்கப்படும். பசுவின் ஆகாரத்திற்கு ரூபாய் அனுப்பும்போது யார் பெயருக்கு கோபூஜை செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர் திதி மற்றும் கோத்திரம் போன்ற விவரங்களையும் அவசியம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் நன்கொடையை Cheque / D.D/ M.Oஆக Shri Ghosala Seva Trust, Chennai என்ற பெயருக்கு மேற்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம். நன்கொடைகளுக்கு 80ஜி பிரிவின்படி வரி விலக்கு உண்டு.

SAVE THE HOLY COW FROM THE SLAUGHTER HOUSES

சன்(ண்)டே

மனைவி: இன்னிக்கு ஞாயிற்றுக் கிழமை!

கணவன்: ஓஹோ அப்படியா! திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம் எல்லாம் சொல்லு. கிழமையோட நிறுத்திடாதே.

மனைவி: இந்தக் கிண்டலுக்கு ஒண்ணும் குறைச்சலில்லை. இன்னிக்கு உங்களுக்கு ஆஃபீஸ் லீவு. அதனால என்ன சமைக்கிறதுன்னு சொல்லுங்க!

கணவன்: உம்... கருவேப்பிலை போட்டு மிளகுக் குழம்பு, வெங்காயத்தைக் கொஞ்சம் நெய் உப்பு போட்டு, பொன் கலரில் வதக்கிடு. இது சரியான காம்பினேஷன்.

மனைவி: சிவ சிவா! இன்னிக்கு ஏகாதசி; வெங்காயம் கூடாது. வேறே ஏதாவது சொல்லுங்க.

கணவன்: அப்போ, வத்தக் குழம்பு. உருளைக்கிழங்கோ, சேப்பங்கிழங்கோ ரோஸ்ட் செய்திடு.


மனைவி: அதென்ன, வத்தக்குழம்பிலே நீங்களும் உங்க அம்மாவும் உசிரையே வெச்சுக்கிட்டிருக்கீங்க. புளி இரத்தத்தை சுண்ட வெச்சிடும். கிழங்கு வாயு. இது வேண்டாம்.

கணவன்: நீ வாரத்திலே நாலு நாள் சாம்பார் வைக்கற மாதிரிதான் இதுவும். சரி, விடு! எல்லா கறிகாயும் போட்டு கூட்டு பண்ணு, திருவாதிரைக்குப் பண்ணுவாங்களே... அந்த மாதிரி....

மனைவி: வீட்டை கூட்றதுக்கே முடியலே. அதுலே இருக்கிற ரெண்டு கறிகாயை வெச்சுக்கிட்டு என்னத்தைக் கூட்டி... கழிக்கறது?

கணவன்: பருப்பு உசிலி, மோர்க் குழம்பு?

மனைவி: நேத்து என்ன நடந்ததுன்னு மறந்துட்டீங்களா? உங்க பால்ய சிநேகிதர்கள், அதான் ஸ்கூல் ஃப்ரெண்ட்ஸ் நாலு பேர் நான்கு மணி நேரம் மலரும் நினைவு




நையாண்டி

சமையல்!

களில் மூழ்கியிருந்தீங்களே, அப்போ மூணு தடவை காப்பி போட்டேனே. உறை குத்தக்கூட பால் இல்லை. இதிலே மோர்க் குழம்பா! முடியவே முடியாது.

கணவன்: சரி, குழம்பும் வேண்டாம், கூட்டும் வேண்டாம். தேங்காய்த் துவையல், ஜீரா ரஸம். இது எப்படி!

மனைவி: வாரத்திலே ஆறு நாள் உங்களுக்கு ஆஃபீஸ் கேண்டினில்தான் சாப்பாடு. அதிலே எல்லாம் முழுக்க முழுக்க தேங்காய் அரைச்சு பண்ணினதுதான். பாலக்காட்டு குக் வேறே.



கணவன்: பேசாம, வெண் பொங்கல், தக்காளி கொஜ்ஜு பண்ணிடு.

மனைவி: அப்பப்பா! இந்த வெண் பொங்கலை நினைச்சாலே சிமெண்ட் கான்க்ரீட் ஞாபகம் தான் வருது. போன வாரம் உங்க சேர்மன் வீட்டுக்குப் போனோமே, அவர் மனைவி, வெண் பொங்கல்னு ஒரு வஸ்துவைப் போட்டாளே, அந்தப் பொங்கலையும் வளைச்சுக்கட்டிச் சாப்பிட்டீங்களே... நான் சமைக்கிறதெல்லாம் நல்லாயிருக்குன்னு ஒரு வார்த்தை வராதே!

கணவன்: ஏதோ ஆசையாகப் போட்டாளேன்னு நல்லாயிருக்குன்னு சொல்லிட்டேன். உனக்கு அது பொறுக்கலை.

மனைவி: நீங்க மட்டும் சொன்னால் பரவாயில்லையே, என்னையும் நல்லாயிருக்குன்னு பொய் சொல்ல வெச்சுட்டேளே! நிச்சயம் நான் காசிக்குப் போனால் இந்த வெண்பொங்கலைத்தான் விடணும்னு இருக்கேன்.


கணவன்: பேசாம நீ சமைக்கிறதையே விட்டுட்டா தேவலை!

மனைவி: இன்னிக்கு என்ன சமைக்கிறதுன்னு அரை மணி நேரமா கேட்டுக்கிட்டு இருக்கேன். இதைத் தவிர சண்டை, வாக்குவாதம் எல்லாம் நடந்தாச்சு. இப்பவாவது சொல்லுங்கோ.

கணவன்: நீ ஒண்ணும் பண்ண வேண்டாம். வா, ஹோட்டலுக்குப் போகலாம்.

மனைவி: அட, இதை முதலிலேயே சொல்லக்கூடாதா? இதைச் சொல்ல உங்களுக்கு அரைமணி நேரமா வேணும்?

- சுதா ஹரன், பெங்களூரு



சோயா மைதா போளி

தேவையான பொருள்கள்:
வெள்ளை நிற சோயா பீன்ஸ்-100 கிராம்,
சோயா மாவு - 150 கிராம்,
மைதா, வெண்ணெய் - 100 கிராம்,
காய்ச்சிய பால் - 1/4 லிட்டர்,
தேங்காய்த் துருவல் - 1 கப்,
நெய் - 100 கிராம், வெல்லம் - 350 கிராம்,
பொடி உப்பு - 1 சிட்டிகை,
ஏலக்காய் - 10.



செய்முறை: சோயா பீன்ஸை ஊறவைத்துக் கழுவி, வேக வைத்து நீரை வடித்து விடவும். ஆறியதும், மிக்ஸியில் அரைத்துக் கொள்ளவும். வாணலியில் ஒரு டீஸ்பூன் நெய் விட்டு தேங்காய்த் துருவலை வறுத்துக் கொள்ளவும்.

வாயகன்ற பாத்திரத்தில் வெல்லத்தைப் போட்டு, சிறிது நீர் ஊற்றிக் கரைக்கவும். பிறகு வடிகட்டி பாகு காய்ச்சவும். ஏலக்காய்த் தூள் சேர்க்கவும். அரைத்த சோயா, தேங்காய்த் துருவலைப் பாகில் கொட்டிக் கிளறி இறக்கவும். சற்று ஆறியதும் சிறு சிறு உருண்டைகளாக்கிக் கொள்ளவும்.

வேறொரு பாத்திரத்தில் பால், வெண்ணெய், உப்பு, சிறிது தண்ணீர் விட்டு மைதா மாவு, சோயா மாவு கலந்து பூரிக்கு மாவு பிசைவது போல் பிசைந்துக் கொள்ளவும். சப்பாத்தி போல் இட்டு, ஒரு சப்பாத்தி மேல் சோயா கலவையை வைத்துப் பரத்தி, இன்னொரு சப்பாத்தியால் மூடவும்.

குக்கரி க்வீன் போட்டிக்கு வந்து குவிந்த சமையல் குறிப்புகளைப் பொறுமையாக அலசி, சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்துத் தந்த என்.ஆர். சரஸ்வதிக்கு நன்றி!

தோசைக்கல்லில் நெய் விட்டுப் போளியைப் போடவும். சுற்றிலும் நெய்விட்டு, இருபுறமும் சிவக்க வெந்ததும் எடுக்கவும். சோயா மைதா போளி தயார்.

- திராவிடமணி மேகநாதன்,
திருபுவனம்.

இரண்டையும் கலந்து நன்கு குழைத்து, சிறிது சிறிதாக பாலையும் சேர்க்கவும்.

ஆப்பிளைத் தோல் சீவி, சின்னத் துண்டுகளாக நறுக்கி மிக்ஸியில் போட்டு மசித்துக் கொள்ளவும். குழைத்த வெண்ணெய், சர்க்கரையுடன் ஆப்பிள் கூழைச் சேர்க்கவும். பின் சிறிது சிறி

கண்டிப்பாகப் பயன்படுத்த வேண்டிய பொருள்கள் : வெண்ணெய்+மைதா

குக்கரி க்வீன்!

மிக்ஸ் அண்ட் மேட்ச் சமையல் போட்டி முடிவுகள்!

ரூ.250/- பரிசு பெறும் ரெஸிபிகள்!

ஆப்பிள் ஸ்பாஞ்ச் கேக்

தேவையான பொருள்கள்:

மைதா - 2 கப்,
வெண்ணெய் - ½ கப்,
சர்க்கரை, கெட்டிப் பால் - 1 கப்,
ஆப்பிள் -1 ,
பேகிங் பவுடர் - 2 டீஸ்பூன்,
ஆப்ப சோடா - ½ டீஸ்பூன்,
பாதாம் எசென்ஸ் - சிறிது,
டூட்டி ஃப்ரூட்டி பழத் துண்டுகள் - சிறிது.

செய்முறை :

மைதாவுடன் பேகிங் பவுடர், ஆப்ப சோடா கலந்து நன்றாகச் சலித்துக் கொள்ளவும். ஒரு கிண்ணத்தில் வெண்ணெய், சர்க்கரை

தாக மாவைச் சேர்த்துக் கிளறவும். எல்லா மாவையும் சேர்த்ததும் ஒரு சிட்டிகை உப்பு சேர்த்துக் கிளறவும்.

பாதாம் எஸென்ஸ் ஐந்து அல்லது ஆறு துளிகள் சேர்த்து நிதானமாகக் கிளறவும். இப்போது பஜ்ஜி மாவை விட ஒரு திக்கான பதத்தில் இருக்கும்.



இதை வெண்ணெய் தடவிய ஓவன் பேக் கிண்ணத்திலோ, ட்ரேயிலோ பரவலாக உள்ளடங்கப் போடவும். மேலே டூட்டி ஃப்ரூட்டி பழங்களைத் தூவி, ஓவனில் வைத்து 45 நிமிடம் பேக் செய்யவும். மேலே சற்று ப்ரவுன் நிறம் வந்தவுடன் எடுத்து விடலாம். சாஃப்ட்டான சுவையான ஸ்பாஞ்ச் போன்ற ஆப்பிள் கேக் தயார்!

- கு.மாலதி குசேலன், நெசப்பாக்கம்.

ஈஸி பட்டர் 'நான்' (Naan)

தேவையான பொருள்கள்:

பால் - 100 மில்லி,
வெண்ணெய் - 100 கிராம்,
மைதா - 500 கிராம்,
குலாப்ஜாமூன் மிக்ஸ்-5 டேபிள் ஸ்பூன்,
(நூறு கிராம் மைதாவுக்கு 1 டேபிள் ஸ்பூன் ஜாமூன் மிக்ஸ் தேவைப்படும். நூறு கிராம் மைதாவில் 2 பட்டர் நான் செய்யலாம்),
உப்பு- தேவையான அளவு.

செய்முறை: நல்ல அகலமானத் தாம்பாளத்தில் மைதா மாவு, குலாப்ஜாமூன் மிக்ஸ் இரண்டையும் நன்றாகக் கலந்து, நடுவில் குழித்துக் கொள்ளவும். 25 கிராம் வெண்ணெய், தேவையான உப்பு போட்டு, மிதமான சூட்டில் பாலை, கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றிக் கலக்கவும். தேவையான அளவு தண்ணீர் சேர்த்து, சப்பாத்தி மாவு பதத்தில் பிசைந்து அரை மணி முதல் ஒரு மணி நேரம் வரை ஊறவிடவும்.

ஊறிய மாவை பத்து சம உருண்டைகளாகப் பிரித்து 'நான்' வடிவில் தேய்க்கவும். சூடான தோசைக்கல்லில் மீதமுள்ள வெண்ணெயைச் சேர்த்து, 'நானை' வைத்துச் சுடவும். காரட் துருவல், மல்லித்தழை தூவி சூடாகப் பரிமாறவும். அட்டகாசமான சுவையில் ஈஸி பட்டர் நான் ரெடி!

சப்ஜி, குருமாவுடன் சுவைக்கலாம். வெங்காயச் சட்னி (அ) ஜீரணத் துவையல் சேர்த்துச் சாப்பிட்டாலும் சுவையாக இருக்கும்.

சின்ன வெங்காயச் சட்னி: நூறு கிராம் சின்ன வெங்காயம், நான்கு சிவப்பு மிளகாய், உப்பு, புளி சேர்த்து, வதக்கி மிக்ஸியில் அரைத்து கடுகு, பெருங்காயம் சேர்த்துத் தாளிக்கவும்.


ஜீரணத் துவையல்: மல்லித் தழை, புதினாத் தழை, பூண்டு பல் 2 கொத்து கறிவேப்பிலை, 1 துண்டு இஞ்சி, 1 டீஸ்பூன் பொட்டுக்கடலை, 1 மூடி இளம் தேங்காய்ச் சேர்த்துப் பச்சையாக அரைத்து கடுகு சேர்த்துத் தாளிக்கவும்.

- ஜே.பத்மா, திருச்சி.

வெஜிடெபிள் பை (Pie)

தேவையான பொருள்கள்:

மைதா - 2 கப்,
வெண்ணெய் - 100 கிராம்,
உப்பு - தேவைக்கு,



ஃபில்லிங் செய்வதற்கு:

நறுக்கிய காய்கறிகள் (உருளைக் கிழங்கு, பட்டாணி, பீன்ஸ், கேரட், காலிஃப்ளவர், கீரை) - 2 கப்,

வெங்காயம் - 2, தக்காளி - 1, பச்சை மிளகாய் - 2, இஞ்சி விழுது, மிளகாய்த் தூள் - ½ டீஸ்பூன், கரம் மசாலா, க்ரீம், கார்ன்ஃப்ளவர் - தலா 1 டீஸ்பூன், உப்பு - தேவையான அளவு.

செய்முறை:

மைதாவை, உப்பு சேர்த்து நன்றாகச் சலித்துக் கொள்ளவும். பிறகு அத்துடன் வெண்ணெயைச் சேர்த்து நன்றா கக் கலக்கவும். அதில் கொஞ்சம் கொஞ்ச மாகக் தண்ணீரைச் சேர்த்து மெதுவாகப் பிசைந்து, ஒரு ப்ளாஸ்டிக் பையில் போட்டு பதினைந்து நிமிடம் ஃப்ரிஜ்ஜில் வைக்க வும்.

மைதா மாவை எடுத்து 4'' தடியாக சப்பாத்தி செய்யவும். பிறகு, முள்கரண்டி யால் சப்பாத்தியில் சிறிய துளைகள் இட வும். அதை கிரீஸ் தட்டில் வைத்து ப்ரீஹீட் ஓவனில் பன்னிரண்டு நிமிடங்கள் பேக் செய்து தனியாக எடுத்து வைக்கவும்.

நறுக்கிய காய்கறிகள், கீரை, பட்டாணி போன்ற வற்றை பதமாக வேக வைக்கவும். வாணலியில் எண்ணெய் வைத்து வேக வைத்த காய்கறிகளைப் போட்டு இரண்டு நிமிடம் வதக்கவும். அதனுடன் எஞ்சியிருக் கும் இஞ்சி, வெங்காயம், தக்காளி, மசா லாப் பொருள்களைப் போட்டு தண்ணீர் வற்றும் வரை வதக்கவும். பிறகு கார்ன்ஃப்ளவரை தூவி இறக்கவும். பிறகு இந்த ஃபில்லிங்கை சப்பாத்தி (vegetable pie)யில் பரவலாக வைத்து க்ரீமையும் சேர்த்து மீண்டும் ப்ரீஹீட் ஓவனில் எட்டு நிமிடங்கள் பேக் செய்து, ஆறியபின் துண்டு போட்டுப் பரிமாறவும்.

- ராதா கிருஷ்ணமூர்த்தி,
மேற்கு மாம்பலம்.



இனிப்பு முறுக்கு

தேவையான பொருள்கள்:

மைதா - 250 கிராம்,
வெண்ணெய் - 200 கிராம்,
சமையல் சோடா - 1/2 டீஸ்பூன்,
அரிசி மாவு - 50 கிராம்,
வெள்ளை எள் - 50கிராம்,
பொடித்த சர்க்கரை - 300 கிராம்,
எண்ணெய், உப்பு - தேவைக்கேற்ப,

செய்முறை:

மைதாவை சலித்து, இலேசாக வறுத்துக் கொள்ளவும். பிறகு, ஒரு வெள்ளைத் துணி யில் மைதாவைக் கட்டி ஆவியில் வேக வைக்கவும். அகலமான பாத்திரத்தில் மைதாவை உதிர்த்து, வெண்ணெய், அரிசி மாவு சேர்க்கவும். உப்பு, வெள்ளை எள், சமையல் சோடா போட்டு, நன்றாகக் கலந்து முறுக்கு மாவு பதத்துக்குப் பிசையவும்.


கடைசியாக பொடித்த சர்க்கரையைச் சிறிது சிறிதாக மாவுடன் சேர்க்கவும். வாண லியில் எண்ணெய் விட்டு, காய்ந்ததும் மித மான தீயில் வைத்து முறுக்கு பிழிந்தெடுக் கவும். முறுக்கு நல்ல வெள்ளையாக 'மொறு மொறு' என்று இனிப்பாக இருக் கும். தேவையெனில் எண்ணெயில், வெண்ணெயை உருக்கிப் போட்டாலும், முறுக்கு நல்ல வாசமாக இருக்கும்.


- ஏ.கீதா ஆறுமுகம், தூத்துக்குடி.



தேவையான பொருள்கள்

நைலான் லேஸ் - 2 மீட்டர், கோல்டு கலர் ரிப்பன் - ½ மீட்டர், ஸ்பான்ஜ் - ஒரு சிறு துண்டு, கம்பி - தேவையான அளவு. போலன்ஸ், ஃப்ளோரல் டேப், ஊசி, நூல், க்ளூ, செயற்கை இலை - தேவையான அளவு.





நல்லாயிருக்கே நைலான்

செய்முறை:

✸ கம்பியின் ஒரு முனையை இலேசாக வளைக்கவும். முனைப் பகுதியில் ஸ்பான்ஜை கட் செய்து வைத்து நூலால் இறுக்கிக் கட்டவும். அதன் மேல் கோல்டு நிற ரிப்பனைச் சுற்றவும். பிறகு போலன்ஸ் வைத்து, பூ கட்டுவது போல் கட்டினால் அழகான பூ மொட்டு தயார்!

✸ நைலான் லேஸில் 1/4 மீட்டர் அளவு எடுத்து, அதன் ஓரத்தில் ஊசி நூல் கொண்டு ஒட்டுத் தையல் போட்டுச் சுருக்கி அதன் ஓரம் முழுவதும் தைக்கவும். இப்போது நைலான் லேஸ் பூ இதழ் போல அழகாக விரிந்திருக்கும். இதே போல் தேவையான அளவு பூ இதழ்களை செய்து வைத்துக் கொள்ளவும்.

✸ ஒவ்வொரு பூ இதழையும் போலன்ஸ் வைத்துக் கட்டிய







லேஸ் பூ!

கம்பியில் நுழைத்து க்ளூ தடவி மேலும், கீழுமாக வடிவமாக ஒட்ட வேண்டும்.

* கம்பியில் எஞ்சியிருக்கும் பகுதியை ஃப்ளோரல் டேப் கொண்டு இறுகச் சுற்றவும். இறுதியாக செயற்கை இலையை பூ இதழ்களின் அடியில் வைத்துச் செருகவும். அல்லது க்ளூ தடவி ஒட்டவும். இப்போது பூஞ்ஜாடியில் வைக்க அழகான லேஸ் பூங்கொத்து தயார்!

* பிறந்த நாள், திருமண நாள், புதுமனை புகுவிழா எல்லாவற்றுக்கும் இந்த வாடாத பூக்களைப் பரிசாகத் தரலாம்.

- செ. கலைவாணி,
சென்னை-16.

சுவடுகள்!

• சாருமதி பாஸ்கரன் •



பேருந்தின் ஜன்னல் ஓர இருக்கையில் உட்கார்ந்திருந்த மகாதேவனின் மனம் முழுவதும் சந்தோஷத்தில் மிதந்து கொண்டிருந்தது.

இருக்காதா பின்னே! பதினெட்டு வருடங்களுக்குப் பின் அவரது சொந்தக் கிராமத்துக்கு அல்லவா போய்க் கொண்டிருக்கிறார்?

மகாதேவன் பிறந்து வளர்ந்ததெல்லாம் இந்தக் கிராமத்தில்தான். அவருடைய உயிர் நண்பர்கள் நாணா, நட்டு, பஞ்சு மூவரும் முதல் வகுப்பிலிருந்து பள்ளி இறுதி வரை, இவருடன் ஒன்றாகவே படித்தார்கள்.

சேற்று வயலில் கால் புதைய நடந்ததும், கடலைக்காயை வேரோடு பறித்துக் கழுவித் தின்றதும், மார்கழி மாதத்தில் கோலம் போடும் பெண்களைப் பார்க்க சைக்கிளில் சுற்றி வந்ததும் நினைவில் ஆடிற்று.

அதுவும் அந்தப் பூரணி! அவர் வீட்டுக்

குப் பக்கத்து வீட்டுப் பெண். அவளுக்காக இவர், கூரை மீதேறி பரங்கிப் பூக்களைப் பறித்துக் கொடுப்பார். நண்பர்களின் கேலி பிய்த்துக் கொண்டு போகும். அந்தப் பூரணி இப்போது எப்படியிருப்பாள்? நண்பர்களி

வேலை கிடைத்தவுடன் வேறுவழியின்றி மகனுடன் தங்க நேர்ந்தது. உடல்தான் அங்கே இருந்தது. இந்தப் பதினெட்டு வருடங்களாக மனம் இங்கேதான் சுற்றிக் கொண்டிருக்கிறது.



டம் விசாரிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டார்.

மகாதேவன், இந்தக் கிராமத்து வீட்டை அவரது மகனின் மேற்படிப்புக்காக விற்றுவிட்டார். டெல்லியில் மகனுக்கு நல்ல

இவர் மனத்திற்குள்ளேயே வைத்துக் கொண்டு மருகிப் போவதைக் கண்ட இவரது மகன், பூர்விக வீட்டைத் திரும்பவும் இவர் பேரிலேயே வாங்கித் தந்து விட்டான்.

கையில் பெட்டியுடன் இறங்கி முதல் அடியை அந்த மண்ணில் வைத்தபோது, புதுப்பிறவியே எடுத்தது போல் இருந்தது. ஊர் அடையாளம் தெரியாதபடி நிறைய மாறியிருந்தது. ஏதோ புதிய ஊர் போலத் தெரிந்தது.

ஒரு பத்தடி தூரம்தான் நடந்திருப்பார். யதேச்சையாக எதிரில் அவரது நண்பர் பஞ்சு என்கிற பஞ்சாபகேசன் வருவதைப் பார்த்து விட்டார்.

''டேய் பஞ்சு!'' என்று கூப்பிட நினைத்தவரை,

''யார் நீங்க? யாரைப் பாக்கணும்?'' என்ற பஞ்சுவின் கேள்வி வாயடைக்கச் செய்தது.

''டேய் பஞ்சு! நான் 'மகா'டா! மகாதேவன்,'' என்றதும், ஒரு நிமிடம் ஆச்சர்யத்தில் கண்கள் மின்ன பார்த்த பஞ்சாபகேசன், அடுத்த நிமிடமே மிகச் சாதாரணமாக,

''மகாவா? பாத்து ரொம்ப வருஷம் ஆனதுல அடையாளம் தெரியலை. ஆமா எங்கே இவ்ளோ தூரம்?'' என்றார்.

பஞ்சுவிடம் தன் பழைய வீட்டைத் திரும்பத் தானே வாங்கியிருப்பதாகச் சொன்னால், மகிழ்ச்சியில் திக்குமுக்காடி அப்படியே தன்னைக் கட்டிக் கொள்வார் என்று எதிர்பார்த்தார் மகாதேவன்.

ஆனால் பஞ்சுவோ, ''என்ன புதையல் இந்த ஊர்ல வெச்சிருக்கோம்னு திரும்ப இந்த வீட்டையே வாங்கியிருக்கியோ போ! எனக்கொண்ணும் புரியலை!'' என்றவர், ''சரி, வா வீட்டுக்குப் போகலாம்'' என்று அழைத்துப் போனார்.

சாலைகளிலும், வீடுகளிலும் தெரியாத முகங்கள் நிறைய இருந்தன. மகாதேவனிடம் சாவியை வாங்கி, பூட்டியிருந்த வீட்டுக் கதவைத் திறந்தார் பஞ்சு. பதினெட்டு வருடங்களுக்குப் பின், வலது காலை எடுத்து வைத்து, வீட்டின் உள்ளே நுழைந்தார்.

மகாதேவனிடம், வீட்டை வாங்கியிருந்தவர், எப்போதாவது இங்கு வந்து விட்டுச் சென்றதாகச் சொன்னார் பஞ்சு.

மகாதேவன் பஞ்சுவிடம், மற்ற நண்பர்கள் இருவரைப் பற்றி விசாரித்தார்.

நாணா பாரிச வாயுவால் பாதிக்கப்பட்டு படுக்கையில் இருப்பதாகவும், நட்டு, வேலை ஒன்றும் இல்லாது ஊர் சுற்றிக் கொண்டு இருப்பதாகவும் குறையாகச் சொன்னார்.

''நீ குளிச்சு ரெஸ்ட் எடு மகா. நான் காலையிலே பாக்கிறேன். பக்கத்துலேயே ஒரு மெஸ் இருக்கு. வீட்டுச் சமையல் மாதிரி ரொம்ப டேஸ்ட்டா இருக்கும்'' என்று சொல்லிவிட்டுப் போனார் பஞ்சு.


மகாதேவனுக்கு ஏனோ சாப்பாடு வேண்டியிருக்கவில்லை. இரவுச் சாப்பாட்டுக்கு பஞ்சு, தன்னை வீட்டுக்கு அழைப்பார் என்று எதிர்பார்த்திருந்தவருக்கு ஏமாற்றமாய்ப் போயிற்று.

மறுநாள் நாணாவைப் பார்த்துவிட்டு வரலாம் என்று முடிவு செய்தார். நாணா, பஞ்சுவைப் போல நிச்சயம் இருக்க மாட்



மாக்கோலம் போடுபவர்கள், அரைத்த அரிசி மாவோடு சிறிதளவு ஒயிட் கம் சேர்த்து இட்டால், ஒரு வாரமானாலும் அழகாகப் புதுப்பொலிவோடு லட்சுமிகரமாய் இருக்கும்.

– டி.ஜோதிபாய், காஞ்சிபுரம்.





தலைமுடியை அலசும் போது, ஒரு முழு வாளித் தண்ணீரில் சில துளிகள் தேங்காய் எண்ணெயும், எலுமிச்சைச் சாறு ஒரு மூடியும் கலந்து தலைக்கு ஊற்ற, வறட்சி ஏற்படாமல் தலைமுடி பளபளப்பாக இருக்கும்.



- ஆர்.நாகம்மாள், புதுக்கோட்டை.

டார் என்று நம்பிக்கையுடன் புறப்பட்டார்.

நாணாவின் வீடு கொஞ்சமும் மாறாமல் அப்படியே இருந்தது. வாசல் திண்ணையிலேயே நாணா, ஒரு கிழிந்த பாயில் படுக்கவைக்கப்பட்டிருந்தார். மகாதேவனை அடையாளம் கண்டுகொண்ட நாணாவின் வார்த்தைகள், குழறலாக வெளிப்பட்டது.

கண்களில் கண்ணீர் வழிந்தது. அந்தக் கண்ணீர், இத்தனை வருடங்கள் கழித்து இவரைப் பார்த்த சந்தோஷத்தாலா அல்லது தன் நிலைக் குறித்த சுயபச்சாதாபத்தாலா என்பது மகாதேவனுக்குப் புரியவில்லை.

நாணாவின் மருமகள், கீரைக்காரியிடம் ஒரு ரூபாய்க்கு பேரம் பேசி, சண்டை போட்டுக் கொண்டிருந்தாள். வீட்டின் தோற்றமே நாணாவின் வறுமையைச் சொல்லிற்று. மகாதேவன் கிளம்பும் போது ஒரு ஐந்நூறு ரூபாய் பணத்தை, நாணாவின் கையில் வைத்து அழுத்தினார்.

மகாதேவன் அந்த வீட்டு வாசல்படியை விட்டு இறங்கும் முன்பே, இவர் கண் எதிரிலேயே நாணாவின்மகன், அவரது கையிலிருந்த பணத்தை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு போனான். பரிதாபமான நாணாவின் பார்வையைச் சந்திக்கத் திராணியற்று, சாலையில் இறங்கி நடந்தார் மகாதேவன்.

சட்டை மடிப்புக் கூட கலையாது, படிய வாரிய தலையுடன், சிரிக்கச் சிரிக்கப் பேசும் பழைய நாணா, நினைவுக்கு வந்ததும் மகாதேவனின் கண்களில் கண்ணீர் தளும்பியது. இதுவரை மகாதேவனின் மனத்தில் பதிந்துப் போயிருந்த அந்தப் பிம்பம் அழிந்து, இப்போதைய நாணாவின் இந்தக் கோலம் பதிந்து விட்டது.

இரண்டு நாட்கள் ஓடிப் போயின.

நட்டு மட்டும் அவரோடு ஒட்டிக் கொண்டே அலைந்தார். பழைய நட்டு சுத்தமாக மாறிப்போய், பணத்தாசை அவரை ஆட்டுவிப்பதைப் புரிந்துகொண்டார். உரிமையாக மகாதேவனின் பெட்டியைத் திறந்து, புதுச் சட்டை வேட்டிகளை எடுத்து வைத்துக்கொண்டார். மகாவை கேட்காமலேயே பாதி பொருள்கள், நட்டுவுக்குச் சொந்தமாகி இருந்தன.

நான்காவது நாள்...

"பூரணி தெரியுமில்லியா? அவ சன்னிதித் தெருவுலதான் இருக்கா. இரண்டு நாள் முன்னாடிதான் பார்த்தேன். மூட்டுவலியாம்... வீட்டோட நடமாடறாளாம். காடராக்ட் ஆபரேஷன் பண்ணணும்னு சொல்லிக்கிட்டு இருந்தா.. அவளைப் போய் பார்க்கலாமா?" என்றார் நட்டு.

பரங்கிப் பூக்களை மார்போடு அணைத்தபடி நின்ற பூரணியைப் பார்க்கும் ஆவல் அவருக்குள் ஜிவ்வென்று கிளம்பியது. அடுத்தகணம்... பஞ்சு, நாணா முகங்கள் மனத்தில் ஆட... அந்த எண்ணத்தை அப்படியே நசுக்கிவிட்டு, "நான் டெல்லிக்குக் கிளம்பணும்!" என்றார் மகாதேவன். ❑

என் நண்பர், ஒருவர் வீட்டில் விருந்துக்குச் சென்ற இடத்தில்தான், நான் சாரதா - வெங்கட் தம்பதியைச் சந்திக்க நேர்ந்தது. ஒன்றாக அல்ல; தனித்தனியாக. வெங்கட், ஏழு மணிக்கு நண்பர்வீட்டுக்கு வந்துவிட்டான். ஸி.ஏ முடித்துவிட்டு ஒரு பிரபல ஆடிட் நிறுவனத்தில் பணிபுரிவதாக கூறிய வெங்கட், பொதுவாக நாம் சந்திக்கும் இன்றைய இளைஞர்களைப் போல் கலகலப்பாக இருந்தான். அவன் மனைவி சாரதா, ஓர் ஐ.டி நிறுவனத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தாள்.

சாரதா விருந்துக்கு வந்தபோது மணி ஒன்பது. வேலைக்கே உரிய அயர்ச்சியும், பொதுவாக பெண்களுக்கு மத்தியில் தென்படும் பாசாங்குகளும் இல்லாமல் இருந்தாள். எல்லா விஷயங்களிலும் சாரதாவுக்கு ஈடுபாடும், நல்ல அபிப்ராயங்களும் இருந்தன. தோற்றத்திலும், பழக்கத்திலும் நல்ல தம்பதிகளாகவே தோன்றினர். இது நடந்தது கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்.

உரிமையின் உச்சமும்...

பெண்மை எங்குத் தொடங்கி எங்கு முடிகிறது? அடிமைத்தனம் எங்கு கொண்டு செல்லக்கூடும்? உரிமையின் உயர்வு எந்த அளவு? இவை எல்லாமே இந்த நிஜ வாழ்க்கைக் கதைகளைக் கேட்டபோது என் மனத்தில் எழுந்தன!



சமீபத்தில், அந்த நண்பரைச் சந்தித்தபோது சாரதா - வெங்கட் ஜோடி பற்றி விசாரித்த எனக்கு, அதிர்ச்சியாக இருந்தது. ''அவர்கள் இப்போது விவாகரத்து செய்யப் போகின்றனர்'' என்றனர் என் நண்பரும், அவர் மனைவியும்.

சாரதா, தினமும் ஆஃபீஸிலிருந்து வர மிகுந்த நேரமாகிறதாம். முன்னால் வரும் வெங்கட், வீட்டு வேலை பற்றித் துளியும் கவலைப்படாமல் டீ.வி பார்த்துக் கொண்டிருக்கிறானாம். வாய்ச் சண்டை, விவாதத்தில் தொடங்கி விவாகரத்தில் சென்று முடிந்துவிட்டது.

''ஏன் அவர்களுக்கு குழந்தைகள் இல்லையா?'' என்றேன்.

''ம்ஹூம்... சாரதா, குழந்தை பெற்றுக் கொள்ள முடியாது என்ற நிபந்தனையுடன் தானே வெங்கட்டைக் கல்யாணம் செய்து கொண்டாள்!'' என்றார் என் நண்பர்.

''அப்படியா?'' என்றேன் நான் வியப்புடன்.

தாய்மையையே முதன்மையாக

வைத்துத் திருமண பந்தங்கள் நிகழும் இந்தியாவில் ஒரு பெண், தாயாக விரும்பவில்லை என்ற நிபந்தனையுடன் திருமணம் செய்துகொண்டது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

சமீபத்தில் நடந்த சிறு விவாதத்தில் ரகு குடிபோதையில், ''உன்னால் எனக்கு என்ன பயன்? நீ செத்தாலாவது உன் பெயரிலுள்ள இன்ஷ்யூரன்ஸ் பணம் எனக்குக் கிடைக்கும்...'' என்றிருக்கிறான்.



அடிமையின் ஆழமும்!

''எப்படி இந்த உடன்படிக்கைக்கு இரண்டு பேரும் ஒப்புக்கொண்டனர்?'' என்று கேட்டேன்.

''காதல் கல்யாணமாயிற்றே!'' என்றார் நண்பர்.

''காதலா?... அப்படியென்றால் இரண்டு ஆண்டுகளிலேயே காதல் கசந்துவிட்டதா?'' என்றேன்.

நண்பரின் மனைவி, உதட்டைப் பிதுக்கினாள்.

பெண் குழந்தையாக இருந்தால் சிசுக் கொலை செய்யவும், பெற்ற குழந்தையை அநாதையாக எறிந்துவிட்டுப் போகும் பெண்களுடன் ஒப்பிட்டால் சாரதா, உரிமையின் உச்சத்தில் உட்கார்ந்திருந்தாலும் உத்தமமானவள்தான்.

* * * * *

'கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருஷன்' என்ற வாக்கை வாழ்க்கையின் ஆதாரமாகக் கொண்டிருந்தாள் உமா. வேலைக்குப் போக மறுக்கும் கணவன் ரகுவின் பாதமே சரணம் என்று வாழ்ந்திருந்தாள். இரண்டு குழந்தைகள் இருந்தாலும், உமாவுக்குக் கணவன்தான் ஆணிவேர். அவன் காசு கொண்டு வரவில்லையென்றாலும், தன் உடல் உழைப்பால், அவனை சந்தோஷமாக வைத்துக் கொள்ள என்ன தியாகம் செய்யவும் தயாராக இருந்தாள்.

வேறொரு பெண்ணாக இருந்தால் கொதித்துப் போயிருப்பாள். ஆனால், உமா, நளாயினி, கண்ணகி இத்யாதி வழிவந்தவள். உடனே சமையலறைக்குள் போய் சிலிண்டரைத் திறந்துவிட்டு, எரியும் நெருப்பில் தன் புடைவைத் தலைப்பை வீசியிருக்கிறாள்.

அது அவசரத்தில் செய்த செயலா, இல்லை, ரகு தன்னை வந்து தடுப்பான் என்ற நம்பிக்கையா தெரியவில்லை; ஆனால், ரகு தடுக்கவில்லை. பாதி உடல் நெருப்பின் சூட்டில் வெந்தபோது உமா, தண்ணீரைக் கொட்டிக் கொண்டு தன்னைத் தற்கொலையினின்றும் தடுத்துக் கொண்டிருக்கிறாள்.

இப்போது உமா, உறவினர்களின் உதவியில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறாள். ''அவர் ஒருநாள் நிச்சயம் திருந்திவிடுவார்...'' என்பதுதான் இப்போதும் அவள் பாடும் பல்லவி.

அடிமைத்தளத்தின் ஆழத்தை உமாவை விட வேறு எவராலும் இன்றைய இருபத்து ஒன்றாம் நூற்றாண்டில் தொட முடியுமோ? தெரியவில்லை.

* * * * *

- ஜி. சுவாமிநாதன்,
சென்னை - 20

வாசகர் குமுறல்

பூண்டை நசுக்கு... பாம்பைப் பிடி!

மூலிகை மற்றும் இயற்கை மருத்துவர்கள், ஆஸ்துமாவிலிருந்து ஆர்த் ரைட்டீஸ் வரை ஆறுதல் தரும் அற்புதப் பொருள் பூண்டு! என்கின்றனர்.

ஆராய்ச்சியாளர்கள், பூண்டு, ''இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது. பாக்டீரியா, வைரஸ் கிருமிகளை அழிக்கின்றது'' என்று ஆய்வின் மூலம் கூறுகின்றனர்.

1991-ம் ஆண்டு சைனாவில் உள்ள ஷேன் டாங்க் என்ற பகுதியில் வாழும் மக்கள், உணவுப் பாதையில் 'கான்சர்' நோயால் பாதிக்கப் பட்டிருந்தனராம். பூண்டை முறையாக உணவில் சேர்த்து வந்ததால், அது பாதுகாப்பைத் தந்து உதவியதாம்.

மிருகங்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்ததில், பூண்டு, ஆபத்தானகட்டிகளைக் கரைக்கும் தன்மையுடையது என்று கண்டறிந்துள்ளனர்.

பூண்டின் நாற்றம் பாம்புக்குப் பிடிக்காது. பூண்டை நசுக்கி, பாம்பின் முன் போட்டால், பெட்டிப் பாம்பாய் அடங்கி விடுமாம்.

நமது பழ நூல்கள், ''காரமானது; தன்மையில் வெப்பமானது; அகட்டுவாய் அகற்றி, கோழையகற்றி, புழுக்கொல்லி, சிறுநீர் பெருக்கி...'' பதார்த்த குண சிந்தாமணியில், ''சன்னியோடு, வாதம், தலை நோவு, நீர்க்கோவை, மூலரோகம் என்று பூண்டின் தன்மைகளைக் கூறுகிறது.

பூண்டு, நலம் தரும் லிப்போ புரோட்டீன்களை அதிகரித்து, கொல்ஸ்ட்ராலைக் குறைத்து, இதயம் காக்கிறது என்கிறது விஞ்ஞான ஆய்வு.

பூண்டில் உள்ள 'சல்ஃபர் காம்பவுண்டுகள்'தான் அதன் நாற்றத்துக்குக் காரணிகள். சிலருக்கு இதன் வாசனை பிடிக்காது. அலர்ஜி, தலைவலி வரும்.

- டி. பிரபாவதி,
கோவை.




Experience
the current classics
with Prashanti
Gurunathar Charanam
PRASHANTI
House of Silk Cottons
SILK COTTON
*Conditions Apply
Visit Prashanti and be the Winner!!
Lucky Draw Contest: Last Date.. Jan 31st, 2010*
• Sarees • Salwars / Kurthis
• Materials / Readymades
Chennai:16, 6th Cross Street, CIT Colony, Mylapore, Chennai - 4.
Ph: 2499 1850 / 2499 7636 (Open on All days) email: prashantisarees@gmail.com
Bangalore: Malleswaram - Ph: 2334 1632 Jayanagar - Ph: 22449595 www.prashanti.co.in
பட்டின் பொலிவு, பருத்தியின் மென்மை, பிரசாந்தியின் சில்க் காட்டன்


நாட்டிய
கலைஞர்களின்
நயமான கூடம்
All dance items in One Roof
T.NAGAR
Shanthi's Dance Paradise
The ultimate shop for Classical Dance Needs
No. 38, Maya's Plaza, 1st Floor, 71, Pondy Bazaar,
T.Nagar Chennai - 600 017. South India.
Ph : 2345 0150, Fax : 91-44-28153078
E-mail: sdparadise@vsnl.net
Website : www.shanthidanceparadise.com

சொல்ல விரும்புகிறோம்





தொழிலதிபர் ஆக வழி சொல்லும் உங்களை எப்படிப் பாராட்ட? வழி தெரியாதோருக்கு கலங்கரை விளக்கம் போன்றவர் இராம்குமார்சிங்காரம். பலூன் தியரியை அறிய ஆவலாக இருக்கிறோம்.

- எஸ்.லக்ஷ்மி, சேலம்-1.

(உங்கள் ஊக்கம் எங்கள் ஆர்வம்!)

பலூன் தியரி - பக்கம் 28

பேரிகை கொட்டி

‘சிறந்த வழிகாட்டிகள்’ தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையில் கூரத்தாழ்வார் என்று குறிப்பிட்டிருப்பது தவறு. சரியான பெயர் கூரத்தாழ்வான்தான். அவருடைய தந்தை பெயர்தான் கூரத்தாழ்வார். முதலியாண்டான், கூரத்தாழ்வான் என்று ‘அன்’ விகுதி சேர்ப்பதால் அவர்களுக்கு பெருமை குன்றிவிடாது.

திருநறையூர் ‘கல் கருடன்’ பற்றிய குறிப்பில் பெருமாளுக்கு நவரத்ன கலசம் நிவேதனம் செய்யப்படுவதாக எழுதப்பட்டுள்ளது. அதற்கு ‘அமுதக் கலசம்’ (இனிப்புக் கொழுக்கட்டை) என்றுதான் பெயர்.

- தி.வி.அரங்கநாதன், சென்னை

‘நீயே என் குரு’ படித்ததன் மூலம் எல்லோர் மனத்திலும் நல்ல சிந்தனைகள் நிச்சயம் ஏற்படும்.

- வி.ஜானகி, சென்னை-78.

வௌவால்களை ஆராய்ச்சி செய்யும் ஜூலியட் வனிதா ராணியின் அனுபவங்களும், ஆராய்ச்சியும், களமிறங்கக் காத்திருக்கும் இளம்பெண்களுக்குத் தூண்டுகோலாக இருந்தன. பாராட்டுக்கள்!

- கே.என்.இராமகிருஷ்ணன், சென்னை-107.

வரவேற்கிறோம்!

'வாக்காளர் அடையாள அட்டை பெறுவது எப்படி?' என்ற கட்டுரையில் வாக்காளர் அட்டை தொடர்பான தகவல்களைப் பெற சரியான முகவரியைக் கொடுத்து உதவிய கட்டுரையில் தமிழக இணை தலைமை தேர்தல் அதிகாரிக்கு வாசகர்கள் சார்பாக நன்றி!

- இராம.வேதநாயகம்,
வடமாதிமங்கலம்.

தூரிகை ட்யூஷன் கற்றுக் கொடுக்கும் காரிகைக்கு நன்றி. ரம்மியமான பொம்மி, தாரகை போல் மினுமினுத்தாள். பேரிகை கொட்டி வரவேற்கிறோம்.

- எம்.அம்புஜம் முராரி, சேலம்.

சச்சு தொடரில், சுயபுராணம் பாடாமல் பேபி சரோஜாவை பேட்டி எடுத்தது 'டு இன் ஒன்'னாக அசத்தியது.

- அ.யாழினி பர்வதம், சென்னை-78

எந்த ஒரு காரியத்தையும் முழு ஈடுபாட்டுடன் செய்தால், அது பூரணத்துவம் பெறும் என்பதை 'ஒரு வார்த்தை!'யில் அற்புதமாகச் சொல்லியிருக்கிறீர்கள். தொடரட்டும் உங்களது சேவை!

- என்.பாலகிருஷ்ணன், மதுரை

'ஆல் இன் ஒன்' சமையலில் சீரக ரசத்தோடு ஏழு நாட்களுக்கும் ஏழு வகையான ரசங்களைக் கொடுத்த 'ரசவாதி' கீதா பாலகிருஷ்ணனுக்கு நன்றி!

- எஸ்.செந்தமிழ்க் குயிலி, சேலம்.

இணைப்பாக வந்த 'வெளிநாட்டுப் பயணம் 64' படித்து பத்திரப்படுத்த வேண்டிய பொக்கிஷம்.

-ஆர்.உமா ராஜசேகரன், திருச்சி.

பூஞ்சாரல் பக்கங்களில் வெளியான 'ஹய்யோ மறந்துடாதீங்க' கட்டுரை என்னைப் போன்ற மறதி மன்னர்களுக்குப் பயனாக இருந்தது. நன்றி!

- என்.கோகுல்நாத்,
அம்மாப்பேட்டை.

பவானி மனோகர் எழுதிய, "ஆஃப்டர் ஆல் ஒரு பெண்" சிறுகதை மூலம் பெண்ணால் எதையும் சாதிக்க முடியும் என நன்கு புரிந்தது.

- வி.ராஜேஸ்வரி,
திண்டிவனம்.

"இனி எனக்கு விருது கொடுக்காதீர்கள். திறமையான இளையதலைமுறையினருக்குக் கொடுங்கள்" என்று சொல்லும் இசைக்குயில் லதா மங்கேஷ்கர் பல்லாண்டு வாழ ஆசைப்படுகிறோம்.

- விஜயவள்ளி
வெங்கடகிருஷ்ணன், கோயம்புத்தூர்.

மங்கையர் மலரில் ஜோதிடப் பகுதி இல்லாதது மிக வருத்தமாக உள்ளது. தயவுசெய்து ஜோதிடப் பகுதியைத் தொடர்ந்து வெளியிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

- ஜி.பிரேமா, திருவாரூர்
மற்றும் பலர்.

(பிப்ரவரி 2010 ஆண்டு மலர் இதழிலிருந்து மீண்டும் ஆரம்பமாகும். (ஆர்.)

அயல்நாட்டு

ஆக்ஸிமெட் மருத்துவ மனையின் தலைமை மருத்துவர் டாக்டர் அயாஸ் அக்பர் பிரிவென்டிவ் கார்டியாலஜிஸ்ட் தனது 7 நபர்கள் கொண்ட குழுவினருடன் கடந்த நவம்பர் மாதம் 6 ஆம் தேதி துபாயில் (U.A.E) நடைபெற்ற அகில உலக இருதய மருத்துவ மாநாட்டில் கலந்து கொண்டார்.



இந்த குழுவுடன் தற்போது ஆக்ஸிமெட் மருத்துவ மனையில், அவசர இருதய நோய் சிகிச்சை துறை இயக்குனராக இருக்கும் டாக்டர். தனபால் அவர்கள் (ஓய்வு பெற்ற முன்னாள் சென்னை MMC மருத்துவக் கல்லூரியின் டீன்) கலந்து கொண்டு தனது ஆய்வுத் தாள்களை சமர்பித்தார்.

இந்த துபாய் பயணம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. ஏனெனில் 2 வருடங்களாக துபாயிலிருந்து ஆக்ஸிமெட் மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெற்று சென்ற பழைய நோயாளிகளை மீண்டும் பரிசோதனை செய்ய உதவியாக இருந்தது. மேலும் இந்த குழுவிடம் துபாய் இல்லாமல் பக்கத்து ஊர்களான குவைத், பெகரின், மஸ்கட், ஈரான், சௌதி அரேபியா போன்ற இடங்களி லிருந்து பழைய மற்றும் புதிய நோயாளிகளும் கூட வந்து ஆலோசனை மற்றும் பரிசோதனை செய்து பயனடைந்தனர். இது மட்டுமல்லாமல் உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை வியாதி, வயோதிகம் காரணமாக இருதய அறுவை சிகிச்சை செய்ய முடியாமல் இருப்பவர்களும் இந்த மருத்துவக் குழுவினரிடம் ஆலோசனை பெற்று பயனடைந்தனர். இரண்டு வருடம் முன் சிகிச்சை பெற்று இருதய நோயின் அவதியின்றி இயல்பு வாழ்க்கை வாழ்ந்து வரும் பழைய

பாராட்டுக்கள்


நோயாளிகளின் கருத்துக்களை கேட்டு அவர்களும் இந்தியா வந்து கிசிச்சை பெற விருப்பம் தெரிவித் துள்ளனர். ஆனால் ஆக்ஸிமெட் மருத்துவமனை விரிவுபடுத்திக் கொண்டிருப்பதால் அவர்களுக்கு நவம்பர் மாதக்கடைசியில் மட்டுமே முன் அனுமதி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவர்களில்லாமல் துபாயின் ராயல் குடும்பத்தைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் டாக்டர். அயாஸ் அக்பரை சந்தித்து தனது ஊர் மக்களுக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளித்து தரமான வாழ்க்கை வாழ வழி செய்தமைக்கு நேரில் பாராட்டி மகிழ்ந்தார். மேலும் ஆக்ஸிமெட் மருத்துவமனையின் ஊசியில்லா சிகிச்சை முறையின் வெற்றியைப் பற்றி அறிந்து துபாயிலும் இச்சிகிச்சைகான மருத்துவ மனையை ஆரம்பிப்பதற்கு துபாய் அரசாங்கத்திடம் பரிந்துரைத்து, உரிமம் வாங்கித் தருவதாக வாக்களித்துள்ளார். உள் மற்றும் வெளிநாட்டு முக்கிய பிரமுகர் களுக்கு ஏற்றவாறு நட்சத்திர ஓட்டலின் அறைகள் போன்று சிறந்த வசதிகளுடன் கூடிய சிகிச்சை அறைகள் அமைத்து வருகின்றனர்.

இதுபோன்று சென்னைவாசிகள் அல்லாமல், உலக அளவில் உள்ள மக்களில் பலர் ஆக்ஸிமெட் சிகிச்சை முறையான அறுவைசிகிச்சையின்றி நோய் நிவாரணமடைவதை கேள்விபட்டு, வருவதால் மருத்துவமனை விரிவுபடுத்தப்பட்டு மக்கள் வசதிக்காக பல்வேறு நிபுணர்களான நுரையீரல் நோய் நிபுணர், சர்க்கரை நோய் நிபுணர், அவசரசிகிச்சை மருத்துவர்கள், இருதய நோய் நிபுணர் போன்றவர்களுடன் டாக்டர் அயாஸ் அக்பர் தலைமையில் திறம்பட செயல்பட்டு வருகிறது. மேலும் பைபாஸ் அறுவை சிகிச்சை செய்துக்கொள்ள விருப்பமில்லாத வர்களும் பைபாஸ் செய்து மீண்டும் அடைப்புகளால் அவதிபடுபவர் களுக்கும் அறுவை சிகிச்சையின்றி தரமான வாழ்க்கையை தருவதே ஆக்ஸிமெட் மருத்துவமனையின் குறிக்கோளாகும்.

இட்லி மிளகாய்ப் பொடி அரைக்கும்போது சிறிது புளியை வறுத்து அரைத்துக் கலந்து வைக்கவும். எண்ணெய் வேண்டாதவர்கள் மிளகாய்ப் பொடியில் சிறிது தண்ணீர் விட்டு, கலக்கிச் சாப்பிடலாம். புது ருசியாக இருக்கும்.

-மீனா சுந்தர், கரூர்.



பெற்றோர்கள் பள்ளிக்குச் செல்லும் தங்களது பிள்ளைகள் விடுமுறை எடுக்கும் போது, விடுமுறை விண்ணப்பத்தில் உண்மையான காரணங்களையே எழுத வலியுறுத்துங்கள். எதிர்காலத்தில் குழந்தைகள் நேர்மையோடு வளர்வார்கள்.

- எஸ்.வித்யா, திருச்சி.

ஷாப்பிங் செல்லப் போறீங்களா? தொலைக்காட்சி விளம்பரங்களை விடாமல் பாருங்கள். சிறப்புச் சலுகைகள், தள்ளுபடி விவரங்கள் தெரிந்து பயன்பெறலாம்.

- எம்.ஜி.பரத், திண்டுக்கல்.

முக்கியமான சான்றிதழ்கள், ரசீதுகள், போன்றவற்றின் அசலை ஒரு பையிலும், அவற்றின் நகலை வேறொரு பையிலும் வைத்துக் கொள்வது பாதுகாப்பானது.

- கே.எஸ்.கோவர்த்தனன், வேளச்சேரி.

கனமான பிளாஸ்டிக் ஷீட் அரை மீட்டர் வாங்கி வைத்துக் கொண்டால், காய்கறி நறுக்க, தேங்காய்த் துருவ, சப்பாத்தி, பூரி இட என்று த்ரீ-இன் ஒன்னாக உபயோகிக்கலாம். தவிர, உணவுப் பொருள்களை வெயிலில் உலர்த்தவும் கூட பயன்படுத்தலாம்.

- உ.சுல்தானா, கீழக்கரை.

அறிமுகமான கால் டாக்ஸி, ஆட்டோ ஓட்டுநர் நம்பர்களை செல்ஃபோனில் பதிவுசெய்து கொண்டால், அவசரத்திற்கு அழைக்க உதவியாக இருக்கும். இதே போல் பேருந்து நிலையம், ரயில்வே நிலையம், தபால் அலுவலகம், வங்கி போன்ற பொது இடங்களில் கால் டாக்ஸி சர்வீஸ் நம்பர்களின் பட்டியலை ஒட்டி வைத்தால் உபயோகமாக இருக்கும்.

-சி.எஸ். சித்ரா, கோயமுத்தூர்-38.

ஊருக்கு எடுத்துச் செல்ல பையில் புடைவைகளை அடுக்குகிறீர்களா? மடித்து வைக்காமல், சுருட்டி வைத்தால் அதிக புடைவைகளை வைக்கலாம்.

-நா.ராஜேஸ்வரி, பெங்களூரு.

இவை எல்லாமே ஆஹா 50 தான்!

வேய்ங் குழல் ஊதி நம் மனங்களை எல்லாம் சட்டென கொள்ளைகொள்ளும் சிக்கில் மாலா சந்திரசேகரிடம், ''இந்த இசை விழாவுக்கு உங்க குழலிசைப் பயிற்சி எந்த அளவில் உள்ளது?'' என்று கேட்ட போது...

''விட்டு விட்டு மழை பொழியற மாதிரி நானும் என் புல்லாங்குழலை எடுத்து கொண்டு, விட்டு விட்டுத்தான் பயிற்சி செய்வேன். குறிப்பாக இரவு நேரத்துக்கே உரிய அந்த நிசப்தம், அமைதியாகவும், ஆனந்தமாகவும் நான் குழல் இசைக்க ரொம்ப தோதான ஒரு நேரம்.

''இந்த வருஷம் முத்துஸ்வாமி தீக்ஷிதரின் க்ருதிகளையும், ஷ்யாமா சாஸ்த்ரியின் க்ருதிகளையும் நிறைய என் கச்சேரிகளில் வாசிக்கப் போறேன். சமீபத்தில் ராமக்ருஷ்ணா அநாதைகள் இல்லத்தில், அந்தக் குழந்தைகளுக்கு முன்னால் நான் வாசித்த கச்சேரி, என்னை ரொம்பவே நெகிழச் செய்துவிட்டது. ஒரு சின்னப் பெண் நான் வாசித்து கொண்டிருக்கும்போதே என்னை அப்படியே ஒரு பென்சிலில் படமாக வரைந்து, நான் கச்சேரி முடித்தவுடன் அதில் என் ஆட்டோகிராஃப் வாங்கிக் கொண்டாள். இசையின் சக்தியும் மகத்துவமும் அதுதான். நேராக ஒவ்வொரு ஜீவனிடத்திலும் அளவுக்கதிகமான சந்தோஷத்தையும் மனநிறைவையும் கொடுக்கவல்லது நம் கர்நாடக இசை. ஒவ்வொரு கச்சேரி வாசித்து முடித்த பிறகும் ரசிகர்களின் முகத்தில் தெரியும் அந்த சந்தோஷப் புன்னகைதான் ஒவ்வொரு இசைக் கலைஞர்களுக்கும் கிடைக்கும் மிகப் பெரிய பரிசு'' என்கிறார் மாலா பெருமையுடன்.



தமது ஒன்பது மாதக்குழந்தையை ஒரு கையில் லாகவமாகப் பிடித்துக்கொண்டே ஓர் இனிமையான அம்மாவாகப் பேச ஆரம்பித்தார் ஷண்முக ப்ரியா. கூடவே ஹரிப்ரியா.

''இந்த வருஷக் கச்சேரில என்ன புதுசா பாடலாம், எந்த புது ராகத்தைச் சேர்க்கலாம் இசைக்கலாம் போன்ற



என்னை

ப்ளானிங்கை எல்லாம் அக்டோபர், நவம்பர் மாதங்களிலேயே ஆரம்பிச்சுடுவோம். இந்த வருஷ கச்சேரில அன்னமாச்சாரியா க்ருதிகள் நிறையப் பாடப் போறோம்.

''1997 ஆம் ஆண்டு மியூசிக் சீசனை மறக்கவே முடியாது. அந்த வருஷம் சீசன் ஆரம்பிக்கறதுக்கு முன்னாடி எங்கம்மா காலமாயிட்டாங்க. ஐ சி யூல அம்மா அட்மிட் ஆகி சீரியசாக இருந்த போது கூட 'எனக்காக கச்சேரிய எல்லாம்

கான்சல் பண்ணிடாதீங்க, போய் ரெண்டு பேரும் பாடிட்டு வாங்க'ன்னு சொன்னதை இன்னமும் நாங்க நெகிழ்ச்சியோட நினைச்சுப் பாத்துக்க



ஸ்பெஷல்?

றோம்.

''இதோ இப்போ எங்க அப்பா தனது 75வது வயதிலும்அவரோட 200% ஆதரவு கொடுத்து எங்கப் பிள்ளைகளை அவ்வளவு அரவணைப்போட பார்த்துக்கறதாலதான் நாங்க இந்த அளவுக்கு இசைல ஈடுபட முடியுது'' என நெகிழ்ந்தனர் ப்ரியா சகோதரிகள்.


இந்த சங்கீத சீஸனுக்கு என்ன ஸ்பெஷல்? கச்சேரிக்கு எப்படித் தயாராகறீங்க? என்று சில இசைக் கலைஞர்களைக் கேட்டபோது...

தமது ஒவ்வொரு கச்சேரியிலும் வெரைட்டி இசை விருந்து படைக்கும் ஓ.எஸ். அருண், டிசம்பரில் வெளிவரவிருக்கும் தமது சி.டி. தொகுப்புகளிலிருந்து பல பாடல்களை இசையுலக ரசிகர்களுக்குப் படைக்கப் போவதாகத் தெரிவித்தார்.

''பல்வேறு பஜனைப் பாடல்கள், கிருத்துவ பக்தி பாடல்கள், கர்னாடக சங்கீதம் என எல்லாவற்றையும் இந்த இசை விழாவில் பாட, நான் தினமும் பயிற்சி செய்து வருகிறேன். ஒருமுறை ஆர்.ஆர். சபாவில் நடந்த ஓர் இசைக் கச்சேரியில் நான் கிருஷ்ணர் மீது ஒரு பாடல் பாடி விட்டு, அடுத்த பாட்டு துவங்குவதற்கு முன், திடீரென கூட்டத்திலிருந்து ஒரு ரசிகை எழுந்து, பாட்டை நிறுத்தும்படி செய்கை செய்ததும், நான் திகைத்தே போனேன். மேடைக்கு வந்த அந்த ரசிகை, தமது பர்ஸிலிருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து, என்மீது பொழிந்துவிட்டு, ''உங்களது சங்கீதத்தில் இருந்த தெய்விகத்தைப் போற்ற எனக்கு வேறு வழி தெரியவில்லை'' என்று சொன்னார். அந்த மாபெரும் ரசிகை வேறு யாருமல்ல; அவர் எஸ். ஜானகியம்மாதான்! என்று நினைவு கூர்ந்தார் ஓ.எஸ். அருண்.



தொகுப்பு :
நளினி சம்பத்குமார்











பழக்க... பய

பல பயனுள்ள வீட்டுக் குறிப்புகள் - சசிமதன், டாக்டர் கே.என். சரஸ்வதி பப்ளிகேஷன்ஸ், சென்னை-17. விலை ரூ.50.00

காய்கறிகளை எப்படிச் சமைப்பது என்பது முதல், நகைகளை எப்படிச் சுத்தப்படுத்துவது, குழந்தைகளை எப்படித் தேர்வில் வெற்றிபெற வைப்பது என்று முப்பத்தொன்பது அருமையான குறிப்புகள்.

பெண்ணே! உனக்கான சட்டங்கள்- பா. பழனிராஜ், சந்திராமணி பதிப்பகம், திருவண்ணாமலை. ரூ.80.00

நீதிபதி பிரபாஸ்ரீதேவனின் அணிந்துரையோடுகூடிய இந்த நூலில் பெண்களுக்கான சொத்துரிமை, மணவிலக்கு, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் போன்ற பல அம்சங்களுக்கு சட்டவியல் விளக்கங்களைத் தந்திருக்கிறார் ஆசிரியர்.

தியானம் செய்வது எப்படி? - சிவசித்தன் அழகு பதிப்பகம், சென்னை-49. ரூ. 20.00

தியானப் பயிற்சியின் மூலம் உடல்நலனை எவ்வாறு சீராக வைக்க முடியும் என்று விளக்குகிற சிறு நூல்.

பாஞ்சாலி சபதம் (உரையுடன்) - புலவர் ப.இராசேந்திரன், கங்கை புத்தக நிலையம், சென்னை-17. ரூ.60.00

எளிமையான மகாகவி பாரதியின் காவியத்தை, சுகமான உரைநடையில் இன்னும் எளிமையாகத் தந்திருக்கிறார் ஆசிரியர். பாரதியார் பாடல்களுடன் அடுத்தடுத்து உரை வடிவம்.

சௌந்தர்ய லஹரி என்னும் அழகின் ஆராதனை - எச்.எஸ். பரமேஸ்வரன், மணிமேகலைப் பிரசுரம், சென்னை-17. ரூ.40.00

நூறு சுலோகங்களையும் தமிழ் வடிவில் தந்து, கூடவே அவற்றின் திரண்ட கருத்தையும் தந்திருக்கிறார் ஆசிரியர். பொருள் உணர்ந்து பாராயணம் செய்ய பயனுள்ள நூல்.

- வாசகன்

பற...



மனசு ரெண்டும் புதுசு: ஆசிரியர்:டாக்டர் கே.மீனா, வகை: சமூக நாவல், வெளியீடு: கதிர்மதி பதிப்பகம், திருச்சி-20. பக்.190, விலை ரூ.80.

சுவாரஸ்யமான நடையில் எழுதப்பட்டுள்ள சமூக நாவல். காதலனும் காதலியும் கடைசிவரை திருமணம் செய்துகொள்ளாமலே இருப்பதும் ஒரு பெண்குழந்தையைத் தத்தெடுத்துக் கொள்வதும் உருக்கமான முடிவாக அமைந்துள்ளன. காதல் என்பது கல்யாணம் பண்ணிக் குடும்பம் நடத்துவது மட்டும் இல்லை. காதலனை வாழவைத்து அதில் சந்தோஷப்படுவதுதான் புனிதமான காதல்! என்று கதையின் இடையே வரும் வரிதான் நாவலின் கரு.

டி.பி. பரவக்கூடிய தொற்றுநோய் என்பதும் அந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களின் சங்கடங்களும் என டி.பி. தொடர்பான பல விஷயங்கள் பதிவாகியுள்ளன. சற்று ஆய்வு செய்து இந்த விவரங்களைச் சேகரித்துள்ளார் டாக்டர் கே.மீனா. இது அவரது உழைப்பின் அளவைப் புலப்படுத்துகிறது.

நல்ல விஷயங்களைச் சொல்லும் நூல்களுக்கு சமூகத்தில் என்றும் ஓர் இடம் உண்டு. நல்ல கருத்துகளை முன்வைத்த வகையில் இந்த நூல், வாசகர்கள் மனத்தில் இடம் பிடிக்கும்.

- அரவிந்த்

மார்கழியில் திருவாதிரைத் திருநாளன்று ஆனந்தக் கூத்தாடும் சிதம்பரம் நடராஜருக்கு திருவாதிரைக் களியும் ஏழு காய் கூட்டுக் குழம்பும் நைவேத்தியம் செய்வது வழக்கமல்லவா? 'களி' என்றாலே மகிழ்ச்சி என்று பொருள்? திருவாதிரை நைவேத்தியத்தின் சிறப்பே அதுதான்! களியின் இனிப்புக்கு 'ஏழு காய் கூட்டுக் குழம்பின்' காரம் அதி அற்புத காம்பினேஷன்! மார்கழிக் குளிரில் இதைச் சுடச்சுட சாப்பிடுவதற்கு மேலும் களிப்பூட்டும் காம்பினேஷன்! இப்போது திருவாதிரைக் களியை மைக்ரோவேவ் அவனில் எப்படிச் செய்வது என்று பார்ப்போமா?



கீதா பாலகிருஷ்ணன்



11

திருவாதிரைக் களி

தேவையானவை:

பச்சரிசி - 1 கப், பாசிப் பருப்பு - ¼ கப்,
தூளாக்கிய வெல்லம் - 1½ கப்,
நெய் - 2 டேபிள் ஸ்பூன்,
ஏலத்தூள் - ½ டீஸ்பூன்

செய்முறை:

ஒரு மைக்ரோ ப்ரூஃப் கண்ணாடித் தட்டில் பச்சரிசி, பாசிப்பருப்பு இரண்டையும் கலந்து பரத்தி, 'மீடியம் ஹை' பவரில் எட்டு நிமிடங்கள் வைக்கவும். (நடுநடுவே இரண்டு நிமிடங்களுக்கு ஒருமுறை தட்டை வெளியே எடுத்து அரிசி-பருப்புக் கலவையைக் கலந்து விடுவது அவசியம்). இது வெறும் வாணலியில் அரிசி பருப்பை நன்கு வறுப்பதற்குச் சமமாகும்.

'மொறமொற' என்று இருக்கும் அரிசி - பருப்புக் கலவையை மிக்ஸியில் ரவைப் பதத்துக்கு பொடித்துக் களைந்து வைத்துக் கொள்ளவும். இந்த ரவையை இரண்டரை கப் கொதிக்கும் தண்ணீரில் போட்டு, ஒரு மைக்ரோ ப்ரூஃப் கண்ணாடிப் பாத்திரத்தில் போட்டு எட்டு நிமிடங்கள் (இடையில் இரண்டு முறை எடுத்துக் கலக்கவும்) ஹை பவரில் வைத்து

ஆல் இன் ஒன் சமையல்!

எடுக்கவும்.

ஒரு கப் தண்ணீரில் தூளாக்கிய வெல்லத்தைப் போட்டு ஒரு மைக்ரோ ஃப்ரூஃப் கண்ணாடிப் பாத்திரத்தில் நான்கு நிமிடங்கள் ஹை பவரில் வைத்து எடுத்து, ஆறியவுடன் வடிகட்டி, வெந்த ரவையுடன் ஊற்றிக் கலந்து, நெய், ஏலத்தூள் சேர்த்துக் கலந்து மீடியம் ஹை பவரில் ஆறு நிமிடங்கள் (இடையில் இரண்டு முறை வெளியே எடுத்து கலக்கவும்) வைத்து எடுத்தால் திருவாதிரைக் களி கமகமக்கும்!

ஏழுகாய் குழம்பு

தேவையானவை:

நாட்டுக் காய்கள் மற்றும் கிழங்குகள் பரங்கிக்காய், பூசணிக்காய், அவரைக் காய், வாழைக்காய், சேனை, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, சேப்பங்கிழங்கு - தலா 100 கிராம்,

சாம்பார்ப் பொடி - 2 டீஸ்பூன்,
மஞ்சள் பொடி - ½ டீஸ்பூன்,
உப்பு - தேவையான அளவு,
எண்ணெய்- 2 டேபிள் ஸ்பூன்,
புளி-1 சிறிய எலுமிச்சை அளவு


1. வறுத்து அரைக்க:

தனியா, 2 டேபிள் ஸ்பூன்,
கடலைப் பருப்பு - 1 டேபிள் ஸ்பூன்,
மிளகாய் வற்றல் - 4,
பெருங்காயம் - 1 சிட்டிகை.

2. முழு உளுத்தம் பருப்பு - 1 டேபிள் ஸ்பூன்,
மிளகு - ¾ டீஸ்பூன்,
மிளகாய் வற்றல் - 2,
தேங்காய்த் துருவல் - 1 கப்,

தாளிக்க:

எண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன்,
கடுகு - ½ டீஸ்பூன்,



உளுத்தம் பருப்பு - 1 டீஸ்பூன்,
பெருங்காயம் - 1 சிட்டிகை,
வெந்தயப் பொடி - ¼ டீஸ்பூன்,
வேர்க்கடலை - 2 டேபிள் ஸ்பூன்,
கொத்துமல்லி, கறிவேப்பிலை - சிறிதளவு.

செய்முறை:

★ புளியை நீரில் கரைத்து வடிகட்டி, அதனுடன் பெரிய துண்டுகளாக நறுக்கிய காய்கள், சேனை, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, சாம்பார்ப் பொடி, மஞ்சள் பொடி, உப்பு சேர்த்து, அடிகனமான உருளி/குக்கரில் குழைய விடாமல் சற்றே 'க்ரிஸ்பியாக' வேகவைக்கவும்.

★ வறுத்து அரைப்பதற்கு நம்பர் 1ல் கொடுக்கப்பட்ட பொருள்களை 1 டேபிள் ஸ்பூன் எண்ணெயிலும், நம்பர் 2 இல் கொடுக்கப்பட்ட பொருள்களை 1 டேபிள் ஸ்பூன் எண்ணெயிலும் தனித்தனியே வறுத்து, தேங்காய்த் துருவலோடு மிக்ஸியில் விழுதாக அரைத்துக் கொள்ளவும்.

★ வெந்த காய்களுடன், குக்கரில் வேகவைத்து தோலுரித்த சேப்பங் கிழங்கு, அரைத்த விழுதைச் சேர்த்து, ஒரு கொதி விட்டு இறக்கவும்.

★ ஒரு வாணலியில் எண்ணெய் ஊற்றி, தோலுரித்த வேர்க்கடலையை வாசனை வர வறுத்து எடுத்துக் கொண்டு, பின்பு தாளிக்கக் கொடுத்திருக்கும் பொருள்களைச் சேர்த்துத் தாளித்து ஏழு காய் கூட்டுக் குழம்பில் ஊற்றிக் கறிவேப்பிலை, கொத்துமல்லி தூவவும்.

காம்பினேஷன் குறிப்புகள்:

ஆல் இன் ஒன் சைட்டிஷ்:

சுவையான ஏழு காய் கூட்டு, களிக்கு மட்டுமின்றி, சாதம், கல் தோசை, சப்பாத்தி, அடை போன்றவற்றுக்கும் ஏற்ற சூப்பர் சைட்டிஷ்!

குழம்புச் சுவை தூக்கலாக விரும்புவோர்:

வேகவைத்த துவரம் பருப்பு, மற்றும் தக்காளிக்காய், முள்ளங்கி, கத்தரி, முருங்கை போன்ற காய்களைச் சேர்த்தால் குழம்பின் மணம் நாசியைத் துளைக்கும்.

கூட்டுச்சுவை தூக்கலாக விரும்புவோர்:

பாசிப்பருப்பை சீரகம் சேர்த்து வேகவைத்து, உளுத்தம் பருப்பு + மிளகு+ மிளகாய் வற்றல் வறுத்து அரைப்பதை சிறிது அதிகப்படுத்திச் சேர்த்தால் கூட்டின் சுவை ஊரைக் கூட்டும்!

திருவாதிரைக் களியின் சைட்டிஷ் காம்பினேஷன் குழம்பா, கூட்டா என்று குழம்பினாலும் அட்டகாசமான ருசியில் முடியும் என்பது சரிதானே?!

(தொடர்ந்து கலக்குவோம்)



பூஸ்ட், ஹார்லிக்ஸ் போன்றவை பாதியளவு உபயோகிக்கும்போதே கட்டியாகி விடும். வாங்கியவுடனே காற்றுப்புகாத டப்பாவில் பாதியளவு போட்டு மூடி, ஃப்ரிஜ்ஜில் வைத்துவிட்டால், தேவையான போது உபயோகித்துக் கொள்ளலாம்.



- மீனாக்ஷி ரகுபதி, சென்னை-78.



Exclusive Collection for
For all Customer Who Can't Compromise on Quality
Born Babies®
LITTLE KIDS™
Born Babies® LITTLE KIDS
★ Keeping in mind about baby's tender skin Eco-Friendly technologies are being used in our manufacturing Facilities
★ Fulfilling customer's Specific requirements
★ Do's & Don't Free broucher for Pregnant women and Born Babies
COIMBATORE
69, T.V. Samy Rd, R.S.Puram East, Coimbatore - 2.
☎ 0422 - 254 1626, 436 6455
Customer Care No : 98438 88811
CHENNAI
18, Lokesh Towers, Kodambakkam High Road, Nungambakkam, Ch - 34. ☎ 044 - 2825 0067
Customer Care No : 97109 22230
334/2, 2nd Avenue, Anna Nagar West, Ch - 40, (Opp. To Nilgiris)
☎ 044 - 2616 2225
Customer Care No : 99419 11120
COCHIN
Rubicon Building, South Over Bridge, Valanjambalam, Cochin - 16.
☎ 0484 - 235 8818, 403 0220
Customer Care No : 98951 08686
HYDERABAD
LG-15, City Center Mall, Road No. 1, Banjara Hills, Hyderabad - 500 034.
☎ 040 40033391
Customer Care No : 9908404222
Call or Visit us and avail VIP Offer Card for Pregnant Women and Born Babies
www.bornbabies.in

ரூ.15,000 பரிசு

சேலை சேலஞ்ச் - 2 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்!



விடைகள்:

1. மதுரை, 2. ஆந்திரப்பிரதேசம், 3. காஞ்சிப் பட்டு, 4. எடை குறைந்தவை, 5. சின்தெடிக்

பாலம் சில்க்ஸ் வழங்கும் ரூ.1500 மதிப்புள்ள பரிசுக் கூப்பன்களை பெறும் அதிர்ஷ்டசாலிகள்:

1. எஸ்.ரமணி ராமசந்திரன், திருவனந்தபுரம், 2. உஷா வாசுதேவன், சித்தூர், 3. ஜே.கஸ்தூரி, திருவான்மியூர், 4. ஏ.ஹில்டா, திருச்சி, 5. பிரேமா மாணிக்கராஜ், வடக்கன்குளம், 6. ஆர்.ஜெயலக்ஷ்மி, உய்யக்கொண்டான்திருமலை, 7. நா. ராஜேஸ்வரி. சிவகாசி, 8.மு. உமா, கவுண்டம்பாளையம், 9. பி.அன்னபூரணி, நாமக்கல், 10. பத்மாவதி குருந்தாசலம், திருப்பூர்.

டிசம்பர் பதினைந்தாம் தேதிக்குள் பரிசுக் கூப்பன்கள் அனுப்பி வைக்கப்படும். தங்களுக்குக் கூப்பன் கிடைத்ததும் கடிதம் (அ) தொலைபேசி மூலமாக எங்களுக்கு தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். **(ஆர்.)**

---

* ஒரு வற்றல் மிளகாயை, பாலில் ஊறவைத்து நைசாக அரைத்துத் தலையில் தேய்த்து இரண்டு மணி நேரம் ஊறவிடவும். பிறகு, தலையை வெதுவெதுப்பான நீரில் அலசினால் தலைவலியே வராது.

* மாதம் இரண்டு முறை வெள்ளை மிளகை, பாலில் அரைத்துத் தேய்த்துக் குளித்து வந்தாலும் தலைவலி வராது.

* வேப்பங்கொட்டையைப் பாலில் அரைத்துத் தேய்த்து வந்தாலும் தலைவலி வராது.

* கறுப்பு மிளகை பாலில் கலந்து நைசாக அரைத்து, 'பத்து' போட்டாலும் தலைவலி இருக்காது.

* நெற்றிப்பொட்டுகளில் வலித்தால் சுக்கை பாலில் நன்றாக இழைத்துப் போடவும். உடனே தலைவலி போய்விடும்.

- உஷா ராமமூர்த்தி, கொல்கத்தா.



தலைவலிக்கு டாட்டா!

சுடச்சுட
செய்திகள்...
சுவையான
மாற்றங்கள்

கல்கி

ஸ்டைலா...ஸ்மார்ட்டா...

வாராவாரம்
ஆரவாரம்

ஞாயிறுதோறும்
கடைகளில்...

அடுத்தடுத்த
அதிரடிகள்

06.12.09

சிநேகித எழுத்தாளர்கள்

சுபா

வழங்கும்

நட்பு ஸ்பெஷல்



13.12.09
மியூஸிக் ஸ்பெஷல்

20.12.09
இன்டர்நெட் ஸ்பெஷல்

27.12.09
அழகு ஸ்பெஷல்

உங்கள் பிரதிக்கு உடனே முந்துங்கள்...

யாரை, எங்கே, எப்படி?



'பான்கார்ட்'

2005 முதல் வருமான வரித்துறை சம்பந்தப்பட்ட வரி செலுத்தும் சலான்கள், கடிதப் போக்குவரத்து என அனைத்திலும் பான் நம்பரைக் குறிப்பிடுவதைக் கட்டாயமாக்கி இருக்கிறது மத்திய அரசாங்கம். அது என்ன PAN? பர்மனென்ட் (Permanent Account Number) என்பதன் சுருக்கம்தான் பான்.

பான் நம்பர் என்பது ஆங்கில எழுத்துக்களும், எண்களும் கலந்து உருவாக்கப்பட்ட ஒரு பத்து இலக்க எண். அது உங்களுக்காகவே பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட ஓர் எண். நாடு முழுக்க சல்லடை போட்டு சலித்தாலும், உங்களைப் போலவே முகச் சாயல் கொண்ட இன்னொருவரைக் கூடக் கண்டு பிடித்துவிடக்கூடும்; ஆனால் உங்களுடைய எண்ணையே பான் நம்பராகக் கொண்ட இன்னொருவரைப் பார்க்க முடியாது. அதே போல ஒருவர் இரண்டு பான் நம்பர்கள் வைத்திருப்பதும் சட்டப்படி தவறு.



2005 ஜனவரி முதல் தேதியிலிருந்து வருமான வரித்துறையுடனான கடிதப் போக்குவரத்து, வருமான வரி ரிட்டர்ன், வருமான வரி செலுத்தும் சலான், 50 ஆயிரத்துக்கு மேல் ரொக்கமாக

ஃபார்ம் 49ஏ

இதுதான் பான் கார்டுக்குரிய விண்ணப்பம். இதில் உங்களுடைய இனிஷியலுக்கான விரிவாக்கத்துடன், உங்களது பெயரைக் குறிப்பிட வேண்டியது மிக அவசியம். இதில் ஏதாவது குளறுபடி என்றால் உங்கள் பான் கார்டு வழங்குவதில் தாமதமாகலாம்; உங்களுக்கு வேறு ஏதாவது பெயர் இருந்தால், அதையும் விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

தந்தையின் பெயர் என்ற இடத்தில் திருமணமான பெண்களும், தங்களது தந்தையின் பெயரையே குறிப்பிட வேண்டும்; வீடு மற்றும் அலுவலக முகவரி, எஸ்.டி.டி., குறியீட்டுடன் டெலிஃபோன்

ங்கிக் கணக்கில் ணம் போடும்போது, ங்கிகளில் ஃபிக்ஸட் _பாசிட் போடுகிற ாது, சொத்துக்கள் வாங் ம்போது, விற்கும்போது, யல்நாட்டுப் பயணம் ய்கிறபோது என்று பல சமயங்களிலும் பான் எண்ணைக் குறிப் பிட வேண்டியது கட்டாயமாக்கப் பட்டிருக்கிறது.



பெறுவது எப்படி?

ம்பர், மொபைல் எண், றந்த தேதி, அரசு ஊழி ரா, தனியார் துறையா பான்ற விவரங்களைக் றிப்பிட வேண்டும்.

பாஸ்போர்ட் விண் ாப்பிக்கத் தேவைப்படும் 5 செ.மீ., x 2.5 செ.மீ ளவுள்ள, தெளிவான கைப்படத்தை விண்ணப் ந்தில் அதற்குரிய இடத் ல் ஒட்ட வேண்டும். ிண்ணப்பத்துடன் இணைக்க வேண்டிய மிக முக்கியமான டாக்கு மென்ட்கள் இரண்டு. அடையாள அத்தாட்சி. மற்றும் வசிப்பிட முகவரி.

ரேஷன் கார்டு, பாஸ்போர்ட், வாக் ாளர் அடையாள அட்டை, டிரைவிங் லைசென்ஸ், அல்லது _ங்கள் தொகுதிக்கான எம்.பி., எம்.எல்.ஏ., வார்டு கவுன்சிலர், கெசடட் அரசு அதிகாரி இவர்களில் யாராவது ஒருவர் வழங்கிய அடையாளச் சான்றிதழ் இவற்றில் ஏதாவது ஒன்றின் ஒரு பிரதியை இணைத்தால் அதுவே ஆள் அடையாளம், மற்றும் வசிப்பிட அத்தாட்சி இரண்டுக்கும் உரியதாக ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்களுடைய பிறந்த குழந்தைக்குக் கூட நீங்கள், பான் கார்டு கேட்டு விண்ணப்பிக்க முடியும். பிறந்த குழந்தைக்கு எதற்கு பான் கார்டு என்று நீங்கள் கேட்கலாம். சிலர், மைனர் குழந்தைகளின் பேரில் வங்கியில் டெபாசிட் போடலாம்; சொத்து வாங்கலாம்; ஷேர் களிலோ இதர வகை களிலோ முதலீடு செய்யலாம். அப்போது பான் நம்பர் கேட் பார்கள். எனவே, தேவைப்பட்டால் குழந்தைகளுக்கும் பான் கார்டு வாங்கி வைத்துக் கொள்ளலாம்.



யு டி ஐ இன்வெஸ்டார் சர்வீஸஸ் லிமிடெட், நேஷனல் செக்யூரிடீஸ் டெபாசிடரி லிமிடெட் இவை வருமான வரி துறையின் சார்பில் பான்கார்டு வழங்கும் பணியைச் செய்துவரும் முக்கிய இரண்டு நிறுவனங்கள். எனவே, வருமான வரித் துறையின் www.incometaxindia.gov.in அல்லது இந்த நிறுவனங்களுக்கான www.tin.nsdl.com ஆகிய இணையதளங்களிலிருந்து 49ஏ விண்ணப்பத்தை டவுன்லோடு செய்து கொள்ளலாம். இணைய வசதி இல்லாது போனால், நாடெங்கும் இயங்கி வரும் இந்த நிறுவனங்களின், அதிகாரபூர்வ ஏஜண்ட்களாக செயல்பட்டுவரும் கார்வி கன்சல்டன்சி போன்ற நிதி ஆலோசனை நிறுவன மையங்களை அணுகலாம். வரி சம்பந்தப்பட்ட பல்வேறு விண்ணப்பங்களும் ஐந்து ரூபாயில் கிடைக்கிறது. விண்ணப்பத்தை A4 அளவுள்ள தரமான தாளில் நகல் எடுத்தும் பயன்படுத்தலாம். அருகிலுள்ள வருமான வரித் துறை அலுவலகத்தை நாடி வேண்டிய உதவி பெறலாம்.



மேலும் பான் கார்டு குறித்த தகவல்களுக்கு:

☏போன்: 022-2721 8080; ஈமெயில்: tininfo@nsdl.co.in

PAN என்று அடித்து ஒரு ஸ்பேஸ் விட்டு உங்களுக்கு தரப்பட்ட acknowledgement Noஐ டைப் செய்து, 53030 என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பி, பான் கார்டு எந்த நிலையிலிருக்கிறது என்று அறிந்து கொள்ளலாம்.

கடிதம் எழுத முகவரி: Income tax PAN services Unit (managed by NSDL), Third Floor, Sapphire Chambers, Near Baner Telephone Exchange, Baner, Pune-411 045.

தொகுப்பு : **எஸ்.சந்திரமௌலி**





நாலே நாளில் பான் எண் கிடைக்கும். பத்தே நாட்களில் பான் கார்டு வந்துவிடும். கட்டணம் ரூ. 250 என்று நாளுக்கு, நாலு எஸ்.எம்.எஸ்.கள் அனுப்பும் அளவுக்கு நாடெங்கும் பான் கார்டு வாங்கித் தரும் சேவைக்கான ஏஜென்ட்கள் நிறைந்திருக்கிறார்கள். விண்ணப்பத்திலோ கட்டணம் அறுபது ரூபாய், பிளஸ் வரிகள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிகாரபூர்வ ஏஜென்சி நிறுவனங்கள் 94 ரூபாய் வசூலிக்கின்றன.

உங்கள் விண்ணப்பத்தை வாங்கும்போது அதற்கான ரசீதில் ஓர் எண் குறிப்பிடப்பட்டிருக்கும். குறிப்பிட்ட காலத்துக்குள் பான் கார்டு வராது போனாலோ, வேறு பிரச்னை என்றாலோ கடிதம் எழுதும்போது இந்த எண்ணைக் குறிப்பிட வேண்டியது மிக அவசியம்.

ஹாய், காலேஜ் பாய்ஸ் அண்ட் கேர்ள்ஸ்!



1. 'மதர் த இந்திராகாந்தி ஸ்டோரி' படத்தில் இந்திரா காந்தியாக நடிக்கும் நடிகை யார்? ....

2. பரபரப்பாகக் கிளம்பியிருக்கும் இலங்கை இராணுவ முன்னாள் தளபதியின் பெயர்? ....

3. அண்மையில் சிவசேனா கட்சியால் கடுமையாக விமர்சிக்கப்பட்ட கிரிக்கெட் வீரர் யார்? ....

4. தமிழக சட்டசபைக்கான இடைத்தேர்தல் நடக்கவிருக்கும் தொகுதிகள் யாவை? ....

5. தமிழகம் மற்றும் கேரள அரசுகளுக்கு இடையே சுப்ரீம் கோர்ட்டில் நடந்து வரும் வழக்கு எந்த அணையைப் பற்றியது? ....

போட்டிக்குத் தயாரா?

யூத் எடிஷன் பக்கங்கள்

கடைசித் தேதி: 15.12.09

உங்களுக்கு நாட்டு நடப்புத் தெரியுமா? இந்தக் கேள்விகளுக்கான விடைகளை எழுதி, இந்தப் பக்கத்தை நிரப்பி அனுப்புங்க. கல்லூரி அத்தாட்சி அவசியம். சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்ட ஐந்து பேருக்கு தலா ரூ.100/- பரிசும், சான்றிதழும் உண்டு.

பெயர் : .... வகுப்பு : .... ஈ மெயில்..

கல்லூரி : ....

வீட்டு முகவரி : ....



சும்மா ஜாலிக்கு...

◆ வாழை மரம் தார் போடும். ஆனால் அந்தத் தாரை வெச்சு ரோடு போட முடியுமா?

◆ ஹேண் வாஷ்னா கை கழுவறது, ஃபேஸ்வாஷ்ன்னா முகம் கழுவறது, அப்போ ப்ரைன் வாஷ்னா...?

● நின்னுக்கிட்டிருக் ரயில் முன்னாடி ஓட முடியும். ஆனால் ஓடுற ரயில் முன்னாடி நிக்க முடியுமா? யோசி மவனே யோசி!

◆ செல்ஃபோன்ல பேலன்ஸ் இல்லேன்னா கால் பண்ண முடியாது. மனுஷனுக்கு கால் இல்லேன்னா பேலன்ஸே பண்ண முடியாது.

◆ கார் ஓட்ட, லைசென்ஸ் வாங்கணும். பைக் ஓட்ட, லைசென்ஸ் வாங்கணும். அப்ப ஈ ஓட்ட லைசென்ஸ் வாங்கணுமா...?

◆ டீ.வி.க்கும் வாட்ச்சுக்கும் என்னடா வித்தியாசம்? டீ.வி.யை வாட்ச் பண்ண முடியும். ஆனால் வாட்சை டீ.வி. பண்ண முடியாது.

◆ காப்பிப் பொடியைக் கலந்தா காப்பி கிடைக்கும். 'டீ' பொடியைக் கலந்தா 'டீ' கிடைக்கும். எறும்புப் பொடியைக் கலந்தா எறும்பு கிடைக்குமா?

◆ பஸ் ரூட்ல பஸ் போகும், டிரெயின் ரூட்ல டிரெயின் போகும். உன் ரூட்ல நீ போவே, அப்ப பீட்ரூட்ல என்ன போகும்...?

◆ சவுத் இண்டியாவில் 'நார்த்'தங்காய் கிடைக்கும். ஆனால் நார்த் இண்டியாவில் 'சவுத்'தங்காய் கிடைக்குமா?

- சந்தியா.வே., பி.ஈ. மூன்றாமாண்டு, (ஜியோ இன்ஃபர்மாடிக்ஸ்) அண்ணா பல்கலைக்கழகம்.



வெட்கத்தால்...

பூவாக நான் பிறந்திருந்தால்
வாசமாய் வந்து
என் காதலை
உன்னிடம் தெரிவிப்பேன்!
மரமாக நான் இருந்தால்
காற்றாக வந்து
என் காதலை
உன்னிடம் தெரிவிப்பேன்!
பெண்ணாகப் பிறந்துவிட்டேன்...
என்ன செய்வது?
வெட்கத்தால் வெளிப்படுத்துகிறேன்
என் காதலை உன்னிடம்...
எப்பொழுது
என் காதலை உணர்ந்து
என்னை ஏற்றுக்கொள்வாய்
உன்னவளாக?

- வி.மஹாலக்ஷ்மி, பி.காம்., சி.ஏ., இரண்டாம் ஆண்டு, பி.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாமக்கல்.

மணியான பத்து!

பள்ளிப் பிள்ளைகளுக்கு என்னுடைய தாத்தா தந்த மணியான பத்துக் கட்டளைகள் :

இவற்றை இயன்றவரை நானும் கடைப்பிடிக்கிறேன்.

✠ சோம்பல் என்பது உன்னுடைய வாழ்க்கையில் பெரும் இழப்பு. ஆகவே அதை உடனே வீசி விடு.

✠ தேவையற்றவற்றை உன்னுடைய வாழ்க்கையிலிருந்து விலக்கி விடு.

✠ தன்னம்பிக்கை கொள்வது தன்னையும் மதித்து பிறரையும் மதிக்க வைக்கும்.

✠ நாம் நம்முடைய செய்கையால்தான் பெருமைபடுத்தப்படுகிறோம் என்பதை ஒருபோதும் மறந்துவிடாதே.

✠ நாம் மற்றவர்களை மதிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும். நம்முடைய செய்கையால் ஏற்படும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

✠ எதையும் புரியாமல் படிக்காதே. படித்த பிறகு அதைப் படமாகவோ, சித்திரமாகவோ உன் மனக்கண்ணால் பார்; உடனே மனத்தில் பதியும்.

✠ ஆசிரியர், வகுப்பில் பாடம் சொல்லும்போது மிக விழிப்புடன் கவனிக்க வேண்டும். பிறகு, வீட்டுக்கு வந்தவுடன் அதைப் படிக்க வேண்டும். இதனால் மாணவர்களின் புரிதல் விரிவடையும்.

✠ ஞாபகம் இருக்கட்டும். படித்த ஒவ்வொரு விஷயத்தையும் உங்களை நீங்களே, கேள்விகளாகக் கேட்டு பதில் சொல்லிக் கொள்ளுங்கள்.



✠ நம் மூளையின் வளர்ச்சி நாம் எவ்வளவு படிக்கின்றோமோ அதைப் பொறுத்துள்ளது. ஆக, படியுங்கள்! சிந்தியுங்கள்!!

✠ எப்போதுமே, 'ஏன் இப்பொழுதே செய்யக்கூடாது?' என்ற கேள்வியைக் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும். 'அதை ஏன் இப்பொழுதே செய்ய வேண்டும்?' என்ற கேள்வியை மட்டும் கேட்கக்கூடாது!

- பி.நிஷாந்த்
இ.சி.இ. முதலாம் ஆண்டு, பனிமலர் பாலிடெக்னிக் கல்லூரி, சென்னை-34.

தெரிந்து கொள்ள...

இந்திய மக்கள் தொகை, எப்போதோ நூற்று இருபது கோடியைத் தாண்டி விட்டது. நாம் இந்தியர்கள்தான் என்று அடையாளம் காட்ட, பான்கார்டிலிருந்து, ரேஷன் கார்டு வரை எத்தனையோ அடையாள அட்டைகள் புழக்கத்தில் உள்ளன. பல்லாயிரக் கணக்கான கோடி ரூபாய் செலவில், இந்திய மக்கள் ஒவ்வொருவருக்கும் அடையாள எண் வழங்கும் மெகா திட்டம் ஒன்று உருவாகியுள்ளது.

2011-ஆம் ஆண்டு, மக்கள் தொகைக் கணக்கு எடுக்கப்படும்போது, ஒவ்வொரு குடிமகனின் பத்து விரல் ரேகைகளும் பதிவுசெய்யப்படும் அல்லது கண்ணின் கருவிழியைப் படமாக எடுக்கப்படும். அதைப் பயன்படுத்தி ஒவ்வொரு குடிமகனுக்கும் பதினாறு இலக்கங்கள் உள்ள அடையாள எண் ஒன்று தரப்படும். இந்த அடையாள அட்டை, வெறும் ஐ.டி. கார்டு மட்டுமே! இதைப் பயன்படுத்தி, குடியுரிமை உள்பட எவ்வித உரிமையையும் பெற முடியாது. ஆயினும், அரசாங்கத்தின் வளர்ச்சித் திட்டங்களால் போலி நபர்கள் பயன் பெறுவதை இந்த அடையாள எண் மூலம் தடுக்கலாம்.

இந்திய தேசிய அடையாள ஆணையத் தலைவராக, நந்தன் நீல்கனி, பொறுப்பேற்றிருக்கிறார். இவர் பிரபல ஐ.டி. நிறுவனமான இன்ஃபோஸிஸின் முன்னாள் தலைவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

''அடையாள எண் வழங்கும் திட்டம் இன்னும் இரண்டாண்டுகளில் தொடங்கிவிடும். 2014-க்குள் அறுபது கோடி பேருக்கு அடையாள எண் வழங்க இலக்கு நிர்ணயித்திருக்கிறோம். முழுக்க முழுக்க கணினிமயமாகவும், துல்லியமாகவும் இருப்பதற்காக செயல் திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறோம்.

''ஏழைகள் மற்றும் நலிந்த பிரிவினரின் நன்மைக்காகத் தீட்டப்பட்டுள்ளதால், மிகவும் கவனமாகச் செயல்படவிருக்கிறோம். முதலில், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் பயனாளிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்படும்'' என்கிறார் நந்தன் நீல்கனி.

- ஆர்.சங்கமித்ரா,
பன்னிரண்டாம் வகுப்பு,
பிரின்ஸ்
மெட்ரிகுலேஷன்
பள்ளி, நங்கநல்லூர்.



போட்டிக்குத் தயாரா? (முடிவுகள்)

மங்கையர் மலர் - நவம்பர் இதழில் வெளியான 'போட்டிக்குத் தயாரா?' - கேள்விகளுக்கான சரியான விடைகள் :

1. கத்தரிக்காய், 2. கோவை, 3. வீரேந்திர ஸேவாக், 4. ஆதவன், 5. பத்து விரல்.

பரிசாளிகள்:

1. ஜி.ஸ்வேதா மாதவன்ஜீ, அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரி, ஹைதராபாத்-79.

2. எஸ்.ராஜா, இரண்டாமாண்டு,பி.எஸ்.ஸி., அறிஞர் அண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கிருஷ்ணகிரி.

3. எஸ்.சுதர்ஷினி,பி.காம்., அண்ணா ஆதர்ஷ் மகளிர் கல்லூரி, சென்னை.

ரூ.100/- பரிசு பெறும் மாணாக்கர்கள்



4. எஸ்.விக்னேஷ் வி.எல்.பி. ஜானகி அம்மாள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி கோவை - 9.

5. ஆர்.கதிர், பி.ஈ.மூன்றாமாண்டு, சவீதா பொறியியல் கல்லூரி, சென்னை.



உணர்ந்து கொள் உணர்ச்சி கொள்!

தோல்வியின்றி வெற்றியில்லை,
துன்பமின்றி இன்பமில்லை,
அலைகளின்றி கடலில்லை,
இரசனைகளின்றி காவியமில்லை,
போட்டியின்றி வீரர்களில்லை,
கருணை இன்றி கடவுள் இல்லை,
மானிடா! உணர்ந்துகொள், உணர்ந்தால்
நீயின்றி - நானில்லை!

- மு. திருமுருகன், வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோத்தகிரி.

மல்லுக்கு நிற்காதே மனசே!



மனவியல்

வாழ்க்கையின் குறிக்கோள் என்ன? மனிதனும், குழந்தையாகத்தான் பிறக்கிறான். குழந்தையின் உடல் கொஞ்சம் கொஞ்சமாக வளர, இயற்கை உதவுகிறது. பள்ளிக்குச் செல்கிறான். பட்டதாரி ஆகிறான். இதற்கு நிறைய உழைக்க வேண்டும். எந்தவித முயற்சியும் எடுக்காமல் சும்மா ஊரைச் சுற்றிக் கொண்டு இருந்தாலும் அவன் வாலிபனாகி கல்யாணத்துக்குத் தயாராகி விடுகிறான்.

உண்மையான வாழ்க்கை என்பது இதுதானா? உடல் வளர்ச்சியை மாத்திரம் பக்குவப்பட்ட வளர்ச்சி என்று சொல்ல முடியாது. மனதளவில் பக்குவப்பட வேண்டியது மிக முக்கியம், அவசியமும் கூட. மனம் மலர வேண்டும். சுற்றிலும் மணம் கமழ வேண்டும்.

மனம் பக்குவப்படாமல் இருப்பதால் ஏற்படும் பிரச்னைகள் பலப்பல. ஒரு மனிதன் பிறக்கும்போதே குற்றவாளியாகப் பிறப்பதில்லை. 'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே' என்கிறார் கவிஞர். குழந்தைப் பருவத்தில் ஏற்படும் மனஉளைச்சலும் குழப்பமுமே அவன் குற்றவாளியாகக் காரணம். மனிதனை உருவாக்குவது அவனது குழந்தைப் பருவம்தான். குழந்தைப் பருவத்தை யாரும் தவிர்க்க முடியாது. வாலிபராகும் போது மனமும் பக்குவப்பட்டிருக்க வேண்டும்.

நம்மை நாமே பக்குவப்படுத்திக் கொள்ள, நம் அறிவை வளர்த்துக் கொள்ள வேதாந்தம் வழிவகுத்துக் கொடுக்கிறது. வேதாந்தம் நமக்கு நேரடியான அறிவைத் தரும் சாதனமாகும். வேதாந்தக் கருத்துக்களிலும், வேதாந்த பாடங்களிலும் நம்மை உட்படுத்திக் கொள்ளவேண்டும்.

மனத்தை எப்படி ஒழுங்குக்குக் கொண்டு வர வேண்டும். முனைப்போடு பயிற்சி செய்தாலே போதும், நமக்குப் பிடிக்காததைக்கூட மனம் ஏற்றுக் கொள்ளத் தொடங்கும். சூழல் அமைதியாக





யாராவது எதையாவது சொன்னா. அதுக்கு மாற்றுக் கருத்து இருந்தால்தான் விவாதம் சூடுபறக்கும். சிந்தனைகள் சிறக்கும். நீங்களும் கலந்துக்குங்களேன்.

ஏட்டிக்குப் போட்டி!

பெண்ணுக்கு யார் எதிரி?



ஆணா? பெண்ணா?

இந்தத் தலைப்பில் ஏதாவது ஒரு அணியின் சார்பாகத் தோன்றும் கருத்துகளைப் பத்து வரிகளுக்கு மிகாமல் அஞ்சலட்டையில் மட்டுமே தெளிவா எழுதி அனுப்புங்க.

நடுவர் : எழுத்தாளர் அனுராதா ரமணன்

கடைசித் தேதி : 15.12.09

இருந்தால்தான் மனம் அமைதிபெறும் என்று நினைப்பது ஆபத்தான கணிப்பு. அமைதிக்காக மனத்துடன் போராட்டம் நடத்தும்போது நிம்மதி பறிபோகிறது.

மனத்துடன் நீங்கள் சண்டை போடுவதை நிறுத்திவிட்டாலே போதும்; மனம் அமைதியாகிவிடும். மனத்தை அதன் போக்கிலேயே விட்டுவிட வேண்டும். மனத்துடன் மல்லுக்கு நிற்காமல் விலகியிருந்து வேடிக்கை பார்க்கக் கற்றுக் கொண்டால், மனம் நாம் கூப்பிட்டக் குரலுக்கு ஓடி வரும்.

வாழ்க்கை பல்வேறு அனுபவங்கள் நிறைந்தது என்பதைப் புரிந்து கொள்ளாமல், சுயமதிப்பீடு செய்கிறோம். தோல்வி என்று புழுங்குகிறோம். மனப்பக்குவம் என்பது நம் ஒவ்வொருவருக்கும் தேவை. வழிபாடுகள், பிரார்த்தனைகள், வேதாந்தம் படிப்பது எல்லாம் நம் மனம் பக்குவமடைவதற்கு உதவும்.

மனப்பக்குவம் அடைந்தவன், ஒரு சூழ்நிலை ஏற்படுத்தும் பிரச்னைகளைத் தட்டிக் கழிப்பது இல்லை. இந்த மனப் பக்குவம் உள்ள பார்வை உண்மைகளையும் யதார்த்தங்களையும் புரிந்து கொண்டு வாழ்க்கையைச் செப்பனிட உதவும்.

வாழ்க்கையில் உண்மைகளை ஏற்க மறுப்பதே, பல பிரச்னைகளுக்குக் காரணமாக அமைகிறது. உலகை நம்மால் மாற்றி அமைக்க முடியாவிட்டாலும், பிரச்னைகளையும் சூழ்நிலைகளையும் எதிர்கொள்ளப் பழகலாமே. இதற்குச் சூழ்நிலையைப் புரிந்துகொள்ளும் திறன் இருந்தாலே போதுமே.

'மனம் மலரட்டும்' சுவாமி தயானந்த சுவாமியின் புத்தகத்திலிருந்து...

- மீ.சொர்ணம், திருப்பூர்.



வெங்காயத்தை நறுக்கி, உப்பு தூவி பத்து நிமிடங்கள் ஊறவைக்கவும். அதில் கடலை மாவு, காரப் பொடி கலந்து தண்ணீர் சேர்க்காமல், சிறிது காய்ச்சிய எண்ணெய் மட்டும் விட்டுப் பிசைந்து, பக்கோடா செய்தால், 'மொறு மொறு' என்று ருசியாக இருக்கும்.

- அ.யாழினி பர்வதம், சென்னை-78.

உள்ளாடைகள் வாங்கும் போது குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு குறிப்பிட்ட பிராண்ட் எனப் பிரித்து, ரெகுலராக வாங்கினால், 'எது யாருடையது?' என்ற பிரச்னை எழுவதைத் தவிர்க்கலாம்.

- எஸ்.விஜயலக்ஷ்மி, ஹைதராபாத்.

பூச்செடி வைக்க இடமில்லையே என்று நினைப்பவர்கள் இந்த மழைக்காலத்தில் சின்னச் சின்னத் தொட்டிகளில் பால்சம் விதைகளைத் தூவி விடலாம். சீக்கிரமே வளர்ந்து கலர் கலராகப் பூத்து மனத்திற்கு மகிழ்ச்சியளிப்பதோடு, பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கும்.

-தி.மங்கையர்க்கரசி, கரூர்.

திருப்பதிக்குச் செல்பவர்கள் சந்திர கிரகணம், சூரியகிரகணம் வரக்கூடிய நாட்களில் செல்வதைத் தவிர்ப்பது நல்லது. அந்நாட்களில், கோயிலை மூடிவிடுவதால் சுவாமியைத் தரிசிக்க இரண்டு நாட்கள் ஆகிவிடுகின்றன. அதுமட்டுமல்லாமல் செல்ஃபோன், கேமரா எடுத்துச் செல்வதால், அதைப் பாதுகாப்பாக வைக்க வரிசையில் நிற்கும்போது நேரமும் விரயமாகிறது.

-கே.செந்தில் வடிவு, வேலூர்.

வெண்டைக்காயை பிளாஸ்டிக் பையில் போட்டு, ஃப்ரிஜ்ஜில் வைத்தால் சீக்கிரம் முற்றிவிடும். காம்பை வெட்டி விட்டு, துணியில் சுற்றி வைத்தால் நான்கைந்து நாட்கள் வரை இளசாகவே இருக்கும்.

- வி.பத்மாவதி, திருப்பத்தூர்.

செல்ஃபோனிலோ அல்லது டைம்பீஸிலோ அலாரம் வைக்கும்போது கைக்கு எட்டும் தூரத்தில் வைக்காதீர்கள். தூக்கக் கலக்கத்தில் அதை நிறுத்தி விட்டுத் தூங்க நேரிடும். தூரத்தில் வைத்தால் நடந்து செல்லும்போது, தூக்கம் கலைந்து விடும்.

- எல்.மோஹனசுந்தரி, கிருஷ்ணகிரி-1.

இவை எல்லாமே ஆஹா 50 தான்!





என்றும் உங்களுடன் புத்தகம்-1

மங்கையர் மலர்

பிப்ரவரி 2010 MANGAYAR MALAR ஆண்டு மலர்

உங்க வயசு 18-30க்குள்ளா? பார்க்க லட்சணமா இருப்பீங்களா? நல்ல மேக்கப், நகையெல்லாம் போட்டு, அழகா டிரஸ் பண்ணி, ஃபோட்டோ எடுத்தா, அசத்தலா இருப்பீங்களா?

கங்ராட்ஸ்! நீங்கதான் மங்கையர் மலர், பிப்ரவரி மாத ஆண்டு மலரின்

அட்டைப்பட அப்ஸரஸ்!

- உடனே பளிச்னு ஒரு ஃபோட்டோ எடுத்து அனுப்புங்க.
- பாஸ்போர்ட் சைஸ், குரூப் ஃபோட்டோ, லாங்ஷாட் புகைப்படமெல்லாம் கூடாது.
- பிரத்யேகமா இதுக்காகவே, தரமான ஃபோட்டோ ஸ்டுடியோ போய், நாலைந்து போஸ் எடுத்து அனுப்புங்க.
- மங்கையர் மலரின் முந்தைய அட்டைப் படங்களை மாடலாகக் கொண்டு, அவற்றைப் போல எடுக்க முயற்சி செய்யுங்க. அதைவிட பிரமாதமாக வந்தாலும் டபுள் ஓகே!
- கேபினட் சைஸ் படங்களை, புகைப்படமாகவோ, சி.டி.யாகவோ எடுத்து எங்களுக்கு அனுப்புங்க.
- புகைப்படமோ, சி.டி.யோ திருப்பி அனுப்பப்படமாட்டாது. எந்தவிதமான கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- ஆசிரியர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

அனுப்ப வேண்டிய முகவரி:
ஆண்டு மலர் அப்ஸரஸ்,
மங்கையர் மலர், 47, ஜவாஹர்லால் நேரு ரோடு,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.





நீங்க ஆண்டுமலர் அப்சரஸ்ஸா?

அட்டைப் பட அழகிக்கு ரூ.3000/- பரிசு!



கூடவே...
'புதுமைப் பெண் என்பவள் யார்?'- இந்தக் கேள்விக்கு சுவையான பதிலை பத்து வார்த்தைகளுக்குள் மிகாமல் 'நச்' என்று எழுதுங்க. கீழ்க்கண்ட கூப்பனை நிரப்பி உங்கள் புகைப்படத்துடன் சேர்த்து, 30.12.09-க்குள் அனுப்புங்க.

....

....

....

....

பெயர் : ....

விலாசம் : ....

....

....

தொலைபேசி எண் : ....

ஈ-மெயில் :..




உங்கள் சேவையில் 22-ம் வருடம்

கேன்ஸர் நோயா?

கவலைப்பட வேண்டியதில்லை.


Dr. K. Sri Sridar


ஹெர்பல் ஆன்காலஜியோடு மெடிக்கல் ஆன்காலஜி, சர்ஜிகல் ஆன்காலஜி, ரேடியோ தெரபி அனைத்தும் குருபாலாவில்.



10-02-2009

CT Scan findings consistent with multiple skeletal mets from Ewing's Sarcoma.

14- வயது பெண்ணுக்கு இடுப்பு பகுதியில் ஏற்பட்ட Pelvic PNET புற்றுநோய் எலும்புகளில் பரவியதை காட்டும் CT ஸ்கேன் படம்.



01-08-2009

Absence of Viable Tumour

டாக்டர்கள் கைவிட்ட நிலையில் 29.04.09 அன்று ஹெர்பல் ஆன்காலஜி சிகிச்சை துவங்கி மூன்று மாதங்களில் ஆச்சர்யமான முறையில் புற்றுநோய் முற்றிலும் குணமானதை காட்டும் PET SCAN.




04-09-2009

No Focus abnormally increased FDG uptake to suggest metabolically active disease on the present study.

சந்தேகத்திற்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காக டாக்டர் கே. ஸ்ரீ. ஸ்ரீதர் அவர்களின் அறிவுரைப்படி மும்பை டாடா மெமோரியல் மருத்துவமனையில் ஒரு மாத இடைவெளியில் மீண்டும் எடுத்த PET SCAN படம் புற்றுநோய் முற்றிலும் குணமானதை காட்டுகிறது.

CA. BREAST TO LUNGS (மார்பக புற்றிலிருந்து நுரையீரல் புற்றுநோய்)




Before Treatment

NODULAR OPACITIES SEEN IN BOTH LUNG FIELDS METASTATIC DEPOSITS

Chest X-ray *Date: 08.06.05*

சென்னையை சேர்ந்த 43 வயது பெண்மணிக்கு மார்பகத்திலிருந்து நுரையீரலுக்கு பரவிய புற்றுநோய் ஹெர்பல் ஆன்காலஜி சிகிச்சைக்குப்பின் எடுத்த டெஸ்ட்டில் புற்றுநோய் இல்லை என்பதை காட்டும் X-ray படம்.



After 68 days Herbal Oncology

NORMAL STUDY

Chest X-ray *Date: 09.09.05*

கை விடப்பட்ட கேன்ஸரா ? கவலை வேண்டாம்

GBM, CA. Oesophagus, Lung, Liver, Cervix, Bone, Prostate, Rectum, Ependymoma, Astro cytoma, Glioma, AML, CML போன்ற அனைத்து வகை புற்றுநோய்களுக்கும் சிறப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது. நோயாளி நேரில் வரவேண்டியது இல்லை. எல்லா ரிப்போர்ட்களையும் அனுப்பி வைக்கவும். Herbal Oncology சிகிச்சை என்பது டாக்டர் கே. ஸ்ரீ ஸ்ரீதர் வடிவமைத்த அற்புதமுறையாகும். பத்தியம் இல்லை. மற்ற மருந்துகளோடும் சேர்த்து சாப்பிடலாம். வாழும்போதே நோய் தொற்று குறைந்து நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் வாழலாம். நோயுற்றவர்களின் வாழ்நாளை 40% அதிகரிக்க முயற்சிக்கலாம். இந்த HerbalOncology சிகிச்சை பயனுள்ளதாக அமைகிறது. டாக்டர்களால் கைவிடப்பட்ட நோயாளிக்கும் உடனே நன்மை அளிக்கிறது.

கேன்சர் என்று தெரிந்தவுடனே நோயாளியை நேரில் அழைத்து வாருங்கள். முறையாக ஒருங்கிணைந்த கேன்சர் சிகிச்சையை பெறுங்கள்.

Royale Apartment, 6, Mannar Reddy Street,
(Opp. Street to T.Nagar Bus Terminus)
T.Nagar, (Next to Krishnaveni Theatre),
Chennai - 600 017.
Weekdays : 10.00 am to 5.30 pm, Sunday Holiday
Clinic: Ph: 044-24339596, 24363835
Cell: 99400 58809

NO
METALS
MERCURY
STEROID
POISON

PURE HERBS BRINGS MIRACLE

Gurubalaa™ Clinic

Speciality Clinic for Herbal Oncology and Asthma

Treatment given by Qualified & Experienced Doctors.

We have no branches


"ஒவ்வொரு கதையிலும் எனக்கொரு கதாபாத்திரம் உண்டு
எவருடைய பொறுப்பிலும் எனக்கும் பொறுப்புண்டு
சிறியது-பெரியது சண்டை எதிலும் பங்கு எனக்குமுண்டு
அம்மா, மகள், மருமகள், மனைவி நான் தாயுமானவள்"
பொறுப்புகளிடையே
வலியும் சேர்ந்திடுமாயின்
இருக்கவே இருக்கு மூவ்
கை கொடுத்திடவே!
இப்போது உடலும் மனசோட
வேகத்துக்கு ஈடு கொடுக்கும்"
நான்கு தீவிர மூலகங்கள் அடங்கிய மூவ் உடனடி பலன்
அளிக்கிறது மற்றும் இடுப்பு வலியிலிருந்து நீடித்த நிவாரணம் அளிக்கிறது
BRAND NEW LOOK
4 Active Ingredients
moov

Registered with the Registrar of Newspaper of India under No. 30309/75 * Registered No. TN/CC(S)DN/170/09-11 - Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/103/09-11 - Registered as a Newspaper in Srilanka



ந்தகம்-2 என்றும் உங்களுடன் டிசம்பர் 2009

மங்கையர் மலர்

திருமண மலர்



மணமக்கள்
பாரதி - திருவள்ளார்

வாராயோ வாராயோ மோனலிசா...

கல்யாணமா?

கல்யாணம் சிறப்பாக அமைய இதோ ஒரு டஜன் யோசனைகள்!



நோ டென்ஷன்!

பளிச் டிப்ஸ்...

* ஜானவாச பொருள்கள், மணப்பெண் அலங்காரம், உறவினர்களுக்குப் பரிசுப் பொருள்கள், நலுங்கு சாமான்கள் என தனித்தனியாக டிரங்க் பெட்டிகளில் போட்டு, 'பளிச்' என்று எழுதியும் வைத்துவிட்டால் கடைசி நேர டென்ஷன் இருக்காது.

* ஃபோட்டோ, வீடியோ எடுப்பவர்கள் மேடையை ஆக்கிரமித்துக் கொள்வதும், குறுக்கும் நெடுக்குமாகப் போய் மறைத்து நிற்பதும் நிச்சயம் தவிர்க்க வேண்டியது.


* ஸ்டோர் ரூம், சீர் வரிசை அலமாரி, மணமகள் அறை போன்றவற்றுக்கு டூப்ளிகேட்

* சம்பந்திகள் மற்றும் முக்கிய உறவினர்களுக்கு அட்சதையுடன் பத்திரிகைத் தந்து அன்புடன் அழைக்க வேண்டும்.




'திருமணத்தில் நல்ல விருந்து உண்டு' என்பதைக் குறிப்பதோடு, நமது அன்பும் செழிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் அந்த அழைப்பில் அடங்கும்.

* புதியப் புதிய உணவு வகைகளைப் போட்டு விருந்து இலையை நிரப்புவதைவிட, சுவையான, சூடான சில பதார்த்தங்களை நிறைவாகப் பரிமாறலாம்.



* ஊஞ்சல், நலுங்கு, இன்னிசைக் கச்சேரி போன்ற விசேஷங்களின் போது, பொருள் பொதிந்த சம்பிரதாயப் பாடல்களைப் பாடுபவர்களைக் கட்டணம் கொடுத்தேனும் அமர்த்திக் கொள்வது நல்லது.





* வீடியோ, ஃபோட்டோ கவரேஜ்களில் எல்லா உறவினர்களும், நண்பர்களும் பங்கெடுக்கும் சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டும். இதனால் மனக்கஷ்டம் உண்டாகாமல் தடுக்கலாம்.

சாவிகள் தயார் செய்து கொள்ளுங்கள். மறதியில் எங்கேனும் வைத்தாலும் பதறத் தேவையில்லை.

* அதிகாலை முகூர்த்தம் என்றால் டிபன் வகைகளைக் குறைத்துக் கொண்டு, காலை எட்டரை மணிக்கே முழு விருந்து கொடுத்து உபசரிக்கலாம்.

* காலை முகூர்த்தத்தன்று அலுவலக வேலை நாளாக இருந்தால், ஒரு பாக்கெட்டில் தயிர் சாதம் வைத்து வேண்டியவர்களுக்குக் கொடுக்கலாம். பலரும் வாழ்த்துவார்கள்.


* திருமணம் முடிந்ததும் புகைப்படங்களின் பின்னால், 'தங்களது வருகைக்கு நன்றி' எனக் கையொப்பமிட்டு, முக்கியமானவர்களுக்கு ஒரு காப்பி அனுப்பி வைத்தால் அவர்களது மனம் மகிழும்.



* மணமக்கள் மட்டுமின்றி, சம்பந்தி வீட்டினர் இருவருமே திருமணம் முடியும் வரை, குறைகளைப் பெரிதுபடுத்தாமல், விட்டுக் கொடுத்து, முகமலர்ச்சியுடன் அனைவரையும் வரவேற்பது மிக அவசியம்.

- ஆர்.லலிதா,
சென்னை-86.

* திருமண மண்டபத்தைக் காலி செய்யும் முன், நம் முழு முகவரியை நிர்வாகத்தினிடம் கொடுத்து, காலம் தாழ்த்தி வரும் வாழ்த்துத் தந்திகளை, ரீ-டைரக்ட் செய்யச் சொல்லலாம்.



கேட்க வேண்டாம்!

○ கவிதை

கருவறைக்குள் குழந்தை,
காதைவைத்துக் கேட்டது...
காலையில் ஆரம்பம்,
காய்கறிக்காரரிடம் கோபம்!
வந்தான் பால்காரன்,
அவனிடத்தில் மனஸ்தாபம்!
சிலிண்டரும் வந்தது,
சில்லறைச் சண்டையுடன்!
கேட்டபடி தரவில்லை,
கேபிள்காரனும் சேனலை!
சரி எல்லாம் போகட்டும்!
பார்ப்போம், தொலைக்காட்சியை!
அங்கேயும் காட்சி,
இலங்கையில் இரத்தம்!
பாகிஸ்தானில் கலகம்!
அணைத்துவிட்டு வந்தால்,
பக்கத்து வீட்டுப் பாட்டியின்,
மரண அழுகைச் சத்தம்!
இனி, கேட்கவே வேண்டாம்
உலக நடப்பு!
கருவறைக்குள் குழந்தை,
காதை மூடிக் கொண்டது!

-பூமா ஸ்ரீநிவாசன், பெங்களூரு-37.




இருமனம் சேரும் திருமணம் என்றால்...
அழைத்து சிறக்க...

கல்யாண கலாட்டா



எனக்குத் திருமணமாகி இருபத்தெட்டு வருடங்களாகி விட்டது. பெண் வீட்டினர் ஒவ்வொரு ஏற்பாடும் பார்த்துப் பார்த்து செய்த காலகட்டம் அது. வீட்டில், நான் மூத்தவள். கல்யாண உதவிக்கு டெல்லியில் உள்ள வடஇந்திய, தென்னிந்தியக் குடும்பங்கள்தான்.

எனது மாமனார், கல்யாணம் மிகவும் சாஸ்த்தோத்திரமாக நாலு நாள் ஔபாசனத்துடன் நடக்க வேண்டும் எனக் கட்டளையிட்டார். கல்யாண வீட்டில் பிள்ளை வீட்டவர் குடும்பத்தோடு இறங்கியதும், முதல்தர டிகிரிக் காப்பியுடன் என் தங்கை, டெல்லி நண்பர் ஒருவருடன் போய் காப்பி உபசாரம் செய்தாள். அப்போது பிடித்தது சனி! மாப்பிள்ளையும், மற்றும் சிலரும் தேநீர்தான் குடிப்பார்கள் என்று, தேநீர் போட்டு வரச் சொன்னார்கள்.

எங்கள் வீட்டில், ''சேச்சே, தேநீர் எல்லாம் கொடுத்தால் நன்றாக இருக்காது'' என்று சொல்லி போர்ன்விட்டா போட்டு அனுப்பினார். உடனே, ''ஓ... நாங்கள் டீதானே கேட்டோம். இந்த போர்ன்விட்டா வேண்டாம், ஏய், திருப்பி எடுத்துப் போ'' என அதிகாரம் பறந்தது. டெல்லியில் வளர்ந்த எங்களுக்கு, திருநெல்வேலியில் வழக்கமாக சேர்க்கும் 'ஓ'வும் 'ஏய்'ம் மிக வினோதமாகவும் அதிகார மிடுக்காகவும் இருந்தது.

எனது தங்கை, ''கௌரி! மாப்பிள்ளை மிகவும் அதிகாரம் பண்ணுகிறார், சரியானபடி கவனித்துக் கொள்'' என்று போட்டுக் கொடுத்தாள். வெயிலுடன் கல்யாண வீட்டிலும் உஷ்ணம் ஏற ஆரம்பித்து விட்டது.

அடுத்தகட்டமாக, ஜானவாசம். மாப்பிள்ளை காரில் ஊர்வலம் வரும்போது பெண்ணும் எதிரே காரில் வர வேண்டும் என்றார்கள். அவசரமாக இன்னொரு காரை ஏற்பாடு செய்து காரில் எதிர் எதிரே வரும்போது எனது கணவர், ஆசையுடன் என்னைப் பார்த்தார். இவர்கள் செய்யும் ஆர்ப்பாட்டத்தில் மிகவும் கோபத்துடன், நான் முறைத்துப் பார்த்தபடி மௌனமாக எனது எதிர்ப்பைக் காட்டிக் கொண்டிருந்தேன்.


மறுநாள், காலை முகூர்த்தத்துக்கு 400-500 வரை விருந்தினர்கள் வரலாம் மாலை ரிசப்ஷனுக்குத்தான் கூட்டம் அதிகமாக இருக்கும் என்று நினைத்தோம். ஆனால் ஆயிரம் பேருக்கு மேல் வந்திருந்தார்கள். தமிழ் சம்பிரதாய கல்யாணத்தைப் பார்க்கும் ஆவலில், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வந்ததினால் எங்கள் எண்ணிக்கை பொய்த்துவிட்டது. மீண்டும் சமைத்து, விருந்தினர்களைச் சமாளித்தோம். கல்யாணம் சுபமாக முடிந்தது.

எனது தந்தை, எனது மாமனாரை இரவு விருந்து

கௌரி கல்யாண



வடநாட்டில் ஏகாதசி!



ஓர் ஆண்டில் இருபத்து நான்கு அல்லது இருபத்து ஐந்து ஏகாதசிகள் வருகின்றன. அவற்றுள் மார்கழி மாத சுக்லபட்ச ஏகாதசியை 'வைகுண்ட ஏகாதசி' என்றும், 'மோக்ஷதா ஏகாதசி' என்றும் கொண்டாடுகிறோம். அப்போது, பெருமாள் கோயில்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

வடநாட்டில் மோக்ஷதா ஏகாதசியை 'கீதா ஜெயந்தி' என, கீதையைச் சிறப்பிக்கும் விழாவாகக் கொண்டாடுகிறார்கள். அன்றைய தினம் கீதை பாராயணம் செய்வது விழாவின் சிறப்பு அம்சமாகக் கருதப்படுகிறது. குருக்ஷேத்திரம் சென்று படிப்பவர்களும் உண்டு.

கிருஷ்ண பரமாத்மா, சாரத்ய கோலத்தில் தேருக்குக் கீழே நாட்டப்பட்ட திருவடிகளுடன் பார்த்தனுக்கு கீதை அருளியதாகக் கொண்டாடுகிறார்கள்.

-கே.சுவர்ணா, தஞ்சாவூர்.



உன்ன அழைத்தபோது, இரவு சாப்பாடு சாப்பிடுவதில்லை என்றார். எங்கள் மேல் உள்ள கோபத்தினால் கூறுவதாக நினைத்து, அவர் காலில் விழ, அதைப் பார்த்து எங்களின் உறவினர் ஒருவர், ருத்ரதாண்டவம் எடுத்தார். எனது மாமனார் எகிற, என் தந்தை மயங்கி விழ, நானும் மயங்கி விழ, கல்யாண வீடு போர்க்களமாயிற்று. இத்தனைக் கலாட்டாவிலும், எனது கணவர், மிக அமைதியாக அனைவரையும் தேற்றி பிரச்னையைச் சமாளித்தார்.

இன்று, எனது புகுந்த வீட்டில் நல்ல மருமகளாய் பெயரெடுத்திருக்கிறேன். அவர்களும் எனது பிறந்த வீட்டுக்குப் பக்கபலமாக இருந்து, என் தங்கைகள் கல்யாணத்துக்கும் உறுதுணையாக நின்றது பெரிய சந்தோஷமே!

- கௌரி பாலசந்திரன்,
சென்னை

வைபோகமே!



கோயிலா? கோர்ட்டா?

பத்துப் பொருத்தம் உள்ள ஆளைப் பார்த்து, ஒன்பது கிரகமும் நல்ல நிலையில் நிற்கும் நாளைப் பார்த்து, எட்டு திசையில் இருக்கும் சாமி யைக் கும்பிட்டு, ஏழுமலையானே என்று ஏழு அடி எடுத்து வெச்சு, ஆறு சுவையிலும் சமைச்சுப் போட்டு, பஞ்சபூதமும் (ஐந்து) சாட்சியா இருந்து பார்த்துக்கிட்டுருக்குன்னு பயந்து, அறம், பொருள், இன்பம், வீடு அப்படிங்கிற நாலுதான் நம்ம லட்சியம்னு தம்பதிகள் புரிஞ்சுக் கிட்டு, மூணு முடிச்சுப் போட்டு ரெண்டு உயிர்கள் ஒண்ணா ஆகணும். இது நடந்தா வீடு கோயிலா இருக்கும். இல்லேன்னா கோர்ட்டா மாறிடும்.

நன்றி: 'சொன்னார்கள், சொன்னார்கள்'

பா.பனிமலர்,
மதுரை-14.

ஒரு நாளும் பிரியாது...

வடமாநிலங்களில் நடக்கும் திருமணங்களில் மணமகளை, மணமகனிடம் தாரைவார்த்துக் கொடுக்கும் போது, பெண்ணின் தந்தை, ஒரு ஸ்லோகத்தைச் சொல்கிறார். ஜனகர், ராமபிரானுக்கு தன் மகள் சீதையைக் கைப்பிடித்துக் கொடுக்கும் போது, ராமரிடம் சொன்ன சமஸ்கிருத ஸ்லோகம் இது.

***"இயம் ஸீதா மமஸூதா ஸஹதர்மசரீதவ!
ப்ரதீச்ச சைனாம் பத்ரம் தே பாணிம்
கிருஷ்ணீஷ்வ பாணினா!"***

"மகனே! நீ செல்லும் தர்மநெறியில் இவள் உன்னுடன் துணைவருவாள். மங்களம் பெருகுக! கற்பைக் காத்து, மிகப் பாக்கியவதியாக உன் நிழலைப் போல் உன்னைப் பற்றி நிற்பாள். எப்போதும் உன்னை விட்டுப் பிரிய மாட்டாள்."

இந்த ஸ்லோகத்தைச் சொல்வதால் மணமக்கள் என்றும் பிரியாமல் வாழ்வார்களாம்!

- வி.எஸ். சிவன்,
சென்னை.



ஸ்லோகம்

என் செல்லமே!



தாத்தா : சிவக்குமார் சிங்
பாட்டி: துளசிபாய்
பேரன் : நரேஷ்



தாத்தா : சு.சந்திரசேகரன் பாட்டி: சாந்தா
பேரன்கள் :ந. விக்னேஷ், நிகிலேஷ் கௌண்டின்யா



தாத்தா : யு.கே.வெங்கட்ராவ்
பாட்டி : விஜயலட்சுமி
பேரன் : எஸ்.விஸ்வஜித்

தாத்தா : பா.இராமலிங்கம்
பாட்டி: ராதா
பேரன் : பி. புவனேஷ்



'என் செல்லமே!' பகுதிக்கு நிறையப் புகைப்படங்கள் வந்து குவிந்துள்ளதால், அவற்றைப் பரிசீலித்து வெளியிடும் வரை, சிறு இடைவெளி தரப்பட்டுள்ளது. எமது அறிவிப்புக்குப் பிறகு வாசகர்கள் மீண்டும் புகைப்படங்களை அனுப்பலாம். அறிவிப்புக்குக் காத்திருக்கவும். எங்களுடன் ஒத்துழைக்க வாசகியரை அன்புடன் வேண்டுகிறோம்.

(ஆர்.)

தாத்தா : கிருஷ்ணமூர்த்தி
பாட்டி: மங்களம்
பேத்தி : ஸ்ரேயா



பீடா தயாரிப்போமா?

விருந்து முடிந்ததும் பீடா சுவைப்பது நமது வழக்கம். இந்த பீடாவை நாமே தயாரிக்கலாமே!



பீடா தயாரிக்க முதலில் பாக்கு மிக்ஸை ரெடி செய்ய வேண்டும்.

பாக்கு மிக்ஸுக்குத் தேவையான பொருள்கள்:

வாசனைப் பாக்கு – 1 கப்,
பெருஞ்சீரகம் – 1கப்,
கிராம்பு– 2 டேபிள் ஸ்பூன்,
ஓமம் – 1 டேபிள் ஸ்பூன்,
ஏலக்காய் – 20 (தோலியை அகற்றிவிடவும்)
சர்க்கரைத் தூள் –½ கப், உப்பு.

செய்முறை:

உப்பையும், சர்க்கரையும் 1 கப் நீரில் நன்கு கரைத்துக் கொள்ளவும். வாணலியை மிதமான தீயில் வைத்து பெருஞ் சீரகத்தைப் போட்டு வறுக்கவும். நடுநடுவே கொஞ்சம் சர்க்கரை கரைசலைத் தெளித்து மீண்டும் வறுக்கவும். நன்கு 'மொறுமொறு' என்று வந்தவுடன் அடுப்பை அணைத்து மீதமுள்ள பொருள்களுடன் சேர்த்து மிக்ஸியில் நன்கு பொடி செய்து கொள்ளவும். இப்போது பீடாவுக்குள் ஸ்டஃப் செய்ய வாசமான பாக்கு மிக்ஸ் ரெடி.

வெற்றிலை பீடாவுக்குத் தேவையான பொருள்கள்:

அகலமான துளிர் வெற்றிலை – 4,
பாக்கு மிக்ஸ் – 2 டீஸ்பூன்,
டூத் பிக்ஸ் – 4,
வாசனை சுண்ணாம்பு – கொஞ்சம்.

செய்முறை:

வெற்றிலைகளை நீரில் நன்கு கழுவி, உலர்ந்த துணியால் நன்கு துடைக்கவும். காம்பைக் கிள்ளி, வாசனை சுண்ணாம்பை இலேசாகத் தடவவும். வெற்றிலையை 'கோனை'ப் போல் செய்து வைத்துக் கொள்ளவும். அதனுள் கொஞ்சம் பாக்கு மிக்ஸைப் போட்டு மேல் பாகத்தை நன்கு உள்ளே மடிக்கவும். அதன் மேல் 'டூத் பிக்'கை செருகவும். அப்படியே உங்கள் கற்பனைக்கு ஏற்றாற்போல் மடித்து, தட்டில் வைத்து நீட்டவும்.

பாக்கு மிக்ஸுடன் கொஞ்சம் குல்கந்து, பொடியாக நறுக்கிய காய்ந்த திராட்சை மற்றும் பேரீச்சை சேர்த்து, நன்கு கலந்து வெற்றிலையில் மடிக்க, ஸ்வீட் பீடா ரெடி!

– ஆதிரை வேணுகோபால், சென்னை.

மணக்க...சுவைக்க...

ஒன்பது இழை தத்துவம்!



வாசகர் பூமராங்

'தாலி மகிமை' பற்றி ஒரு சகோதரி எழுதியிருந்தார். தாலியைப் பற்றிய மேலும் சில விவரங்கள்:

இந்துக்களுக்கு மஞ்சள் நிறம் புனித மான நிறம் என்பதால் அந்தத் திருமணப் பரிசும் மஞ்சள் நிறத்தில் தரப்பட்டது என்று விளக்குகிறார் பால கிருஷ்ண சாஸ்திரிகள். தமிழர் திருமணங்களில் ஆரம்பத்தில் தாலி இருந்ததாக, இலக்கியங் களில் குறிப்பிடவில்லை. சங்கக் காலத்தின் போது நடந்த திருமணங்களில் புதுமணல் பரப்பி, விளக்கு ஏற்றி, வயதில் மூத்த பெண்கள், மணப்பெண்ணை நீராட்டி வாழ்த்தி அவள் விரும்பியவனிடம் அவளை ஒப்படைத்தனர். நாளடைவில் 'தாலம்' என்ற பெயர்தான் தாலியாக மாறி யிருக்கிறது.

பதினோராம் நூற்றாண்டில்தான் திருமணச் சின்னம் என்ற ரீதியில் தாலி என்ற பெயர் உபயோகப்படுத்தப்பட்டது என்கிறது உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டிருக்கும் 'தமிழர் திருமணம்' என்கிற புத்தகம்.

மாங்கல்யச் சரடானது ஒன்பது இழை களைக் கொண்டது. ஒவ்வொரு இழை களும் ஒவ்வொரு நற்குணங்களைக் குறிக் கிறது. தெய்விக குணம், தூய்மைக் குணம், மேன்மை, தொண்டு, தன்னடக்கம், ஆற்றல், விவேகம், உண்மை, உள்ளதை உள்ளபடி புரிந்து கொள்ளுதல். இத்தனைக் குணங்களும் ஒரு பெண்ணிடம் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஒன்பது இழைகள் கொண்ட திருமாங்கல்யச் சரடு அணியப்படுகிறது.

- வத்சலா சதாசிவன், சென்னை-64.

தினமும் பூஜை முடித்ததும், விசேஷ பூஜைக் காலங்களிலும் அம்பாளுக்கு நமஸ்கரிக்கும் போது, இந்த ஸ்லோகத் தைச் சொல்லலாம்.

மஹாமாயா ஜகதாத்ரீ
சச்சிதானந்த ரூபிணி!

அப்போது அம்பாளின் முகம் அத் தனை களையாகத் தோன்றும்.

-டி.எம்.விஸ்வதா, திண்டுக்கல்-1.



மங்கையர் மலரின்

திருமண மலர்

திருமண மலர் விளம்பரக் கட்டண விவரங்கள்

முதல் முப்பது வார்த்தைகளுக்கு ரூ. 500/-

30க்கு மேற்பட்ட வார்த்தைகள் ஒவ்வொன்றுக்கும் தலா ரூ. 15/-

வண்ணத்தில் ஹைலைட் செய்ய கூடுதல் கட்டணம் ரூ. 100/-

1" X 1" அளவில் வண்ணப் புகைப்படத்துடன் 30 வார்த்தைகள் அடங்கிய விளம்பரத்துக்கு ரூ. 800/- (அதிகப்படியான வார்த்தை ஒவ்வொன்றுக்கும் ரூ 15/-)



வண்ணப் புகைப்படத்துடன் விவரங்கள் அடங்கிய அரை பக்க **Profile** விளம்பரம் ரூ. 2500/-



வண்ணப் புகைப்படம் அனுப்புபவர்கள், தெளிவான புகைப்படமாக, பாஸ்போர்ட் அளவில் இரண்டு பிரதிகள் அனுப்பவும். புகைப்படங்களை திருப்பி அனுப்ப இயலாது.

கட்டணத்தை நேரில் ரொக்கமாகவோ அல்லது சென்னை செக்காகவோ, வெளியூர் டிமாண்ட் டிராப்டாகவோ, மங்கையர் மலர் என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

விவரங்களுக்கு தொடர்பு கொள்க:

மங்கையர் மலரின் திருமண மலர்

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.

தொலைபேசி : 4343 8888 Fax : 044 - 4343 8899

email: marketing@kalkiweekly.com

மணமகள் தேவை

◆◆ **S.Suryanarayanan alias Balaji**



Iyer, Vadama, Kasyapam, Pooram-4, November 1974, 185cms, MBA, Officer, Stanchart Bank, Chennai, seeks graduate employed/unemployed girl of 160 cms or above. No demands. Sharma: Phones:(44) 22238818/98418 43484. Box No. 16356



◆ **K.Bharath alias K. Balasubramanian**

Tamil, Iyer, Vadamal, Naithrupakashyapa, Poosam-4, 22.4.1980, 5.4', B.Com., working in HDFC Bank in Bangalore, Deputy Manager, Rs. 30,000/- p.m., Own House, seeks graduate bride, good-family, Middle-class employed in Bangalore, Chennai Iyer Bride. No demands. TM ID-M1560243 080/28530610, 09945927607, 09916350730 Box No. 16380

◆ **S.K.Shriram B.B.A.,(PGDBM)**



ஐயர், சுக்லயஜுர், கௌசிகம், ரேவதி-2, 5.12.73, 165, தனியார் Production Co-ordinator Income 12,000/- சென்னையில் சொந்த வீடு உள்ள மணமகனுக்கு +2 அதற்கு மேல் படித்த குடும்பப்பாங்கான மணமகள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். செல்: 8015750457. பெட்டி எண்: 16390

◆ Thirunelveli Iyer, Vadamal, Koushikam, Ashwini, Mesha Rasi, 20.06.1979, 5.6', B.B.A., Own Catering Business (Mount Catering) Rs. 8 Lakhs per annum, Having Own House, Two Cars, very charming Boy, Physically Challenged. Ph:044-2432 0699/9941342269. Box No. 16310

◆ ஐயர், வடமாள், வாதூலம், 1.10.1970, சித்திரை, 5.7', சொந்தமாக டிராவல்ஸ் (K.R. Sankaran, New Delhi) தொழில், டில்லியில் சொந்த வீடுள்ள வரனுக்கு குடும்பப்பாங்கான பெண் தேவை. வேலைக்குச் செல்லத் தேவையில்லை. தொடர்பு:044-2616 4921 Mrs. Uma Pandurangan, Lakshmi:(0)9810169302 Box No. 16311

◆ Wanted simple working Woman Tamil Brahmin for unmarried Iyer, Vadoola, Tiruvonam 1961, 5.8', Graduate Owns Flat working in Private Company as Manager. Contact: ksri61@yahoo.co.in 080-2583 8214 Box No. 16312

◆◆ Vadama, Kaushika, Pooratthathi, Kumba, Fair, 177/27 BE MBA (USA) in his Father's Business Large Public Ltd. Company, Chennai Head Quartered, only son seeks slim, fair, good Qualification or Carnatic Musician believe in Tradition and family values. Apply with horoscope to rjayam714@gmail.com Box No. 16313

◆ ஐயர், வடமாள், ஸ்ரீவத்ஸம், பரணி, 34, 18.2.1975, 10வது, புரோகிதர் (வைதீகம்), 6000/- வரனுக்கு, 10வது (அ) +2 படித்த குடும்பப்பாங்கான பெண் தேவை. மற்ற பிரிவுகள் தடையில்லை. ஃபோன்:044-2223 2095/ 9444 929 759 பெட்டி எண் : 16314

◆ Iyer, Brahacharanam, Haritham, Uthiram, Nov.1965, 5.7', M.Com., FIII, New India Assurance, Chennai, Rs. 30,000/- p.m., seeks Iyer Graduate employed bride. Ph:044-22242708, (Divorcees, widows excuse) Box No. 16315

◆ Naidu Family, 39, Looks 35, Aswini, 5.2', M.Sc., working, Own House, seeks fair Bride. Caste no bar. Ph:2475 9331. Box No. 16316

◆ Bharathwajam, Punarpusam, Iyer 32, CA (Inter) 185 cms, IT MNC Hyderabad seeks suitable alliance. Contact: 040-2771 9561 Box No. 16317

◆ Vadama, Koundinya, Rohini, B.Tech., Infosys, Chennai, 82 Born seeks good family girl, BE/B.Tech/ MCA/CA age 21-24. Ph:044-27488451 Apply Box No. 16318

◆ Iyer, Vadamal, Kowsigam, Chithirai-4, June 1980, 182 cms, MCA, Project Leader, Software Development, MNC, Bangalore, Rs.10.2 lacs per annum, seeks qualified employed good-looking Iyer girl, Subsect no bar. Contact:080-4126 0638/098452 51541/vsmani_bglore@yahoo.co.in Box No. 16319

◆ Tamil Iyer, Brahacharanam, Sankrithi, Uttarattathi, 31, 5.10', Very fair, Clean habits, MCA/SWE/MNC/Chennai. Rs. 40,000/- per month. Seeks employed girl preferably at Chennai. Phone:044-2435 6541, 0431-2437251. Box No. 16320

◆ ஐயர், சோழ தேசத்து வடமாள், ஆத்ரேய, புனர்பூசம், கடக ராசி, 31, 5.9', வருட வருமானம் 2.40 லட்சம், Credit Officer, Chennai, B.Com., M.H.R.M., P.G.D.M.M., (M.F.C.) இரண்டு வீடுகள் உள்ள பையனுக்கு வேலையிலுள்ள மணமகள் தேவை. உட்பிரிவு சம்மதம். போன்: 0452-6523242 பெட்டி எண் : 16321

◆◆ Iyer, Ashtasahasram, Sownaka, Pooradam, 5.6', 02.08.1982, B.E., Own Business, Rs. 36,000 per month, clean habits, seeks good-looking, unemployed girl. Subsect no bar. Contact:98654 80035. Box No. 16322

◆ Iyer, Vadamal, Bharadwajam, Dec.75, Swathi, 170, C.A., MNC, Chennai, 8.3 Lacs p.a. seeks em-

ployed/unemployed, good-looking girl. Subsect ok. Phone:044-24850025. email:karthik_k@sifycorp.com Box No. 16323

◆ வடமாள், ஸ்ரீவத்ஸம், ஹஸ்தம், பி.ஏ. படித்த, 1965ல் பிறந்த, சென்னை பாபா கோவிலில் மாதம் ரூ.12,000/- பெறும் பையனுக்கு வேலைக்குச் செல்லும்/செல்லாத பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். போன்: 044-43557138 பெட்டி எண்: 16324

◆ Vadama, Srivatsa, Magam, 29, B.E., M.S. Boy, California, USA, Parents Hyderabad. Shortly Visiting.Contact:040-27990325, 9949772224, 9441285742 usharaj 83@gmail.com Box No. 16325

◆ ஐயர், வடமாள், வாதூலம், கிருத்திகை, ரிஷப ராசி, 5.8', ME & Energy Auditor passed, 19.9.81 தனியார் கம்பெனி, 50,000/- மாத வருமானம், சென்னையில் பணியிலிருக்கும் வரனுக்கு, சென்னையில் பணிபுரியும் நல்ல குடும்பத்து மணமகள் தேவை. மொபைல்: 9443458925 பெட்டி எண்: 16326

◆◆ Iyer, Brahacharanam, Srivatsam, Anusham, 33/Jan.1976, Chevvai Dosham, 170cms, M.Com., M.Phil., Account & Tax Consultant, Rs. 15,000/-p.m.+ Own House. seeks employed/unemployed bride. No expectation, simple marriage. Contact: chandradhass@ hotmail. com. 9444990691, 044-26253805. Box No. 16327

திருமண மலர் - விளம்பரக் கட்டண அறிவிப்பு

திருமண மலர் விளம்பரக் கட்டணம் முதல் 30 வார்த்தைகளுக்கு ரூ.500/-
அதிகப்படியான வார்த்தை ஒவ்வொன்றுக்கும் ரூ.15/-
வண்ணத்தில் 'ஹைலைட்' செய்ய ரூ.100/- கூடுதலாக அனுப்பவும்.
வண்ணப் புகைப்படத்துடன் (1" x 1") வெளியிட ரூ.800/-
இத்துடன், www.mangayarmalaronline.com என்கிற மங்கையர் மலரின் இணையதளத்திலும் சேர்த்து விளம்பரம் வெளியிட, கூடுதல் கட்டணம் ரூ. 100/-

◆ Vadamal, Bharatwajam, Pooratathi-3, May 1980, 5.9', good-looking, M.C.A.(S.W) in U.S. seeks Iyer bride graduate good-looking. employed preferable. s.s.matrimonials. 56428. Contact: 98945 24787 Box No. 16328

◆◆ Iyer, Ashtasahasram, Bharathwajam, Thiruvonam, 22.12.79, 5.11', B.E., MS (USA), employed in Chennai seeks girl min. 5'.4" graduate preferably employed in Chennai. Contact:044-2474 8109 or 98400 71236 Box No. 16329

◆ ஐயர், பிரஹசரணம், கௌண்டின்யம், ஹஸ்தம், ஆகஸ்ட் 1976, 178 செ.மீ., B.E.Comp.Sci.MNC சென்னை Tech-leader வேலையிலுள்ள/வேலையில்லாத படித்த பெண் தேவை. ஃபோன்: 044- 24404494, ssmatri. 57003/76 Box No. 16330

◆ கௌசிக, ஸ்மார்த்த, கன்னட அறுவத்து ஒக்லு, பூரட்டாதி-4, டிசிஈ, 34, 5.6', 6000, கோவையில் தனியார் சூப்ரவைஸர், சொந்த வீடுள்ள வரனுக்கு, ஓரளவு படித்த, வேலைக்குச் செல்லக்கூடிய குடும்பப்பாங்கான மணமகள் தேவை. பிராமின் உட்பிரிவுகள் சம்மதம். எளிய திருமணம். ஃபோன்:96290 23567 பெட்டி எண்: 16331

◆ Iyer, Vadama, Athreya, fair, 31 (Barani) 5.11', BA/MBA/MHRM, Asst. Manager (MNC) Rs.20,000/- (Own House income 15,000/-) No expectation. Seeks degree from any Brahmin girl. 28170031/ 9841256256 Box No. 16332

◆ ஐயர், திருவாதிரை, அஷ்டசஹஸ்ரம், காஸ்யப கோத்திரம், வயது 36, உயரம் 5.5', எஸ்.எஸ்.எல்.சி., ஏ.சி. மெக்கானிக், சம்பளம் 7000/- உட்பிரிவு சம்மதம், 10வது/+2 படித்த பெண் தேவை. எதிர்பார்ப்பு ஒன்றும் இல்லை. தினத்தந்தியில் Proof Examiner ஆக வேலை செய்கிறார். பெட்டி எண் : 16333

◆ J.Rajesh, Iyer, Vadamal, 31, 5.10', Gauthama Gothram, Avittam, BE, HP(USA) SW Engineer, Seeks graduate bride with Computer knowledge. TM964332 Contact:22333571, 9840663872 Box No. 16334

◆ Iyer, Vadamal, Bharathwajam, Swathi, 30,5.8', fair, B.Sc., (MBA), MNC, Chennai, Rs.14,000/-p.m., + Income from house property Rs. 17,000/- p.m., only son. Sound Financial background. Seeks gradu-

ate bride employed/unemployed. Subsect no bar. Ph:9940474015. Box No. 16335

◆ Iyer, Brahacharanam, Haritha, Avittam, Makara, 26 years, 5.8', B.E., MBA, employed in MNC in Bangalore, 9.5 lacs p.a. seeks bride with B.E. Degree, preferably employed, fair from a respectable family with one or two brothers from Brahacharanam/Vadamal Contact: 98403 20018, 98403 40161 Box No. 16336

◆ Iyer, Brahacharanam, Kousikam, Revathi, 25/169, BE, TCS, Chennai 5.2 LPA, seeks bride, educated, Subsect no bar. (ssmatri 57106) Contact: 9962333115 Box No. 16337

◆◆ Iyer, Vadama, Vathulam, Avittam-I, Makara June 82/180/50,000 p.m., B.Com., MBA, MNC, Bangalore seeks employed girl transferable. Krishnamurthy 044-2376 5981/080-42015532/09500065981 ssmid 56942 Box No. 16338

◆ Tamil Brahmin Iyer, Vadamal, Bharadwaja, Hastham, June 1971, 165 cms, young handsome IT Manager, Accenture MNC, Bangalore 12 Lakhs annum Owns Car Deluxe Apartments. Seeks middle class, Graduate, Brahmin Spinster employed/unemployed. Subsect acceptable. No Demands widows, Divorcees, Intercaste excuse. Contact with horoscope, biodata, family details. Box No. 16339

இந்த இதழில் பிரசுரமாகும் பெட்டி எண் விளம்பரதாரருக்கு பதில்கள் அனுப்ப கடைசி தேதி : 10.1.2010. பதில்கள் அனுப்ப வேண்டிய முகவரி : பெட்டி எண் : .... C/o மங்கையர் மலர், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

◆ ஐயங்கார், உத்திரட்டாதி, பாரத்வாஜம், 35, 168, எம்.டெக்., (ஐஐடி) பன்னாட்டு நிறுவனத்தில் நிரந்தர வேலை, மாதச் சம்பளம் ரூ. 1 லட்சத்திற்கும் மேல். வசதியுள்ள குடும்பம், விவாகரத்தானவர், இந்த வரனுக்கு, குடும்பப்பாங்கான, படித்த, நடுத்தர வகுப்பு (middle class), குறைந்த வருமானமுள்ள (Low Income) ஐயங்கார்/பிராமின் மணமகள் தேவை. வரதட்சிணை தேவையில்லை. S.Raghavan, Priest, Lakshmi Narasimha Temple Quarters, III Main, 8th Cross, Prakash Nagar, Bangalore-560 021. Mobile: 09886240598; 080-2352 4402 email: vibava2009@yahoo.com Box No. 16340

◆ Seeking Naidu bride, 5-5.9' in. 21-26 years for Naidu, Software Engineer Boy 27 years, Menam-Revathi, 180cm,fair, Ph:04554-248274/9942814441 Box No. 16341

◆ Iyer, Vadama, Srivatsam, Moolam II Padam, 29, 5.3', M.Sc., M.Phil., Asst.Professor in Reputed Engineering College at Chennai, Rs.31,000/- p.m., seeks good-looking, graduate employed girl. Contact:2248 3494, 99441 78818. Box No. 16342

◆ Tamil Iyer, Vadamal, Magam, Koundinyam, 33, B.Com., DCA (MBA), Dy, Manager, HDFC Bank, Chennai, salary Rs. 29,000/- p.m., + seeks suitable educated employed bride. Contact:044-6544 6849 Box No. 16343

◆ Iyer, Brahacharnam, Badharayanam, Ayilyam(4), Dec '80/176/ B.E., SWE, Infosys, USA, HIB, seeks suitable working/Non-working bride. Contact:Swaminathan, 0788-2271541. 09893484581 vidsam1978@yahoo.com Box No. 16344

◆ Iyer, Vadamal, Haritham, Swathi, 156 cm, 02.12.83, M.Sc., (IT), Own Business, clean habits, seeks good looking educated girl with good family background. Contact:044-2276 0540. Box No. 16345

◆ ஐயர், வடமாள், பாரத்வாஜம், ரோஹிணி, 42, 15,000 மாத வருமானம், எல்.ஐ.சி. முகவர், சென்னையில் சொந்த வீடு உள்ள வரனுக்கு நடுத்தர ஐயர் வகுப்பைச் சேர்ந்த குடும்பப்பாங்கான மணமகள் தேவை. எதிர்பார்ப்புகள் எதுவும் இல்லை. 35 வயதிற்குட்பட்ட, கல்யாணம் ஆகாத, சட்டப்படி விவாகரத்து பெற்றவரும் விண்ணப்பிக்கலாம். படிப்பு குறைந்தது +2. (Employment not a must - Subsect acceptable). Contact: Natarajan Cell: 98410 66486. பெட்டி எண்:16346

◆ Iyengar, Tenkalai, Kasyapa, Krithigai-4, 175cms, Chartered Account (ACA), seeks professionally qualified bride. Contact:044-2657 1620. mail id:narasimhan.al @gmail.com Box No. 16347

◆ ஐயர், வடமாள், பாரத்வாஜம், ரேவதி, 34, 175செ.மீ., B.Sc., PGD-CA, PGDBA (MBA) தனியார் துறையில் மானேஜர் ஆண்டு வருவாய் 4.1 இலட்சம், தகுந்த மணப்பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஃபோன்:044-2746 5007 செல்: 98844 00966 பெட்டி எண் :16348

◆ Iyer, Ashtasahasram, Kowsigam, Pooradam-4, Innocent Issueless divorcee Manager (Tech) MNC 40/180/11 Lakhs p.a. looks young, Only son with own house at Chennai. Seeks suitable girl. Contact:98414 57159. email: hrithinramji@yahoo.co.in Box No. 16349

◆ ஐயர், பிரஹசரணம், மௌத்கல்யம், அனுஷம்-1, அக்டோபர்/1979, 175, M.Sc., (Stat), MNC/ பெங்களூரு, சொந்த வீடு, ரூ.08 இலட்சம் வருட வருமானம், குறுகிய கால திருமணம், பரஸ்பர சட்டப்பூர்வ விவாகரத்து, சிவந்த நிறம், அழகிய வரனுக்கு ப்ளஸ்2/பட்டப் படிப்பு முடித்த குடும்பப்பாங்கான அழகிய பெண் தேவை. எளிய திருமணம். எதிர்பார்ப்புகள் இல்லை. உட்பிரிவுகள் சம்மதம். விவாகரத்தானவர்கள் தவிர்க்கவும். தொடர்புக்கு: 98949 87511. பெட்டி எண்:16350

◆ ஐயர், அஷ்டசஹஸ்ரம், கௌசிகம், சித்திரை 2-ம் பாதம், 33 வயது, 172 செ.மீ., DME, Quality Engineer, working at Qatar. படித்த Qatar செல்ல விருப்பமுள்ள பெண் தேவை. ஃபோன்:044-2247 5202, 96000 62634. gbala12@gmail.com Box No. 16351

திருமண மலர் பகுதியில் இடம்பெறும் விளம்பரங்கள் அனைத்தும் விளம்பரம் செய்பவர்களின் கையொப்பத்துடன் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. மணமகள் அல்லது மணமகன் பற்றிய வயது, வருமானம், அந்தஸ்து உள்ளிட்ட இதர விவரங்கள் விளம்பரதாரர் தரும் குறிப்புகளின் அடிப்படையில் பிரசுரிக்கப்படுகின்றன. இந்த விவரங்களைக் கொண்டு தொடர்பு கொள்ளும் பெற்றோர்கள் அவை சரியான விவரங்களா என்று தனிப்பட்ட முறையில் விசாரித்து உறுதிசெய்து கொள்வது நல்லது. மேலும் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும்பொழுதே மருத்துவப் பரிசோதனையும் மேற்கொண்டால் பிறவிக் குறைபாடுகளுடன் குழந்தைகள் பிறப்பதைத் தடுக்கலாமே! - *பதிப்பாளர், மங்கையர் மலர், சென்னை 600 032*

◆ Iyer, Vadama, Bharathwajam, Krithigai IV, March 1975, very fair, Propertied Businessman, B.Com., MBM/170cms, 5L p.a. seeks graduate girl from a good family background. Refer ssmatri ID 55785/75 Ph:9444892051/bal kamraj@gmail.com Box No. 16352

◆ மணமாகாத ஐயர், ரோஹிணி 1, அஷ்டசாஸ்திரம், வாதூலம், 34/164, Diploma Tele communication, DEE, DECE, வெளிநாட்டில் Qatar-Doha-வில் அரசுப் பணி, வருட வருமானம் ரூ.12 லட்சம் வரனுக்கு +2 / டிகிரி படித்த கம்ப்யூட்டர் அறிந்த பெண் தேவை. ஐயர் உட்பிரிவு, ஐயங்காரும் சம்மதம். எதிர் பார்ப்புகள் எதுவும் இல்லை. கோயிலில் எளிமையான திருமணம். குழந்தை இல்லாத சட்டப்படி விவாகரத்தானவர்களும் விண்ணப்பிக்கலாம். ஃபோன் 9444890157 பெட்டி எண் 16353

◆ Iyer, Brahacharanam, Garga, Pooradam, 1977/171cms, fair, BE, Manager, Infosys, Mysore, transferable, seeks fair, homely, graduate employed/unemployed girl. Ph:97865 70996 Box No. 16354

◆ Iyengar, Thenkalai, Koundinyam, Uthirattadhi(4), 22.10.1980, 5.7', B.E., M.S., (USA), Visiting India in December seeks professionally qualified/post-graduate good-looking bride. Subsect no bar. Contact:044-24425255, Cell: 9444005255 Box No. 16355

◆ Iyer, Brahacharanam, Kaushigam, Rohini, 30, 5.5', lean, B.E., Marketing Executive, Chennai, Rs.10,000/-p.m., has good investments. Only son of a well settled family, living with parents in Own Flat, seeks Chennai based graduate employed girl below 27. Subsect no bar. Box No. 16357

◆◆ ஐயர், வாத்திம்மாள், பாரத்வாஜம், பூரட்டாதி, 17.4.1985, 5.9', B.Tech (ECE), Assistant Engineer, The New Indian Express, வரனுக்கு வேலையில் உள்ள பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். செல்:93605 71501. பெட்டி எண்: 16358

◆ ஐயர், வடமாள், பாரத்வாஜம், 52 years, General Manager, Rs.75,000/- p.m., திருமணம் ஆகாதவருக்கு வேலைக்குச் செல்லாத குடும்பப்பாங்கான பெண் தேவை. ஐயர்/ஐயங்கார்/மாத்வா ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். மூலம் நட்சத்திரமும் ஏற்கப்படும். எளிய முறையில் திருமணம். பெட்டி எண் : 16359

◆ Vadakalai, Srivatsam, Poorattadhi, aged 31, B.E., Infosys, Bangalore, Divorce in Process, Annulled

in 15 days. No encumberance, seeks same sect, cultured, Polite, home loving girl. Contact email:Ph:044-2267 3244/956628814 Box No. 16360

◆ Iyer, Vadama, Athreya, Pooram-3, 16.4.81, M.Com., Lecturer, 20,000/-p.m., wheatish 5.7', Subsect acceptable. Contact: Jagannadhan, Plot 18, Flat 207, Badam Enclave, Huda Complex, Hyderabad - 500 035. 040-2405 2084 Cell: 9441447646 Box No. 16361

◆ Iyer, Brahacharanam, Kashyapam, Vishakam(4), 31/181/Rs.62,000/-p.m., MNC Co., Bangalore, good-looking, seeks graduate good-looking girl. Apply to laks.saro@gmail.com (or) Ph:99521 30961 Box No. 16362

◆ Iyer, Brahacharanam, Kousikam, Chithirai, Ist padam, August 1979, 165cms, BE, DBA, working in MNC, ITES, Bangalore, 6 lakhs p.a., Parents in Coimbatore seeks girl from Iyer Brahmin family. Contact: 099946 80441. Box No. 16363

◆ Iyer, Vadama, Srivatsa, Revathi IV, April 1973, Propertied Businessman, B.Com., 170cms, 15 L p.a. seeks graduate girl from a good family background. Refer TM ID M1488503/ Ph:9884256058/brgpal@ gmail.com Box No. 16364

◆ Iyer, Ashtasahasram, Kasyapa, Punarpoosam, Jan'1979, good-look-

ing, fair, MCA, M.Phil., Lecturer, Private College, seeks graduate, employed/unemployed girl. Contact:04175-226666 Box No. 16365

◆ ஐயர், பிரஹசரணம், ஹரிதம், திருவாதிரை, 32, CA (Final) தனியார் பணி, சீனியர் அசோஸியேட், 40,000 என்ற வரனுக்கு மணமகள் தேவை. செல்:94441 69204, 91760 67904, 24488139 பெட்டி எண்: 16366

◆ ஐயர், பிரஹசரணம், ஹரிதம், திருவாதிரை, 45, வைதீகம், மாதம் 20,000/- வரனுக்கு பெண் தேவை. ஆதரவற்றப் பெண்களும் விண்ணப்பிக்கலாம். செல்:94444 92363, 94446 49975 பெட்டி எண்: 16367

◆ Koundinya, Vadamal, Mirugasirsham, Aug.1978, B.Sc., GNIIT, working in Tata Consultancy, Salary Rs.60,000/- p.m., Now in USA for Project seeks preferably employed girl. Phone No.044-22241633, 9884303761 Box No. 16368

◆ **Tamil Iyer, Brahacharanam, Kousikam, Uthirattadhi(2) 32/170 BE/MS employed in California seeks graduate bride employed in India/Abroad with HIB/student Visa. Subsect no bar. (TM 808250) Contact: Ph:044-2471 0834, 9445265340 Box No. 16369**

◆ Iyer, Ashtasahasram, Bharadwajam, Hastham, December 1974, 5.10', M.C.A., MNC, Chennai, Rs. 60,000/- p.m. seeks graduate girl employed/unemployed in Chennai. Subsect no bar. 044-4269 8205 Box No. 16370

◆◆ ஐயர், வடமாள், ஸ்ரீவத்ஸ, மகம், வயது 44, D.F.T. புரோகிதம் மற்றும் ஏஜென்ட், மாத வருமானம் ரூ.10,000/- சட்டப்படி விவாகரத்தான, குழந்தைகள் இல்லாதவர், நல்ல மணமகள் தேவை. விவாகரத்தான (அ) கணவரை விட்டுப் பிரிந்த ஓரளவு படித்த மணமகள் தேவை. செல்:98418 41256 பெட்டி எண் : 16371

◆ Vadamal, Bharadwajam, Uthradam(1), July 76/172/1,00,000/- p.m., MMS PGDBM Project Manager, Pune, Divorcee issueless Brief Marriage seeks Brahmin bride & issueless divorcee okay. Gurumurthy - 020-2587 2269, 09850 977467 (or Panchapakesan 9840330531) www.ssmatri.com ID 1216 Box No. 16372

◆ Vadamal, Bharadwaja, Visagam, Dec.81/170/40,000+BE CTS Chennai, Krishnamoorthy, 98416 15115, 98414 16470 (or Panchapakesan 9840330531) www.ssmatri.com id 56937 Box No. 16373

◆ Vadamal, Bharadwaj, Thiruvadirai, Aug.80/175/90,000 p.m., B.E., SWE, Bangalore - Rajagopalan - 09620 20 2953 (Bangalore), 9940550531 (Chennai), (Or Panchapakesan 9840330531) www.ssmatri.com ID 56226 Box No. 16374

◆ Vadamal, Koundinyam, Thiruvonam(1), Apl. 82/185/30,000 MBA Own House, MNC, Bangalore (on Deputation UK) Krishnan - 044-

2486 5541 (or Panchapakesan 9840330531) website www.ssmatri.com ID 57167 Box No. 16375

◆ Vadamal, Bharadwaj, Mirugaseersham(3), Oct. 76/175/40,000 + B.Com., PGDCA, Chennai, Partner Airtel Chennai (Own Business) Own House Ernakulam. Simple marriage. A.S. Krishnamoorthy 98404 88889, 4358 6699, (or Panchapakesan 9840330531) website: www.ssmatri.com ID 58847 Box No. 16376

◆ Vadamal, Srivatsam, Thiruvadirai, March 67/147/1,00,000 + SWE MNC, Chennai, Own House very smart, seeks Brahmin Bride. Simple marriage. Divorcee, Widow Excuse V.B.Sharma, 098441020274 (or Panchapakesan 9840330531) web. www.ssmatri.com ID 58801 Box No. 16377

◆ Vadamal, Kousigam, Sadayam, Oct. 82/180/BE ME (USA) SWE USA visiting Chennai, December Sai devotee - Ms. Jayanthi, 044-2618 4359, 9884193127. (or Panchapakesan, 9840330531) www.ssmatri. com ID 58756 Box No. 16378

